


பதினெண் சித்தர்கள்

நாடி சாஸ்திரம்

தாமரை நூலகம், சென்னை - 26.

பதினெண்சித்தர்கள் நாடி சாஸ்திரம்

அகஸ்தியர்; திருமூலர்; தன்வந்திரி; யூகிமுனி; சிவவாக்கியர்; வியாசர்; தேரையர்; புண்ணாக்கீசர்; சூதமுனிவர்; வால்மீகர்; மச்சமுனி; புலிப்பாணி; சட்டைமுனி; போகர்; வரரிஷி; இராமதேவர்; இடைக்காடர்; கொங்கணவர் கூறும் நாடி சாஸ்திரம்

பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 245

முதல் பதிப்பு : டிசம்பர் 1999

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 2012

மூன்றாம் பதிப்பு: பிப்ரவரி : 2022

நூலைப்பற்றி

நூலின் பெயர் : பதினெண்சித்தர்கள் நாடிசாஸ்திரம்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : பிப்ரவரி : 2022

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 248 + 8

பிரதிகள் : 1200

நூல் விலை : ரு. 150.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

சித்த மருத்துவத்தில் நோய் நாடல் ஒரு சிறப்பான பகுதி. அதன் சிறப்புக்குக் காரணம் நாடி பரிசோதனை. நாடி பிடித்துப் பார்த்தவுடனே உடம்பின் இன்ன பாகம் சீர் கெட்டிருக்கிறது என்பதை அறிந்து சொல்லக் கூடிய வைத்தியர்கள் இருந்தனர். இன்னும் சிலர் இருக்கின்றனர். இது நீண்ட நாள் அனுபவத்தால் கைவரும் கலை.

ஆனால் இந்தக் காலத்தில் நாடி பிடித்துப் பார்த்து நோய்களை அறிந்து கொள்ளும் திறமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அலோபதி வைத்தியர்களைப் போல் ஆயிரக் கணக்கில் செலவழித்து பலவித பரிசோதனைகளைச் செய்து பிறகும் இன்ன நோய் என்று கண்டு பிடிக்க் முடியாமல் மயங்கும் நிலை ஏற்படவும் கூடும். இதைத் தவிர்க்க வேண்டுமானால் சித்த மருத்துவர்கள் நாடி பரிசோதனை பற்றி நன்கு தெரிந்து கொண்டு நோயாளிகளைப் பரிசோதிப்பதன் மூலம் மேலும் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

வைத்தியம் என்பது மேலெழுந்த வாரியாக, ஏனோ தானோ வென்று செய்யக் கூடியதல்ல. ஒவ்வொரு வைத்தியரும் நோயாளியின் உயிர் தன் கையில் இருக்கிறது. என்பதை உணரவேண்டும். தவறான மருந்தைத் தன் அனுபவமின்மையால் கொடுத்து விடுவதால் கூட ஒரு நோயாளியைக் கொன்று விடக் கூடும் என்பதை உணர வேண்டும், அதனாலேயே.

பார்க்கின்ற சோதிடமும் பிராய காலம்
பகரும் விபகாரமொடு பிராயச் சித்தம்
ஏற்கும் வைத்தியம் இவைகள் நான்கும்
இதன் வழியே சிகித்சை செய்வாராகில்
ஆர்க்குமே தோஷமில்லை யிவைகளையே
அறியதோர் சாஸ்திர வல்லவர்கள் போல்
தீர்க்க அடிபிடியாகச் செய்வாராகில்
சிவ பிரமஷத்திவதை சேர் வாரன்றே

என்று அகத்தியர் கூறுகிறார்.

வைத்தியம் தெரியாதவன் மருந்து கொடுத்து ஒருவனைக் கொன்று விடாவிட்டால் கூட, பிராமணனைக் கொலை செய்த பாவத்தைச் செய்தவனாவான் என்கிறார்.

வைத்தியம் செய்பவர் எவ்வளவு பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதை இதை விட ஆணித்தரமாக யாரும் சொல்லி விட முடியாது.

அதனால் சித்த வைத்தியம் கற்பவர்கள் நாடி பார்க்கும் முறையையும் அதனோடிணைந்த நோய்க் குறிகளை அறியும் முறைகளையும் மிக நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நூலில் நாடி பார்க்கும் முறைகள் மிக நூட்பமாகக் கூறப்பட்டுள்ளன. வாத பித்த சிலேத்தும நாடிகள், இவை ஒன்றுடன் ஒன்று தொந்தித்து வாத பித்த ரோகமாகவும், வாத சிலேத்தும ரோகமாகவும், இதே போல் உண்டாகும் அநேக விதமான தொந்த ரோகங்களையும் அறியும் வகை கூறப்பட்டுள்ளது.

வாதம் 2, பித்தம் 1,
பித்தம் 2, வாதம் 1,

என்பது போல் ஒன்று அதிகரித்து மற்றது குறைந்து வருவதால் உண்டாகும் நோய்கள்.

வாதம் ¾ பித்தம் ½ சிலேத்துமம் ¼

என்பது போல் முத்தோஷங்களும் சமச்சீர் இல்லாமல் ஒன்று ஏறியும் ஒன்று இறங்கியும் வருவதால் உண்டாகும் நோய்கள்.

இப்படிப் பலவகையாக நாடித்துடிப்பின் தன்மைகளைக் கொண்டு நோயைத் தெரிந்து கொள்ளும் முறையை இந்நூல் கூறுகிறது.

கர்ப்பிணியின் நாடித்துடிப்பு, ஓடி இளைத்தவன் நாடித்துடிப்பு, மது அருந்தியவன் நாடித்துடிப்பு, அளவுக்கு மீறிப் பெருந்தீனி தின்றவன் நாடித்துடிப்பு இப்படியாக நாடித்துடிப்புகள் வித்தியாசப் படுவதன் காரணங்களையும் அப்படிப் பட்ட சமயங்களில் நோயை நிதானிக்க என்ன செய்யவேண்டும் என்பதையும் கூறுகிறது.

நாடி பார்த்தல் மட்டும் போது. எட்டுவிதப் பரீட்சைகளின் மூலமாக அல்லவா நோயைத் தீர்மானிக்க வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. நோயாளியின், உருவம், நிறம், கண், வாய், பல், வியர்வை, மூத்திரம், மலம் முதலியவை பற்றி அறிந்து கொள்ளும் வழிகளும் அவற்றைக் கொண்டு நோயை நிதானிக்க வேண்டிய முறைகளும் கூறப்பட்டுள்ளன.

திரும்பத்திரும்பப் படித்து ஆழ்ந்து சிந்தித்து மனதில் நிறுத்திக் கொள்ளவேண்டிய விஷயங்கள் இந்நூலில் பொதிந்து கிடக்கின்றன.

சித்த, ஆயுள்வேத, யுநானி வைத்தியர்கள் மட்டுமல்ல ஓமியோபதி வைத்தியர்கள் மட்டுமல்ல, அலோபதி வைத்தியர்கள் கூட இந் நூலைப் படித்து இதிலுள்ள விஷயங்களை நன்கு தெரிந்து வைத்துக் கொள்வார்களானால் நல்ல பலனடைந்து சிறந்த டாக்டர்களாவார்கள்.

இந்த நூல் எல்லோருக்கும் பயனளிக்கவேண்டும் என்பதற்காக முதல் பகுதி முழுவதற்கும் உரை எழுதப் பட்டுள்ளது. அதனால் தங்களுக்குப் புரியாது என்றோ புரியவில்லை என்றோ காரணம் கூறித்தப்பித்துக் கொள்ள முயல வேண்டியதில்லை.

பிற்பகுதிக்கு உரை எழுதப்படாவிடினும் முற்பகுதியைப் படித்ததிலிருந்து பொருள் தெரிந்து கொள்ளலாம்.

எமக்குக் கிடைத்த பழைய பதிப்பு பிழைகள் மலிந்த தாகவும், உரையில்லாமலும், இருந்ததால் நீண்ட காலமாக வெளியிடாமலே வைத்திருந்தோம். இந்நிலையில் நீலாங் கரையைச் சேர்ந்த எஞ்சினியரும் கற்பகம் பேக்கேஜிங் இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளருமான ஜி. புஷ்பராஜ் என்பவர் இந்நூல் எனக்கு வேண்டும். எப்படியும் வேண்டும் சீக்கிரமாக வேண்டும். அச்சிட்டுக் கொடுங்கள் பணம் வேண்டுமானாலும் நான் தருகிறேன் என்று கூறி என்னை விடாப் பிடியாக இப்பணியில் ஈடுபடுத்திய தாலேயே இன்று உங்கள்

கைகளில் இந்நூல் தவழ்கிறது. அவருக்கு என் உணம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலின் இன்னொரு சிறப்பான அம்சம்

வியாசர் பாடியதாக எந்த நூலும் இது வரை கிடைக்காமல் இருந்தது. இந்த நூலில் வியாசர் கூறும் நாடி சாஸ்திரம் உள்ளது. மற்றும் தன்வந்திரி, போகர், திருமூலர், அகத்தியர் முதலானபதினெட்டுச் சித்தர்கள். அருளிய நாடி சாஸ்திரங்களும் உள்ளன.

இந்த அருமையான நூல் நீண்ட காலத்திற்குப் பிறகு வெளியிடப்படுகிறது. சித்த மருத்துவர்கள் படித்துப் பயன் பெறவேண்டும்.

பதிப்பாசிரியர்
எஸ். பி. இராமச்சந்திரன்

பொருளடக்கம்

முற்றும்

உ

கடவுள் துணை

மகாமகுத்துவம் பொருந்திய

பதினெண்சித்தர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

நாடி சாஸ்திரம்

சித்தர்கள் பெயர் விருத்தம்

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்டான அகத்தீசர் சட்டநாதர்
கார்ததிடவே இடைக்காடர் சண்டிசேகர்
கனராமர் போகர் சிவவாக்கிய சித்தர்
சேர்த்திடவே கோரக்கர் புண்ணாக்கீசர்
சிறப்பானமச்சமுனி பூனைக்கண்ணர்
வார்த்திடவே யூகிமுனி கொங்கணர்பாணி
வரரிஷியாந் தேரையர் காப்புத்தானே.

(முதலாவது)

அகத்திய முனிவர் நாடி கூறுகின்றார்.

விருத்தம்.

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனி(ல்) னாடிபார்க்கில்
பெருவிரலங் குலத்திற் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதம் உயர் நடுவிரலிற் பித்தந்
திருவிரல் மூன்றிலோடிற் சேத்தும நாடியாமே. (1)

யானை முகனான விநாயகப் பெருமானை வணங்கி நோயாளியின் கையில் ஒடும் நாடியை அறிந்து கொள்ளும் விதத்தைக் கூறுகிறேன் கேள் ! நோயாளியின் வலது கை பெருவிரலின் (கட்டை விரலின்) கீழாக ஒரு அங்குலம் தள்ளி வைத்தியன் தன்னுடைய வலக்கையின் ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல் போன்ற மூன்று விரல்களைக் கொண்டு அழுத்தி பார்ப்பானேயாயின் நோயாளியின் நாடி நடையானது வைத்தியனின் விரல் நுனியில் தட்டிச் செல்லும். அவ்வாறு தட்டுகின்ற நாடிகளில் ஆள்காட்டி விரலில் கீழே தட்டுகிற நாடியை வாதநாடி என்றும் நடுவிரலின் கீழே தட்டுகிற நாடியை பித்தநாடி என்றும், மூன்றாவது விரலான மோதிர விரலின் கீழே தட்டுகிற நாடியை சிலேத்தும நாடி என்றும் அறிந்து. கொள்!

ஆகிய நாடிமூன்றும் படபடென் றோடிற் சன்னி
வாகினி லன்னங்கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமையட்டை யிவை யென நடக்கும் பித்தம்
போகியே தவளைபாம்பு போலவாஞ் சேத்துமந்தானே. (2)

இம் மூன்று வகையான நாடிகளில் வாத நாடியானது அன்னம், கோழி, மயில் போன்ற பறவைகளின் நடையைப் போலவும் பித்த நாடியானது ஆமை, அட்டை போன்ற உயிரினங்களின் நடையைப் போலவும் சிலேத்தும நாடியானது பாம்பு தவளை போன்ற உயிரினங்களின் நடையைப் போலவும் நடைபெறும் இந்நாடிகள் மூன்றும் படபடத்து வோடினால் அது சன்னி என்ற வியாதியின் அறிகுறியாக அறிதல் வேண்டும்!

(குறிப்பு (i) கோழி நடக்கும்பொழுது ஒரே அளவாக கால்களை எடுத்து வைத்து நடக்கும் அதேபோல் நம்முடைய விரல்களை தட்டிச் செல்லுகிற வாத நாடியானது, ஒரே அளவு கொண்ட துடிப்புடன் சீராக தட்டிச் செல்லும்:

(ii) ஆமையானது நடக்கும் பொழுது ஒருகாலை எடுத்து வைத்த பிறகு சில வினாடிகள் கழித்து மற்றொரு காலை எடுத்து வைக்கும் இப்படி ஒவ்வொரு அடிவைப்பிற்கும் இடையில் சிறிது நேரம் எடுத்துக் கொள்வதைப் போல் பித்தநாடியும் ஒருமுறை விரல் தட்டிச் சென்று சற்று பொருத்தே மற்றொரு முறை எழும்பித் தட்டும் ஒவ்வொரு துடிப்பிற்கும் இடையில் எடுத்துக் கொள்ளும் நேரமானது ஒரு வினாடியில் ஒன்பதில் ஒருபங்கு கொண்டதாயிருக்கும்.

(iii) பாம்பானது முன் சொன்ன கோழி, ஆமை போன்ற உயிரினங்களைப் போல் நடக்காமல் ஊர்ந்து செல்வதைப் போன்று சிலேத்தும நாடியின் நடையானது மற்ற நாடிகளின் நடையைப் போன்ற எழும்பித் தட்டாமல் ஊர்ந்து செல்லும் தன்மை கொண்டது.)

சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்பு நாவிலேறும்
ஏந்திய கசப்பு மீறில் லெழும்பிடும் பித்தமாகும்
மாத்திய புளிப்பு மீறில் வந்திடும் வாதமாகும்
சேத்துமந் தண்ணீர் பித்தந்தீக் காற்று வாதமாமே. (3)

மூன்று வகையான நாடிகளில் சேத்துமம் அதிகமானால் நாவில் இனிப்புச் சுவை உண்டாகும் (அதாவது சேத்தும நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளியின் நாவில் இனிப்பு சுவை உண்டாகும்). பித்தம் உடலில் அதிகரித்தால் நாவில் கசப்பு சுவை தோன்றும் (பித்தத்தால் தாக்கப்பட்ட நோயாளியின் நாக்கில் கசப்பு சுவை உண்டாகும்). நாவில் புளிப்புச் சுவை தோன்றினால் அது வாதத்தின் அதிகரிப்பால் உண்டானதாக அறிதல் வேண்டும். (வாத நோயாளியின் நாவில் புளிப்புச்சுவை உண்டாகும்), தண்ணீர் எனப்படும் அப்பு பூதமானது சேத்துமத்திற்கும், நெருப்பு என்ற தேயு பூதமானது பித்தத்திற்கும், காற்று என்ற வாயு பூதமானது வாதத்திற்கும் ஆதியாக அமைகிறது. (நீர், தீ, காற்று இவை மூன்றும் திரிநாடிகளுக்கு ஆதாரமாக அமைகிறது), இம்மூன்று வகையான நாடிகளின் கலப்பால் உடலில் வியாதிகள் தோன்றுகின்றன.

வாதத்தில் வாதமாகில் வளர்ந்திடும் அன்னம்போல
நீதுற்ற வுடலில் நேர்ந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும்வாங்கும்
ஆதுற்றுப் பதறும் மேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்ற தனத்தின் மின்னே யெண்யே யறிந்து சொல்லே. (4)

(உடலில்) வாதத்தில் வாதம் அதிகரிக்கும்பொழுது உடலில் ஆங்காங்கே வலிகளும், பதற்றத்துடன் கூடிய நடுக்கமும், சுரங்களும் தோன்றி மலம் வெளியாவது குறைவுபடும். அழகிய ஸ்தனங்களைக் கொண்ட பெண்ணே! இக்குறிகளை முழுமையாக அறிந்து சொல்வாயாக!

வாதத்திற் பித்தமாகில் வாயது குழறிப் பேசும்
பேதித்துக் குளிருங்காலில் வீக்கமும் பெருகவுண்டாம்
தாதுற்ற புத்திதானும்(ந்) தடைப்படுந் தடங்கண் மாதே
கோதுற்ற வயிறு விம்மிக் குடல்தனைப் புரட்டுந்தானே! (5)

வாய் குழறி பேசுதல், குளிர், நடுக்கம், காலில் வீக்கம், புத்தி தடுமாற்றம், வயிறுவிம்மி புடைத்தல் குடல் பிரட்டுதல், போன்ற குணங்கள் யாவும் வாதத்தில் பித்தம் அதிகப்படுவதால் ஏற்படும் அறிகுறிகள் என்று அழகிய பெண்ணே நீ அறிந்துக் கொள்ளுதல் வேண்டும்!

வாதத்தில் சேத்துமமாகில் வலியொடு வீக்கமுண்டாம்
பேதித்துத் தலையிடித்துப் பிணங்கிய குணங்கள் வேறாய்
தீதுற்ற மெய் வெளுத்துத் திடமுடனசனஞ் செல்லாப்
பேதித்து நாவு பேசும் பெருகவே வீக்கமுண்டாம். (6)

தேகத்தில் வீக்கங்கள் ஏற்பட்டு வலியுண்டாகுதல், தலையில் இடிபோன்ற வலி,உடல் வெளுத்துப் போகுதல், அன்னம் எடுக்காதிருத்தல் (உணவில் ஆசையின்மை). நாக்கு தடித்து வீங்குதல் போன்ற குணங்கள் யாவும் வாதத்தில் சேத்துமம் அதிகரிப்பதால் உண்டாகும் அறிகுறிகள்!

பித்தத்திற் பித்தமாகிற் பிதற்றிடுங் கிறுகிறுக்கும்
சத்திய மதிகமாகுஞ் சரீரத்திலிளைப் புண்டாகும்
அத்தியா யுலருமேனி யாகமும் வேறதாகும்
வத்தியே வெளுத்துக்காயம் வரண்டு பின்வீக்கமுண்டாம். (7)

தலையில் கிறுகிறுப்பு, உடல் இளைத்து எலும்பு போலாகி உருகுலையச செய்தல், தேகம், வெளுத்து போகுதல், உடலில் ஆங்காங்கே வீக்கங்கள் உண்டாகுதல் போன்ற குறிகள் யாவும் பித்தத்தில் பித்தம் அதிகரிப்பதால் ஏற்படும் என்று அறிந்துக்கொள்.

பித்தத்தில் வாதமாகிற் பிடரியுங்காலுங் கையும்
குத்தது போலேயாகும் குறுகிமெய் பதறும் பின்னே
அத்தியா யுலரு மேனி யாகமுஞ் சுரத்தால் நோவாம்
புத்தியு மடியு மிக்கப் பொறுமை போய்க் கோபமாமே. (8)

பிடரி, கை, கால் போன்ற இடங்களில் குத்து வலியுண்டாகுதல் தேகத்தில் பதற்றம், உடல் எலும்புபோல் இளைத்தல், புத்தி மந்தம், உடல் வலியுடன் கூடிய சுரம், மிகுந்த கோபமுண்டாகுதல் போன்ற அறிகுறிகள் யாவும் பித்தத்தில் வாதம் அதிகரிப்பதால் ஏற்படுபவை என்று தெரிந்துக் கொள்!

பித்தத்திற் சேத்துமமாகிற் பிதற்றும் வாய் குழறு மிக்கச்
சத்தியும் வாய்நீர்தானும் (ந்) தானறி யாமலோடும்
சுத்திடும் பேய்கள் போலச் சுழற்றியே வயிற்றில் நோவாம்
பித்தமு(ம்) மெடுத்துக் கொட்டிப் பிடரியில் நோவதாமே. (9)

வாய் பிதற்றல் வாய் குழறி பேசுதல், தன்னையறியாமல் வாய் நீர் வெளியாகுதல், அளவுக்கதிகமாக தலை சுற்றல், மிகுந்த வயிற்றுக்கலக்கல், வாந்தியாகுதல், பிடரியில் வலி போன்ற அறிகுறிகள் யாவும் பித்தத்தில் சேத்துமம் அதிகரிப்பதால் ஏற்படும்.

வாட்டிடும் சேத்துமத்தில் வந்திடும் வாதமாகில்
நாட்டிய கால்கள்போல நரம்பெல்லாம் வலித்து நிற்கும்
கூட்டிய பிடரிதானுங் குன்றவே வலிக்குமாகில்
நாட்டிய விழியுமேலாய் நாவது குழறுந்தானே. (10)

காலே உடைந்து விட்டாற்போல் நரம்புகள் இழுத்துக் கொண்டு வலித்தல், மலையே பிரண்டு விழுந்தாற் போன்று பிடரியில் (பின் தலையில்) வலியுண்டாகுதல், கண்கள் சொக்கி போகுதல், வாய் குழறுதல், போன்ற அறிகுறிகள் யாவும் சேத்துமத்தில் வாதம் கலப்பதால் ஏற்படுவதாகும்.

சேத்தும பித்தமாகிற் றின்பது கசப்புண்டாகும்
பார்பெறு நாவுதன்னிற் பலவிசம் புளிப்பினிப்பாம்
சேர்ப்பது பேசுமாறுந் திடமில்லைக் கோழையாகும்
காப்பது கண்ணும் பீளைச் சாறும் பின்சத்தம் வேறாம். (11)

சேத்துமத்தில் பித்தம் அதிகரித்தால் வாயில் இட்ட பொருள்கள் (உணவுகள்) யாவும் கசப்பாக தோன்றுதல், நாவில் பலவிதமான சுவைகள் உண்டாகுதல், (புளிப்பும் இனிப்பும் சேர்ந்து உண்டான சுவைகள்) பேச்சில் மாற்றம், கோழை அதிகப்படுதல், கண்களில் பீளை அதிகரித்தல் போன்ற குணங்கள் யாவும் அறிகுறிகளாகக் காட்டும்.

சேத்துமத்திற் சேத்துமமாகிற் றமிர் தமாயறியுஞ் சொன்னோம்
ஆத்தும நல்லதல்ல அழிவது மெய்கண்டாயே

கூற்றன் வந்திடுவதாகும்(ங்) குருவிழி வட்டங்கொள்ளும்
சாத்திரம் மறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே. (12)

சேத்துமத்தில் சேத்துமம் அதிகரித்தால் உயிருக்கு நன்மையளிக்காது. கட்டாயம் அமிர்தமான பிராணன் சக்தி குறைந்து நோயாளி மாண்டு போவான். மேலும் கண்களை சுற்றி கருமையான வளையம் ஏற்பட்டால் கட்டாயம் நோயாளியின் உயிரை எமன் எடுத்துச் செல்வான். இதில் எந்த சந்தேகமும் வேண்டாம். வைத்திய சாத்திரத்தில் உள்ள நோயின் குறிகளை உலகத்திலுள்ள மக்கள் யாவரும் அறிந்துக் கொண்டு தேகயாத்திரையான இவ்வாழ்க்கையை நோயின்றி நல்ல முறையில் நடத்திச் செல்வதற்காக நான் எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லி விட்டேன்.

நாடி பார்க்கும் காலம்

காலமே சேத்துமநாடி கட்டுச்சிப் பித்தநாடி
மாலையில் வாதநாடி வகைதப்பிப் பதறிநின்றால்
ஏலவே யிவர்கட்கெல்லா மியம்பினாரிது தானென்று
நாலஞ்சில் மரணமென்று நன்முனியருளிச் செய்தார். (13)

நோயாளியின் நாடி நடையை பார்க்கும்பொழுது காலையில் சேத்தும நாடியும், மதியமான உச்சிவேளையிற் பித்தநாடியும், மாலையில் வாதநாடியும் முறை தப்பி சுழன்று வோடினால் நிச்சயமாக அவன் இருபது நாட்களில் மரணமடைவான் என்று முன்னோர்களான முனிவர்கள் கூறி வைத்துள்ளனர்.

காலையில் சேத்தும நாடியும், மாலையில் வாதநாடியும் நடக்கக் கூடாது.

(குறிப்பு :- காலை 6 மணி முதல் 10 மணி வரை வாதமும், 10 மணியிலிருந்து 2 மணி வரை பித்தமும், 2 மணியிலிருந்து 6 மணி வரை சிலேத்துமமும் நடக்கும்.

அதேபோல், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வாதமும், 10 மணி முதல் 2 மணி வரை பித்தமும், 2 மணியிலிருந்து காலை 6 மணி வரை சிலேத்துமமும் நடக்கும். இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் மரணம் சம்பவிக்கும்.)

நாடி இலக்கணம்

போற்றிய நாடிதானும் போத்துபோற் புறந்துடித்தால்
கீற்றுவில் நுதலேமிக்கக் கிஞ்சுகமானே கேளாய்
காத்திடுந் திங்களொன்றிற் கருதியே தீரவிட்டால்
மாற்றிய மாதம்பத்தில் மரணமென்றுரைக்கலாமே. (14)

அழகான முகத்தையும், கூந்தலையும் கொண்ட பெண்மானே கேள்! நாடிகள் மிக உயரமாக வெளிப்புறம் தோன்றுமளவிற்கு குதித்து நடந்தால் அவை ஒரு

மாதத்திற்குள் அடங்கி நடக்க வேண்டும். அவ்வாறின்றி ஒரு மாதத்திற்கு பிறகும் மிகவேகமாக ஓடுமாயின் அந்நோயாளி பத்துமாதத்திற்குள் மரணமடைவான்!

குறித்திடும் சேத்தும நாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால்
கறுத்திடு விழியாள் நல்ல காரிகையாளே கேளாய்
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றிற் புகன்றிடு மரணமாமே. (15)

சேத்தும நாடியானது பாம்பின் நடையைப் போன்று நடக்காமல், குதிரையைப் போன்று எகிரி எகிரி ஓடினால், வண்டுபோல் கறுத்த கண்களை கொண்ட பெண்ணே கேள்! அந்த நோயாளி ஒரு மாதத்தில் மரணமடைவான் என்று சந்தேகமில்லாமல் சொல்.

ஆதித்தன் சந்திரன்போ(ல்) லந்தித்த நாடிதானும்
பேதித்து நிற்குமாகிற் பெருக்கவே கையினூடே
சோதித்துக் கண்டுநாடி சுரங்களிற் புக்குமாகில்
வாதத்தில் வாய்வுபிடை வந்துற நிற்குந்தானே. (16)

சூரியன், சந்திரன், அக்கினி போன்றவைகளின் (அம்சமாக) கூறாக உள்ள மூன்று நாடிகளும் மனிதர்களின் கரத்தில் நிற்கின்றன. இவைகளில் ஒன்று மற்றொன்றுடன் கலந்து நின்று சுரத்தை தோற்றுவிக்குமாயின் அது வாதத்தில் வாயுவின் கலப்பால் ஏற்பட்டதென்று அறிந்துக் கொள்!

கடிந்ததோர் நாடிதன்னை கருதியே பார்க்கும்போது
விடிந்தபின் சேத்துமநாடி விதறியே துடர்ந்துநின்றால்
கடிந்தது பித்தநாடி கட்டுச்சி துடிக்குமாகில்
மடிந்தது வாதநாடி மாலையில் மரணந்தானே. (17)

நாடி பார்க்கும்பொழுது இரவின் கடைசி பத்து நாழிகையில் நடக்கும் சேத்தும நாடியானது சூரியன் உதித்த பின்னும் நடந்துக் கொண்டிருந்து பிறகு உச்சிவேளையிற் பித்தநாடி நடந்தால் இதற்கடுத்து மாலையில் நடக்கவிருக்கும் வாதநாடியில் மரணமடைவான் மாலையில் வாதநாடி நடக்கும்பொழுது மரணமுண்டாகும்.

குறிப்பு:- இரவு 2 மணி முதல் காலை 6மணி வரை நடக்கவேண்டிய நாடி சேத்துமமாகும். சூரியன் உதயத்தை தாண்டி நடக்க (6மணி முதல் 10மணி வரை) வேண்டிய நாடி வாதமாகும்.

இவ்வாறின்றி வாதநாடி நடக்க வேண்டிய சமயத்தில் முன் நாள் விடியற் காலையில் நடந்துக் கொண்டிருந்த சேத்தும நாடியே தொடர்ந்து நடக்குமாயின் பிழை ஏற்பட்டு மரணமடைவான். அவன் மரணமடையும் சமயமானது மாலை நேரமும் வாத நாடியும் கூடும் இடமே. (எந்த நேரத்தில் எந்த நாடி நடக்க வேண்டும் என்ற விவரத்தை 13ஆம் பாடலின் உரையின் கீழ் காணலாம்.)

சேத்தும நாடிதானும்(ந்) தியங்கிய மஞ்சைபோல
நாட்டிய வட்டைபோல நடுங்கியே பதரிநின்றால்
கூட்டவே வேண்டாமேழு நாளினில் மரணமென்று
நாட்டமாய் முனிவர்சொன்னார் நம்பிநீ குறித்துபாரே. (18)

சேத்தும நாடியானது நத்தை, அட்டை போன்ற உயிரினங்களின் நடையைப் போன்று மிகவும் மெல்லியதாக பதறிவோடினால் அந்த நோயாளியானவன் கட்டாயம் ஏழு நாட்களில் மரணமடைவான் என்று முன்னோர்களான முனிவர்கள் கூறியுள்ளனர். எனவே அவர்களின் வாக்கில் நம்பிக்கை கொண்டு நீயும் இதை நன்றாக அறிந்து கூறுவாயாக! (சேத்தும நாடியின் நடை பாம்பு மற்றும் தவளையின் இயக்கத்தை போலமையும்.)

ஏற்றிய தீபந்தன்னி லெரிசுடர் முனையைப்போல
தோற்றிய நாடிதானுந் துயரற நடக்குமாகில்
கூற்றனுக் கிடமுமில்லை குறைபடா மருந்து செய்யில்
மாற்றிய வாணாள்தானும் வளர்ந்திடுந் திண்ணந் தானே. (19)

நாடிகளின் நடையானது தீபத்தின் முனையைப் போன்று கூர்மையாக மிக துல்லியமாக பிசகின்றி நடக்கும் பொழுது நிச்சயமாய் எந்த வியாதி ஏற்படினும் மரணமடைய மாட்டான். நல்ல மருந்தை கொடுப்பதின் மூலம் நோய்கள் அகன்று உயிர் ஓங்கி வளரும்.

(வாதம் நடக்க வேண்டிய சமயத்தில் வாதமும், பித்தம் நடக்க வேண்டிய சமயத்தில் பித்தமும், சிலேத்துமம் நடக்க வேண்டிய நேரத்தில் சேத்துமமும் தவறின்றி நடக்குமாயின் மரணமில்லை.)

கண்ணும் பல்லும்தான்கறுத்து கருதுமூச்சுவாய் திறந்து
உண்ணும் வயிற்றில் சேத்துமமுமோடி மிகவேதானடந்தால்
பண்ணும் மருந்துபலியாது பண்பாய் சுவாசமேல்வாங்கும்
மண்ணும் விண்ணுந் தானறிய மரணமாவார் கண்டீரே. (20)

கண்களும், பல்லும் கறிய நிறமாக மாற்றமடைந்து சுவாசமானது வாயின் வழியே மேல் நோக்கி வாங்கியும் (மூக்கின் வழியாக மூச்சு செல்லாமல் வாயின் வழியே நடந்தும்) தசநாடிகளின் இருப்பிடங்களில் ஒன்றான உந்தியில் (நாபியில்) சேத்துமம் அதிகப்படுமாயின் எந்த மருந்தாலும் அந்நோயாளியைக் காக்க முடியாது. நிச்சயம் ஆகாயமும் பூமியும் அறிய மாண்டு போவான்!

குறிப்பு:- தசநாடிகளின் இருப்பிடங்களாவது என்னவென்றால், குதம் (மலவாய்க்கும் குறிக்கும் இடையில்), குய்யம் (குறிஸ்தானம்), நாபி (உந்தி), வலது காது, இடது காது, வலது மூக்கு, இடது மூக்கு, வலது கண், இடது கண், நடுமூக்கு போன்ற இடங்களே தசநாடிகளின் இருப்பிடங்களாகும்.

இருதுடை மார்பின்கீழே யெரிபடப் பதறியோடின்
முடுகிட வீங்குமாயின் மூவரிலொருவரோடில்
படரவே தாகமிஞ்சிப் பஞ்சிடும் கண்ணும்வாயும்
அடரவிக் குணங்கள் கண்டா லறிந்துகொள் மரணமென்றே. (21)

இரண்டு தொடைகள், மார்பின் கீழ் பாகம் (வயிறு) போன்ற இடங்களில் எரிச்சல் கண்டு வீக்கமுண்டானாலும், மூன்று நாடிகளில் ஒரே ஒரு நாடி மட்டும் ஓடினாலும், தண்ணீர் தாகம் மிஞ்சினாலும், கண்கள் பஞ்சடைந்து வாய் பேச முடியாமல் அடைத்து நின்றாலும் கட்டாயம் அந்நோயாளி மரணமடைவான் என்று அறிந்துக் கொள்!

(இக்குணங்கள் யாவும் ஒருமித்தமாக கண்டால் மரணமுண்டு.)

எடுக்கும் படுக்கு மெழுந்திருக்கு மிளைத்தே மூச்சதனைவாங்கும்
வடுக்கணொத்த விழியிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குந் தொடுத்தசேத்துமமுந் தொண்டைதனை யடைப்பிக்கும்
அடுத்த வருவதிது கண்டா லறிவீர் மரணநிச்சயமே! (22)

மூச்சானது மிகுந்த இரைச்சலுடன் ஓடி பின்பு இளைத்து அடங்கி மீண்டும் முன்போல் இரைச்சலுடன் ஓடி தலைக்கேறி கண்களிரண்டும் நிலைக்குத்தி நின்று கபமானது தொண்டையை அடைத்து நின்றால் கட்டாயம் அந்நோயாளி நோய் தீர்ந்து எழுந்திருக்க மாட்டான் நிச்சயம் மரணமடைவான்!

ஊசிபோல் முகமு(ந்) நீண்டு வுடம்பெல்லாம் நரம்புத் தோன்றி
பாகுபோல் கண்பஞ்சிட்டுப் பரந்திருள் மூடுமாகில்
பேச்சு நாவறண்டுபேசிப் பித்தது பிதற்றுமாகில்
காசினியறியச் சொன்னோங் கண்டுகொள் மரணமென்றே. (23)

ஊசிபோல் முகம் இளைத்து நீண்டும் உடல் முழுவதும் நரம்புகள் புடைத்து வெளிதோன்றி, நாக்கு வரண்டுபோய் பேச முடியாமல் மிகவும் சிரமப்பட்டு பேசினாலும் பித்தம் தலைக்கேறி நின்று பிதற்றினாலும் அந்நோயாளியானவன் இவ்வுலகை விட்டுச் செல்வான் என்று அறிந்துக் கொள்!

நாடியால் முன்னோர் சொன்ன நற்குறிகுணங்களாலும்,
நீடிய விழியினாலும், நின்ற நாட்குறிப்பினாலும்,
வாடிய மேனியாலும், மலமொடு நீரினாலுஞ்
சூடியவியாதி தன்னைச் சுகம் பெறவறிந்து சொல்லே. (24)

மலம், சிறுநீர், உடம்பின் நிறமாற்றம், நாக்கு, கண்கள் போன்றவைகளில் தோன்றும் நோயின் அறிகுறிகளையும், நாடியின் மூலம் தோன்றும் அறிகுறிகளையும் கொண்டு இந்தவிதமான நோய் தோன்றியுள்ளது என்று கண்டறிந்து முன்னோர்களான முனிவர்கள் கூறியபடி அதை போக்க (நோயை நீக்க) நல்ல

முறையில் மருந்தை நோயாளிக்கு கொடுத்து அதை உட்கொள்ளும் முறையையும் அவனிடம் சொல்!

சுகம் பெற வங்கமெல்லாஞ் சுருக்கிய குணங்களாய்ந்து
முகம் குறி நாடி மூக்குச் செவிநுத நயன நாடி
அகந்துடி படர்க்கு நாடி யதுதிசை வுடுதிநாடி
உகந்துடி யுந்தி நாடி யுண்மையாய் நடைகள்பாரே. (25)

தேகத்திலுள்ள குறிகளை ஆராய்ந்ததைப் போல் மலவாய்க்கு மேல் குதம், குய்யம் (குறியிடம்), நாபி (உந்தி), வலது மூக்கு, இடது மூக்கு, நடு மூக்கு, வலது கண், இடது கண், வலது காது, இடது காது, போன்ற இடங்களிலுள்ள தசநாடிகளின் ஓட்டத்தையும், கண்டறிய வேண்டும்!

பார் மனக் கவலையற்றும் பலபல விசாரம் விட்டுத்
தேர்மனந்தெளிந்து நீயுஞ் செய்குண வழியிதென்று
ஊரக முந்தி தன்னி லொளிபல வியாதிசெய்யில்
தீபன வுண்டியாலே சேர்ந்திடு நோய் கடானே! (26)

நாடிகளை ஆராயும் பொழுது மனதிலுள்ள கவலைகளையும் பலவிதமான சிந்தனைகளையும், அகற்றி தெளிந்த மனங்கொண்டு ஆராய வேண்டும். அப்படி ஆராயும் பொழுது உந்தியான வயிற்றில் நோய்கள் உண்டாயிருப்பதாக அறிந்தால் அது அதிகமான பசியாலும், அதிகமான உணவாலும் ஏற்பட்டிருக்கும் என்று அறிந்துக் கொள்! பசியை அடக்குவதும், அளவுக்கு மீறி உண்பதும் நோயை உண்டுபண்ணும்.

சொல்லிய வுந்தி தன்னிற் சுழித்ததோ ரெழுத்தைப் பற்றி
எல்லையிலெழுந்த நாடி எழுபத்தீராயிரத்தில்
வல்லவர் புகலு நாடி பத்ததிலேழு நீக்கு
நல்லதோர் நாடிமூன்று நயந்து நீயறிந்து பாரே! (27)

நாபியான உந்திக் கமலத்திலிருந்து ஓங்கார வடிவில் எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் தோன்றி தேகம் முழுவதும் வியாபித்து நிற்கின்றன. இவற்றில் பத்து நாடிகள் சிறந்ததாகவும்; அப்பத்தில் ஏழு வகையான நாடியை நீக்கிய பிறகு எஞ்சியுள்ள மூன்று வகையான நாடிகளான இடா பிங்களா, சுக்ஷீம்னா என்றதே முக்கியமானதாகும் என்று நம் முன்னோர்களான பெரியவர்கள் கூறியுள்ளனர். ஆகவே அதை முழுமையாக அறிந்து பார்!

(குறிப்பு:- 72,000 நாடிகளில் இடா, பிங்களா, சுக்ஷீம்னா, காந்தாரி, ஹஸ்திஜிஹ்வா, பூஷா, அலம்பூஷா, குகு, சங்கினி, ப்ராணவாகினி என்ற பத்தே சிறந்தது. இதில் இடா, பிங்களா, சுக்ஷீம்னா என்ற நாடிகள் முக்கியானவையாகும்.)

தான் மிகக் குளிர்ச்சி கொள்ளி றங்கிய நாடி வாதம்
மீன் முகில் குழலாய் நெய்பாலிறைச்சிகளுண்டால் வாதம்
தீன்மிக வருமே கோழி தின்னவர் நாடிபித்தம்
வான நற்கனிக டன்னை வாங்கினால் வாதமாமே! (28)

வாத்திலிள நீர்தன்னை வாங்கினா னாடிவாதம்
போதவே கோபமுள்ளே பொருமினானாடிபித்தம்
கோதை சேர் குழலாள் தன்னைக் கூடினானாடிபித்தம்
நிதிலா முனிவர் சொன்னார் திறமுடனறிந்து தானே! (29)

மீனின் முகிலைப் போன்று அழகான கூந்தலைக் கொண்டே பெண்ணே கேள்! குளிர்ச்சிப் பொருட்களை உட்கொள்வதாலும், நெய், பால், இறைச்சி, கனிவர்க்கங்கள் போன்றவற்றை உட்கொள்வதால் உடலில் வாதம் அதிகரிக்கும்! மேலும் கோழியின் இறைச்சியை உண்பதாலும், அதிகமான கோபம் கொள்வதாலும், பெண்களுடன் கூடுவதாலும், (போகம் புரிவதாலும்) உடலில் பித்தம் அதிகரிக்கும் என்பதையும் நீ அறிந்துக் கொள்ளல் வேண்டும்!

தானென வுலகத்துள்ளே தயங்கிய நாடிபார்க்கில்
மானெனு மின்னே கேளாய் வரும்பலன் சொல்லக் கேளு
நானெனும் புருடர்க்கெல்லா நாடிதான் வலக்கையாகும்
தேனெனு மடவர்க்கெல்லாந் திடம்பெற விடக்கை சித்தே. (30)

மின்னல் போன்ற அழகிய இடைக் கொண்ட பெண்ணே கேள்! உலகிலுள்ள ஆண்கள் அனைவர்க்கும் அவர்களுடைய வலது கையில் தோன்றும் நாடியைக் கொண்டே நோய்களை அறிதல்வேண்டும். அதேபோல் பெண்கள் அனைவர்க்கும் அவர்களுடைய இடதுக்கையின் நாடியைக் கொண்டே நோய்களை பகுத்தறிதல் வேண்டும்!

சித்திரை வைகாசிக்குச் செழுங்க திருதயந் தன்னில்
அத்தமா மாணியாடி ஐப்பசி கார்திகைக்கு
மத்தியானத்திற் பார்க்க மார்கழி தையுமாசி
வித்தகக் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரந்தானே. (31)

சித்திரை, வைகாசி, போன்ற மாதங்களில் சூரியன் உதிக்கின்ற பொழுதும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை போன்ற மாதங்களில் மத்தியான வேளையிலும், மார்கழி, தை, மாசி போன்ற மாதங்களில் கதிரவன் மறையும் நேரமான மாலையிலும் நாடியை பார்க்க வேண்டும்.

தானது பங்குனிக்குந் தனது நல்லா வணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும் மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்று மூன்று நாடித் தெளிவாகக் காணுமென்று
ஞானமா முனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே. (32)

பங்குனி, ஆவணி, புரட்டாசி, போன்ற மாதங்களில் இரவிலும் நாடியை பார்த்தறிதல் வேண்டும். இவ்வாறு அந்தந்த மாதங்களில் அதற்குறிய வேளையில் நாடியின் வோட்டத்தைப் பார்த்தால் மிகவும் துல்லியமாக வியாதிகளை அறியலாம்

என்று காட்டில் தவஞ்செய்து சித்தி பெற்ற முனிவர்களான முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆகவே அவர் கூறிய முறைப்படி நீயும் அறிந்து பார்! மூன்று வகையான தோஷங்களும் தெளிவாகத் தோன்றும்.)

பரிபூரண நாடி

பூரணமா மாதாரந் தன்னி னின்ற
புரியட்ட த்சவாய்வின் பேர்தான் கேளு
வாரணமாம் பிரணவனோட பானன் றானும்
மகத்தான வுதானனுடன்சமா னன்வியானன்
காரணமா நாகனொடு கூர்மன் றானுங்
கனமான கிரிகரன்கூர் தேவ தத்தன்
ஆரணமாந் தனஞ்செயனும் பத்துமாச்சு
அப்பனே யசைவையினிய றைகி றேனே. 1

இவ்வுடலில் இயங்குகின்ற பத்துவாயுக்களின் பெயர்களைக் கேட்பாயாக. பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகிய வாயுக்கள்தான் முன்பு கூறிய பத்து வாயுக்களாகும்.

அறைகிறே னிடைகலையின் சுழி முனையாகி
அலம்புடையுங் காந்தாரி யத்தி யோடு
இறையான சிகுவை சங்கினி யோடென்ன
இயல்புருடன் குருவென்பார் சோத்தி ரந்தான்
நிறையான நெடுந்தொக்குகட் சுவை யோடு
நேர்மையுள்ள சிங்குவையாக்கி ரண மாகும்
முறையுடனே யிவையறிந்துநி தானங் கண்டு
முதன்மையுள்ள குறுநாடி யஞ்சுங் கேளே. 2

முதன்மையுள்ள குறுநாடி யஞ்சும் கேளே. இவையன்றி உடலில் பத்துவகை நாடிகள் ஓடுகின்றன. அவையாவன இடகலை, பிங்கலை, சுழுமுனை, அலம்புடை, காந்தாரி, அத்தி, சிகுவை சிங்கினி, குரு, புருடன் ஆகியனவ ஆகும். இவைகளை அறிந்து கொண்டபின்பு இவையன்றியுள்ள குருநாடிகள் ஐந்துவகையுள்ளதை அறிந்து கொள்ளவும்.

புருஷநாடி

அஞ்சான பத்தானத சநா டிக்குள்
அப்பனே ரவிமதியுநெ ருப்பு ம கி
மிஞ்சாத வாதபிததஞ்சி லேஷ்ம மாகி
வீரமான மூன்றிலேவி யாதி காண

நெஞ்சாரக் காணுதற்குவ கையைக் கேளு
நேர்மையுள்ள தத்துவத்தைநி னைவாய்ப் பார்த்து
செஞ்சாரைப் போலப்பா நாடி தன்னை
திறமாகக் காணுதற்குவ கையைக் கேளே. 3

மேற்சொன்ன பத்துவகை நாடிக்குள் சூரியன் சந்திரன் நெருப்பு ஆகியவை கலந்ததுபோல் வாத பித்த கபக்குற்றங்கள் கலந்துள்ளன. அவற்றின் மூலம் வியாதிகளைக் காணுவதற்கான குறிவகைகளைக் கேளு. நேர்மையாக உள்ள தத்துவங்களை முறையாக ஆராய்ந்து மனதில் நிலைநிறுத்தி செஞ்சாரைப் பாம்பு போல ஓடும் நாடிகளைக் காண்பதற்கு வழிமுறைகளைக் கேட்பாயாக.

கேளப்பா புருடருக்குவ லது கையைக்
கிருபையுடன் றான்பிடித்து நெட்டை வாங்கி
சூளப்பா பெருவிரலோரங்கு லத்துக் கப்பாற்
சுகமாக மூவிரலால முத்திப் பாரு
வாளப்பா முதல்விரலே வாத நாடி
வன்மையுட னடுவிரலே பித்த நாடி
கேளப்பா கடைவிரலே சேஷ்ம நாடி
திறமாகநின் னறிவாற்றெ ளிந்து காணே. 4

ஆண்களுக்கு வலதுகையைப் பிடித்து நெட்டை வாங்கி பெருவிரலுக்குக் கீழே ஓரங்குலத்தில் மணிக்கட்டுக் கருகில் மூன்று விரல்களால் அழுத்திப் பார்க்க முதல் விரலில் தெரிவது வாதநாடியாகும். இரண்டாவது விரலில் தெரிவது பித்த நாடியாகும். மூன்றாவது விரலில் தெரிவது கபநாடியாகும். திறமுடன் இதனை நீ உனது அறிவால் தெரிந்து கொள்வாயாக.

புருடர்களுக்கு நாடிகள் நடக்கும் விதம்

காணவே புருடர்க்கு வாத நாடி
கானகத்து மயில்போலும் அன்னம் போலுந்
தேணவே கோழிநடைந டக்குஞ் சொன்னேன்
தூரியமென்ற பித்தத்தி னாடி கேளு
ஏணவே யாமையுடையந டையைப் போலும்
என்மகனே அட்டையைப்போன டக்கும் பாரு
வேணவே சேத்துமந்தான் பாம்பு போலும்
வேணபடி தவளைகுதிப்பது போலாம் பாரே. 5

ஆண்களுக்கு வாதநாடியானது காட்டிலே வசிக்கும் மயிலைப் போலவும் அன்னம் போலவும் கோழி போலவும் நடக்கும். பித்தநாடியானது ஆமையைப் போலும் அட்டையைப்போலும் மெதுவாக நடக்கும். கபநாடியானது பாம்பினைப் போலவும் தவளை குதிப்பது போலவும் விரைவாக நடக்கும்.

பெண்களுக்கு நாடி நடக்கும்விதம்

பார்க்கவே பெண்களுக்கி டது பக்கம்
பதிவாகப் பார்த்திடவேப கரக் கேளு
கார்க்கவே வாதமது சர்ப்பம் போலாங்
கனமான பித்தமதுத வளை போலாஞ்
சேர்க்கவே யையமென்ற நாடி தானுஞ்
சிறுநடையா வன்னம்போற்செ ழிப்பாய் காணும்
ஆர்க்குமே தோன்றுமிந்த நாடி மூன்றும்
அனுதினமும் நல்லறிவால றிந்து தேறே. 6

பெண்களுக்கு நாடியை இடது கை மணிக்கட்டுக்கு அருகே பார்க்க வேண்டும். பெண்களுக்கு வாதநாடியானது பாம்பினைப் போலவும், பித்த நாடியானது' தவளைப் போலவும், கபநாடியானது அன்னத்தின் நடையைப்போல் சிறு நடையாகவும் நடக்கும். இத்தகைய நாடி நடைகளை தினமும் நன்கு அறிந்து பழகிப் பார்த்து தேறவேண்டும்.

நாடிகள் கீழ்மேலும் மீறியோடும் விதம்

தேறவே சந்திரனும் வாத நாடி
திறமான சூரியனும் பித்த நாடி
மீறவே யக்கினியும சேஷ்ம நாடி.
விளங்கவே வியாழமி லங்கி மீறும்
கூறவே மைந்தன்செவியி ரவி மூன்றுங்
குணமான சூரியனுங்கு மரி யோடும்
ஏறவே திங்கள்புதன் வெள்ளி தானு
மின்பமுள்ள சந்திரனு மோடுங் காணே. 7

திங்கள் விடிய்ற்காலத்தில் சந்திரகலை
செவ்வாய் விடியற்காலத்தில் சூரியகலை
புதன் விடியற்காலத்தில் சந்திரகலை
வளர்பிறை வியாழம் விடியற்காலத்தில் சந்திரகலை
தேய்ப்பிறை வியாழம் விடியற்காலத்தில் சூரியகலை
வெள்ளி விடியற்காலத்தில் சந்திரகலை
சனி விடியற்காலத்தில் சூரியகலை

இவ்விடகலை பிங்கலை சுழிமுனை மூன்றுமே வாதபித்த சேஷ்மங்க ளென அவைகள் வைதப்பினால் வருவனவற்றை உள்ளங்கையிற் கண்டுகொள்க.

நாடிகளில் வாதநாடியானது சந்திரகலையாகும். பித்தநாடியானது சூரிய கலையாகும். சிலேத்தும நாடியானது அக்கினியின் சார்பாகும். இந்த நாடி நடையானது திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இடது நாசியான சந்திரகலையில் தொடங்கி

ஓடும். செவ்வாய், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வலது நாசியான சூரிய கலையில் தொடங்கி ஓடும். மேலும் வியாழக்கிழமைகளில் வளர்பிறையில் சந்திரகலையிலும், தேய்பிறையில் சூரியகலையிலும் தொடங்கி ஓடும்.

வியாதிகளறிய

காணவே யிரவியிலே வாத மோடில்
கனமான சளியிருமலி ரைப்புண் டாமே
நாணவே செவ்வாயில் வாத மோடில்
நன்மையுள்ள சுரமதுதான னுகுஞ் சொன்னேன்
தோணவே மந்தனிலே வாத மோடில்
துணிந்ததொரு சீதளமுஞ் சன்னி யெய்தும்
வேணவே வியாழத்தில் வாத மோடில்
விலாவோடு தேகமெல்லாம் வலியுண் டாகும். 8

ஞாயிற்றுக்கிழமைகளில் முதல்சாமத்தில் வாதநாடி ஓடினால் சளி, இருமல், இரைப்பு ஆகியன உண்டாகும். செவ்வாய் முதல் சாமத்தில் வாதநாடி ஓடினால் சுரம் தோன்றும் சனிக்கிழமை முதல் சாமத்தில் வாதநாடி ஓடினால் உடல் குளிர்ச்சியாகி சன்னி உண்டாகும். இதுவன்றி தேய்பிறை வியாழக்கிழமையில் வாதநாடி முதல் சாமத்தில் ஓடினால் விலாவெலும்போடு தேகம் முழுவதும் வலி உண்டாகும்.

உண்டான திங்களிலே பித்த மீறில்
உத்தமனே சலதோஷமு டனே காணும்
பண்டான புந்தியிலே பித்த மோடில்
பாரமுட னீரேற்றந்த லைக்குத் துண்டாம்
அண்டான வெள்ளியிலே பித்த மோடில்
அப்பனே கண்ணோயுங் காது நோயாம்
கண்டான குருவினிலே பித்த மோடில்
தன்மையுறுந் தாபசுரந்த லைநோக் காடே. 9

திங்கட்கிழமை முதல் சாமத்தில் பித்தநாடி ஓடினால் சல தோஷம் உடனே உண்டாகும். புதன்கிழமை முதல் சாமத்தில் பித்தநாடி மீறி ஓடினால் நீரேற்றமும் தலைக்குத்தும் உண்டாகும். அதுபோல வெள்ளிக்கிழமைகளில் பித்தநாடி அதிகரித்து ஓடினால் கண்ணோயும் காதுநோயும் உண்டாகும். வளர்பிறை வியாழக்கிழமைகளில் பித்தநாடி அதிகமாக ஓடினால் தாபசுரமும் தலை நோக்காடும் தோன்றும்.

நோக்காட்டை யறிந்துரைக்கவ யித்தி யற்கு
நுண்ணறிவால் சொல்லிவிட்டே னு ணுக்க மெல்லாம்
பார்க்காட்டாற் றெரியாதுப மூக்க மாக
பார்த்தறிந்தோர் தனையடுத்துப ரிவாய் கேளு

கேட்காட்டாற் கிடையாதிவ்வு லகத் துள்ளே
    கிருபையுடன் மனமுறுதி யாக நீயும்
வாய்க்காட்டா லிந்நூலில்தான் வாய்க்கும் பாரு
    வன்மையுள்ள குருநாடிவ கையைப் பாரே 10

வியாதிகளை அறிந்து நோயாளிக்கு கூறுவதற்கு வைத்தியருக்கு நுண்ணறிவால் நுணுக்கங்களை சொல்லிவிட்டேன். நாடிகளைப் பார்க்கா விட்டால் ஒன்றும் தெளிவாகாது. எனவே நாடிகளைப்பற்றி நன்கு அறிந்தவர்களை அணுகி அவர்களிடமிருந்தும் பழகிக் கொள்ள வேண்டும் கேட்காவிட்டால் இவ்வுலகில் எதுவும் கிடைக்காது. அவ்விதமில்லா விடினும் மனதில் உறுதியுடன் இந்நூலைப் பார்த்துப் ப்டித்துப் பார்க்க நாடிநடையை பழகிக் கொள்ளலாம். இதுவன்றி குருநாடியின் தன்மையை அறிந்து கொள்வாயாக.

குருநாடி யிருக்குமிடம்

பாரப்பா குருநாடியைந்துக் குந டுவாய்
    மாறிநிற்கும் வரலாறு தன்னைக் கேளும்
சீரப்பா பித்தத்தின் முன்னே நிற்கும்
    திசைநாடி பத்துக்குத்தி ரமாய் நிற்கும்
ஏரப்பா வாதமென்று சொல்வார் மூடர்
    இருத்தியங்கே பார்ப்பளவில் வேராய் நிற்குந்
தாரப்பா கொண்டகுரு நாடி நேர்மை
    தனையறிய வகையறிய சாற்று வேனே. 11

குருநாடியானது முதல் ஐந்து நாடிகளுக்கும் நடுவில் நிற்கும் விவரத்தினைக் கேட்பாயாக. குருநாடியானது பித்தத்தின் நடுவில் நிற்கும் பத்துவகை நாடிகளுக்கும் நடுவே நிற்கும். வாதம் என்று கூறுவார்கள் ஆனால் கூர்ந்து கவனித்தால் வேறுவிதநாடியாய் நிற்கும். குருநாடியின் வகையை அறிய வழியை கூறுகிறேன் கேட்பாயாக.

பஞ்சநாடிகள் இருப்பிடம்

சாற்றுவேன் பெருவிரலிற் பூத நாடி
    சங்கையில்லா ஆள்தூண்டி வாத மென்க
ஏற்றமுள்ள நடுவில்தான் பித்த மாகும்
    இசைந்ததொரு பவுத்திரமே யைய மாகுந்
தோற்றுநின்ற சிறுவிரல்தான் பூத நாடி
    சூக்கமுள்ள குருநாடி யைந்துட் சேரு
மாற்றுமான குருநாடி யைந்துட் சேர்ந்து
    வொளிந்துநிற்கும் பேர்பெரிய வன்மை தானே. 12

ஐந்துவகை நாடிகளில் பூதநாடியானது பெருவிரலில் தோன்றும். ஆள்காட்டிவிரலில் வாதநாடியும் நடுவிரலில் பித்தநாடியும், பவித்திரவிரலாகிய மோதிர விரலில் கபநாடியும், சிறுவிரலில் பூதநாடியும் தோன்றும். சூட்சுமமுள்ள குருநாடியானது இவ்வைந்து நாடிக்குள்ளும் சேரும். இவ்வைந்து வகை நாடிக்குள்ளும் குருநாடியானது கலந்து வன்மை பெற்றுக் காணப்படும்.

பேர்பெரிய குருநாடிகு ணமே தெனிற்
மிரண்டுவரும் வாய்வுலத்தி வட்டை மேலே
சீரறிய வாய்வுமிகுமி ருமற் றோன்றுந்
தினவுசொறி மிகவுவருந் தேகம் வாடுஞ்
சூரறிய பித்தத்தி லாமை போலத்
தோன்றிலே சுரமிக்குச்சு ரத்து வாய்நீர்
கார்பெருகி வருவதுபோல்வி யாதி தோன்றுங்
கதித்திடில் நீர்கட்டுஞ்சிலேத்து மத்திற் போமே. 13

புகழுக்குரிய குருநாடியின் குணம் எதுவெனில் அது பிரண்டுவரும் வாதநாடியில் அட்டைபோல் நடக்குமானால் வாய்வு மிகுதியாகும். இருமல் தோன்றும். தினவு, சொறி முதலியன உண்டாகும். தேகம் வாடிவிடும். அதுபோல் பித்தநாடியில் ஆமைபோல் நடக்குமானால் சுரம் அதிகமாகும். வாய்நீரானது அதிகம் சுரக்கும். மேலும் அதிகமானால் நீர் கட்டிப்போகும்.

சேத்தும்த்திற் குருநாடி சிங்கம் போலே
சீறிநிற்கிலதின் குணந்தான் சந்நி தோன்றும்
ஆற்பணத்தை யூடுருகுவத்த மரு மாகில்
அசாத்தியமாம் மரண்குறி துப்பா துப்பா
காற்றெனவே குருநாடி குன்றிப் போகில்
கழியும்வயிற்றுக் கடுப்பெடுக்குங் கைகால் வீங்கும்
யேற்பனவு மில்லையில்லை திட்டஞ் சொன்னோ
மிசைந்ததொரு குருநாடியதை யிருத்திப் பாரே. 14

கபநாடியில் குருநாடியானது சிங்கம் போல் சீறிநின்றால் அதன் குணத்தைக் கேட்பாயாக. அவ்வாறு சீறி நின்றால் சந்நி தோன்றும். அந்நாடியானது ஆழ்ந்து ஊடுருவி அமர்ந்து நடக்குமானால் அக்குறி அசாத்திய குறியாகும். மரணம் நேரிடும். குருநாடியானது குறுகி நடக்குமானால் வயிறு கழியும். வயிற்றுக் கடுப்புண்டாகும். கைகால் விக்கமுண்டாகும். இதில் மிகைப்படுத்துதல் ஏதுமில்லை. இசைந்த குருநாடியை குறிப்பாகப் பார்க்கவேண்டும்.

பாரப்பா குருநாடி பக்கம் பாயில்
பாரித்த சிலேத்துமந்தானெ திரே சேரும்
கூறப்பா குருநாடி நேரே நிற்கில்
குற்றமில்லை வாதபித்தமி ரண்டும் சேரும்

தாரப்பா குருநாடி பின்னே வாங்கில்
 தப்பாதே சாத்தியங்கள் தானுண் டாகும்
காரப்பா உடலுக்குளு யிராய் நின்ற
 கருவான குருநாடி யொன்று காணே. 15

குருநாடியானது தனது இருப்பிடத்தைவிட்டு பக்கம் பாய்ந்தால் சிலேத்தும நாடி. எதிரே சேரும். குருநாடி நேரே நடந்தால் குற்றம் ஏதுமில்லை, வாதம் பித்தம் ஆகிய இரண்டு நாடிகளும் ஒன்றாக நடக்கும். குருநாடியானது பின்னே வாங்கினால் அசாத்தியங்கள் உண்டாகும். உடலுக்குள் உயிராய் நின்ற கருநாடி ஒன்றைக் காண்டாயாக.

ஒன்றுக்கு மெட்டாத நாடி நேர்மை
 யூடுருவித் தானிருக்கு முண்மை கேளீர்
வண்டுகள் மதுவருந்து நேர்மை போலே
 வாதபித்த சிலேத்துமத்தின்ம துவை யுண்ணும்
எனறைக்கு வாதபித்தந டுவே நிற்கில்
 ஏறுவதுங் குறைவது மில்லை யப்பா
கன்றுக்குப் பாலிறக்கும்ப சுவைப் போல
 காத்திருக்குங் குருநாடி காலைப் பாரே. 16

எதற்கும் எட்டாத குருநாடியானது உடலை ஊடுருவி நிற்கும் உண்மையைக் கேட்பீர்களாக. வண்டுகள் மலர்களிலுள்ள மதுவை அருந்துவது போல வாதபித்த சிலேத்தும நாடிகளின் மதுவாகிய சாரத்தை உண்டு நிற்கும். வாதத்துக்கும் பித்தத்துக்கும் நடுவில் நிற்குமானால் அது தன்னளவில் மிகுவதும் குறைவதுமில்லாமல் இருக்கும். கன்றுக்கு பாலை அருந்தத் தரும் பசுவைப்போல குருநாடி மெதுவாகக் காத்திருக்கும்.

குருநாடி நிலையறியாக்கு ருட ரெல்லாங்
 கூட்டமிட்டு சாத்திரத்துக்கு வமை சொல்வார்
மறுநாடி வாதபித்தசிலேத் தும மூன்றின்
 மத்தியமென் றிதையறிவார் வார்த்தை சொல்வார்
கருநாடி குருநாடி யாகக் காணும்
 கைம்முறையாய் குருதொட்டுக் காட்டத் தோன்றும்
பொருநாடி சாத்திரத்தில்ம யங்கி டாதே
 புலத்தியர் குருநாடி பின்னம் பாரே. 17

குருநாடியின் நிலையை அறிந்து பார்க்காத குருடர்கள் எல்லாம் கூட்டம் போட்டு சாத்திரங்களில் இருந்து உவமையை கூறுவார்கள். மறுவிநாடி வாத பித்த கப நாடிகளுக்கு நடுவே உள்ளதை அறிந்து கொள்வார்கள். குருநாடியை குருதொட்டுக் காட்டாமல் யாருக்கும் தெளிவாகப் புரியாது. பொதுவான நாடி சாத்திரங்களில் மயங்கிவிடாதே. புலத்தியர் குருநாடியை பார்த்துத் தெளிய வேண்டும்.

பார்த்தப்பா வாதத்தைந டுவே பார்க்கிற்
வண்டதுபோல் மதுவுண்ணு மத்தி ய்த்தில்
போற்றப்பா மூவிலிமு ருவைத் தாண்டி
பூரணமாய் மூலமுதலு ருவிப் பாய்ந்து
சாற்றப்பா விசைநரம்பி னூடே சேர்ந்து
சந்திரமண் டலமேவிச் சார்ந்து பின்னு
நாற்றமுற்ற குருநாடி யெங்குஞ் சுற்றி
நடுவில்வரும் நேர்மைதனை நாடிப் பாரே. 18

குருநாடியானது வாதத்தின் நடுவில் பாய்ந்து ஓடினால் மதுவை உண்டுவிடும் வண்டுபோல் மூன்றுவித நாடிகளையுந் தாண்டி மூலத்தை ஊடுருவிப் பாய்ந்து விசைநரம்பினூடே சேர்ந்து சந்திரமண்டலத்தைச் சார்ந்த பிஎ்பு எங்கும் பரவி நிற்கும்.

பம்பரம்போற் குருநர்டிகி றுகி றென்று
பற்றிநிற்கும் வாதபித்தந டுவி லேதான்
அம்பரம்போற் குமுறியெழும் வாத பித்த
மையலென்ற நாடிமுத லாடி யோடிக்
கம்பமுடன் மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றிக்
கத்தரிக்கோன் மாறலெனக் கட்டிச் சேர்ந்து
தம்பமுடன் வாதபித்தந டுவி லேதான்
தாம்தம்போ லாடிநிற்கும்கு ருவி தாமே. 19

குருநாடியானது பம்பரம்போல் கிறுகிறுவென்று வாதபித்த நாடிகளுக்கு நடுவில் சுற்றி நிற்கும். அவ்வாறு வாதபித்த நாடிகளுக்கு முதலாய் ஓடி மூன்று மண்டலங்களையுஞ் சுற்றி கத்திரிக்கோல் போல் மாறி வாத பித்த நாடிகளுக்கு நடுவாய் நிற்கும்.

குருநாடி வாதமது நிற்கும் போது
கோழியுடன் அன்னமயில்கு றியா மென்ன
வருநாடி பித்தத்தி னிற்கும் போது
கோழியுடன் அன்னமயில்கு றியா மென்ன
வருநாடி பித்தத்தி னிற்கும் போது
தெரித்துவிழும் விட்டிலைப்போற் றெளிந்து காணும்
பொருநாடி. சாத்திரத்தில லைய வேண்டாம்
பிராண கலைதனையறிந்தும ரணம் பாரே. 20

குருநாடியானது வாதத்தின்மீது நடக்கும்பொழுது கோழி, அன்னம், மயில் போன்றவைகளின் நடைபோல இருக்கும். பித்தநாடியில் நடக்கும் பொழுது ஆமை, அட்டை ஆகியவை போல் நடக்கும். கபநாடியில் நடக்கும் பொழுது விட்டிலைப்போல் துள்ளி ஓடும். சாத்திர நூல்களில் நாடிநடையை தேடி அலைவதைவிட வாசி ஓட்டத்தை கவனித்து அறியவேண்டும். (பாடல் வரிகள் பிழையாய் உள்ளன. பொதுவான பித்த நாடிக்கு உள்ள நடை எழுதப்பட்டது)

மரண நாடி

மரணமதை யறிவதற்குக்கு றியைக் கேளு
வழுவாத விசைநரம்புகு ளிர்ந்து காணும்
கரணமெனும் பொறிகளெல்லாம்த ளர்ந்து மெத்த
விசைநரம்புதான் றளர்ந்துவி ரைந்து வாங்கி
நறநறவென்னப் பற்கடித்தும ணியும் கட்டி
நாவுலர்ந்து மூச்சயர்ந்துந டுக்க முண்டாய்த்
துரணமெனும் வாதபித்தசி லேத்ம மெல்லாஞ்
சோத்தியம்பார் விட்டிலைப்போற்று டிக்கிற் சாவாம். 21

ஒரு மனிதனுக்கு மரணம் நேரிடுவதற்கு முன்புள்ள குறிகளைக் கேட்பாயாக. விசை நரம்பு குளிர்ந்து காணப்டும். ஐம்பொற்றிகளும் தளர்ந்து காணப்படும். விசை நரம்பு தளர்ந்து விரைந்து வாங்கிக் கொள்ளும். பற்களை நறநறவென கடித்து நாவுலர்ந்துவிடும். மூர்ச்சையுண்டாகும். நடுக்கமேற்படும். வாத, பித்த கபநாடிகள் விட்டிலைப்போல் துடித்து காணப்படின் மரணம் நிச்சயம்.

துடிகொண்ட சேத்துமந்தான் வெள்ளம் போலே
சுருசுருக்காம் மடமடவென வோடு மாகில்
அடிகண்டு மற்றாநாள்ம ரண மாகும்
அப்பனே பித்தமதுசி தறி யோடில்
முடிகொண்ட மூன்றாநாள் சாவார் சொன்னேன்
முழுமையுமே வாதமது சிதறி யோடில்
இடிகண்ட எட்டாநாள்ம ரண மாவார்
இன்பமாய்க் கண்டறிந்துயி டைந்து நில்லே. 22

கபநாடியானது வெள்ளம்போல் மடமடவென ஓடினால் மறுநாள் மரணமேற்படும். பித்தம் சிதறி ஓடினால் மூன்றாம் நாள் மரணமடைவார்கள். அதுபோல வாதம் சிதறி ஓடினால் எட்டாம் நாள் மரணமாகும். இதனைக் கண்டறிந்து வைத்தியம் செய்யவும்.

நில்லப்பா வாதபித்தமி ரண்டுங் கூடி
நிலைதப்பிச் சிதறியது வோடு மானால்
கொல்லுமப்பா பதினைந்து நாளிற் றானுங்
குணமாக விதனுடனே ஐயங் கூடி
வெல்லுமப்பா மண்டலத்தில் யாக்கை பாழாம்
விதமாக மூன்றுமே ஒன்றாய்க் கூடி
அல்லப்பா அரணைவால்து டியே காணில்
அப்பனே யவர்பிழைபார றிந்து பாரே. 23

வாதநாடி பித்தநாடி இரண்டும் கலந்து சிதறி ஓடுமானால் பதினைந்துநாளில் மரணம் நேரிடும். இவற்றுடன் கபமும் கூடி சிதறி ஓடுமானால் ஒரு மண்டலத்தில் மரணமுண்டாகும். வாத, பித்தம், கபம் ஆகிய மூன்று நாடிகளும் ஒன்றாகக் கூடி அரணைவால் போல் துடித்தால் அவர் பிழைப்பது அரிது.

பிழையாத வாதபித்தசேத் துமங் கூடி
பிரண்டுவருந் தேள்கொடுக்குப் போலே யோடி
உளையாக வோடம்போர் லோடு மானால்
உத்தமனே திங்களிலேம ரண மாவார்
குளையாத நாடியின்மெய்க்கு றியைக் காணார்
கூட்டமிட்டுக் குருவெனவேபி ரசிங் கிப்பார்
விழியான கண்ணிரெண்டு மற்றக் கண்ணும்
விதியறிந்தார் சந்நியுமேவி லகும் பாரே. 24

வாதபித்த கபநாடிகள் தேள்கொடுக்குபோல் பிரண்டு வந்தாலும் ஓடம்போல ஓடினாலும் ஒரு மாதத்தில் மரணம் ஏற்படும். நாடியின் மெய்க்குறியை கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் கூட்டம் சேர்த்து தலைவர்போல் பிரசங்கம் செய்வார்கள். உண்மையான நாடியைக் கண்டு அறியார்கள். அவ்வாறன்றி நாடியை ஒழுங்காக காண்பார்களேயானால் சந்நிநோயும் விலகிவிடும்.

சந்நியெழு போதிலிந்த நாடி மூன்றும்
சாதகமாய் சுழல்வண்டு தண்ணீர் மீதில்
உன்னியது பரபரத்தே போறாப் போல
ஓடியெங்கும் வாதபித்தசேத் தும மெல்லாம்
கண்ணியது சாதகமாய்வ ருமே யாகில்
கதிப்பாகும் வாதபித்தம்பம் பரம் ப்பால
பின்னியது விட்டிலைப்போற்றெ றித்து வீழிற்
பேச்சில்லை மரணமென்றேபி ரித்துச் சொல்லே. 25

ஒரு உடலில் சந்நி தோன்றுமானால் நாடி மூன்றும் சுழல்வண்டு தண்ணீரில் பரபரவென்று ஓடுவதுபோல் ஓடும். அதில் வாதமும் பித்தமும் பம்பரம்போல் சுழன்றுபின்னி, விட்டில்பூச்சி போல் தெரித்து விழுமானால், அங்கு மறுபேச்சு வேண்டாம். மரணம் நிச்சயமேற்படும்.

சொல்லப்பா வாய்வுக்கு மந்தத் துக்குத்
துணையாக அமர்ந்துமெத்தத்த ளர்வா யோடும்
அல்லப்பா பசிதனக்குத் தூங்கி யோடும்
அப்பனே சந்நிதான்பு ழுப்போ லோடும்
நில்லப்பா வயிற்றுவலி கண்ட பேர்க்கு
நோராக வுள்ளூறவாய் வாங்கி யோடும்
கல்லப்பா கிரந்தியென்ற நோய்த னக்குங்
கரையுடைந்த வருவியைப்போற் காணுங் காணே. 26

உடலில் நாடியானது வாய்வுக்கும் மந்தத்துக்கும் ஆழ்ந்து தளர்வாய் ஓடும். பசியுண்டானால் தூங்கி ஓடும். சந்நி நோய்க்கு புழுவைப்போல ஓடும். வயிற்றுவலி கண்டால் உள்ளூறவாய் வாங்கி ஓடும். கிரந்தி நோய்க்கு கரை உடைந்த அருவிபோல் நாடி ஓடும்

காணிதத்தில் வாதமென்றாற் சேத்ம வாதம்
காணுமடா சூலையெதிறாற் சேத்ம பித்தம்
விரணமுடன் புண்புறைக்கும் வாத பித்தம்
விதியறியாய் பீனிசந்தான் பித்த சேத்மம்
துரணமுடன் னீற்பாடு சற்பப் பாடு
சொல்லுகின்ற நாடியெல்லாம்சு ழன்று காணும்
சிரணமென்ற பாம்புவிஷந் தாது வெல்லாங்
கெதிகெட்டுக் காணாது கெர்ப்ப மாமே. 27

உடலில் வாதநோய்கள் என்றால் கபவாத நாடியும், சூலைநோய் என்றால் கபபித்த நாடியும், புண் புறைகளுக்கு வாத பித்த நாடியும், பீனிசத்துக்கு பித்த கப நாடியும், நீர்ப்பாடு சர்ப்பப்பாடு ஆகிய பாம்பு விஷங்கள் எல்லாவற்றுக்கும் நாடிநடை சுழன்று காணப்படும். பாம்பு விஷம் அதிகமானால் தாது கெட்டு வெளியே தெரியாமல் மெல்ல நடக்கும்.

வாய்வுக்கும் மந்தத்துக்கும் கெர்ப்பிணிக்கும் வியாதி நாடி

கெர்ப்பிணிக்கு வாதபித்துங்க லங்கிக் காணும்
கிராணியதி சாரமென்றாற்ற ளர்ந்து காணும்
உற்பவித்துத கபமீளை காச ரோகம்
உற்றிடிலோ சிலேத்துமந்தான் மீறிக் காணும்
பிற்பிடித்த விஷநீருஞ் சோகை பாண்டும்
பிலமானால் வீணைபோல மீட்டும் பாரு
பற்பிடித்த மேகமென்றால் பித்த மீறும்
பாலகனே கங்கைகொண்டு நீராம் பாரே. 28

கெர்ப்பிணிக்கு நாடியானது கலங்கிக் காணும், கிராணி அதிசாரம், ஆகியவற்றுக்கு தளர்ந்து காணப்படும். கபம், ஈளை, காசரோகம் ஆகியவற்றுக்கு சிலேத்தும நாடி மீறி ஓடும். விஷ நீரும், சோகை பாண்டும் அதிகமானால் நாடி வீணை தந்திபோல ஓடும். மேகநோய் என்றால் பித்தநாடி அதிகமாக ஓடும்.

நீர்மேக மானவர்க்கு நாடி காணும்
நிர்ணயமாய் நாடியெல்லாம்பி லமே கெட்டுக்
கார்மேகம் போலவந்த ளியின் மேலே
கண்டுவிழும் புழுப்போலேபு ரட்டிக் காணும்
சீர்மேக மானவர்க்கு நாடி தானுஞ்
சீறிநிற்குங் குருநாடிதி றமாய்த் தானும்
பேர்மேகங் கடுத்திடுகில் வாத பித்தம்
பின்னியது துடித்துவரும் உற்றுப் பாரே. 29

நீர்மேகத்துக்கு நாடியெல்லாம் பலம் கெட்டுக் காணப்படும். நெருப்பின் மேல் விழுந்த புழுபோல் புரண்டு புரண்டு விழும் மேகநோய் கண்டவர்களுக்கு

நாடியானது சீறி நிற்கும். குருநாடி தெளிவாய்த் தோன்றும். மேகநோய் அதிகமானால் வாதபித்த நாடிகள் ஒன்றாகப் பின்னி துடித்து வரும்.

உற்றதொரு கெர்ப்பிணிக்கு சேத்ம பித்தம்
உறுதியெனும் விக்கலுக்குச் சேத்ம வாதம்
மற்றதொரு சுரந்தனக்கு வாத பித்தம்
வகையான கணக்காய்ச்சல் பித்த வாதம
சித்தமுறுந் தலையிடிக்கும் பித்த மாகும்
சீரான சயரோகந்த னக்கு பித்தம்
குற்றமில்லை யதன்குணங்கள்ம ருந்தாற் றீரும்
குருவான பூரணத்தின்கு றிதான் பாரே. 30

கெர்ப்பிணிக்கு கபபித்த நாடி தோன்றும். விக்கலுக்கு கபவாதமும் சுரத்துக்கு வாதபித்தமும், கணக்காய்ச்சலுக்கு பித்தவாத நாடியும், தலையிடிக்கும் சயரோகத்துக்கும் பித்தநாடியும் நடக்கும். அவையவற்றின் குணங்களை அறிந்து மருந்து தந்தால் குணம் அடையும்.

பரிபூரணநாடி முற்றிற்று.

உ
கடவுள் துணை

அகஸ்தியர்
ஆயுள்வேதம் 1200 கூறியவை

(உடல்கூறு)

எலும்பினாற்கால்கணாட்டி யிசைந்ததோர்வளையேபோட்டு
நலம்பெறவாய்க்குப்பின்னே நரம்பினால்வலித்துக்கட்டித்
துலங்கிடச்சுவரைவைத்துத் தோலினால்மேய்ந்தவீட்டில்
வலம்பிணியுற்றுத்தேர்வன் வைத்தியனெனலாமே, 1

இரண்டுகால்கள் நட்டு, அதற்கு உகந்த வளையம் போட்டு, நரம்புகளால் இழுத்துக்கட்டி, தோலினால் கூரை வேய்ந்துள்ள வீட்டில் வரும்பிணிகளை அறிபவனே சிறப்பான வைத்தியன் என்றழைக்கப்படுவன்.

வைத்தியந்தானுநல்ல வங்கிஷபதியினுள்ளான்
குயித்தியபிறவிச்சேரக் குணமதுவுள்ளானாகில்
நயப்பொடுதீருநோய்க்கு முபாயமாய்த் தீர்க்கவல்லான்
நியத்தியவுலகுக்கெல்லா நேர்த்தியதந்தையாமே, 2

இவ்வுலகிலுள்ள வைத்தியனானவன் இப்புவியில் மானிடப் பிறப்புக் குள்ள அனைத்து சிறப்பான குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். நோய்களை உபாயத்தோடு தீர்க்கவல்லவனாக இருக்கவேண்டும். இப்பூமியில் உள்ள உயிர்களை ஒரு தந்தையைப்போல் காக்கக் கூடியவனாக இருக்கவேண்டும்.

பூவுளோனருளின்மந்தப் புங்கவனருளைப்போற்றி
ஆயுருவேதந்தன்னிலடவது முன்னோர்சொன்ன
மாயுருவெ்ஞ்சாணீளவதிலொருவெண்ணாங்கென்று
பாயுமெய்யதனள்வியாதிபயத்தினைப்பகரக்கேளே. 3

ஈசனைப் போற்றி ஆயுர் வேதத்தில் முன்னோர்கள் கூறியுள்ள எண்சாண் உடம்பில் உண்டாகும் நோய்களைப் பற்றிக் கூறுகிறேன். கேட்டுக் கொள்வாயாக.

வியாதித்தொகுப்புகணக்குலட்சணாங்கூறுகின்றார்

பகருவேனாலாயிரத்தினானூற் றுநாற்பத்தெட்டு
புகழுறுமெண்ணான்கோடு பொருந்தியபெண்ணேகேளாய்
சிகையுறுசிரசில் ரோகஞ் செப்பிலாயிரத்தெட்டாகும்
வகையுறுசாத்தியங்களசாத்தியம் வருகுங்காலம், 4

பெண்ணே நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தியெட்டுமற்றும் முப்பத்திரெண்டு வியாதிகளைக் கூறுகிறேன் கேட்பாயாக! தலையில் வரும் நோய்கள் ஆயிரத்தெட்டு ஆகும் . அதில் சாத்தியங்கள் அசாத்தியங்கள் உண்டு.

மேவியவுச்சிதன்னில் விரும்பிடும் வியாதிகேளாய்
காவியங்கண்ணினாளே கருதிடும்நாற்பத்தாறுஞ்

ீவியவ மூவர்த மீதிற் சேருநோய்பதினாறாகும்
காவலருரைத்தாற்காதிற் பற்றிய வியாதிநூறே 5

அழகிய விழிகளைக் கொண்டபெண்ணே, தலையின் உச்சியில் வரும் வியாதிகளைக் கேட்பாயாக . அவை நாற்பத்தி ஆறு ஆகும். அமுதமாகிய மூளையில் வரும் நோய் பதினாறு ஆகும். காதில் உண்டாகும் வியாதிகள் நூறு.

நூலவருரைத்தாராயுள் வேதத்தினுவ லு மாறு
ஏலவார்குழலினாளே பியம்பியநாசிதன்னிற்
சாலநோயெண்பத்தாறுஞ் சாற்றிய விழியில் ரோக
மேலுமேதொண்ணுற்றாறு மூண்டெனவிரித்துச்சொன்னார், 6

அழகிய கூந்தலை உடையபெண்ணே! ஆயுள் வேத நூலினை இயற்றியவர் ராசியில் எழும் நோய்கள் எண்பத்தியாறு என்றும், விழிகளில் வரும் நோய்கள் தொண்ணூற்றாறு என்றும் விரித்துக் கூறியுள்ளார்.

நாரியேயலகிரண்டில் நாதனாருரைத்த ரோகஞ்
சீரிய முப்பத்தாறாஞ் சிறந்திடு ங்கவுளிரண்டி ல்
வார்முலைமாதேநாற்பத் தொன்பதாம் வரிசேரிந்த
சேருநோய்முப்பத்தேழா மென்றுதான் செப்பலாமே 7

பெண்ணே! மேலன்னம், கீழன்னம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வரும் ரோகங்கள் என்று நாதன் கூறியவை முப்பத்தி ஆறாகும் . ராசியில் உள்ள கவுள் எலும்புகள் இரண்டும் உள்ள பகுதியில் வரும் நோய்கள் நாற்பத்தி ஒன்பது மற்றும் சேரிந்த பகுதியில் வரும் நோய்கள் முப்பத்தியேழு

ஆகுமேண்ணான்குதந்தமதனில் நோய்நாற்பத்தைந்தாந்
தோகையேயறுநூறாகுந் துரோகமுஞ் சொல் லு ங்காலை
நாகமாமுனியுரைத்த முப்பத்துநாளாமென்க
பாகமாயறிந்துண்ணாக்கிற் பத்து நோயிருபதாமே 8

பற்களில் உண்டாகும் நோய்கள் நாற்பத்தியைந்து ஆகும்.

உள் நாக்கில் வரும் நோய்கள் இருபது.

தானமாயி தழிரண்டிற் சாற்றுநோய்பதினாறாகு
மானனாய்லாடந்தன்னில் வைக்கு நோயிருபத்தாறும்
ஊணுறக்கண்டமீதி லுதித்த நோய் நூறதாகும்.
பானலாங்குழலினாளே பகர்ந்துரைவேதந்தானே, 9

இதழ் இரண்டிலும் வரும் நோய்கள் பதினாறு.

மெல்லினல்லாளேகேளா விரும்பியபிடரிதன்னிற்
புல்குநோயெண்பத்தெட்டு பொருந்திடும் புருவந்தன்னிற்
சொல் லுவது பதினாறாகுந் தோகையேகருத்தின்மீதே
தில்லையூராடிச் சொன்னார் தெளிந்து கொள்முப்பததாறே. (19)

மெல்லிப கொடியைப் போன்ற உடலை உடையவளே கேள்! பிடரியில் எண்பத்தியெட்டு வகை நோய்களும், புருவத்தில் பதினாறு வகை நோய்களும்

உண்டாகும். இதுவரை சிரசில் உள்ள பதினாறு பாகங்களில் வரும் நோய்களைப் பற்றி தில்லையில் ஆடிய சிவன் பாடியுள்ளார்.

ஆதியாமிறைவன்கூறு மாயுறுவேதஞ்சொன்ன
நீதிசேர்சிரசில்ரோக நிகழ்த்திடாயிரத்தெட்டாகு
மோதுவெண்ணூற்றுநாற்பத் தேழுமேயுணர்ந்து நின்ற
தீதில் நூற்றறுபதென்று தேகமெண்சாணதாமே. 10

எல்லாவற்றிற்கும் ஆதியாக உள்ள இறைவன் கூறியுள்ள ஆயுள் வேதத்தில் சிரசில் வரும் நோய்கள் ஆயிரத்தெட்டாகும் என்று கூறியுள்ளது. எண்ணூற்றி நாற்பத்தி ஏழில் நூற்றியாறு எவ்வாறு எட்டில் ஒரு பகுதியாக இருக்கின்றதோ அது போல் எண் சாண் உடம்பில் தலை ஒரு சாண் ஆகும்

எண்ணியசிரத்தின் மீது விப்படி பிரித்துச் சொன்ன
வண்மையாமுறுப்புபத்தொ டேழுதாமத னிலுச்சம்
நண்ணியவியாதி நாற்பத்தாறையும் நவிலக்கேளாய்
நுண்ணியபொருளையாய்ந்து நுவற்றியநூலிதாமே 11

இவ்வாறு தலையில் உள்ள உறுப்புகள் பதினேழிலும் உண்டாகும் பிணிகளைப்பற்றி கூறினேன். இனி உச்சியில் உண்டாகும் நோய்கள் நாற்பத்தி ஆறு குறித்தும் கூறுகின்றேன் கேள். பல நுண்ணிய கருத்துக்களை ஆராய்ந்து இயற்றிய நூல் இதுவாகும்.

திரைகடலுலகிலுள்ள சனங்களுக்கிட ரில்லாமல்
உரைமறைபுகலு மீச னுமைதனக்குபதேசித்து
விரைதமிழ்வடநூ லுள்ள விருத்தியும்பலவுந்தேர்ந்து
வரகவியதனாற் செய்த வாகடமருளுவோமே. 12

திரைகடல் சூழ்ந்துள்ள இந்நிலத்தில் வாழும் மக்கள் துன்பமில்லாமல் வாழ்வதற்கு சிவன் பார்வதிக்குஉபதேசித்த கருத்துக்களை வடமொழி நூல்களை ஆராய்ந்து பாடல் வடிவில் தமிழில் வாகட நூலாக இதைப் பாடியுள்ளேன்.

அருளுவாருல கோர்க்கெல்லாமகிலமாமுனிவர்தாமுந்
திருவுளமுற்றபோதுதேவர்கள் பலநூலாய்ந்து
வருமறைமாயன் சொன்னவா கடமருணூலாய்ந்து
பெருகிடவுரைத்தவாறின் பேர்க்குறி சொல்லுவோமே 13

மாமுனிவர்கள் இவ்வுலகிலுள்ளோர் எல்லோர்க்கும் அருள் செய்த பொழுது, தேவர்கள் இயற்றிய பல நூல்களை ஆராய்ந்தும், ஈசன் இயற்றிய வாகட நூல்களை ஆராய்ந்தும், இந்நூலை இயற்றினேன்

சொன்னநல்லீசனெற்றித் துலங்கியசுரத்தினோடு
இன்னமுங்கேளாய்நீதா னிதுமுதல்நயனரோகம்
உன்னியவங்கந்தானு முயர்பிணிவசாத்தியங்கள்
முன்னுமோர்கர்ப்பசாஸ்திர முதலிதுமொழியக்கேளே, 14

ஈசன் நெற்றியில் தோன்றிய வெப்பத்தினால் உடல் காயும் நோயான சுரத்திலிருந்து ,விழிகளில் உண்டான பிணிகள் வரை உள்ள எல்லா

நோய்களையும் அவற்றின் சாத்திய அசாத்தியங்களையும் கூறுகின்றேன். அவற்றில் முதலில் கர்ப்பத்தினைப் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றேன்

(கலிவிருத்தம்)

பாதிமாதுமையாளுக்குப் பகர்ந்தது சொல்லக்கேளாய்
தீதிலாவட நூல்தன்னைச் செந்தமிழாகச் செய்த
நீதியாயெனக்கிந்நூலை நிறையவேயோது வாய்நீ
ஆதியாம்பரமசற்குரு வாயுருவேதந்தானே, 15

சிவன் பார்வதிக்கு உபதேசித்ததைப் போல வாகட நூல்களை ஆராய்ந்து ஆயுள் வேதமாக செந்தமிழில் நான் பாட பரம சற்குருவே எனக்கு அருள் கூறுவாயாக

மனிதரானவர்கட்கெல்லா மதியணிசடையன்சொன்ன
பனியது போலவந்த பாவமாம வியாதிக்கெல்லாம்
குனியதுகூறுங்காட்டி, வில்லையாமென்றபோகம்
புனிதனேயறிய வொதாய் பூண்டுநின்றாளைப்போற்றி, 16

நிலவை தலையில் சூடிய சிவன் கூறியுள்ளதுபோல், மனிதர்களுக்கெல்லாம் பனிபோல் உண்டாகும் நோயானது, சூரியனைக் கண்டவுடன் பனி விலகுவதுபோல, வியாதிகள் அனைத்தையும் உணர்ந்து அவற்றை நீக்க வல்ல இந்த நூலைப்பாட சிவனை அடுத்து அமர்ந்திருக்கும் உமையவள் காப்பாகும்

அன்னநூலறியார்தேக மறிவினாலாகிலையா
என்னினாலறியப்பண்ணியெனக்கிது தெரியவோதாய்
பொன்னின்மானது சூழ்வைகைபுனல்பரிமழலைமேவு
மன்னையாமுழையாளேவ வவரெனக்கீந்தநாமம் 17

மற்றவர்கள் இந்நூலை தெரிந்துகொள்ள என்மூலம் பாடவைத்து, சுகந்தம் வீசும் வைகை நீர் சூழ்ந்துள்ள மதுரையில் மீனாட்சியாக உருவெடுத்துள்ள பார்வதியே எனக்கு அகத்தியர் எனப்பெயரிட்டாள்.

(கர்ப்பவுற்பத்தி விபரம்)

(கலிவிருத்தம்)

தொல்லிமாந்தர்வினை பண்ணத்தொல்புவி
புல்லுவாருப்பொரும்பிலுன்ன பசுங்
கொல்லுநோயுங்குணமுமருந்துடன்
வல்லிகவலைவசனித்த நம்பனே,. 18

இவ்வுலகில் மனிதர்கள் வினையினால் வரும் கொடிய நோய்கள் தீர அந்நோய்களின் குணங்களையும் அவற்றிற்கான மருந்துகளையும் ஈசன் கூறினான்

நம்பானுமைக்குரைத்திடு நந்திகொண்
டிம்பனல்வாகடநூலியம்பவே
தம்பமாமுனிதான் செய்த செந்தமிழ்
நம்பர்செம்பொனிறைபதம் போற்றுவாம், 19

ஈசன் பார்வதிக்கு உரைத்ததை, அவள் நந்தியின் மூலம் மாமுனிவர்களுக்கு கூறியதை செந்தமிழிலேயே பாடுகிறேன். இதற்கு ஈசனின் செம்மையான பாதங்களே காப்பாகும்.

மிக்கபாவலர் தன்னுடன் மெல்லிய
ரொக்கவோதியுணர்ந்தறியாததும்
பக்கமேவியிருந்தது பாற்கடல்
புக்கபூஞையொத்தது போலவாம் 20

இந்நூலில் உள்ள கருத்துக்கள் மற்றவர்கள் உணர்ந்து அறியாதது ஆகும். அதுபோலவே இந்நூல் பாற்கடலில் இருந்து வெளிப்பட்ட அமுதத்துக்கு ஒப்பானது.

(வேறு)

பாயிரமுதலாயுள்ள பஞ்சபூதத்தினோடு
வாயுவும் பத்துநாளில் வருந்தியபடி யேகூடில்
நோய்வருவேதுதானு நுவலுடகலைகள் மிக்க
வாயதுவுறைக்கு ஞான வளமதைநிறையக்கேளே. 21

ஆதியாக உள்ள நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும், கருத்தரிக்கும் போது உண்டாகும் வாயுவானது பத்துநாளைக்குள் சேர்ந்து விட்டால் நோய்கள் அணுகாது . கலைகள் பல அறிந்தவர்கள் கருத்துக்களை அதிகம் கேட்பீராக!

சென்மமாமனிதர்தாமுஞ் சென்மிக்கும்வாறு கேளாய்
இன்னமுஞ்சுக்கிலத்தில் பிராணவாய்வதுவுஞ் சென்று
தின்னமாய்ப்பிராணவாய்வு சென்றது கோபமுற்றி
யுன்னுமாமிரத்தஞ்சூழ்ந்து வுதாரணவாய்வளர்க்கம் 22

மனிதர்கள் இவ்வுலகில் பிறக்கும் வகையைக் கேட்பாயாக! ஆணின் சுக்கிலத்தில் பிராணவாயு சென்று அடைந்து . கிளர்ச்சியுற்று, பிறகு அது மேலும் மேலும் வளரும்

சூழ்ந்தது சுக்கிலத்திற் சுரோணிதங்கலக்கு மென்று
பூந்திடும் வியாதிமூன்றும் பொருந்திடுங்குமிழிபோல
ஏந்தியேதிரளுமேழிலீரேழுதன்னிலூர்க்கு
மாய்ந்தநாளிருபத்தைந்திலருங்குமுளைபோற்றோன்றும் 23

பெண்ணின் சுரோணிதத்துடன் ஆணின் சுக்கிலம் கலந்த உடன் அப்பொழுதே வாத, பித்த, கப, விகற்பங்களினால் வியாதியும் உட்புகுந்து விடும் சிறுகுமிழ் போல் உண்டாகும் கருவானது நாளாக நாளாகத் திரண்டு இருபத்தைந்து நாளில் முளைபோல் தோன்றும்.

முந்தியதிங்கள் தன்னின் கருமுளைத்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள் தன்னிற் பிடரிதோள்முதுகுமன்றி
யுந்திக்குமூன்றாந்திங்களுடல்விலாயரையுங்கால்க
ளுந்திக்குநான்காந்திங்களுயர்ந்த தோர்மூக்குண்டாமே 24

முதல் மாதம் அக்கருவானது முளைத்து கட்டிபோல் தோன்றும், அடுத்த மாதத்தில் பிடரி, தோள், முதுகு ஆகியன தோன்றும், மூன்றாம் மாதத்தில் உடல் விலா, இடுப்பு, கால்கள் ஆகியனவும், நான்காம் மாதத்தில் மூக்கும் உண்டாகும்

(அங்காதிபாதம்)

ஐஞ்செனந்திங்கள் தன்னிலாகிடுஞ்செவியநாசி
புஞ்சிடுமாறாந் திங்கள் போந்திடுமாசமேழி
லுஞ்சியமலசலங்களுற்றதோர்துவாரமுண்டா
மிஞ்சியமூளையுடன் புழுகுமிக்கநலக்கமுமாமே. 25

ஐந்தாம் மாதம் காது உண்டாகும் , ஆறாம் மாதத்தில் மூக்கு நன்கு வளந்து விடும் . ஏழாம் மாதம் மலசலங்கள் வெளியேற தொளைகளும் உண்டாகும்.

நரம்புடனாடிசைந்து நண்ணிடுங்குடல்கள் தொப்புள்
பரந்தகைகால்களுண்டாமபற்றிய வெட்டாந்திங்கள்
சிரந்தனின்மயிருமுண்டாஞசிக்கினபெலமுமுண்டாந்
துரந்திடுமன்னசாரந்தொப்புளின்சலம்பலிக்கும் 26

அம்மாதமே நரம்புகள், குடல்கள், தொப்புள் , கைகால்கள் ஆகியவை உண்டாகும் எட்டாவது மாதத்தில் தலையில் உரோமம் வளரும் பலமுண்டாகும். கருவிற்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் அதன் தொப்புள் கொடி மூலம் செல்லும்

ஒன்பதாந்திங்கள் தன்னிலுரத்தியுமறிவுமுண்டாம்
வன்பெருங்கோயந்தன்னில்வருத்தநோய்பெலமுமுண்டாம்
தன்பிராணணைநினைத்துத்தவமுறுநிலையாய்நின்றே
அன்புதன்கையெடுத்தேயரும்பதமருள்வாயென்றும் 27

ஒன்பதாம் திங்கள் தன்னைபறியும் அறிவுண்டாகும். அவ்வுடலில் வருத்தம் தரக்கூடிய நோய்கள் பல உண்டாகும். தன் உயிரை நினைத்து தவமிருக்கும்நிலையில் கைகள் இரண்டையும் கொண்டு தொழுவது போல் கருவறையில் இருக்கும்

ஆரவேபத்துமாதமாதித்தனருளினாலே
சீர் பெருமபானவாய்வுசிரமதுகீழதாகப்
பார்தனிற்கொணர்ந்துதள்ளும் பயின்றுமுன்னறிவதெல்லாஞ்
சேரவே மாதியாகித்திகைத்துநொந்தயருமென்றே, 28

பத்தாம் மாதத்தின் இறுதியில் அபானவாயுவின் உதவியால் தலைகீழாக , இவ்வுலகில் பிறந்து முன்னறிவதெல்லாம் அறிந்து ,திகைத்து, நொந்து , அபர்ந்து களைப்பாறும்.

கெற்பதானங்கள் பண்ணக்கிணர்தனிற்சரங்கணாசி
வற்பணப்பிராணவாய்வுவலத்திலேயோடிலாணாஞ்
சிற்பனவிடத்திலோடி.ற்சிறந்தது பெண்ணதாகும்
பிற்கரவுதயமாகிற்பிலமிலாக்குருடுவூமை 29

கருவறை என்னும் கிணற்றில் கர்ப்பம் உண்டாகும் போது நாசியிலோடும் சரம் என்னும் மூச்சுக் காற்று முக்கிய பங்கு வகிக்கும் . பிராணவாயு வலது நாசியிலோடினால் பிறக்கப்போகும் குழந்தை ஆணாகப் பிறக்கும்.அதுவே இடது நாசியிலோடினால் பெண்ணாகப் பிறக்கும் வாசியோட்டமானது முழுமையடையாத பொழுது உண்டாகும் கருவானது குருடு, ஊமை எனக் குறைகளுடன் பிறக்கும்.

இப்படிசடலமானவிதில்விடுமன்னந்தன்னில்
முப்பதுகடிகைதன்னில் மூன்றுகூறாய்ச்சரியு
மெய்ப்படியிரண்டு கூறுமெய்மலசலங்களாகிச்
செப்புமோர்கூறிரத்தஞ்சேர்ந்துடல்தனைவளர்க்கும் 30

நாம் உண்ணும் உணவானது நம் உடலில் 30 நாழிகைகளில் மூன்று பகுதிகளாகப் பிரிந்து இரண்டு பகுதி உடலில் தோன்றும் மலசலங்களாகவும் , மீதியுள்ள ஒரு பகுதியே இரத்தத்தில் சேர்ந்து உடல் வளர்க்க உதவும்.

முயன்றதோர் தேகந்தன்னில் மூன்றரை கோடிரோமந்
துயன்றெழுந்துவாரந்தானுஞ் சொல்லியேமூன்றேதென்ன
உயன்றதோர்சடலந்தன்னிலுப்பிருபலமேதென்ன
தியன்றெழுபித்துழக்குச்சேத்துமமுறியதாமே 31

நம் உடலில் மூன்றரை கோடி உரோமங்கள் உள்ளன. சருமத்தில் மூன்று கோடி நுண்ணிய துவாரங்கள் உள்ளன. இவ்வுடலில் உப்பு இரண்டு பலமும், பித்து ஒரு உழக்கும், கபம் ஒரு உரியும் உள்ளன.

(கலிவிருத்தம்)

முன்னங்கைதன்னின் மோரு முன்னாழியாம்
பின்னம்பயித்தியம்போமூவுழக்கதா
முன்னுமுதிரமொருநாழியாகிடு
முன்னியேயோதுமுமிநீர்நாவறியே 32

முன்னங்கையில் உள்ள குழியின் அளவு 1. நாழியாகும், பித்தம் 3 உழக்கும், இரத்தம் ஒரு நாழியும், உமிழ்நீர் நாவினளவும், இவ்வுடலில் இருக்கும்.

(வேறு)

செய்யாதமறையுள் வேதஞ்செப்பியவியாதிக்கெல்லாம்
பையவேபடுத்து மெய்யிற்பற்றியநரம்புசோதி
ஐய்யவனிறைச்சிமற்றுந் தொகுத்தனர் தெரிந்துமுன்னோர்
தூயமற்றகலச் சொன்னாரங்காதிபாதமென்றே, 33

ஆயுள் வேதத்தில் உடலில் தோன்றும் வியாதிகளின் இருப்பிடமாக உடலில் இருக்கும் நரம்பு –மற்றும் இறைச்சிகளினால் உண்டான உறுப்புகளைப்பற்றி கூறுவது அங்காதி பாதம் எனப்படும்

அங்குலந்தொண்ணூற்றாறமவரவர்கையால் மெய்தா
ழிங்கதிர்குறைவதாகுமிறைச்சிநூற்றிருபத்தைந்து
புங்குகள் பலமாமென்பாற்பார்வைசேரிரண்டுகண்ணுங்
கங்குல் போலழுகுமாதேகழஞ்சிரண்டாகுங்கண்டாய் 34

ஒருவரின் உயரமானது அவரவர் கையில் விரல்களால் 96 விரல் அளவு இருக்கும் . உடலில் உள்ள மாமிசத்தின் எடை நூற்றி இருபத்தைந்து பலமாகும். பார்வை தரும் கண்கள் இரண்டும் இரண்டு கழஞ்சு எடையாகும்.

கண்ணுறுநாசி மூன்றுகழஞ்சுகாரங்கள்நாக்கு
நண்ணுறுகன்னஞ்சேரநாற்கழஞ்சாகுமெய்யில்
நுண்ணியவெலும் பெலாநூற்றொருபத்துபலமாமென்பா
ரெண்ணுறுமீறலான தென்பலமெண்ணலாமே, 35

நம் உடலில் மூக்கு 3 கழஞ்செடையும் , நாக்கு நான்கு கழஞ்செடையும் இருக்கும். உடலில் உள்ள அனைத்து எலும்புகளின் மொத்த எடையும் நூற்றிபத்து பலமாகும். ஈரல் எட்டு பலமாகும்.

என்னுமுப்பலமேமூளையினிச் சிறுகுடலினீள
முன்னுமுப்பத்திரண்டு முழமெனச்சொல்லலாகும்
பன்னுமுந்தாமரைக்காய்பலமைந்து மெண்ணலாகும்
பன்னுநாற்கழஞ்சுபத்துவைப்புரம்பார்வைகண்டாய், 36

நம் உடலில் மூளை 8 பலமும் சிறுகுடலின் நீளம் முப்பத்திரெண்டு முழமும் இருக்கும்.

(இரண்டாம் மூன்றாம் வரிகள் பொருள் புரியவில்லை)

பாய்ந்தெழுசயமுன்னாழிபத்துமூவுழக்குச் சோரி
ஆய்ந்தனநாழியூறுமறிவினோடுயிராம்நாடி
ஏய்ந்ததோரெழுபத்தீராயிரமவையெலும்பைப் பின்னித்
தேய்ந்தனைவியாதியாகத்திறமுடனியங்குந்தானே 37

நம் தேகத்தில் சயம் மூன்று நாழியும், முப்பது உழக்கு இரத்தமும் இருக்கும். இவற்றில் ஊறும் ஆயிரம் நாடிகளும் எழுபத்தீராயிரம் நாடியாக உடலில் எலும்புகளைப் பின்னிப் பிணைந்து வியாதிகளை தன்னகத்தே கொண்டிருக்கும்.

செந்தமிழ்நூலையாய்ந்து செப்புவேன்புவியிலிந்த
மந்திரஞானந்தானுமகாமுனிமகிழ்ந்துவீசன்
தந்தனம் பதத்தைநாடித்தவாரமா முனிவன் கூற
அந்தவாதீசர்போற்ற யருளிவடநூலாமே. 38

இப்புவியில் மந்திரம் ஞானம் ஆகியவற்றில் சிறந்த மாமுனிவர் மகிழ்ச்சியுடன் ஈசன் பாதத்தை நாடி வைத்துப் பாடியதை , ஈசன் போற்ற, வடநூலாக அருளியதை, செந்தமிழ் நூல்களை ஆராய்ந்து இவ்வுலகுக்கு கூறுகிறேன்.

(வேறு)

வடநூலதனை மிகவாய்ந்துமகிழ்ந்தே முனிவரிருடி களுந்
திடமாயிதனைக்கலைபகிர்ந்து செய்யும் புவிக்குளுலகோர்க்கும்
அடவாய்வந்தபிணிமுறையு மங்கக்குறிப்புசாஸ்திரமும்
அடவாய்விரித்தசரநூலை யன்பாய்வகுத்தவாறிதுவே 39

ரிஷிகளும், முனிவர்களும் மிக மகிழ்ச்சியுடன் இயற்றிய வடநூல்களை ஆராய்ந்து இப்புவியில் மானிடர்க்கு உண்டாகும் பிணிகளையும், அவை உண்டாகும் முறைகளையும், உடல் அங்கக் குறிப்புகளையும் , சர நூலின் கருத்துக்களையும் அதன் பயன்களையும் இங்கு கூறுகின்றேன்.

(வேறு)

வாறிதுவார தென்றுவகையிதுதன்னையீந்து
பேருமெய்ஞ்ஞானநீதிபெருகியவுலகுள்ளோர்க்கு
கூறிடவாறிலொன்று குணவிதித்தானநூலை
வீறிடவிதனைநீயும் விரும்பிடவிருந்துகேளே. 40

முயற்சியுடையோர் தம் முயற்சியின் பயனால் அறிந்து கொள்ள மெய்ஞ்ஞானமும் , நீதியும் பெருகிவுள்ள இவ்வுலகில் மானிடர்க்கு இந்த மருந்துவ நூலை பாடுகிறேன். நீ விரும்பிக் கேட்பாயாக.

(நாடி நிதானம்)

(வேறு)

அறிந்துகொள்நாடிதானு மரன்பால் முந்திவலபாகஞ்
செறிந்தேமாதரிடக்கையைச் செவ்வேநீவித்துவட்டின்னங்
குறித்தேயுந்தனிடக்கையாற்கூடமூன்றுவிரல்வைத்து
செறிந்தவாதமருள்பித்த சிலேத்துமகுணமும் பாரீரே, 41

நாடி பார்க்கும் பொழுது ஆண்களுக்கு வலக்கையிலும் , பெண்களுக்கு இடக்கையிலும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கையில் கையை நீவி உள்ளங்கைக்கு அடுத்தபடியாக உள்ள மணிக்கட்டிற்கு கீழே சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்று விரல்களையும் முறையே மேலிருந்து கீழாக வைத்து வாத, பித்த கப நாடிகளை ஆராயவேண்டும்.

பாரீர்நாடியறிந்துணர்ந்து பரமன் செயலும்பிணிமுறையும்
நீரேயோடு மலசலமும் நிறமுங்குணமுமுகக்குறியும்
சாரேயிணங்குங்குழல்மடவீர்காலன் றேகம் வயதிளமை
நேரேயறியுமுகநாடி நெறியுங்குறியுஞ்செறியுஞ்சொல்வோமே 42

நாடியை அறிந்து உணர்ந்து, பரமனின் செயலையும், நோயையும், சிறுநீர், மலம், உடல்நிறம், முகக்குறி காலம், தேகம், வயது, இளமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நோயினை அறியவேண்டும்.

(வேறு)

சொல்லியுவந்திக்கீழே சுழித்த தோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்தீராயிரந்தான்
வல்லவர்வகுத்துச் சொன்ன வளம் பெறநாடி பத்தும்
நல்லதோர்நாடி மூன்று நயந்துகையறியலாமே. 43

வயிற்றுக்குக் கீழே ஓர் எழுத்தைப் பற்றி எழும் நாடி எழுபத்திரண்டாயிரம் ஆகும். வல்லவர்கள் வகுத்த வாயுக்கள் பத்தோடு வாத, பித்த, கபம் என்னும் மூன்று வகை நாடிகளைப்பும் அறியவேண்டும்

கைதன்னைப்பிடித்துநீயுங்கடவுளைக்கருத்திலுன்னி
உய்வதோரல்லவென்று வுற்றறிநாடி பார்க்க
பையவே தொட்டுதொட்டு பதைப்பதுண்டபோதே
மெய்தனிற்குணங்கள் தன்னை மேவிநீவிளம்பிடாயே, 44

கையைப்பிடித்து கடவுளை கருத்தில்கொண்டு, அவன் துணையுடன் நாடி பார்க்கும் பொழுதே மிக மெதுவாகத் தொட்டு அந்நாடி பதைபதைப்போடு அடிப்பது கண்டவுடனேயே உடலின் குணங்களை நீ கூறவேண்டும்.

விளம்பியவாகடத்தில் விரித்தனவிதங்களெல்லாந்
தெளிந்தறிவாதபித்தஞ் சிலேட்டுமக்கொள்கையோடுஞ்
சளம்பெறுசன்னிதோஷந் தானுறவார்கட்கெல்லாம்
வளம் பெறத் தெரிந்தறிந்து மனதினாற்கருதுவாயே 45

வாத, பித்த, கபங்களை மனதில் கொண்டு , வாகட நூல்களில் கூறியுள்ளவற்றையும் கருத்தில் கொண்டு சன்னி தோடம் ஆகியவற்றையும் எண்ணி மனதிற்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடி பார்க்கிற்
பெருவிரலிடையே விட்டுப்பிடித்திடநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாத மிருவிரல் பித்த மோடுந்
திருவிரன்மூன்றிலோடிற் சிலேட்டுமநாடிதானே, 46

விநாயகரை வாழ்த்தி கரத்தில் நாடிபார்க்கும் பொழுது மணிக்கட்டுக்கு கீழே பெருவிரல் அளவு விட்டு நாடி பார்க்க முதல்விரலில் வாதநாடியும் , இரண்டாம் விரலில் பித்த நாடியும், மூன்றாம் விரலில் கபநாடியும் தெரியும்.

அங்கையை முறுக்கி நெட்டியடவுடன் மேலாய்வாங்கி
செங்கையாற்பிடித்துநாடித்திடமுடன் பார்க்கக்கேளு
முன்கையிற்பருத்தநாடி மெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்று மனதினாலுரைத்திடாயே, 47

கைவிரல்களில் நெட்டிவாங்கி மருத்துவன் தன் கையால் பிடித்து நாடியை சிறப்புடன் பார்க்க முதலில் உள்ள பருத்த நாடி மெதுவாக ஓடினால் அது வாதநாடியாகும்.

உத்தரிநாடி நொந்து வுயர்ந்தது பதறியோடிற
பித்தமாநாடி.யென்றே பிசகறவறிந்து கொள்மின்
மெத்தவேயிரண்டும்புக்கி விரைவுடன் றெறிக்குமாகிற்
சுத்தமாய்ச்சேத்மமென்று சொல்லுமிஞ்ஞாலமீதே. (48

அடுத்த விரலில் உள்ள நாடி உயர்ந்து பதறியோடினால் அது பித்த நாடியென்றே பிழையில்லாமல் கொள்ளலாம். இந்த இரண்டு அளவுகளுக்கு இடையில் விரைவுடன் தெறித்து ஓடுமானால் அது சிலேத்தும நாடி என்று உலகிலுள்ளோர் கூறுவர்.

ஞாலமேலு டலந் தன்னில் நசற்பிணியில்லாதார்க்கு
காலமேவாதமோடுங் கடும் பகல்பித்தமோடும்
மாலையிலையமோடு மென்னவேமகிழ்ந்துநாளுஞ்
சாலவேவயித்தியோர்கள் தரமிது தெளிவதாமே. 49

இவ்வுலகில் உள்ள மனிதர் உடலில் பிணியில்லாது இருப்பின் அவ்வுடலில் காலையில் வாதநாடியும், பகலில் பித்தநாடியும், மாலையில் கபநாடியும் ஓடும். இதனை வைத்தியர்கள் மிக தெளிவாக உணரவேண்டும்

தெளிந்தவர்கைக்குள் நாடிச் செய்ய வெள்ளரிக்காய்தின்ன
குளிர்ந்திடில்வாதமாகுங்குலவியரையோடென்ன
விளங்கியமேனிதானு மெச்சல்நீர்பித்தமாகும்
வளம் பெறத்துவறை யொன்று வழுத்திடச்சேதமென்னே, 50

ஒருவர் கையில் நாடிபழக வேண்டுமானால் அவர்களுக்கு வெள்ளரிக்காய் தந்து உண்ணச் செய்பவேண்டும். அதனால் உடல் குளிர்ந்து இருக்குமானால் அப்பொழுது அவர் கைகளில் தெரிவது வாத நாடியாகும். அவரை அளவு நாடி ஒடினால் உடலில் உமிழ்நீர் சுரக்கும், பித்தம் அதிகமாகி பித்த நாடி ஓடும் . துவரை அளவு நாடி ஒடினால் அது கபநாடியாகும்.

சேத்துமமெழுந்தபோதுதித்திப்பாநாவிற்றோன்றும்
நேத்தியேகசப்புமீறிலிசைந்தது பித்தமாகும்
ஏத்தியபுளிப்புமீறிலெழுந்த துவாத மென்ன
பார்த்துநீயிதனையெல்லாம் பாங்காகவறிந்துசெய்யே, 51

உடலில் கபக்குற்றம் அகிகரிக்கும் பொழுது நாவில் தித்திப்பு தோன்றும் . நாவில் கசப்புச்சுவை தோன்றினால் அது பித்தம் மிகுதியாகவுள்ளதின் அறிகுறியாகும். நாவில் புளிப்புச்சுவை தோன்றினால் அது வாதக் குற்றமாகும் .இதனை கருத்தில் கொண்டு நாடியினை அறியவேண்டும்.

ஆனதோர்வாதநாடியடர்ந்துறவலுவாய்நிற்கில்
ஊனமாமுடலில் நோய்களுலாவியேநிற்குமாகில்
தானமாய்ப்பித்தநாடித்தான்வலுவாகிநிற்கிற்
கானமாங்குழலினாளேகாய்ச்சலுங்கடுமையாமே, 52

அழகிய கூந்தலை உடையவளே! வாதநாடியானது அடர்ந்து வலு வாக அடித்தும் உடலில் பல்வேறு நோய்களும் இருக்கும் பொழுதில் பித்தநாடியும் வலுவாக இருந்தால் அவ்வுடலில் காய்ச்சல் இருக்கும்

(மரணநாடி)

வாதமுமையந்தானம் வ லுவுறநிற்குமாகில்
மோதியவியாதிதீரமூன்றுநாட்செல்லுமென்க
ஆதலாற்பித்தநாடி யணிவது போலேயோடில்
வேதனையான காய்ச்சல்மீளுமென்றறிந்து கொள்ளே, 53

வாதநாடியும், கபநாடியும் வலுவாக அடித்தால் அவ்வுடலில் உள்ள வியாதி தீர 3 நாட்கள் ஆகும். ஆனால் பித்தநாடி அணில் போல் ஓடினால் அவ்வுடலில் காய்ச்சல் எளிதில் தீராமல் மேலும் சிலநாள் இருக்கும்.

பித்தமுமையந்தானும் புரண்டெழுந்தோடு மாகிற்
சித்தத்தில்வெப்புமீறுஞ்சிறுகுளிருளைந்திரும்ும்
பற்றிமெய்காந்திவேர்த்துப்பசிகெடு மலசலங்கள்
சற்றினும் வழுவழுப்புச்சரீரமும்வெளிறுந்தானே. 54

பித்தமும் ஐயமும் புரண்டு எழுந்து ஓடினால் கபாலத்தில் வெம்மை அதிகமாகும். குளிருண்டாகும், மேனி திமிர்த்துப் போகும் . உடல் எரிச்சலுற்று வேர்த்து பசி இல்லாமல் போகும். சிறுநீர், மலம் ஆகியன வழுவழுப்புத் தன்மையுடையதாக இருக்கும் சரீரமும் வெளுத்துக் காணப்படும்

வாதமும்பித்தமையம்வன் பெழுந்தோடு மாகில்
வேதுக்கள் பலதுசீதமிரட்டித்தரோகங்காணுந்
தீதற்றுவதைப்படுத்துந்திரி தோஷம் பலநோயுண்டாந்
தாதுக்கள் கைகால் மெய்யுஞ்சத்திடு கட்டுளையுந்தானே. 55

வாத ,பித்த, கபநாடிகள் மூன்றும் வன்மையாக எழுந்து ஓடுவதுபோல் விரைவாக அடித்தால், இருமடங்கு குளிரால் தோன்றும் நோய்கள் உண்டாகும் .உடலை மிகவும் துன்புறச்செய்யும் . முக்குற்றமும் உண்டாகி பலநோய்கள் தோன்றும், கைகால்களும் தாதுக்களும் கெட்டு உடல் வலிமையற்று உளைச்சல் தரும்.

(கண்டறிமரணக்குறி)

வாகினிலன்னங்கோழிமயிலெனநடக்கும்வாதம்
ஏகியேயாமையட்டையி வையெனநடுக்கும் பித்தம்
போகியதவளைபாம்புபோவது சேத்மமாகும்
மாகியநாடி மூன்றுமமர்ந்திடிற்சன்னியாமே, 56

அன்னம், கோழி, மயில்போல் நாடி நடந்தால் அது வாத நாடியாகும். ஆமை, அட்டை, ஆகியவற்றைப் போல் நாடி நடக்குமானால் அது பித்த நாடியாகும். கபநாடியில் நாடியானது தவளை பாம்புபோல் நடக்கும். வாத, பித்த, கப நாடிகள் மூன்றும் அமர்ந்து மெதுவாக அடித்தால் அது சன்னி நோய்க்குரிய நாடியாகும்.

அந்தித்தநாடி தானுமரணைவால் துடியைப்போலே
சந்தித்துமாதரோடு தான்புக்குமீண்டீரென்ன

வெந்தித்துவிதரியோடில்வேதனைமிகவுண்டாகும்
வந்தித்துமதங்களாலேமதியுள்ளோரறிந்து கொள்ளே, 57

உடலில் நாடியானது , மாதருடன் உடலுறவு கொண்டபின்பு அரணைவால்போல் துடித்துக் காணப்படும். அந்நாடியே உதறியோடினால் வேதனை மிக அதிகமாக காணப்படும். இவற்றை அறிவுடையவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

பித்தமும்வாதநாடிப்பேசியவைநாடி
யொத்ததோர்சரியாய்த்தன்னிலுலாவியேநிற்குமாகிற்
சுத்தமாயுடலந்தன்னிற் சொல்ல வேவியாதியில்லை
முத்தணிமுலைநன்மாதே மொழிந்தனர் முனிவல்லோரே, 58

முத்தணிந்த மார்பினை உடைய பெண்ணே எவ்வுடலில் வாத, பித்த, கப நாடிகள் அவற்றுக்குரிய மாத்திரை அளவில் நடக்குமோ அவ்வுடலில் வியாதிகள் இல்லை என்று முனிவர்கள் கூறியுள்ளனர்.

தேளெனதெரிந்துசற்றேதிரிகுணஞ்செய்யுமாகின்
மாளவேமரணவாய்வுவந்திடுஞ்சன்னியுண்டா
மீள்வதேயல்லமுன்னால் விதிப்படிவந்த தீது
நாளது திங்கட்குள்ளே நாசமாய்க் கொல்லுந்தானே, 59

நாடி நடையானது முதலில் தேள்போல் நடந்து பின்பு மாறி நடக்குமானால் மரணவாய்வு வந்துவிடும் சன்னி உண்டாகும் முன்பிறவி விதிப்படி வினைப்பயனால் ஒரு மாதத்திற்குள் அப்பிணியாளன் இறந்து விடுவான்.

ஏற்றியதீபம் போலு மெரிசுடர்நுனியைப்போலுந்
தோற்றியநாடி தானுந் துலங்காதச் சூடுமாகில்
மாற்றியவாணாள் தானும்வரைப்படுந்திங்களொன்றில்
நாற்றிசையுலகுள் ளோர்க்கு நயம் படவுறைத்தாரீசன், 60

எரியும் தீபம் போலும், எரியும் அத்தீபத்தின் நுனிபோலும், நாடியானது பிணியாளன் உடலில் தெளிவாகத் தெரியாமல், சிறிதே உணரும் வகையில் இருந்தால் அப்பிணியாளன் ஒரு மாதத்திற்குள் இறந்துவிடுவான் என்று உலகின் நான்கு திசையிலுள்ளவர்களுக்கும் ஈசன் கூறியுள்ளார்.

ஐயமாஞ்சிலேட்டுமத்திலாகியநாடிதானுந்
தொய்யவேதவளை போலத்தொங்கியேகுதித்திட்டாலும்
பையவேநடந்திளைத்துப்பாம்பெனநடைகொண்டாலு
மைசெறிகுழலினாளேமரணமென்றறிந்து கொள்ளே, 61

கருமையான கூந்தலை உடையபெண்ணே , ஐயமாகிய கபநாடி யானது தவளைபோல் தயங்கித் தயங்கிக் குதித்து நடந்தாலும் பாம்பைப் போல் திளைத்து நடந்தாலும் உடன் மரணம் என அறிந்துகொள்வாயாக.

(வேறு)

கடிதானநாடியதுதோள்மீதிலேறியே
கண்ணிலே நீரெடுக்கும்
வடிவானமுகம் நீண்டு மூக்கதுமலர்ந்துநா
வழுவழுத்திடுமதல்லால்
அடிதானமூலம துவுள் ளேவ்லித்திடு
லடிவயிறுதொப்புட்குள்ளே
நெடிதானமாமுனியுரைத்துநூலீதென்று
நிச்சயமறிந்துகொள்ளே, 62

நாடியானது தோள்மீதேறி அடிப்பது போல் நடந்தாலும் கண்ணில் விடாமல் நீர்வடிந்தாலும், முகம் நீண்டு மலர்ந்து காணப்பட்டாலும், நாக்கு வழுவழுத்துச் சுவையேதும் தெரியாமலிருந்தாலும், அபானம், அடிவயிறு, தொப்புள் ஆகியவை வலித்தாலும் , அவை மரணக் குறிகளாகும் என்று, மாமுனிவர் கூறியுள்ள இந்நூலிலிருந்து, உறுதியாக அறிந்துகொள்ளவும்.

(வேறு)

நடுக்குநாடி மிகப்பதறிநாவும் பல்லும்வறண்டிருக்கு
மிடுக்கங்கெட்டுவழியிருண்டுமேலே நோக்கும்வழிபார்க்குந்
தொடுக்குகின்றசேத்துமமுந்தொண்டைதனிலேநின்றலரும்
அடுக்குமிதுவேகுறியானாலங்கே செல்லவேண்டாமே, 63

நாடியானது மிகவும் பதறி ஓடினாலும் , நாவும் பல்லும் வறண்டு காணப்பட்டாலும் , உடல் தெளிவு கெட்டாலும், விழி இரண்டும் இருட்டடைந்து மேலே நோக்கினாலும் கபம் தொண்டையில் அடைத்திருந்தாலும் அவை மரணக் குறிகளே. அங்கே வைத்தியன் செல்ல வேண்டியதில்லை.

(வேறு)

வாதத்தில்வாதங்காணில்மந்தங்கள்புளிப்பருந்தல்
பேதித்துப்பித்தங்காணிற்பெருஞ்சூடுகசப்பருந்தல்
பேதித்துப்பித்தமையம்பிதறியேநிற்குமாகில்
மாதுற்றகுழலினாளேமாகசப்பிணியுண்டாமே, 64

வாத நாடியில் மேலும் வாதம் கண்டால் மந்தம் உண்டாகும். நாவில் புளிப்புச் சுவையுண்டாகும். வாதத்தில் பித்தநாடி கண்டால் மேனி சூடடையும் நாவில் கசப்புச் சுவையுண்டாகும். பித்த கப நாடிகள் சேர்ந்து காணப்படின் பல நோய்கள் உண்டாகும்.

குன்மமாம்வாதநாடிக்குரைகடற்றொனியைப்போலாஞ்
சன்னியாம்நாக்குபச்சைத்தனித்தனிபுழுகுபோலாங்
கன்னியேகிராணிக்கெல்லாங்கதிருபோல்நடப்பதாகும்
முன்னவருரைத்தவாறு மொழிந்திடக்கேட்டதாமே. 65

வாதகுன்ம நோய்க்கு கடலிரைச்சல்போல் நாடி நடக்கும் சன்னிநோய்க்கு நாக்கு பச்சையாக காணப்படும். நாடியோ புழுபோல் நடக்கும் . பெண்ணே கிரகணி நோய்க்கு நாடியானது திருகி நடக்கும். இவையனைத்தும் முன்னோர்கள் கூறக் கேட்டவையாகும்

வீங்கிடுங்கையுங்காலும்விம்மிடும்வயிறுபொத்தத்
தாங்கிடு மலமுநீருந்தவறிடுஞ்செவிகேளாது
வாங்கிடுந்தண்ணீர்மெத்தவழுத்திடும்நாவும்பல்லும்
வீங்கிடுங்குணங்கள்கண்டால்விட்டுநீயகலப்போமே. 66

கைகால்களில் வீக்கம், வயிறு விம்மிப்புடைத்தல், மலமும் நீரும் தடைபடல், காதில் ஓசை கேளாமை, நாவறட்சியுற்று தண்ணீர் தாகமெடுத்தல் , நாவும் பல்லும் வீங்கிவிடல், ஆகிய குணங்கள் கண்டால் அவை மரணக் குறிகளாகும்.

(வேறு)

கண்ணுமுகங்கள்வெளுப்பிட்டுக்காலேகரங்கள் வீக்கமதாய்த்
தண்ணீர்த்தாகமிகவுண்டாஞ்சாதமொறுத்துத்தானுமதாய்
விண்ணைச்சுழன்று மிடுக்கற்றுமிகுந்த மலமுடைப்படுத்தல்
எண்ணலாதிலிதுவுண்டாவிதுவுமரணக்குறியாமே. 67

முகமும் கண்களும் வெளுத்தல், கால் கைகள் வீக்கமடைதல் தண்ணீர்தாகம் மிக எடுத்தல், உணவில் விருப்பமில்லாமை கண்கள் சுழலுதல் , மேனி ஒளிகுன்றல் மலம் தடைபடல் ஆகிய குறி குணங்களைக் கண்டால் அவை மரணக் குறிகளாகும்.

மூக்கு நீண்டு நிலம்புரண்டு முயங்கித்தலையுமிக்நடுக்கும்
நாக்குங்குழறிப்பலபேசும் நலமாய்ப்படுக்குமெழுந்திருக்கும்
விக்கலெடுக்கும் மிகப்பதரும் வெறிபோற்பலதும்பிதற்றிவிடுந்
தாக்குமரணமிதுவென்று சாற்றியுரைத்தார்தவமுனியே. 68

மூக்கினை நீட்டி அதிகம் சுவாசித்தல், தலை மிகநடுங்குதல். நாக்குழறி பலவாறு பேசுதல் . படுப்பதும் எழுவதுமாய் இருத்தல், விக்கலெடுத்தல், அதிகமாகப் பதறுதல். வெறியுண்டானதுபோல் பிதற்றுதல் ஆகிய இக்குறிகுணங்களைக் கண்டால் அது மரணத்தின் அறிகுறி என்று முனிவர்கள் கூறியுள்ளனர்.

கண்ணைவிழித்துப்புரட்டிடுவன்கைகால்சுற்றித்தலைநடுக்கும்
விண்ணைப்பார்த்துவிழிபுரட்டுமேனிவறண்டுவெளுப்பேறும்
நண்ணியொருவன்றனைப்பார்த்துநயமாய் நன்மைபகுந்துரைப்பன்,
எண்ணிப்படுப்பனெழுந்திருப் பனிது வேமரணநிலைகுறியே, 69

கண்களை மிரட்சியுடன் விழித்தல், கைகால்களை சுழற்றுதல், தலை நடுங்குதல், மேலே நோக்கி விழியை அங்குமிங்கும் சுழற்றுதல், மேனி வறண்டு வெளுப்பேறுதல், ஆகிய குறிகுணங்களை உடையவனைப் பார்த்து இனி அவன் எழுவது சாத்தியமில்லை, மரணமே முடிவு என்று கூறி விடலாம்.

(வேறு)

படுக்குமுடனேயெழுந்திருக்கும் பார்க்கவிளைத்தேமூச்சுண்டாம்
வடுக்கணோத்தவிழியிரண்டு மலரவிழிக்கும்வாய்நோக்குந்
தொடுக்குந்தொடுத்தசிலேட்டு மங்கள் தொண்டைதனிலே நின்றலரும்
அடுத்துவருவதிவைகண்டாலறிவாய் மரணநிச்சயமே 79

நோயாளி படுப்பதும் எழுவதுமாக இருப்பான் மூச்சு அதிகமாக வாங்கும், விழிகள் இரண்டும் அகல விரிந்திருக்கும், வாய்குழறும் தொண்டையில் கபம் வந்து தங்கும் .இத்தகைய குறி குணங்கள் இருந்தால் அந்நோயாளிக்கு மரணம் நிச்சயம்

(வேறு)

தாகமும்பசியுமுண்டாஞ் சலமொடு மலமுந்தள்ளி
மேல்வயிறுப்பமிட்டுமெத்தெனக்குளிர்ந்திருந்தால்
கூவிடவேண்டாமிந்தக் குணங்களுண்டானபோதே
ஆவிதான்போவதிண்ண மறிந்துநீமருந்துசெய்யே, 80

தாகமும் பசியும் அதிகமுண்டாகும் , மலமும், சிறுநீரும், வெளியேறாமல் வயிறு பருத்துக் காணப்படும். உடல் குளிர்ந்து காணப்படும். இத்தகைய குணங்கள் இருப்பின் அவ்வுடலிலிருந்து உயிர் பிரிவது நிச்சயம் எனவே அதை யறிந்து மருந்து செய்யவேண்டும்.

(கலிவிருத்தம்)

சித்தமெய்யுறச் செங்கையைச்சென்னிமேல்
வைத்துநோக்கிடவாடிடி லுத்தமம்
பத்துமூவரிருப்பவர் பருத்திடில்
செத்துவீழ்வது திங்களிற்றிண்ணமே. 81

கையை தலை உச்சியின் மீது வைத்து உற்றுப்பார்க்க அது வாடினால் உத்தமம் . அந்நோயாளி பிழைத்து விடுவான். அதுவே பருத்துவிடுமானால் ஒரு மாதத்தில் மரணம் நிச்சயம்.

(வேறு)

சரம்விழிமூன்றுநாளைந் தாறினிற்றோஷம்வந்தால்
பறிந்தொருமருந்துசெய்து பார்க்கவும் வேண்டாஞ்சொன்னோம்
மான்றருவேழுநாளுமப்புறந்தோஷம்வந்தால்
நிரந்தரமாகத்தீரும் நிச்சயமென்றுகாணே, 82

ஒரு நோயாளிக்கு நோய் தோன்றிய நாளிலிருந்து மூன்று அல்லது ஆறு நாட்களுக்குள் சுவாசம் விழியின் பார்வை இவற்றில் குற்றம் உண்டானால் மருந்து செய்து தருவதில் பயனில்லை . ஏழுநாட்களுக்குப் பின் குற்றம் ஏதும் உண்டானாலும் அவ்வுடலிலுள்ள வியாதி நிரந்தரமாகத் தீரும்.

(வேறு)

வாதநீர்கொழுந்துவுடம்புபல வண்ணமாகமலமடைக்கும்
தானேசூழ்ந்துமிகுந்துமுந்தித் தரியாதிருமற்றானுமுண்டாம்
தேனேநாவுதிக்குஞ்சிறந்த மூக்கில் நீர்பாயும்
மானேவிழியாய்ச் சேத்துமமாய் வந்தசுரத்தின்வகைதானே 83

வாதநீர் மிகுதியாகி உடல் பல வண்ணங்களைக் கொடுக்கும் மலம் தடைபடும் அது மேலும் மேலும் வயிற்றில் தங்கி இருமல் உண்டாகும். நாவில் இனிப்புச் சுவை தெரியும். மூக்கில் நீர் வடியும் இவ்வகை குறிகுணங்கள் இருப்பின் அவை கபசுரத்தினால் வந்ததாக அறிய வேண்டும்.

(தோஷஞ்சேரும்வகையறிய வேறு.)

வாசமிகும்பூப்புழுகுசாந்துசந்த
மருவும்பாக்கிலை சிவப்புகோடிச்சீலை
பாசமிகும்நெய்பாலோ டன்னமெண்ணெய்
பருகுநல்வெல்லமொடு பனையின்வெல்லம்
ஆசமிகும் பெண்மோகம்பட்டுச்சேலை
யகற்றுவாரித்தனையு மறிவுள்ளோர்கள்
தூசணியுமுலைமாதே சொல்லக்கேளாய்
சுரத்தின்மேல்தோஷம்வருஞ் சொன்னதாமே, 84

பெண்ணே வாசனையுள்ள மலர்கள், புனுகு, பாக்கு, சிவப்புச்சீலை ,நெய். பால்சோறு, எண்ணெய், கருப்புவெல்லம், பனைவெல்லம், புணர்ச்சி, பட்டுச்சேலை இவைகளைப் பயன்படுத்தினால் சுரம் அதிகமாகும் . எனவே அறிவில் சிறந்தவர்கள் இத்தகைய பொருள்களை சேர்க்கமாட்டார்கள்.

சிவந்தசீலைபுதுப்புடவை
செருக்கும்பாகுநெய்வெல்லஞ
சுகந்தகாற்றுகோபித்தல்
துய்யதயிர்பால் பஞ்சுமெத்தை
உகந்தமின்னாளருகில்வர
உற்றுநோக்கலடித்தழுதல்
கவிந்தசுரமுமுழுகுவதுங்
கடினசுரத்துக்காகாதே, 85

சிவந்த துணி, புதிய புடவை, நெய், வெல்லம், குளிர்ந்த காற்று, தயிர் பால், பஞ்சுமெத்தை, தெரிந்தவர்கள் அருகில் வர உற்று நோக்குதல், அடித்தல் அழுகை, நீராடல், ஆகியன சுரத்துக்கு ஆகாது.

(வேறு)

கனத்திடுஞ்சுமைகளாலுங் கடுவெயில்கருதலாலும்
நனைத்திடுமெண்ணெய்தன்னை நாட்பட முழுகையாலும்
புனற்கொடி மடநல்லாளை விடாமலே புல்கையாலும்
சினத்தடி பழுக்கையாலுஞ் சிரத்திநோய்சேருங்காணே, 86

கடினமான பெரிய சுமைகளைத் தூக்குவதாலும், கொடிய வெயிலில் அலைவதாலும், தினமும் எண்ணெய் தேய்த்து முழுகுவதாலும் , மனைவியுடன் அதிக உடலுறவு கொள்வதாலும், கால்பாதங்கள் கொதிப்பேறும் வகையில் வெறுங்காலுடன் நடப்பதாலும் ,தலையில் நோய்கள் உண்டாகும்.

இருசெவிநாசியூடே யீவண்டுயேறினாலு
முருக்கவிழ்குழலீர்கண்ட சுனையிடை மூழ்கினாலு
மருவியஸ்திரீ போகத்தால் மயலுறவருந்தலாலுஞ்
சிரமிசையனேகதோஷஞ் சேர்ந்திடுந்திருநன்மாதே, 87

செவிகளிலும் மூக்கிலும் ஈ வண்டுகள் உட்புகுந்தாலும் குளிர்ந்த நீரையுடைய சுனையில் நீராடுவதாலும் அதிக பெண்போகத்தினால் களைப்புறுவதாலும் தலையில் அநேக நோய்கள் வந்தே தீரும்

நெறியுடன் குருபாதத்தை நினைந்து நீநேரதாகிக்
குறியடையாளநாடிக் குறித்ததையறியவேண்டும்
செறிவுடன்குணங்கடன்னைத் தேர்ந்தறிந்துணரவேண்டு
மறியெட்டுக்குணத்தாலி ன்னமவர்நல்லவயித்தியராமே, 88

நெறியுடன் குருவின் திருவடிகளை மனதில் நினைத்து நோயாளியின் அடையாள நாடியை முதலில் அறிய வேண்டும். பிறகு அதற்குரிய குறிகுணங்களை தெரிந்து உணரவேண்டும். எண்வகைத் தேர்வுகளையும் அறிந்து மருத்துவம் புரிபவரே நல்ல மருத்துவர் ஆவார்.

அட்டமாங்கிரிகடன்னை யறிந்து நீயுணரவேண்டில்
வட்டமாமுகங்கள்பல்லும் வாயதில்நாக்குங்காயங்
கட்டருமலங்கள் கைதனில்நாடி தானுந்
திட்டமாயறிந்துசெய்யுந் திறமுள்ளவயித்தியராமே, 89

எண்வகை செயல்களையும் அறிந்து உணரவேண்டும். முகம், பல், நாக்கு, வாய், உடல், உடலிலிருந்து வெளியாகும் மலம் ஆகியவற்றையும் , கைகளில் நாடியையும், உறுதியாக ஆராய்ந்து வைத்தியம் செய்பவரே திறமையான வைத்தியர் ஆவார்.

(சிரசில்வியாதி வரும் விபரம்)

(கலிவிருத்தம்)

வாதரோகிமனிதர்கண்மாமுக
மீதிலோகருப்பாயிடு முண்மையே

வேதநீதிவிளங்கியபித்தத்தோர்
மீதுவாய்முகவேல்மஞ்சளோதுமே 90

வாதநோய் உள்ள மனிதர்களின் முகமானது உண்மையாக கறுத்துக்காணப்படும். பித்த உடலினர்க்கோ முகத்தில் மஞ்சள் நிறம் தோன்றும்.

எய்தசேத்துமமெழுந்தவர்தம்முக
மெய்யதாகக்கருதிவெளுத்திடும்
ஐயனாருரைசெய் தவருமறை
செய்தவாறுவயித்தியராவரே. (91

சேத்தும நோய் உள்ளவர்களுக்கு முகமானது கருகி வெளுத்துக் காணப்படும். ஐயனாகிய ஈசன் கூறிய இவ்வகையை கருத்தில் கொண்டு வைத்தியம் செய்யவேண்டும்.

(வேறு)

வாதத்தோர்விழிகறுத்து மயங்கியே மந்தமாகுந்
தீகன்றப்பித்தத்தோர்க்குச் சேல்விழிமஞ்சணிற்கும்
கோதற்றசேத்மத்தோர்குக் கூர்விழிவெளுத்திருக்கும்
ஏதுற்றதொந்தத்தோர்க்கு விழிபலநிறமாமின்னே. 92

வாத உடலினர்க்கு விழியானது கறுத்து மங்கி மந்தமாகக் காணப்படும். பித்த உடலினர் கண்களில் மஞ்சளாகக் காணப்படும். கப உடலினர்க்கு விழியானது வெளுத்துக் காணப்படும்.

விளங்கியவாத ரோகி தந்த மேமிககறுப்பா
மளம்பியபித்தரோகி மஞ்சணித்திருக்கும் பல்க
ளுளங்குளிர்சேத்மரோகிப் பல்வெளுத்திருப்பதுண்மை
துளங்கிடவறிந்து கொண்டு சொல்லுவாய் குணங்கடானே 93

வாத உடலினர் பற்கள் கறுத்துக் காணப்படும். பித்த உடலினரின் பற்கள் மஞ்சளாகக் காணப்படும். குளிரும் கப உடலினர்க்கு பற்கள் வெளுத்துக் காணப்படும். வேறுபாடுகளுடைய குணங்களை அறிந்து மருத்துவம் செய்யவேண்டும்.

(வேறு)

வாதத்தோர்கருத்துநாவுவன்மிகத்துன்னிசமாய்
மாதுத்தோர்நாவுபித்த மஞ்சணித்திருக்கும் நல்ல
பேதமாம்கசந்திருக்கும் பேய்வளைசேத்மத்தோர்க்கு
ஓதுநாவெளுத்திருக்கு முற்றதோர்நாடியாமே. 94

வாத உடலினரின் நாக்கு கறுத்திருக்கும், பித்த உடலினரின் நாக்கு மஞ்சள் நிறத்துடன் கசந்துக் காணப்படும். கப உடலினரின் நாக்கானது வெளுத்துக் காணப்படும்

(பயித்தியமுறைமை)

(வாததேகக்குறி பித்த தேகக்குறி)

சேரும்வாதக்குணந்தானே சீதமிருந்திருக்கும்
பாரும்பித்ததிரேகமதைப்பார்க்கில் வெச்சென்றேயிருக்குங்
கூறுஞ்சேத்மசடம் வேர்வைகொதிக்குங்குணங்கள் காணமிரு
பாருங்குணத்தையாராய்ந்து பகருங்குறியிலறிவீரே. 95

வாத தேகத்தினர்க்கு உடல் குளிர்ந்திருக்கும். பித்த உடலினர்க்கு தேகமானது வறண்டிருக்கும் கப உடலினர்க்கு தேகத்தில் வியர்வை அதிகமாகக் காணப்படும்.இந்த குறிவகைகளை அறிநது மருத்துவம் புரியவேண்டும்

(கலிவிருத்தம்)

மேவும்வாதமுடையவர் மெய்வலஞ்
சீவிதாகக்கருக்கிடுஞ்செம்மியே
பாவைபித்தத்தோர்தன்வலம்மார்த்திடில்
ஆவியேயெழுமன்னிறமஞ்சளாம். 96

வாத உடலினரின் மலமானது கருத்துக் காணப்படும், பித்த உடலினரின் மலம் அதிக மஞ்சள் நிறத்துடன் காணப்படும்

மன்னுஞ்சேத்துமத்தோர்மலம் வீழ்குறி
அன்னிலத்திறலாய்வெளுப்பொங்கியே
சொன்னதிக்குணமன்றியேதொந்தத்தோர்
என்னிபறப்பலவாய்விழுமென்னவே. 97

கப உடலினரின் மலமானது வெளுத்துக் காணப்படும், ஆனால் தொந்த உடலினரின் மலமானது பல நிறமாய் விழும். இவையே வாத பித்த கப தொந்த உடலின் குணங்களாகும்.

(வேறு)

ஓங்கியவாதத்தோர்க்கு நீர்விழுங்குணமுரைக்கிற்
பூங்கொடிகடுத்துநொந்து பொருமையேசிறுத்துவீழும்
பாங்குறுபித்தத்தோற்குப் பசியநீர்விழுந்துகாட்டும்
ஏங்கவேசுருக்குத்தாக்க வெடுத்துடன்கடுத்துவீழும். 98

சிறுநீர் விழும் முறையை நோக்கினால் , பூங்கொடியே வாத உடலினர்க்கு சிறுநீரானது கறுத்து நொந்து சிறுத்துவிழும் .பித்த உடலினர்க்கு சிறுநீரானது பசிய நீராக (பசுமையாக) சுருக்கென சிறுநீர் கழிக்க ஆரம்பித்த உடனேயே கடுத்துவிழும்.

வீழுமேசேத்மத்தோர்க்கு விழுங்குநீர்குணமுரைக்கில்
நாளுமேவெளுதுளைந்து நலம்பெறவீழுங்கண்டாய்

வாள்விழிமானேதொந்த ரோகமானிடற்குத்தானே
கோளிலப்பலவாய்வீழுமென்று தான் குறித்துச்சொல்லே, 99

கபஉடலினர்க்கு சிறுநீர்கழிக்கும்பொழுது வெகுவாக உளையும். மான்விழிகளைப் போன்ற கண்களை உடைய பெண்ணே தொந்த உடலினர்க்கு பலவிதமாக சிறுநீர் விழும்.

(நாடிபார்க்கநிதானம்)

நாடிதான்பார்க்கும் போது நன்மனதுடனேவேணும்
தேடிடுகுருபாதத்தைதிறமதாயுன்னிப்பின்னி
மூடிமூவிரலணைத்து மூன்றுநாடியுமறிந்து
சூடியவியாதிசொல்லித்தீர்ப்பவன்வயித்தியோனே. 100

நோயாளிக்கு நாடிபார்க்கும் பொழுது நல்ல மனதுடன் குருவின் பாதங்களை மனதில் நினைத்துக் கொண்டு மூன்று விரல்களால் மூன்று நாடிகளையும் அறிந்து அந்நோயாளிக்கு என்ன நோய் என்று கூறி அதனை தீர்ப்பவன் எவனோ அவனே சிறந்த வைத்தியன் ஆவான்

ஓடிடுநாடி பார்க்கு முண்மைதானுரைக்கக்கேளாய்
ஆடவர்வலக்கைநாடி லரிவையரிடக்கைநாடிப்
பாடமாய்த்தேடி நாடிப்பரிவுடன்பார்க்கவேண்டும்
மூடறிந்துரைப்போநல்ல வுத்தமவயித்தியோரே, 101

நாடி பார்க்கும் முறையைக் கேட்பாயாக , ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக்கையிலும் கையைப் பிடித்து நாடியைக் கருணையுடன் பார்க்க வேண்டும். அதனைக் கொண்டு தெளிவாக நோயைக் கணிப்பவனே உத்தம வைத்தியனாவான்

சொல்லியவுந்திக்கீழே சுழித்த தோரெழுத்தைப்பற்றி
எல்லையிற்சிறந்தநாடி யெழுபத்தீராயிரத்தில்
வல்லகேசாதிபாதமகிழ்ந்து தானோடி நிற்கும்
நல்லதாய் மூன்று நாடி நயந்து நீயுணர்ந்து பாரே 102

வயிற்றுக்குக் கீழே சுழித்துள்ள ஓர் எழுத்தைப் பற்றி எழுந்த நாடியானது எழுபத்தி இரண்டாயிரம் நரம்புகளிலும் பரந்து உடலில் உச்சி முதல் பாதம் வரை பரவி நிற்கும். அவற்றில் வாத, பித்த, கபம், என்று மூன்று நாடியையும் உணர்ந்து காண வேண்டும்.

அன்னமே கோழியோணான் மயிலெனநடக்கும் வாதம்
பிள்ளையோராமையட்டை பெருத்ததிற்பித்தமாகுஞ்
சொன்னவாய் மொழி நல்லாளே சுற்றியதவளை பாம்பு
என்ன வேயையமென்று விளம்பினவே தந்தானே 103

அழகிய சொற்களைப் பேசுபவளே! நாடியானது அன்னம் கோழி, ஓணான், மயில் ஆகியவைப்போல நடக்குமானால் அது வாத நாடி. அதுவே ஆமை அட்டை

போல் நடந்தால் அது பித்தமாகும். தவளை பாம்பு போல், நாடி நடக்குமானால் அது கபநாடியாகும் என்று வேதங்கள் கூறுகின்றன.

நாடி யிற்றெளிவினா லு நற்குறிகுணத்தினா லும்
நீடி யவிழியினா லு நிலைபெறுந்தேகத்தா லும்
கூடி யவியாதிதன்னிற் கூடி யகுணப்பாதத்தால்
சூடி யகுணங்களாலே சுகம் பெறவறிந்து சொல்லே. 104

நாடியை தெளிவாக அறிந்தும் குறிகுணங்களைக் கொண்டும் ,விழிப் பரிட்சையினைக் கொண்டும் உடலில் உள்ள மாற்றங்களினால் உண்டான நோயினையும் அதன் குணங்களையும் ஆராய்ந்து அது நீங்கிட வழி செய்யவேண்டும்.

(நாடிபார்க்க.மாதமறியவிபரம்)

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கும்
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும்
வித்ததகன்கதிரோன் மேற்கு- விழுகின்றநேரந்தானே 105

சித்திரை வைகாசி மாதங்களில் சூரியன் உதிக்கும் காலமாகிய அதிகாலையிலும் ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மதிய வேளையிலும், மார்கழி , தை, மாசி மாதங்களில் கதிரவன் மேற்கில் விழும் நேரமாகிய மாலை நேரத்திலும் பார்க்கவேண்டும்.

தானதுபங்குனிக்குந்தனது நல்லாவணிக்கு
மீனமாம்புரட்டாசிக்குமிற்றராத்திரியிற்பார்க்க
தேனெனமூன்றுநாடி தெளியவேகாணுமென்று
கானமாமுனிவன்சொன்னார்கருதியே கண்டி டாயே 106

அதுபோலவே ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் ராத்திரியிலும் நாடியைப்பார்க்க வாத, பித்த, கபம் ஆகிய மூன்று நாடிகளும் தெளிவாகக் காணும், என்று முனிவர்கள் கூறியதை கருத்தில் கொள்வாயாக.

(கலிவிருத்தம்)

செய்யமாதுக்கிறையவன் செப்பிய
துய்யவாயுள்மறையுந்துலங்கிட
மெய்யமாந்தருக்கோதியமெய்ப்பொருள்
ஐயன்தன்னையமர்தருளாயினான் 107

பார்வதிக்கு சிவன் கூறிய இந்த சிறப்பான ஆயுள்வேதம் மேலும் சிறந்த விளங்கிட , பார்வதி அதை முனிவர்க்கு கூறிட அதை அம்முனிவர் திறம் பட எழுதினார்.

ஓதுநாடி தொகையுமதித்துறு
வாதபித்தசிலேத்துமவண்மையும்
பேதமானவியாதியின் பேர்களும்
ஆதியானவருந்தவனோதினான் 108

நாடிவகை அனைத்தையும் அறிந்து! வாத, பித்த, கப , நாடிகளின் வன்மையையும், வியாதிகளின் பெயர்களையும் கூறினார்.

(வேறு)

திருமறைமுனிவன்கூறும்வாகடச்செய்கைதன்னில்
வரும்பலவியாதிமீட்கும்வகைப்படியாதோவென்னில்
உருமொருநாடியா லுமொண்முகமலநீரா லுந்
தெருவுறநாவுநாசிதிக்கயக்குறிகளெட்டே. 109

திருமுறையறிந்த முனிவன் கூறும் மருத்துவன் செய்கை என்னவெனில், பல வியாதிகளையும் நீக்கும் கைபாகம் தெரியவேண்டும். அதற்கு, நாடி, விழி, மலம், நீர், நாக்கு, மூக்கு, வாய், தேகம் ஆகிய எட்டுவித குறிகளையும் தெளிவாக ஆராயவேண்டும்.

உரைத்திடு ந்தானமெட்டு ஞ்செய்குறியுரைக்குங்காலை
வருத்தியநாடி செய்கைமங்கையேவழுத்தக்கேளாய்
உரைத்தெழுங்கருவின்மீதேயோ மெனுமுந்தியாலே
பருத்தகுண்டலியேமூலம்பரந்தெழுநாடி பத்தே. 110

பெண்ணே! மேலே கூறிய எட்டுவித இடங்களும் உணர்த்தும் குறிகளையும் , நாடி உணர்த்தும் செய்கையும் கூறக்கேட்பாயாக! கருவின் மீது வயிற்றில் ஓம் என்று குண்டலினியிலிருந்து தோன்றும் நாடிவகை பத்தாகும்.

பத்துமேயிடையினோடு பின்கலைசுழினைபாரில்
அத்திசிங்குவைகாந்தாரியலம்புடைகுகுதன்கோதன்
உற்றெழுநாடி பத்துயுகப்பதாயுந்திக்கீழ்மேல்
துற்றியலெழுபத்தீராயிரமெனவகுத்துச்செப்பே. 111

இடகலை, பிங்கலை , சுழுமுனை, அத்தி, சிகுவை, புருமன், அலம்புடை காந்தாரி, சங்கினி, குகுதன் போன்ற நாடிவகை பத்தும் வயிற்றின் கீழிருந்து மேலேறி எழுபத்திரண்டாயிரம் வகை நாடியையும் சென்றடையும்.

(வாதநாடி)

உந்தியேமூலமாகவுரியொன்றுகீழ்மேலாக
வந்திடு நாடி தானேயுடம்பினில் வகுக்கக்கேளாய்
முந்தியசென்னிமீதோளாயிரமாகுமுண்மை
பைந்தொடிசெவியிரண்டு ம்பத்துமுன்னூறுதானே, 112

வயிற்றின் கீழ் மேலாக புறப்படும் நாடியானது உடலில் பரவிநிற்கும், வகையைக் கேட்பாயாக. தலையின் மீது ஆயிரமும் காதுகளில் மூவாயிரமும்,

வருவிழியிரண்டு நாலாயிரம்தாமானேமூக்கில்
உரியமூவாயிரத்துமுன்னூற்றுமுப்பதாகு
முருமுறும்பிடரிதோண்மேலுரையாயிரமதென்ன
கருவினின்முளைத்தநாடி கண்டதைக்கருதுவேனே. 113

விழிகளில் நாலாயிரமும், மூக்கில் மூவாயிரத்து முன்னூற்று முப்பதும், பிடரியில் ஆயிரமுமாக கருவில் உண்டான நாடிகள் பரவி நிற்கும்.

கண்டதிலாயிரந்தான்கைரண்டில்மூவாயிரந்தான்
தொண்டைக்குங்கீழதாகத் தொப்புள்கீழ்மேலதாக
ஒண்டோடிகேளாயொன்பத்தாயிரத்தொருபத்தாரில்
அண்டத்தின்முனிவர்கூறுமாயுறுவேதமாமே. 114

உடம்பில் ஆயிரமும் , கைகள் இரண்டிலும் மூவாயிரமும் தொண்டைக்குக்கீழ் தொப்புளுக்கு மேலே உள்ள பாகத்தில் ஒன்பதாயிரத்து பதினாறு நாடிகளும், பரவிநிற்கும் என அண்ட சராசரத்துக்கும் முனிவராக உள்ளவர் கூறிய ஆயுள்வேதம் இதுவாகும்.

குறிக்கின்றபிடறிகீழேகூறெண்ணாயிரமதாகு
மறித்திடுவிலாவில்நாடிவளர்மூவாயிரமதாகுந்
தெறிந்திடுங்கால்கள் சந்து தியங்கிமெண்ணாயிரமாம்
பறித்திட்டபீசத்தின் மேற்பன்னிராயிரநாடிகாணே, 115

பிடரிக்குக் கீழே எட்டாயிரமும், விலாவில் மூவாயிரம் நாடியும், கால்களிலும் மூட்டுகளிலும் எட்டாயிரம் நாடியும், பீசத்தில் பன்னிரெண்டாயிரம் நாடியும் காணப்படும்.

காசினமுலையாசந்திலிரண்டாயிரங்கருதிக்கொள்நீ
வீசியபாதந்தன்னில்விளம்புமாயிரத்தினோடு
கூறியபிடரிபின்னாற்பிறக்குமூவாயிரந்தான்
பூசைசேர்ந்தறுநூற்றெண்பத்தாமெனவோதுநூலே. 116

மார்பகத்தில் இரண்டாயிரம் நாடியும் , பாதங்களில் ஆயிரமும், பிடரிக்கு முன்னால் மூவாயிரத்து அறுநூற்று எண்பது நாடிகளும் இருக்கும் என கருத்தில் கொள்வாயாக

மொய்குழல்மானேகேளாய்முடிச்சுஎஸ்தலங்கள்கைகால்
எய்தியகோசமுற்றிலிதயமொண்டின்னங்கேளாய்
பையரவல்குன்மூலம்பகர்பிடர்முடிச்சோடுச்சி
வயிறுமேமுப்பத்தாராயிரமதாய்வகுக்குங்காலே, 117

அழகிய கூந்தலை உடையவளே முடிச்சுள்ள இடங்கள் கை, கால்கள் கோசங்கள், இதயம், அல்குல், மூலாதாரம், பிடரி முடிச்சு, தலையுச்சி, வயிறு ஆகியவற்றில் முப்பத்தாறாயிரம் நாடிகள் இருக்கும் என்று தெரிந்து கொள்.

(பித்தநாடி)

இப்படி எழுபத்தீராயிரநரம் பென்னக்கண்டு
ஒப்புடனாடிநிற்குமடவினையுரைக்கக்கேளாய்
மெய்ப்புறுவாதபித்தசிலேத்துமமென்னுமூன்றுந்
தப்பிலாதறிந்துகொள்ளுகுறிகுணஞ்சாற்றலாமே. 118

இப்படி எழுபத்திரண்டு ஆயிரம் நாடி நரம்புகளைக் கண்டு அவற்றுடன் உறவாடிநிற்கும் வினைகளை உரைக்கக் கேட்பாயாக. உடம்பில் தோன்றும் வாத பித்த கபம் என்னும் மூன்று நாடிகளையும் பிழையில்லாமல் அறிந்து அவற்றின் குறி குணங்களை உரைக்கலாம்.

(சிலேத்துமநாடி,)

செந்திருவுமையேகேளாய்செறுதரசனியுமுந்தி
வந்ததுநாபிமூன்றுமடவியில் வைத்தபோது
முந்தரிசனிக்கீழ்வாத மொழிந்தமத்திசைக்கீழ்பித்தம்
பைந்தொடி நாபிசேத்மமென்றுதான்பகரலாமே. 119

பார்வதியே கேட்பாயாக! தர்சனி விரல் முதலாக உள்ள விரல்களில் மூன்று வகை நாடிகளையும் நோக்கினால் தர்சனி விரலில் வாதநாடியும் ,மத்தியவிரலில் பித்தநாடியும், அடுத்த விரலில் கபநாடியென்றும் அறியலாம்.

தந்திரிபோலேமூன்றுதானமுமறிந்துகொண்டா
லுந்தியவாதநாடி குணங்குறியுரைக்கக்கேளாய்
கொந்துசேர்குழலாயன்னங்குக்குடமயிலேயோணான்
முந்தவேநடக்கக்கண்டால்வாதத்தின்முறையிதாமே, 120

மத்திமமாக மூன்று நாடிகளையும் அறிந்து கொள்ளும்போது வாதநாடியின் குணத்தைக் கேட்பாயாக. அந்நாடி அன்னம் , கோழி, மயில், ஓணான். போல நடக்கும் அதுவே வாதநாடியின் முறையாகும்.

தாக்கியபித்தநாடி தான்செயுங்குறிகுணங்கேள்
வீக்கவார்முலையாயட்டையாமைபோல்நடக்குமின்னம்
ஊக்கமாஞ்சேத்மநாடி யுகந்திடுந்தவளைபாம்பு
போக்குறுநடையிதாகுமென்முனிபுகன்றவாறே, 121

பெண்ணே! பித்த நாடியின் குறிகுணத்தை கூறுவோமானால் அது அட்டை, ஆமை போல் நடக்கும், கபநாடியோ தவளை, பாம்பு, போன்றவைபோல் நடக்கும் என முனிவர்கள் கூறியுள்ளனர்.

வாளிசேர்மானேரண்டுவாதமும்பித்தமொன்று
கோளறநடக்கும்வன்மைகொடுஞ்சுமைதலைமேற்கொண்டு
நாளுறநடப்பனாகநாடு வேன்சலியாதோடு
மூளுறுபித்தம்ரண்டும்நடப்பதுகாணவேண்டி 122

அதிக தலைச்சுமையை கொண்டு நடந்த பின்பு நாடி பார்த்தால் அதில் இரண்டு பங்கு வாதமும் ஒரு பங்கு பித்தமும் நடக்கும். நாள் முழுவதும் அதிகமாக நடந்த பின் நாடிபார்க்க அதில் பித்தம் மட் டும் இரண்டுபங்கு நடக்கும்.

(வாதமிருப்பிடம்)

அடவியில்வாதந்தானு மன்னமாங்கோழிபோல
படபடத்துடித்துநின்றார் பாரினிற்பிழைப்பதில்லை
மடவரவல்குளாலே மஞ்ஞைபாம் பென்னவோடில்
திடமுறப்பகுத்துச் சொல்லுந்தெளிவுறுமாயுள்வேதம். 123

வாத நாடியானது அன்னம், கோழி போன்று படபடத்து நின்றால் அவர்கள் இவ்வுலகில் பிழைப்பதில்லை. பித்த நாடியானது பூரம்புபோல் நடக்குமானல் அது மரணக்குறியாகும் என்று ஆயுள்வேதம் தெளிவுறக் கூறுகிறது.

வேதமேயுரையேயுண்மை மெய்வாதவீடுதொப்புள்
ஒதியபித்தத்துக்கு ளொடுங்குசேத்துமமேயானால்
ஆதியாமிதயத்தின்மேலாகுமேயாகுமென்ற
தீதிலார்முன்னோர்பேசும் வாகடச்செய்கையாமே, 124

ஆயுள்வேதம் கூறும் உண்மையாதெனில் தொப்புள் (நாபி) வாதம் தங்குமிடமாகும். பித்தத்தில் கபம் ஒடுங்குமானல் அது இதயத்தின்மேல் நடக்குமென்று முன்னோர் எழுதிய வாகடம் கூறும்.

(வெண்பா)

வாதந்தானெண்பதுவும் வன்பித்தநாற்பதுவுஞ்
சேதந்தான்செய்யுஞ்சிலேத்துமமும்- வேதந்தான்
கண்டுசொன்னசாஸ்திரங்கள் காரணத்திலுள்ளபடி
பண்டிதரேபார்த்து மிகக்கூர் 125

வாதநோய்கள் எண்பதினையும் ,பித்த நோய்கள் நாற்பதினையும் கபநோய்களையும் வேதத்தில் உள்ளதை உணர்ந்து எழுதிய சாஸ்திரங்களில் கூறியபடி வைத்தியகள் அறிந்து நடக்கவேண்டும்.

(பித்தசிலேத்துமமிருப்பு)

(வாதகுண மருந்து)

(வேறு)

மேவியவாதஞ்செய்யுங்குணந்தனைவிளம்பக்கேளாய்
தாவியேவயிறுமந்தஞ் சந்துகள் பொருந்து நோவாஞ்
சீவியதாதுநாசஞ் செறுத்துடன் சிறுநீர்வீழுங்
காவியங்கண்ணினாளே மலமதுகருகிவீழும் 126

உடலில் வாதக்குற்றம் அதிகரிப்பின் உண்டாகும் குறிகுணங்களைக் கேட்பாயாக. வயிறுமந்தமாகும் மூட்டுகளும், பொருத்துக்களும் வலியெடுக்கும் . தாதுநட்டமாகும், சிறுநீர் குறைந்துவிழும், மலம் கருகி வீழும்.

வாதத்தின்குணமேதென்னில் வயிறது பொருமிக்கொள்ளுந்
தாதுகளுலர்ந்தகைகால் சந்துகள் கடுப்புத்தோன்றுந்
தீதுற்றுச்சிறுநீர்தானுஞ் சிறுத்துடன் கடுத்துவீழும்
.போதுற்றவாதமென்று புகன்றனர் முனிவர்தாமே. 127

வாதத்தின் குணத்தினால் வயிறுபொருமிக்கொள்ளும், உடல்தாதுக்கள் அனைத்தும் உலர்ந்துபோகும். மூட்டுக்களில் கடுப்பு உண்டாகுப். சிறுநீரானது அளவில் சிறுத்து கடுப்புடன் விழும் . இவைகளே வாதத்தின் குணங்களென முனிவர்கள் கூறியுள்ளனர்

வேளை நீருழக்குதன்னில் வேர்க்கொம்பு வெள்ளையுள்ளி
யாளவேகழஞ்சொவ்வொன்றா பன்னீரிலரைத்துச் சேர்த்து
ஏளியேயெண்ணிலெண்ண யிருகழஞ்சதனிற்கூட்டி
தாழவேதிரிநாட் கொள்ளச் சமானமா ம்வாதந்தானே. 128

ஓர் உழக்கு நீரில் சுக்கு, பூண்டு ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து அரைத்து அத்துடன் நல்லெண்ணை இரு கழஞ்சு கூட்டி மூன்றுநாள் உண்ண வாதக் குற்றம் சமனப்பட்டுப் போகும்.

ஏலவாய்குழலாய்பித்தஞ் செய்குறிவிளம்பக்கேளாய்
கோலவேல்விழிசுழன்று குளிர்ந்திருண்டிருக்குமல்லாற்
சீலநீர்கடுத்துநொந்து சிறுக்கெனவிழுந்துபின்னும்
ஞாலமேயறியச்சொன்னோ நவின்றிடுமுண்மைதானே, 129

அழகிய கூந்தலை உடையபெண்ணே , பித்தம் செய்யும் குணங்களை கேட்பாயாக, பித்தத்தினால் கண்கள் சுழன்று குளிர்ந்திருக்கும் .சிறுநீரானது கடுத்து நொந்து அளவில் சிறுத்து விழும், என்று உகமறிய உண்மையை கூறினோம்.

மயங்கிடுமேல்தழன்ற மஞ்சணித்திருக்குங்கண்கள்
தியங்கியேகிறுகிறுத்து செருக்குநெஞ்செறிந்திடித்து
கயந்திடுநாவும்பல்லுங் கருகிமெய்கண்மயங்குந்
தயங்கிடும் பித்தரோகத் தன்குணமிதுவாமெண்ணே. 130

மேலும் பித்தம் அதிகமானால் மயக்கம் தரும், உடலில் தோல் வறட்சியுடன் , கண்கள் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். தலை கிறுகிறுக்கும் . மார்பில் அழுத்துவது போன்று உணர்வு உண்டாகும். நாக்கும் பல்லும் கறுத்துவிடும். கண்கள் மயங்கும் இவைகளே பித்தம்·அதிகரிப்பதனால் வரும் குணங்களாகும்.

(பித்தகுணமருந்து)

சுத்திநேர்வாளமொன்றுசுகமிளகதனி லுண்ண
பித்தநோய்குணமாமென்று பேசினார்முனிவர்தாமு
முத்தக்காசுழக்குசுக்குமுந்திரிப்பழம்பால்காய்ச்சி
பத்துநாள்சீனிகூட்டிப்பருகவேபித்தம்போமே. 131

சுத்திசெய்த நேர்வாளம் ஒன்றை மிளகுகூட்டி உண்ண பித்தநோய் குணமாகும். கோரைக்கிழங்கு ஒரு உழக்கு, முந்திரிப்பழம், சுக்கு ஆகியவற்றை பாலில் காய்ச்சி, பத்துநாள் சர்க்கரைகூட்டி பருக பித்தநோய் விலகும்.

(சேத்துமகுணம்)

சேத்துமஞ்செய்குணங்கேள் சில்லெனவுடம்புவேர்க்கும்
ஏத்தமாயுமிநீரூறியினித்துநாவழுவழுக்கும்
நாற்றநீரழிந்துவீழும்நலம் பெற வெளுக்கு மேனி
சீற்றமிக்குணங்கள்கண்டாற்சிலேத்துமத்தொகுதியாமே. 132

கபக் குற்றத்தினால் உடலில் உண்டாகும் குறி குணங்களை கேட்பா யாக! உடம்பு சில்லிட்டு வேர்த்துப் போகும். வாயில் அதிகமாக நீர் ஊறும் வாயானது இனித்து , நாக்கு வழுவழுப்புடன் காணப்படும். சிறுநீரானது நாற்றத்துடன் விழும். உடல் வெளுத்துக் காணப்படும். இத்தகைய குணங்கள் இருப்பின் அவை கபநோயின் குணங்களாகும்.

இனிப்புடன் வெளுக்குநாவுமெடுக்கொணாநடக்கொணாது
பனித்தண்ணீர்சிறுநீர்பாயும்பஞ்சுபோல்வெளுக்கும்மேனி
செனிப்புடன் குறைந்துவாடிசெயல் பிலமில்லாதாலே
முளைத்திடுஞ்சேத்துமத்தின்கூறென்றுமுனியுரைத்தார். 133

நாக்கு எப்பொழுதும் இனிப்புச் சுவையுடன் வெளுத்துக் காணப்படும். சட்டென்று நடக்கவிடாது. அதிகமாக சிறுநீர் பிரியும், பஞ்சுபோல உடல் வெளுக்கும் .உடல் வன்மை திடீரென்று குறைந்து எந்தசெயலும் செய்ய பலமில்லாமல் இருப்பது ஆகியன கபநோயின் குணங்களாகும் என்று முனிவர்கள் கூறியுள்ளனர்.

(இதற்குச்சூரணம்)

சுக்குடன்கடுக்காய் தன்னைச்சுடுசாம்பற்குள்ளிட்டேத்து
தக்கவேசமனிடித்துதசரவேவடித்துக்கொண்டு
சிக்கெனவைத்துக்கொண்டுதேனதிற்குளந்தருந்த
துக்கஞ்செய்சேத்துமந்தான்துலைபடுமென்று சொல்லே, 134

சுக்கு ,சாம்பலில் சுட்டெடுத்த கடுக்காய் ஆகியன சமஅளவாய் எடுத்து இடித்து முறைப்படி சூரணம் செய்துக்கொண்டு தேனில் குழைத்துண்ண கபநோய்கள் விலகும்.

ஆனதோராதிவாதமருண்டுவந்துரைத்தகாய்ச்சல்
தானமில்லாதிருக்குந்தன்னுடலறையச்சேருங்
கானமாங்கால்கரங்கள்கரிந்துடல்கடுப்பாய்வந்தால்
வானகைமுன்னே சொன்னேன்வாதத்தின்குணமிதென்னே, 135

வாதத்தினை ஆதியாகக் கொண்டு வந்த காய்ச்சலால் தேகம் வன்மையற்று இருக்கும் . உடலை படுக்கச் செய்யும். கை கால்கள் கடுப்பதோடு உடலும் கடுக்கும் . இத்தகைய குணங்கள் இருப்பின் அது வாதத்தின் குணங்களாகும்.

(இதற்குச் சூரணம்)

சீரகமிரண்டுகுப்பை திரிகடுசமனாய்வாங்கி
வேரின்றோல்சமனாய்க்கொண்டுவிளங்கவேபொடித்துத்தேனில்
வீரமாயந்திசந்தி மின்னனாய்தின்றுவந்தால்
பாரதின்குணங்கடானும்பறந்து போம் வாதந்தானே 136

கருஞ்சீரகம், காட்டுச் சீரகம் , சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை சமமாக எடுத்து அதற்குச் சமனாக வேர்த்தோல் (சித்திரமூலவேர்த்தோல்) எடுத்து சூரணித்து காலை, மாலை அளவுடன் தேனில் குழைத்து உண்டுவர வாதநோய்கள் விலகும்.

(சுரவாதத்தின் குணம்)

(இதற்குச்சூரணம்)

வாதத்துக்கெண்ணெய்தானுமகிழ்ந்துமுன்சொல்மருந்தை
ஆதியாங்காடி தன்னிலரைத்ததைத்கலக்கிக்காய்ச்சி
பாதமுந்தலையிற்றோய்க்கப்பறந்துபோம்வாதமென்று
மாதுநல்லாளே கேளாய்மாமுனியருளினாரே. 137

வாதத்துக்கு எண்ணெயைக் கூறக்கேட்பாயாக. முன் கூறிய மருந்துகளை அன்னக்காடியில் அரைத்துக் கலக்கி நல்லெண்ணையிலிட்டு காய்ச்சி தலையில் தேய்த்து முழுகிவர வாத நோய்கள் விலகும் என மாமுனிவர் கூறினார்.

பித்தகுணம், இதற்குநசியம், சூரணம்

எண்ண்யபித்தமாகிலிப்படிசிரசுநொந்து
கண்ணுடன்சிவப்புகூடி கருணையில்மையற்கூடும்
திண்ணமாய்த்தாகந்தோன்றுஞ் சிறுசுரவிஷமுமுண்ட
முண்ணுநாவுலர்ந்துபித்து முற்றதோர்நிறமுமாறும் 138

பித்த நோய்கள் வந்தால் தலைநொந்து கண்கள் சிவந்து தாபமுண்டாகும். அதிக தாகமுண்டாகும் . விஷசுரமும் உண்டாகும். நாக்கு உலர்ந்து , உடலில் தோன்றும் பித்தமானது நிறம் மாறி இருக்கும்

இஞ்சியைக்குத்திநன்றா யிருகண்ணிற்பிழிய வேண்டு
மிஞ்சியமிளகிந்துப்பு மேலமுங்கடுக்காய்சுக்கு
வஞ்சியே சீனிமுந்திரி வகையுடனிடித்துச்சேர்த்து
தஞ்சமாய்த்தின்னும்போது தகர்ந் திடும்பித்தந்தானே 139

இஞ்சியை இடித்து இருகண்களிலும் இரண்டொரு சொட்டுகள் பிழியவேண்டும். மிளகு இந்துப்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, முந்திரி, சர்க்கரை ஆகியவற்றை சமஅளவு எடுத்து சூரணித்து அளவுப்படி உண்ண பித்த நோய்கள் தீரும்.

(சேத்துமசுரக்குணம்)

தலைகனத்துடல்வெதும்பிதன்செவிமூக்கடைக்கு
மிலகியவுதரமுற்றிவிரைந்து மெய்சுளுக்குகுத்து
விலகியேயசனஞ்செல்லாவெதும்பியேசிலோர்ப்பனத்தில்
நிலவியசுரங்கள் கண்டு நிச்சயமறிந்து செய்யே. 140

தலைகனப்பதுடன் உடலும் வெதும்பி செவி மூக்கு ஆகியவை அடைத்துக்கொள்ளும். வயிறு முற்றி விரைத்துவிடும். உடலில் சுளுக்கெடுத்து குத்துண்டாகும். உணவில் விருப்பமிருக்காது. இத்தகைய குணங்கள் இருப்பின் அது கபத்தில் உண்டான சுரம் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

(இதற்குச் சூரணம்)

திரிபாலையுடனேயேலந் திரிகடுவிடயந்தானு
மரிகடுரோணியோமமக்கரா கொத்தமல்லி
தருசாதிபத்திரிசீரஞ் சமனிதுபொடித்ததெல்லா
மரிபடுரேகிதின்ன வளம் பெறுமுடலந்தானே. 141

கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல் , ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி அதிவிடையம், கடுகுரோகணி, ஓமம், அக்கராகாரம், கொத்தமல்லி, சாதிபத்திரி, சீரகம், ஆகியவற்றை சம அளவு எடுத்து சூரணம் செய்து உண்டுவர உடல் வளம் பெறும்

வாதமேகதித்தபோது வாயுமேலெழுந்துமீளுஞ்
சூதமாயிருமல்வந்து தொடர்ந்திடுஞ்சன்னிவாதம்
பேதமேசெய்கின்றாய்நீ பெருவயிறான தோஷம்
போதமேவருவதென்று பொருந்தவேமுனி சொன்னாரே. 142

உடலில் வாதக்குற்றம் அதிகரிக்கும் பொழுது வாயு மேலே எழுந்து மீண்டுவிடும். இருமல் வரும் அதைத்தொடர்ந்து சன்னி, வாதம், ஆகியன உண்டாகும், பெருவயிறு தோன்றும் என்று முனிவர்கள் கூறினார்கள்.

(வேறு)

நொச்சிச்சாறுமைஞ்ஞாழி நுவலுமெண்ணெயையுழக்கு
அச்சந்தகரஞ்சதகுப்பை யருகன் வேர்காயங்கோட்டங்
கச்சீரகமாஞ்சுக்குடனே கருவாய்நாகங்கடுகுள்ளி
இச்சையாகக்காய்ச்சியுண்ண வேகும் வாதகுணமாமே. 143

நொச்சிச்சாறு ஐந்து நாழி, நல்லெண்ணை ஒரு உழக்கு எடுத்து அத்துடன் சதகுப்பை , எருக்கன்வேர், பெருங்காயம் கோட்டம் ,சீரகம், சுக்கு, கருவாய்பட்டை ,சிறுநாகப்பூ, கடுகு, வெங்காயம், இவற்றை சேர்த்துக் காய்ச்சி உண்டுவர வாதக்குற்றம் அதிகரிப்பது விட்டுவிடும்.

(வேறு)

பித்தத்தில்வெதுப்புபற்றிப்பெருத்திடுசத்திகுன்மஞ்
சித்தத்தில்வலித்தெறிந்துதெளிவுறக்கழிச்சலாகும்
மொத்தவேயீரலோடேமிகுந்துதானெரித்தனத்துங்
கைத்ததுநாக்குத்தானுங்கதித்திடிற்பித்தமாமே, 144

உடலில் பித்தம் அதிகரிப்பின் உடல்வெதும்பும் சத்தி குன்மம் உண்டாகும். சிரசுவலித்துத் துடிக்கும் கழிச்சலுண்டாகும் ,ஈரல் வலிக்கும் பின்பு பெருத்துவிடும் நாக்கு கசக்கும்

(வாதசயித்திய குணம்)

(வேறு)

நெற்பொறியுஞ்சிபயரும் வில்வமுல்லை
நெறியசீரேலமுடன் சுக்குநெல்லி
முற்படவேயிளநீர்வெந் தெட்டொன்றாக்கி
யூற்றியேபின்னெடுத்துவடித்திறுத்துக்கொள்ள
சொற்பெரியசத்திகுன்மஞ் சுரத்திற்சத்தி
துயரமுள்ள கிறுகிறுப்புள்ளுழலைமூச்சு
பற்றறு மென்றிமையவரும் ரிஷிகடாமும்
பகர்ந்தனர் முன்னருந் தமிழின்படியிதென்றே 145

நெற்பொரி, சிறுபயிறு ,வில்வம், முல்லை ,சீரகம், ஏலம், சுக்கு, நெல்லி, இளநீர் இவற்றை சமனெடுத்து முறைப்படி கியாழம் வைத்து உண்டுவர சத்தி குன்மம் சுரத்தின்போது வரும் வாந்தி , கிறுகிறுப்பு, வெப்ப (மூச்சு) சுவாசம், ஆகியன தீரும் என்று ரிஷிகள் பலரும் கூறியுள்ளதை தமிழில் கூறுகின்றேன்.

(பித்தக்கதிப்புக்கு எண்ணெய்)

(சந்தவிருத்தம்)

சந்தனத்தினிடையெண்பலத்தள
வுகந்துவெந்துவிளநீரிலே
தந்துவாயினதுபாலுமவ்வளவு
தணலில்வெந்தளவுகுறுகியே
தந்ததேவியரவிந்தகாணிதிருவ
ராகிநாகவல்லிமுத்தமுந்
தந்திலாதவிருவேலிமிச்சமொடு
தக்கோலாதியர்சீரமே 146

சந்தனம் எட்டுபலம் எடுத்து, அதில் இளநீரும் பாலும் சமஅளவில் கலந்து போதிய அளவு விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சிக் குலுக்கி வடிக்கட்டி கொள்ளவும் அத்துடன் வெற்றிலை, கோரைக் கிழங்கு ,சித்திரமூலம் விலாமிச்சம்வேர், தக்கோலம்,சீரகம்.

முந்தனித்தமொடு முப்பழத்தினொடு
மோதுமேமொடுநாகமு
முந்திபச்சைகச்சோமசெண்பகமு
முதிருங்கோட்ட மிலவங்கமு
மிந்தசொற்படியிலென்னைவைத்திடுகி
லேறுதோஷசுரபித்தமு
மின்றுவிட்டகலுமென்றுவானவரு
மிருடிமார்களுமியம்பினார், 147

முக்கனியான மா, பலா, வாழை ஆகியவற்றின் தோல், ஓமம், சிறுநாகப்பூ , திருநீற்றுப் பச்சை விதை, செண்பகமொட்டு கோட்டம், கிராம்பு, ஆகியவற்றை சமஅளவாக எடுத்துக் கற்கமாக அரைத்து, எண்ணெய், முன்கூறிய கியாழம் ஆகியவற்றை கூட்டி முறைப்படி எண்ணெய் காய்ச்சி முழுகிவரவும். அதனால் தோஷசுரம், பித்தம் ஆகியன உடலைவிட்டு விலகும், என்று வானிலுள்ள தேவர்களும் ரிஷிகளும் கூறியுள்ளார்,

(வேறு)

இஞ்சிற்சார்நெல்லியெலுமிச்சஞ்சாறு
மியல்பானநெய்தேனுஞ்சீனிமுந்திரி
தஞ்சமெனவகைக்குழக்கு மருந்து கேளு
சந்தனமுந்திரிகடுகுகிராம்பு மேலம்
பந்தமுடன் மூக்குரட்டை சாதிசீரம்
பத்திரியு மதுரமிவை கழஞ்சிரண்டா
மிஞ்வேய்யிடித்துத் தூள் தூவிக்காய்ச்சி
விதமாகநெல்லிக்கா யளவு கொள்ளே, 148

இஞ்சிச்சாறு, நெல்லிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, பகநெய், தேன், சர்க்கரை, முந்திரிப்பழச்சாறு வகைக்கு ஒரு உழக்கு எடுத்துக்கொள்ளவும். சந்தனம், முந்திரி, கடுகு, கிராம்பு, ஏலம், மூக்குரட்டை ,சாதிக்காய். சீரகம், சாதிபத்திரி, அதிமதுரம் , வகைக்கு 2 கழஞ்சி எடுத்து சூரணம் செய்து கொள்ளவும். முன்கூறிய சாறுகளில் சர்க்கரை கலந்து பாகு காய்ச்சி சூரணத்தில் தூவிக்கிண்டி நெய்கலந்து , தேன்விட்டு லேகியமாக செய்து கொண்டு நெல்லிக் காயளவு உண்டுவர பித்த ரோகங்கள் தீரும்.

(வேறு)

ஐயமேகதித்தபோதரிய யெய்ப்பிருமல்காசம்
நையுமாமாந்தயீளை களிர்குளிர்விக்கல்சத்தி
செய்யுமா மூச்சைடைப்பு தீதுறுகாசகரோகந்
தொய்யுமாமிளைப்புகாசந் தோன்றுமென் றுரைசெய்தாரே, 149

கபதோடம் அதிகரிக்கும் பொழுது இருமல், காசம், மாந்தம், ஈளை , கடுங்குளிர், விக்கல், வாந்தி, மூக்கடைப்பு , காசரோகம், இளைப்புக்காசம் ஆகியன உடலில் தோன்றும்.

(குணமருந்துவாதபித்த தொந்திப்பு இதற்குச்சூரணம்)

(வேறு)

காட்டுகருணைகொடுவேலி
கிராம்புமேலந்திரிகடுகு

தீட்டு மசுவநெற்பொரியுஞ்
சீரலவங்கந்திரிபலையுங்
கூட்டு நாசஞ்சர்க்கரைதேன்
கோவினெய்யுங்கூட்டி யுண்ணி
லோட்டித்துரத்துஞ்சேத்துமத்தி
லுள்ளவியாதி யொழிந்திடுமே, 150

காட்டுக் கருணை, சித்திரமூலவேர், கிரம்பு, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அமுக்கிறா ,நெற்பொரி, சீரகம், லவங்கம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சர்க்கரை , தேன், நெய், ஆகியவற்றை முறையாகக் கூட்டி லேகியமாக செய்து உண்டுவர கபஆதிக்கத்தினால் உண்டாகும் நோய்கள் தீரும்.

(வேறு)

அந்தவாதங்கள்ரெண்டு மடுத்திடும்பித்தமொன்றுந்
தொந்தித்துநடக்குமாகிற்றோன்றிடுங்குணத்தைக்கேளாய்
வந்துவந்துதரவிம்மி மதித்திடு மாதர்மோகஞ்
சிந்தனைமிகவுமுண்டாய்த் தின்றதுசெறியாதெண்ணே 151

வாதம் இரண்டுபங்கும்,பித்தம் ஒரு பங்கும் கலந்து நாடியில் தெரியுமானால் உடலில் வயிறு விம்மிப் பெருக்கும், பெண் இச்சை அதிகமாகும், உண்ட உணவு செரியாதிருக்கும்.

கொள்ளுகவாதம் ரண்டுங் கொடும்பித்தமொருகாலோடிற்
கள்ளமாய்வயிறுவிம்மிக் கனக்கவேவாய்வுதோன்றுந்
தெள்ளியமாதர்மேலேசிந்தனைமிகவுண்டாகுந்
துள்ளியவாதபித்தந்தொந்திப்பென்றுரைக்கலாமே. 152

முன்கூறியபடியே வாதம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்குமாகவும், ஓடினால் வயிறு விம்மிவிடும், வாய்வு தோன்றும். பெண்கள் மேல் காமஇச்சை அதிகமுண்டாகும் என்று கூறலாம்

(வேறு)

சந்தமொடுகோட்டமதி மதுரமஞ்சள்
சதகுப்பையரத்தை திரிகடுகிந்துப்பு
கெந்தமொடுசாதிக்காய்விடையமோமங்
கிராம்புடனேயிலவங்கஞ் சாதிபத்திரி
வெந்தயமுஞ்சமுத்திராப்பழமுங்காந்த
மேலமல்லிவிழவரிசியிருசீரந்தா
னிந்தத்தூள் வெருகடி தான் தேனிற்கொள்ள
வேகுமேவாதபித்த மிறங்கித்தானே, 153

சந்தனம் , கோஷ்டம் ,அதிமதுரம் , மஞ்சள் , சதகுப்பை அரத்தை , சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கெந்தகம், சாதிக்காய் அதிவிடையம், ஓமம், கிராம்பு , இலவங்கப் பட்டை, சாதிபத்திரி, வெந்தயம், சமுத்திராப்பழம், காந்தம், ஏலம், மல்லி,

வாய்விளங்கம், காட்டுச் சீரகம், கருஞ்சீரகம் ஆகியவற்றை சமஅளவாக எடுத்து சூரணம் செய்து கொள்ளவும். வெருகடி அளவு சூரணத்தை தேனில் காலை, மாலை உண்டுவர வாதபித்த ரோகம் தீரும்.

(வேறு)

இசைந்திடு பித்தம் ரண்டு மீரறைவாத மோடிற்
பசிந்திடும் வயிறும்நெஞ்சும் பறந்தெரிந்தழன்று மெய்யும்
வசந்திடுந்தலைகிறுக்கு மயங்கிடுமேல்வெதும்பு
முசந்திடும்பித்தவாத முறைமையையறிந்து கொள்ளே. 154

பித்தம் இரண்டுபங்கும், அதில் அரைபங்கு வாதமும் நாடியில் ஓடினால் வயிறு அதிகம் பசிக்கும் நெஞ்சு எரியும். உடலெங்கும் எரிச்சலுண்டாகும் தலைகிறுகிறுக்கும் மயக்கமுண்டாகும். மேனி, வெதும்பிவிடும் என்று அறிந்துகொள்ளவும்.

சுக்குடன் கடுக்காயேலஞ் சுகமுறிமிளகுநெல்லி
திக்கிடைமதுரஞ்சந்தஞ் சீரகங்கொத்தமல்லி
தக்கதோர்சமுத்திராக்காய் சமன்பொடிமுந்திரிசீனி
பக்குவநெய்யிற்கொள்ளப் பறந்திடும்பித்தவாதம் 155

சுக்கு, கடுக்காய், ஏலம், மிளகு, நெல்லி, அதிமதுரம், சந்தனம், சீரகம், கொத்தமல்லி , சமுத்திராப்பழம் சமனாக எடுத்துப்பொடித்து உலர்ந்த திராட்சையும் சீனியும் கூட்டி நெய்யில் உண்டுவர பித்தவாதம் விலகும்.

(பித்தவாதந் தொந்திப்புகுணம்)

உயர்ந்திடும்வாதம்ரண்டுமொருசிலேர்ப்பனமுமாகில்
அயர்ந்துகைகாநொந்து அடி வயிற்கனத்திடுப்புந்
தியங்கிடுந்தாதுகெட்டுச் செனிப்புடன் குறைந்துவாடு
மயங்கிடும்வாதத்தோடு மருவியசேத்மந்தானே. 156

வாதம் இரண்டு பங்கும் சிலேற்பனம் ஒருபங்கும் நாடியாக ஓடினால் கால்கள் நொந்துவிடும். அடிவயிறு கனத்துவிடும். உடல்தாதுக்கள் கெட்டு உடல்வன்மை குறைந்துவிடும் இது வாதகப நாடியின் செய்கை என அறிந்து கொள்ளவும்.

(சூரணம்)

(வேறு)

வசம்புகோட்டந்திரிகடுகு வடமோதகமுற்கொடுவேலு
திசைபெறுங்கடுக்காய்தானிரண்டுஞ் சீரகங்கொத்தமல்லியுடன்
கசைபடுங்கடுகு வோமமுடன் காயமிந்துப்போடுள்ளி
வசமுடனிடித்துத்தின்ன வாதசேத்மந்தான்போமே. 157

வசம்பு, கோட்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கொடிவேலி, கடுக்காய், தான்றிக்காய், சீரகம், கொத்தமல்லி, கடுகு, ஓமம், பெருங்காயம், இந்துப்பு வெங்காயம் ஆகியவற்றை சமனாக எடுத்து இடித்து சூரணம் செய்து உண்ண வாத கப நோய்கள் தீரும் .

(வேறு)

பாரித்த சேத்மம்ரண்டு பரிந்தொருவாதமோடிற்
கூரித்துகுளிர்ந்துகூசுங் கும்பியுங்குணமுங்கெட்டு
நேரத்தநீருமுண்டாய்நெலித்தலைத்திரேகநோவுஞ்
சீரற்றசேத்மவாதந் தொந்திப்பாந்திருநல்மாதே, 158

கபம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்குமாக நாடி ஒடினால் கண்கள் குளிர்ந்து கூசி குறுகும் அதன் செயல்கள் கெடும் நீர்வடியும், தலை உடல் எல்லாம் நோகும். பெண்ணே இதையே கபவாத குணம் என்று அறிந்துகொள்.

ஒப்பியசேத்மம்ரெண்டும் வாதமுமொன்றதாகில்
செப்புறுகனன்மேலிட்டு வினிப்பையுமிகவும் வேண்டுந்
தப்பிலாப்பசியுமுண்டாந் தவன மேயதிகநிற்கும்
இப்படி குணமேகண்டாற் சேத்துமவா தமெண்ணே 159

கபம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்குமாக நாடி ஓடினால் அனல் அதிகமுண்டாகி இனிப்புச்சுவையின் மேல் அதிக நாட்டமுண்டாகும் . தவனம் அதிகமாகி. இருக்கும் இப்படிப்பட்ட குணங்கள் காணப்படின் அது கபவாத நாடியாகும்.

(வேறு)

ஏலமொடுசந்தன மிலாமிச்சுபலைச்சி
யிருவேலி நாகவங்கம்
நல்மிளகுமல்லியுங் கடுகுடனேதிரிகடுகு
வசுவாசிதிரி பலையுமாம்
நீலமொடுசீரகம துரங்கிராம்புடன்
நெற்பொரியுங் கோட்டம துவாம்
வாலுமுவைதாரமதி மதுரமமுக்கரா
வசம்பரத்தையசுவம்விடைமாஞ்
சோமஞ்சதகுப்பை தேனிற்குழைத்திடச்
சேத்மவாதந்தீருமே. 160

ஏலம் , சந்தனம்,விலாமிச்சம் வேர், கருங்கொடிவேலி, செங்கொடிவேலி, சிறுநாகப்பூ, கிராம்பு, வால்மிளகு மல்லி, கடுகு, சுக்கு, மிளகு,திப்பிலி, சாதிபத்திரி.கடுக்காய் தான்றிக்காய்,நெல்லிக்காய், சீரகம், அதிமதுரம் கிராம்பு, நெற்பொரி, கோட்டம், வாலுளுவை அரிசி, தேவதாரம், அமுக்கிரா, வசம்பு, அரத்தை, அதிவிடையம் சடாமாஞ்சில் ஓமம், சதகுப்பை அகியவற்றை சமஅளவாக எடுத்து தேனிற்குழைத்து உண்ண கப்வாதம் தீரும்.

(வேறு)

மாதேகேள் பித்தம்ரெண்டு
மறுத்தொருசேத்மமோடில்

தீதுடன்றலைவறண்டு
திமிர்த்திடும் பிடரிநோகும்
போதமாய் வயிறிரைக்கும்
புந்தியிற் குணங்கேடாகுந்
தீதுசெய்பித்தசேத்மந்
தொந்திப்பாந் திருவின்மாதே. 161

பித்தம் ரெண்டுபங்கும், அதில் பாதி கபமும் ஓடினால் தலை வறட்சியுண்டாகி திமிர்க்கும், பிடரிநோகும். வயிறு இரையும், மனம் ஒரு நிலையில் இருக்காது. இவை பித்த கபநாடியின் செய்கைகளாகும்.

செய்யதோர்பித்தம்ரெண்டுஞ்
சிலேத்மமொன் றெழுந்ததாகி
லையமேன் பசியுமில்லை
யடிக்கடி யுதரம்விம்மும்
துய்ய தோர் நயனநீருஞ்
சுத்தமேமஞ்சள் போலாம்
பொய்கள் பித்தத்தைப் பேசில்
பிதற்றசேத்மங்களாமே. 162

மேலுள்ளவாறே பித்தம் இரண்டுபங்கும் கபம் ஒரு பங்கும் நாடியில் ஓடினால் பசியிருக்காது. அடிக்கடி வயிறு வீங்கும் கண்களில் வடியும் நீர்கூட மஞ்ச்ள் போல் இருக்கும்.

(வேறு)

சந்தனம்பச்சிலைகச்சோலஞ்
சாதிக்காய் கிராம்புபத்திரி
வந்தவசம்புதிரிகடுகு
வங்கங் கோஷ்டந்திரிபலையும்
இந்தயோமஞ் சதகுப்பை
யிருசீரகமு மேலமல்லி
அந்தத்தேன் நெய்சீனியிஞ்சி
யருந்தவ லுஞ் சேத்துமமே. 163

சந்தனம் ,பச்சிலை, ஏலம், சாதிக்காய் , கிராம்பு, சாதிபத்திரி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பட்டை .கோஷ்டம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், ஓமம், சதகுப்பை , கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், கொத்தமல்லி, இஞ்சி ஆகியவற்றை சமஅளவு எடுத்து சூரணம்செய்த நெய், தேன், சீனி, சேர்த்து முறைப்படி லேகியம் செய்து உண்டுவர சேத்தும நோய்கள் தீரும்.

(வேறு)

ஓங்கிய சேமம் ரெண்டு முயர்பித்தமொருகாலோடி
லேங்கிடு மிருமலீளை யிடர்செய்யும்வாயுசீறு
மோங்கிடுமுதரமெய்யு முறுதிகெட்டுளைவுமாகு
மாங்கெடுஞ்சேத்மபித்த மவைதொந்தமென்பதாமே. 164

கபம் இரண்டுபங்கும், பித்தம் ஒரு பங்கும் நாடியிலோடினால் ஈளை , இருமல் உண்டாகும் வாய்வு சீறும் . வயிறு வீங்கும் உடல் உறுதி கெட்டு உளைச்சல் தரும். இவையே கபபித்த தொந்தத்தினால் உண்டானவை ஆகும்.

தாங்கியசேத்மம்ரெண்டுந் தனிப்பித்தமொன்றேதாகில்
ஒங்கியசன்னியுண்டா முச்சிநோஞ்செவிகேளாது
பாங்குடனாவினித்துப் பத்தியஞ்செறியாதாகும்
பூங்கொடிசேத்மபித்த மென்றுதான்புகலுவீரே 165

முன் சொன்னபடியே கபம் இரண்டுபங்கும், பித்தம் ஒரு பங்கும் ஓடினால் சன்னி உண்டாகும் .தலையுச்சி நோகும். செவிகேட்காது நாக்கு இனித்துக் கொண்டேயிருக்கும் பசியிருக்காது. பூங்கொடியே இதை கப பித்த தொந்தம் என்று கூறுவீராக.

அக்கராமிளகு நெல்லி யமுக்குராவரத்தைதிப்பிலி
சுக்கொடுகடுக்காய்தான்றி சொல்லதிவிடயமேலந்
தக்கதோர்மதுரஞ்சீரஞ்சரியிடை பொரிந்து நெய்யில்
சிக்கெனவருந்தும் போது சேத்துமபித்தம்போமே. 166

அக்கராகாரம் ,மிளகு, நெல்லி, அமுக்கிறா ,அரத்தை, திப்பிலி, சுக்கு , கடுக்காய், தான்றி, அதிவிடையம். ஏலம், அதிமதுரம், சீரகம், ஆகியவற்றை சமஎடை எடுத்து இளவறுப்பாக வறுத்து சூரணம்செய்து நெய்யில் உண்டுவர, கபபித்த தொந்த நோய்கள் தீரும்.

இழுத்திடுவாதபித்த சேத்மமிடருமாகிற்
பழுத்திடுமேனிநொந்து பதங்கொடும்பசியுமில்லை
கழுத்தொடுகையுங்காலுங் கடுத்துடன் கனத்துக்காணு
முழுத்திடு மூலரோக மூவருந்தொந்தித்தாலே. 167

வாத ,பித்த, கப நாடிகள் இடமாறி ஓடினால் உடல் நொந்து கெட்டுப்போகும். பசியிருக்காது. கழுத்து, கை, கால், கழுத்துக் கனத்துக் காணப்படும் மூலநோய் உண்டாகும்.

(வேறு)

திரிபலையோமமக்கிரா
சிவதைமதுர மதிவிடையந்
திரிகடுகொத்தமலியிரண்டு
சீரகமுங் குப்பையுடன்

யறிவசம்பரத்தையேல்
மருக்குராகிராம்புபத்திரி
யறிவுசேர் காயம்பத்திரி
யதுசமன் கொள்ளுவீரே, 168

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஓமம், அக்கிராகாரம் சிவதைவேர், அதிமதுரம், அதிவிடையம், சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்தமல்லி,கருஞ்சீராம், காட்டுச்சீரகம், சதகுப்பை , வசம்பு, அரத்தை ஏலம், அமுக்கிறா, கிராம்பு, சாதிபத்திரி, பெருங்காயம், ஆகியவற்றை சமன் எடுத்து சூரணம் செய்து உட்கொள்ள வாத, பித்த, கப தொந்த நோய்கள் தீரும்.

வாதரோக குணம்

(வேறு)

மெய்யே நடுக்குந் தலைவலிக்கு
மேனிவெளுறுங் கண்டுங்கும்
பொய்யேதுயரங் கிறுகிறுக்கும்
போதேநயனமெய்நெறியுங்
கைகால் திமிர்ந்து வுலர்த்திவைத்துக்
கண்ணுமூக்குஞ்சன்னிகட்டு
கையாமெய்யு மிகவுளவாம்
வாதரோகக்குணமிதுவே 169

மெய்நடுங்கும், தலைவலிக்கும் மேனி வெளுக்கும் கண்கள் தூங்கும் உயரம் சென்றால் கிறுகிறுக்கும் . விழிகள் நெறித்து வலிக்கும் கை, கால் திமிர்க்கும் உடல் உலரும் , கண், மூக்கு ஆகியன தம் தன்மைகளை இழக்கும், உடல் உளையும். இத்தகைய குணங்கள் இருப்பின் அது வாத ரோக குணமாகும்.

கண்டங்காரிநீர்முள்ளி
கனையாவரையா மணக்கம்வேர்
கண்டஞ்சுக்குகருசீரங்
கடுகுப்பைசமனாக
வொன்றாய்க் கூட்டிக் கியாழம் வைத்து
வுண்மையாகக் குடிப்பீராய்
தெண்டப்படுத்தும் வாதபிணி
தீருமென்றார் திருமுனியே 170

கண்டங்கத்திரி , நீர்முள்ளி, ஆவாரை, ஆமணக்கம்வேர் , கண்டத்திப்பிலி, சுக்கு, கருஞ்சீரகம், கடுகு, சதகுப்பை சமனாக எடுத்து முறைப்படி கியாழம் வைத்து குடித்துவந்தால் அல்லல் தரும் வாதப் பிணிகள் தீரும்.

திரேகலட்சணக்குறிப்பு

பார்த்திடில்வாதபித்தம் பரிந்து சேத்துமங்களங்கே
ஆர்த்திடு மரணைவால்போற் றுடித்திடு மகவைநோவாம்
வேர்த்துடல்பட்டுத்தானே மெய்யெலாங்குளிர்ந்ததாகில்
கோற்றொடி வளைக்கநல்தாம் மரண மாங்குறிப்பிதாமே. 171

வாதபித்தம் மெல்ல ஒடியும், கபமானது அரணைவால் போல் துடித்தால் மேனிநோகும், உடல் வேர்த்து அங்கம் எல்லாம் குளிர்ந்து , உடல் வளைந்து கொடுக்குமானால் அது மரணகுறியாகும்.

மேவியபுறங்கையாலே மிக்கதோர்முகத்தை நீவி
ஆவலாய்மனிதர்தம்பா லகவுறவேங்கிநிற்கும்
பூவையே பெருமூச்செய்தும் போனகந்தேடு மாகின்
மாவடு கன்னியேகேள் மரணமாங்காலந்தானே. 172

மாவடுவைப் போன்ற கண்களை உடைய பெண்ணே! புறங்கையால் முகத்தை நீவி பெரியவர்களின் அன்மையை நோயாளி விரும்பல், பெருமுச்சுவிடுதல் வெளியே செல்லாமல் வீட்டுக்குள்ளிருக்க ஆசைப்படல் ஆகியன இருந்தால் அது மரணக் குறிகளாகும் .

புயம் பெறுவிலாவிரண்டு பூருபூரெனவேகித்து
சயம்படுதொண்டைக்குள்ளே சலமடைத்திரையுங்கண்டால்
வயங்கிளைதுன்னே கண்ணிலகந்தருநீருமூடிற்
றியங்கிய வேண்டாமிந்தச் செய்குறிமரணமாமே. 173

புயங்கள் இரண்டும் , விலா இரண்டும் மேலும் கீழுமாக ஏங்கி நிற்கும் தொண்டைக்குள் கபம் கட்டி திரையிட்டு விடும். கண்களில் நீர்பெருகி மூடினாலும் அக்குறிகள் மரணத்தைக் குறிப்பவையாகும்.

எடும்படி என்றுவீழு மெழுமுடல்மயங்கிக் காட்டும்
புடையதுமூகுநீரும் பொசித்திடுவேர்வையுண்டாம்
வடுவிழிமையாகும் வாங்கிடுவிலாவிரண்டுங்
கடுகவேயிக்குணங்கள் கண்டிடமரணந்தானே. 174

உடல் எழுவதும் விழுவதுமாக இருக்கும் . மயக்க முண்டாகும் உமிழ்நீர் அதிகமுண்டாகும்.வியர்வை அதிகமுண்டாகும். விழி நிலைகுத்தி காணப்படும். விலா இரண்டும் நோகும். இக்குணங்கள் இருந்தால் மரணம் உறுதியாகும்.

நன்மையாய் வாதபித்த நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாய்ச்சிலேத்துமந்தான் வளர்துடி படியப்போலே
திண்ணமாயுடல்வெளுத்து மார்பதுகுளிர்ந்ததாகில்
வண்ணலாரறியச்சொன்னோ மதன்குறி தொண்ணூற்றாறே. 175

வாத, பித்த, கப நாடிகளை ஆராயும்பொழுது, கபநாடியானது வளர்ந்து அதிகமாக துடித்தால் உறுதியாக உடல் வெளுத்து மார்பில் குளிர்ந்து

காணப்படின் அதனால் வரும் நோய்கள் தொண்ணூற்றாறு
ஆடியமஞ்ஞைகோழி யன்னம் போல்நடக்கும் வாதம்
நீடியவெட்டைபோல நின்றது தியங்கி யோடில்
கூடியகிழமையேழிற் சொல்வதுதிண்ண மென்ன
நாடியே முனிவர் தாமு நயம் படவறிந்து சொன்னார். 176

மயில், அன்னம், கோழி , போல் வாதநாடி நடக்காமல் அட்டைபோல் தயங்கி தயங்கி ஓடினால் ஏழு நாட்களுக்குள் மரணம் உறுதி என்று முனிவர்கள் அறிந்து கூறியுள்ளனர்.

சொன்னமுன்னாமையட்டை துலங்கியபித்தநாடி
வன்னமாமரவுபோலவளைந்தது பரந்தேயோடில்
அன்னநாளைந்து மூன்றி லறிந்து கொள்மரணமின்ன
இன்னமுமறிந்து சொன்னோமியம்பினகூர்ப்புள்ளோரே 177

ஆமை அட்டை போல் நடக்கும் பித்தநாடியானது பாம்புபோல் வளைந்து, வளைந்து விரைவாக ஓடினால் பதினைந்து நாட்களில் மரணம் என்று சான்றோர்கள் கூறியுள்ளனர்.

கூறியதவளைபாம்பு குலவியநடைகள்போன்ற
தேறவேதெரிந்துசொன்ன சேத்துமக்கொடியநாடி
போற்றெழிலன்னம் போலப் புடைத்தது பிரியக்கண்டால்
ஊற்றறிந்தொழிவாரென்றுவொருக்கியே மாதமென்றார். 178

தவளை பாம்பு போல் நடக்கவேண்டிய கபநாடியானது கோழி அன்னம் போல் புடைத்து பிரிந்து நடக்குமானால் ஒரு மாதத்தில் மரணம் என்று அறிய வேண்டும்.

(அசாத்தியக்குறிப்பு)

மேதினியுள்ளோர்க்கெல்லா மெய்யிதுவுரைக்கலுற்றேன்
ஓதியநூலைச்சார்ந்து வொண்டொடி நாவரண்டு
தீதிலாச்சேத்மநாடி செருமியேயெழுந்துவீழும்
ஆதியாயுரைத்தவுண்மை யடுத்தநாளிரண்டிற்சாவே !79

உலகத்திலுள்ள அனைவருக்கும் வாகடநூலை ஆராய்ந்து உரைக்கிறேன் நாவறண்டு சேத்துமநாடி அதிகமாக எழுந்து அடித்தால் இரண்டு நாளில் இறப்பது உறுதி

மெய்யதோர்பித்தம் நீங்கி வாய்வதுமிகந்து காட்டில்
ஐயமேலிட்டுகண்ட மடைத்திடுமிளைப்புமாகுந்
துய்யதோர்விழிமந்தஞ்சொருகிநீரிட மேசுற்றில்
ஐயனாருரைத்தவுண்மையைந்து நாண்மரணமாமே, 180

பித்தம் நீங்கி வாய்வு அதிகமாகக் காட்டினாலும் தொண்டையில் கபம் அடைத்து

இளைப்பு உண்டாகும், விழியில் பார்வை மங்கி செருகிவிடும் .நீர் அதிகமாகி வழியும் இத்தகைய குறிகுணங்கள் இருப்பின் ஐந்துநாளில் மரணம்.

துன்னியவாதபித்தஞ் சேத்துமந் தொடர்ந்துசன்னி
இன்னமுங்குணங்கள் சொல்ல வியல்புடனிருந்து கேளாய்
பின்னதுபாம்புபோல டிரிந்து தானடந்தநாடி
தன்னையுந்தவளைதத்தி தயங்கிடிற்சாவுதானே 181

வாதபித்த கபநாடிகள் , அதிகமாகி படபடத்து ஓடி சன்னி உண்டானாலும் கடைசியாக உள்ள கபநாடியானது, பாம்புபோல் நடந்த நாடியானது தவளைபோல் தத்தி தத்தி தயங்கி ஓடினால் மரணமாகும்.

என்னவேவார்த்தைதன்னை யியல்புடனின்னங்கேளாய்
முன்முகமார்புபக்கமூக்குடன் செவிகள்கண்டஞ்
சொன்னகன்குளிர்ந்து சோர்ந்துசிலேற்பனஞ்சுருக்கைசெய்தாற்
சொன்னநாளொன்றிற் சாவர் தொகுத்தறிந்துரைத்துப்போமே. 182

நான்கூறும் வார்த்தைகளைக் கேட்பாயாக! முகம் மார்பு விலாப்பக்கம்.மூக்கு செவிகள் , கழுத்து! ஆகியன குளிர்ந்து சோர்வுற்று கபநோயின் செய்கைகளை செய்தால் ஒரு நாளில் மரணமாகும்.

கண்டநொந்துந்திவீங்கி கண்சிவந்தளர்ச்சி தோன்றி
யண்டமும்பொருமிவீங்கி யதைத்துடலிருக்குமென்ன
முண்டகமுகமும் பொன் போல் மூன்று முன்செறிந்து வுச்சி
தண்டிளந்தந்த மேவிச் சாவதுதிண்ணந்தானே. 183

கழுத்து நொந்து, வயிறு, வீங்கி கண்கள் சிவந்து, அண்டமும் பொருமி வீங்கி, அதைத்து முகம் தங்கம் போல் சிவந்து , உச்சி இளகி நின்றால் மரணம் நிச்சயம்.

சில்லெனச்செவிடடைத்துச் சிலேத்துமமது வேதோன்றிற்
சல்லெனச்சரீரம்வேர்த்துத் தானுடல்குளிர்ந்துதோன்றிற்
சொல்லதுகுழறிப்பேசித்தூக்கமுஞ்சுழன்றுவீழில்
சொல்லத்தான்பித்தந்தானுந்தீர்ந்திடாரோகமெண்ணே. 184

சில்லென்று காதுகள் அடைத்து கபம் அதிகமாகி உடல்வேர்த்து மேனிகுளிர்ந்து தோன்றினாலும் சொற்களைக் குழறிப் பேசினாலும் தூக்கத்தில் சுழன்று விழ்ந்தால் அதுபித்தம் திராததால் உண்டான பிணிகளாகும்.

மெய்யதோர்பகல்விரும்பி யிரவுதன்னுடலைமேவி
செய்யதோர்நாவுலர்ந்து சேத்துமநாடியோடிற்
செய்யவேசுவாசந்தானுந்தொடர்ந்து வாங்குமாகில்
வெய்யகண்பரந்துதாவிவிழிக்கின்றாயிரண்டிற்சாவே. 185

பகலை அதிகம் விரும்புதல் , இரவு உடலை படுக்கையில் கிடத்துதல், நா உலர்ந்து , கபநாடி ஓடி சுவாசம் தொடர்ந்து அதிகமாக நடந்தாலும் கண்களை அதிகமாக விரித்துப் பார்த்தாலும் இரண்டு நாளில் மரணமாகும்.

சாலவேவாதபித்தஞ் சிலேத்துமந்தனிற்றோடாகில்
சாலவேயோசனங்கள் சமித்திடாசாட்சி செய்யுஞ்

சாலவேசன்னிகோர்த்துத் தலைநொந்துவாய்திறக்கில்
சாலவேசபைதிட்டஞ்சாற்றுதின்னினவெல்லாதென்றே, 186

வாதபித்த கப நாடிகள் தனியாக இல்லாமல் தொந்தித்து ஓடினாலும் அதிக யோசனை செய்தாலும் தன்செயலுக்கு சாட்சி தேடுதலும், சன்னி உண்டாகி தலை நொந்து , வாய் பிளந்து காணப்பட்டாலும் மக்கள் கூடியுள்ள சபையில் கூட இதனை உறுதியாக மரணக் குறியென்று கூறலாம்.

புருவமேவட்டமாகிப்புயமெழுந்திருக்குஞ்சோணை
பருகியநீர்நாள்போதபஞ்சிடுங்கண்ணும்வாயு
மருவியகோபந்தானுமடைந்துதானிருக்குமாகில்
வருவதிக்குணங்களெல்லாமரணமென்றறிந்து கொள்ளே 187

புருவம் வட்டமாகி புயம் எழுந்து காணப்படும், வாய் திறக்க முடியாமல் சேனை கொடுப்பதுபோல் திரவ ஆகாரங்கள் தரவேண்டியது இருந்தாலும். கண்கள் பஞ்சடைத்து காணப்பட்டாலும், வாயு மீறினாலும், கோப மதிகமுண்டானாலும் அவை மரணத்திற்குரிய அறிகுறிகளென்று அறிவீராக.

போர்விழியிருண்டு நாளும் புனல்விழுந்துயர்நாளஞ்சில்
சார்விழிசெவியிலையுந் தரித்திடாதேழுநாளிற்
பார்விழி மொழியும்நாவிபயின்றது சுவையின்கூறாங்
கூர்விழிநாசிவாசங் குறையினாள்மூன்றிற்சாவே; 188)

விழியிரண்டும் இருண்டு நீர்வடிந்தால் , ஐந்து நாட்களிலும் , விழியும் செவியும் தன் பணியை சரியாக செய்திடாவிடில் ஏழுநாட்களிலும். பார்வை பேச்சு சுவை ஆகியன சரியாக தெரியாவிடில் நாள் மூன்றில் மரணமுண்டாகும் .

போசனம் பொருத்தல்விக்கல் பொருமுதல் புடைத்தல்சேர்தல்
ஆசனங்குளிர்ந்துகால்கைகால் புறந்தன்னில்வீங்கல்
கோசமுமேறவீங்கல் குழிந்திருயுறமும் வாங்கல்
நாசிவெண்கருவியென்றே நவின்றுநீ விட்டுப்போவே 189

உண்ட உணவு வயிற்றில் தங்கி வயிறு வீங்கில் பெருத்தல் , பொருமுதல், புடைத்தல், சோர்வு ண்டாதல், அபானம் குளிர்ந்து காணப்படல், கைகால்கள் புறங்கால் வீங்குதல், அண்டமும் வீங்கிக் காணல், உரம் வாங்குதல், நாசியடைத்தல், வெள்விழி தெரிதல் ஆகியன காணப்பட்டால் அது மரணக் குறிகளாகும்.

விட்டநீரடைத்துத்தானும் விழினீர்ச்சிந்தல்
அட்டமுங்குளிர்ந்து கூடி லகங்கைகால்புறத்தேவீங்கல்
உட்டிணம்பிரவேசித்த லுற்றுதல்பறப்புச்சேர்தல்
நாட்டமாய்ச் சாவுதிண்ண நாடிநீகை தொடாதே. 190

சிறுநீர் அடைத்துக் கொள்ளல், விழியில் நீர்வடிதல், அங்கம் குளிர்ந்து கைகால் புறத்தை வீங்கிவிடல், உஷ்ணம் உடலில் அதிகம் சேர்தல் ஆகியன

கண்டால் நீ கைநாடியை பார்க்க வேண்டியதில்லை மரணம் நிச்சயமே.

கைதொடில் புனல் போல்நொந்தால் கறுத்துடல்பளபளத்தல்
மெய்தொடி லுதிரநீலம் விழிதனிற்சிவப்பு மீள
செய்யொளிகமலம்புந்தி சிறுமுகங்குருவேர்சிந்தல்
ஐவருமொடுங்கிநித்த மாடுவராடாதென்னே. 191

உடலை கையால் தொட்டுப்பார்க்க நீர்போல் நொந்து இருத்தல், உடல் கருத்துகாணப்படல் . உடலில் இரத்தம் நீலம் பாரித்துக் காணப்படல், விழி சிவந்து காணப்படல், முகத்தில் குருவியர்வை சிந்துதல், ஐம்புலன்களும் ஒடுங்கி நிற்றல் உடலை அங்குமிங்கும் அலைய விடாமலிருத்தல் ஆகிய குணங்கள் இருந்தால் மரணமாகும்.

சிரமதுகனத்துநோகுஞ்செவியடைத்திருக்குமாகில்
சுரமதுவெகுவதாக சுரைபோலச்சிறுநீர்வீழ்ந்து
சரமது சிதறிவீசி தாகமும் வெகுவதாகி
விரவியேவிழிதியங்கி விரைந்திடில் மரணமென்றே, 192

தலைகனத்து நோகும். காது அடைக்கும் அதிகமாக சுரம்காயும் சிறுநீர் அதிகமாக வீழ்ந்து சுவாசம் பலவிதமாக நடைபெறும் அதிக தாகமுண்டாகும். விழியானது அப்படியே நிற்குமானால் மரணம் விரைவிலுண்டாகும்.

பருந்துநீ பிறகேவீங்கி பார்வையுமதிகமானால்
மருந்திடவிரும்பிடாதே மறுபிறப்பிட்டுமேலுந்
தரந்தரநிதங்கள் வீங்கி தாடியுங்கீழேகட்டி
மருந்திடவேண்டாநீயும்மரணமென்றறிந்து கொள்ளே, 193

கண் இமைவீங்கி அதிகமாக விழித்துப் பார்த்தால் மருந்திட விரும்பவேண்டாம் நகங்களும் வீங்கி தாடையும் , கட்டிவிட்டால் மருந்து தரவேண்டாம் மரணம் நிச்சயம்.

மீண்டுவாய்வழுவழுத்து மேனியும் வெளுக்குமாகில்
தாண்டியபேச்சு தானுந்தவர்ந்திடர கமட்டு
மீண்டியமரணமாகவிரண்டரைக்கடிகையென்ன
கூண்டபின்பிழைப்புகூடி குறைந்திடுமுயிரதென்னே, 194

வாயானது வழுவழுத்து மேனி வெளுக்குமானாலும் பேசமுற்படின் குரலானது இடறிக்கட்டுமானாலும் இரண்டரை நாழிகைக்கு முன்பின்னாக உயிர் பிரிந்து விடும்.

ஏய்ந்ததோர்குணமுள்ளோர்க்கு மிணங்கவேவேர்வைதோன்றி
வாய்ந்ததோர் பெருமூச்சுண்டாய்வாடி நாடியுமேயானால்
தேய்தந்து பிராணனென்று செப்பெலாந் தெளிந்தோரெல்லாம்
காந்தளங்கையாற்காமன் கரும்புவில்புருவக்கண்ணீர். 195

அதிக வியர்வை தோன்றி பெருமூச்சு அடிக்கடி உண்டாகி நாடியும் வாடினது போல் நடக்குமானால் பிராணன் தேய்ந்து மரணம் சம்பவிக்கும் என்று அறியலாம்.

கன்னியேநாவுமெத்தகறுப்பதாய்நாக்கு மூக்குந்
தன்னிடகுணமுமாறிதவ்வியகுணமுமிஞ்சி
என்னவேக்ஷணமிதானாலிதற்குநீரின்மகுறைந்து
உன்னியேமருந்து செய்யாயொழிந்து மரணமாமே. 196

நாக்கு மிகவும் கறுத்து, நாக்கு, மூக்கு அவற்றின் குணங்கள் மாறி, ருசி, வாசனையறியாமல் இருந்து இக்குணங்களால் இமை மூடிக்கிடந்தால் மருந்து செய்யவேண்டியதில்லை மரணம் நிச்சயமே.

வுண்டவூண் செரியாதாகிலூண்மிகச் செல்லாதாகிற்
கொண்ட தோர்வாய்வு மெற்றிக்குடலதுவலிப்புண்டாகிற்
பண்டுசொல்மருந்து செய்து பார்க்கவும் வேண்டாம் வேண்டாம்
வண்டுசேர்குழலினாளே மரணமென்றறிந்து சாற்றே, 197

வண்டமரும் பூக்களை அணிந்த கூந்தலை உடைய பெண்ணே! உண்ட உணவு செரிக்காமலிருந்தாலும் அதனால் பசியில்லாமலிருந்து வாய்வு அதிகமாகி குடலில் வலிப்புண்டானால் மருந்து செய்யவேண்டாம். மரணம் நிச்சயம்.

சாலவேசலத்தினோடேதான் வீழ்ந்துவிடுமேயாகில்
ஏலவார்குழலினாளேயேழுநாளையிலே கொல்லுங்
காலமேகதிரோன்றன்னிற்கருதியதிங்கள் தானு
மாலையிலங்கனென் றுமாறிடில்மரணந்தானே 198

அதிசாரமாகி அதனுடனே விழுந்து கிடந்தால் ஏழுநாட்களுக்குள் மரணமாகும். காலையில் கதிரவன் ஒளியினால் திங்கள் ஒளி இழந்து மாலையில் தன் ஒளியைக் காட்டுவதுபோல் மரணம் தோன்றிவிடும்.

சாணொருநாட்குநாள் தான்றன் பிலங்குறையுமானால்
ஆனதோர்வதனந்தானுமறவெளுத்திருக்குமாகில்
ஈனமாய்ப்பெருமூச்சுண்டாயிருக்கும் மேமாதமொன்றில்
ஊனமாமரணமென்று உறுதியாயுரைக்கநன்றே, 199

நான்கு நாட்களுக்குள் உடல்தாதுக்கள் கெட்டுபலம் குறையுமானாலும், உதடு வெளுத்துக்காணப்பட்டாலும், பெருமூச்சு உண்டானாலும் ஒரு மாதத்துக்குள் மரணம் நிச்சயம் ஆகும்.

வற்றியமலசலங்கள் மற்றுளசெவிகளைஞ்சும்
உற்றதோர்க்கண்ணுநாக்கு முறுதிகள் பலதுவுற்று
இத்தனைகுணமுங்கேட்டுவிருந்தனவியல்புகண்டே
வித்தகர் முன்று சென்று மீளுவதருமையாமே, 200

மலம், சிறுநீர் வெளிப்படுதல் குறைந்து நாக்கு, செவி, கண், மூக்கு, மெய் போன்ற ஐப்புலன்களும் உறுதியற்று இருந்தால் அத்தகையவர் மரணத்தில் இருந்து மீள்வது கடினமே .

பொங்குறிபலத்தைத்தானே புண்வெடிசந்துநோகும்
நெங்குறிசிலேத்துமந்தானெய்திய முடிச்சுவீழும்

ஓங்கருசுழிக்கத்தானே யுவன்றிடும் பலபேச்சாக
தங்கருந்துரியந்தானே தப்பிடு மயக்கந்தீர்ந்தே 201

இறப்பதற்கு முன் முதல் அவதியாக புண்ணுண்டாகி வெடித்து கை,கால், மூட்டுகள் நோகும். இரண்டாம் அவஸ்தையாக கபம் அதிகமாகி முடிச்சுவிழும் . மூன்றாம் அவதியாக உழன்று பலபேச்சு பேசுவர். நான்காம் அவதியாக நினைவு தப்பி மயக்கமுண்டாகும்.

தீதுறு மவற்றையைந்திற் றெளிவுறமுகடு பார்க்கும்
ஓதியவவத்தையாறிலு டலதுகுளிர்ந்துகாட்டும்
நீதியாயவத்தை யேழில்நினைவுற்றுபொசிப்புவேண்டும்
ஆதியானுரைத்தவெட்டி லதுகண் பஞ்சடையுமென்றே. 202

ஐந்தாம் அவத்தையாக கண்கள் நிலைகுத்தி முகட்டைப் பார்க்கும் , ஆறாம் அவத்தையில் உடல் குளிர்ந்து விடும், ஏழாம் அவத்தையில் நினைவுற்று ஆள்தேடும், எட்டாம் அவத்தையில் க்ண் பஞ்சடைத்துப் போகும்.

கொண்டிடு மவத்தை கேளாய்கூர் விழிமூக்கு காது
ஒண்டொடி யுச்சியுந்தி யுள்ளங்கால்கைகளெங்கும்
விண்டிடவெளுத்துக்காட்டி மிக்கவுஞ்சேத்மமென்று
அண்டருமறியச்சொன்னோமைந்துநாழிகையிற்சாவே, 203

அதன் பின்பு விழி, மூக்கு காது, உச்சி, வயிறு, உள்ளங்கால், கைகள் எங்கும் வெளுத்து கபம் அதிகமாகி ஐந்து நாழிகையில் மரணம் உண்டாகுமென்று உலகோர் அறியக் கூறினோம்.

தன்னுடையசர்ய்கைதானுந் தனக்கது தேன்றாதாகில்
முன்னுரையறியல் கேட்கல் முயன்றுரைப்பதற்குவந்து
என்னதென்றறிதற்சங்கி யிளைப்புடன்றிகைப்புத்தோன்றிற்
சொன்னம்போல்வதனமெய்யுந் தோன்றிற் கேள்சாவுதானே 204

புரண்டதுமருண்டு மேலே பொருமிநீரடக்குமாகில்
இரண்டரைநாள் கடன்னி லியம்பினமரணமென்றே
சுருண்டகண்குழலினாளே சுரத்தினாலெட்டதாகுந்
திரண்டுநாள்வந்ததென்று சிக்கெனத் தெளிந்துகொள்ளே. 205

புரண்டு மருண்டு மேலே பொருமி,நீர் அடங்கி செல்லாமலிருந்தால் இரண்டாவது நாள் மரணமாகும். சுருண்ட கூந்தலையுடைய பெண்ணே சுரத்தினால் எட்டாம் நாள் மரணம் வந்துவிடும் என்று தெளிவாக தெரிந்துகொள்.

அறிந்திடாய்பித்தம்நின்று வாதசேத்துமமுமங்கே
பிரிந்திடாதோடு மாகிற் பெய்வளைமாதேகேளாய்

நிறைந்ததோராகமத்தி னேர்படவெயர்ந்தேயோடில்
அருந்திடாய்கூடிகை தொண்ணூற் றளவினின் மரணமென்றே 206

வளையல் அணிந்த கைகள் உடையபெண்ணே! பித்தம் வாதம், கபம் ஆகியன பிரிந்திடாமல் ஒடுமானால் வாகட நூல்களின் படி தொண்ணூறு நாழிகை அளவில் மரணமாகும்.

(வேறு)

சேருமீளுங்கண்டுங்குஞ் சேரவுதைக்குங்கால்கைக்
ளூளுமுழன்றே நெஞ்சுழலு முள்ளேசேத்மங்கோதண்டம்
நீருமிகுந்தேகண்சிவக்கு நேராயிருக்கவொட்டாது
பாருங்கிரியைக் குணங்கண்டாற்பரமனடக்கமாட்டானே, 207

கண்களைத் தூங்கிக் கிடத்தல், கைகால்களை உதைத்தல், உழன்று நெஞ்சு சுழலுதல், கபம் அதிகமாதல், அண்டத்தில் நீர்மிகுந்து காணப்படல். கண்சிவந்து காணப்படல், உடலை நேராக இருக்க விடாதிருத்தல், இத்தகைய கிரிகைக்கான குணங்களைக் கண்டால் உடனே மரணமாகும்.

காலுங்கையும் புறம் வீங்கிக்கண்டன்சோர்ந்துநாவரண்டு
மேலுங்கனத்தேயிளப்பெய்து மிகுந்ததாபமுண்டாகுந்
தோலுந்தசையும் படபடெனத் துய்யநெஞ்சும்குளிர்ந்திட்டால்
மாலும் பிரமன் வந்தாலு மரிக்கும் பிள்ளைபதறித்தாமே, 208

கைகால்கள் புறமாக வீங்கி கழுத்து (தொண்டை) சோர்ந்து , நாவறண்டு மேனியானது இளகி மிகுந்த தாபமுண்டாகி , தோலும் தசையும் படபடவென துடித்து நெஞ்சு குளிர்ந்து விட்டால் பிரம்மன் வந்தாலும் பிழைக்கமாட்டான். பதறியே இறந்துவிடுவான்.

(வேறு)

தீதிலாவுடல்வெளுக்குந் திரவியம்பத்திற்சாவர்
ஓதியவேதஞ்சொன்ன வுரைவிதிப்படியே முன்னோர்
பேதியர் கண்டநீதி பெருமையாயமர்ந்து கொண்டு
மூதுவாகடமீதெல்லா முறையெனவோது நூலே, 209

உடல் வெளுத்துவிட்டால் வேதம் சொன்ன விதிப்படி பத்துநாளில் இறப்பர். முன்னோர் கண்ட நீதியை , முறையாக அமர்ந்து பெருமையுடைய வாகடநூலாக இதைக் கூறுகின்றேன்.

ஓதியவேதன் சொன்னவுரைவிதிப்படியேயாய்ந்து
மூதுவாகடர்க்குமிந்த முனிவருமருளிச்செய்தார்
நீதிசேருலகுள்ளோர்க்கு நிறைசிந்தாமணிவிளங்க
ஆதிநான்முகனுமாலு மடிமுடியளவுநின்றே, 210

வேதம் சொன்ன உரைப்படி ஆராய்ந்து முனிவர்கள் இவ்வாகடநூலை அருளிச் செய்துள்ளனர். இவ்வுலகிலுள்ளவர்களுக்கு விளங்கும்படி நான்முகனும் திருமாலும் அடிமுடியாக நின்று கூறியுள்ளனர்.

உ

சிவமயம்

மகா மகத்துவம் பொருந்திய

திருமூல நாயனார்

நாடி கூறுகிறார்

ஒரு குழந்தை கருவில் உருவாகும்பொழுதே அதன் ஆயுள் ஆரோக்கியம், அதிர்ஷ்டம் யாவுமே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன என்று திருமூலர் கூறுகிறார்.

கருவிலேயே நோயும் உருவாகிவிடுகிறது என்பதைக் கண்டறிந்தவன் தமிழனே என்பது அறிவியல் உலகம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை. ஆய்வு மேற் கொள்ள வேண்டிய பொருள்.

மூல நாடி - 17000 - தசநாடி

உற்ற விபரம் உறுதியாம் என்நந்தி
பற்றிய மூலம் பகர்ந்திடும் நாடிதான்
எற்றியே எண்ணிடில் எழுபத்து ஈராயிரம்
மற்றதில் பத்து வளமான நாடியே. 1

தச நாடியில் - தச வாயுவும் - திரிநாடியும்
ஆறுசங்கரம் - மூன்று மண்டலம்

வளமான் பத்தில் வழங்குந் தசவாயு
உளமாஞ் இடைபின் சுழியென மூன்றுண்டு
களமான சக்கரம் காட்டியது ஆறுண்டு
தளமான மண்டலந் தான் மூன்றும் பாருமே. 2

நந்தி வசிக்கும் மூலாதாரத்திலிருந்து எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் கிளம்பி உடல் முழுவதும் வியாபித்து நிற்கின்றன. இவற்றில் மிகமுக்கியமானவை பத்து நாடிகளாகும். (இடை, பிங்களை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அஸ்தி, அலம்புடை, சங்கினி, குரு.) இப்பத்து நாடிகளில் தசவாயுக்கள் சேர்ந்து நிற்கும். மேற் கூறிய தசநாடிகளில் மிக முக்கியமானவை இடை, பிங்களை, சுழிமுனை எனப்பட்ட மூன்று நாடிகளாகும். இம்மூன்று நாடிகளின் வழியாகத்தான் ஆறாதாரச் சக்கரங்களும், மூன்றுமண்டலங்களும், பரவி நிற்கின்றன. (ஆறாதாரங்களும் மூன்று மண்டலங்களும் இம்மூன்று நாடிகள் செல்லும் வழியில் இருக்கின்றன.)

பாரும் இடைகலை பின்கலை மாறியே
தாரும் பெருவிரல் காலொடு தானேறி
காரும் கழுத்தில் கபாலம் வரைநின்று
வாரும் இடமாய் வலக்கரம் சாருமே. 3

வலக்கரம் தன்னில் வளமான பின்கலை
நிலைந்த இடக்கரம் நின்றது இடைகலை
துலக்க நடுமையஞ் சுழிமுனை ஓடிடும்
பிலக்க இவை மூன்றால் பிறந்தது தாதுவே. 4

இடக்கலையானது வலது கால் பெருவிரலிலிருந்து மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்துக்கு இடப்பக்கமாய் ஓடி கத்தரிக்கோலைப் போல் மாறி கபாலத்தின் இடது பக்கமாய் நிற்கும். இதே போல் பிங்களை என்ற நாடியானது இடது கால் பெருவிரலிலிருந்து மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்துக்கு வலப்பக்கமாய் ஓடி கத்தரிக்கோலைப் போல் மாறி கபாலத்தின் வலது பக்கமாய் நிற்கும். மேற்கூறிய இடநாடியானது இடது கையிலும், பிங்களை நாடியானது வலது கையிலும் நிற்கும். இவற்றுக்கு மத்தியான சுழிமுனை நாடியானது முதுகெலும்புத் தண்டுவடத்தின் வழியாக மூலாதாரத்திலிருந்து கபால உச்சி வரை பாய்ந்து நிற்கும். இம்மூன்று வகையான நாடிகளில் மூன்று வகையான தாதுகள் உண்டாயின.

மூவகை நாடியின் மூவகை தாது

தாது முறையே தனிஇடை வாதமாம்
போதுறு பின்கலை புகன்றது பித்தமாம்
மாது சுழிமுனை வழங்கிடும் ஐயமாம்
ஓது முறை பார்த்து உணர்ந்தவர் சித்தரே. 5

தாதுக்கள் நிற்கும் முறையைக் கூறுகிறேன் கேள்! இடை நாடியானது வாதம் என்ற தாதுவிற்கும், பிங்களை என்பது பித்தம் என்ற தாதுவிற்கும். சுழிமுனையானது ஐயம் எனப்படும் கபத் தாது விற்கும் பிறப்பிடமாக அமைகிறது. இதை முறையாக அறிந்தவர்கள் சித்தராவர்.

மூவகை வாயு நாடி

உணர்ந்த அபானன் உறும் அந்த வாதத்தில்
புணர்ந்த பிராணன் புகும் அந்தப் பித்தத்தில்
அணைந்த சமானன் அடங்கும் கபத்தொடு
இணைந்திவை மூன்றுக்கு எடுத்தகுறி ஒன்றே. 6

அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும், சமானன் கபத்திலும் அடங்கி நிற்கும். இவை மூன்றும் ஒரே இடத்தில் இணைந்து நின்று தேகத்திலுள்ள தோஷங்களை வெளியாகக் காட்டும்.

மூவகை நாடியும் அறியும் விபரம்

குறியாம் வலக்கரம் குவிந்த பெருவிரல்
மறிவாய் அதன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறிவாய் மேலேறிப் பிலத்தது வாதமாம்
அறிவாய் நடுவிரல் அமர்ந்தது பித்தமே. 7

பித்தத்தின் கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப் பார்க்க ஓர் நரம்பே ஓடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே. 8

அதாவது வியாதியஸ்தரின் வலக்கையிலுள்ள கட்டை விரலின் கீழே உன்னுடைய வலக்கையிலுள்ள ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் போன்றவைகளை வைத்து நன்றாக அழுத்திப்பார். அச்சமயம் ஆள்காட்டி விரலின் கீழே இருப்பது வாதம் என்றும் நடுவிரலின் கீழே இருப்பது பித்தமென்றும், மோதிர விரலின் கீழே இருப்பது சிலேத்துமமென்றும் அறிந்து கொள். இவையாவும் ஒரே நரம்பில் அறிந்து கொள்ளலாம் இம்மூன்று வகையான தோஷமும் எவ்வாறு பாயும் என்றால் ஒரு நாகத்தைப் போல் துள்ளிக் குதிக்கும். இதற்கு (இந்நரமபிற்கு) நாளம் என்று பெயர்.

மூவகை நாடியும் அறியும் மாத்திரை

வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகில்
வழங்கிய பித்தம் தன்னில் அரைவாசி
அழங்கும் கபந்தான் அடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்குப் பிசகொன்றும் இல்லையே. 9

ஒருவருடைய நாடியானது வாதம் ஒரு மாத்திரையளவும் பித்தம் அரை மாத்திரையளவும், சிலேத்துமம் கால் மாத்திரையளவும் குதித்து ஓடினால் தேகத்தில் ஒரு வியாதியும் பரவுவதற்கு வழியில்லை, பிணியுமில்லை.

மூவகை நாடி நடப்பு

இல்லையே வாதம் எழில்நடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புத் தவளைபோல்
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் பாம்பு போல்
அல்லையே கண்டு அறிந்தவர் சித்தரே. 10

வாதமானது கோழியின் நடையைப் போலும், பித்தமானது துள்ளிக்குதிக்கும் தவளையைப்போன்றும், சிலேத்துமமானது பாம்பு போன்றும் நடைபெறும். இவ்வாறு நாடியின் முறையை யார் அறிந்து கொள்கிறாரோ அவரே சித்தர் எனப்படுவர்.

வாதம் பித்தம் சிலேட்டுமம் இருப்பிடம்

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேராஞ் சலத்தினில்
மறிந்திடும் ஐயம் வசிக்கும் விந்துவில்
உறைந்திடும் இம்மூன்றுக்கு உறவாம் தலமிதே. 11

வாதம் எனப்படும் தோஷம் மலத்திலும், பித்தம் எனப்படும் தோஷம் சிறுநீரிலும், சிலேத்துமம் எனப்படும் தோஷம் விந்துவிலும் அடங்கி நிற்கும். இதுவே மூன்று வகையான தோஷங்கள் அடங்கும் இடமாகும்.

வாத பித்த கப வர்ணம்

உறவாங் கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவான பச்சை பகமை கொடும் பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றது நன்ஐயம்
அறைவான வர்ணம் ஆகுந் தலமதே. 12

வாதமானது கறுப்பு நிறமும், சிவப்பு நிறமும் கொண்டதாயிருக்கும். பித்தமானது வெளிர்ப்பச்சையாகவும், கரும்பச்சையாகவுமிருக்கும். சிலேத்துமமானது வெண் நிறங் கொண்டதாயிருக்கும். இவ்வர்ணங்கள் யாவும் அந்தந்த தோஷங்களின் ஸ்தானத்தில் புகுந்து நிற்கும்.

தேசு பஞ்ச பூதம்

தலங்காட்டி இந்தச் சடமான ஐம்பூதம்
நிலங்காட்டி நீர் காட்டி நின்றிடுந் தீ காட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே இருந்தது
குலங்காட்டி வானில் குடியாய் இருந்ததே. 13

இருந்த இவ்வைந்தால் எடுத்து சடமிது
பிரிந்திடும் மாமிசம் பிருதுவின் மயமாகும்
சொரிந்திடும் இரதநீர் சொற்குறி அப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்பமே. 14

வெதுப்பத் துடனே விடுபட்டு நாசியில்
எதுப்புற்று நிற்கும் இதுகாணும் வாயுவாம்
கதுப்பொத்து எல்லாங் கபளித்து இடமிட்டு
மதுப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே. 15

இத்தேகமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதத்தால் வளர்ந்து நின்றது.

இத்தேகத்திலுள்ள மாமிசமானது நிலத்தின் கூறாகவும், இரத்தம், நீர், பால், குறி போன்றவைகள் நீரின் கூறாகவும், தேகத்திலுள்ள உஷ்ணம் தீயின் அம்சமாகவும், நாசிவழியில் ஓடும் மூச்சுக் காற்றானது வாயுவின் கூறாகவும், காது மற்றும் கேட்கும் சக்தி போன்றவைகள் ஆகாசத்தின் கூறாகவும் நிற்கும்.

வளப்பங்கேள் பூமி வாசிக்கும் நாசியில்
தளப்பமாம் வன்னி தான் உறுங் கண்ணினில்
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவினில்
பலப்பல வாயு பரிசிக்கும் எங்குமே. 16

எங்கிய காதில் இருந்துறும் ஆகாசம்
பொங்கிய தைந்துக்குள் பொல்லாதது இம் மூன்றுதான்
தங்கிய வாயு சமத்தன் மகாவாதம்
பங்கிய வன்னியால் பகுந்தது பித்தமே. 17

பகுந்த சலத்தில் பரிசிக்கும் நல்லையம்
வகுந்த இம்மூன்றால் வளர்ந்தது நோயெலாம்
அகுந்தது தானறிந்து அளவிட்ட யோகிகள்
மகிழ்ந்தே யிதில் நின்ற மயக்கம் அறிவரே. 18

நிலம் எனப்படும் பூதமானது நாசியிலும், தீ எனப்படும் பூதம் கண்ணிலும், நீர் எனப்படும் பூதம் நாவிலும், ஆகாசம் எனப்படும் பூதம் காதிலும், வாயு என்ற பூதம் தேகம் முழுவதும் அடங்கி நிற்கும்.

மேற்கூறிய பஞ்ச பூதங்களில் தீ, காற்று, நீர் போன்ற மூன்று வகையான பூதங்கள் மிகவும் பொல்லாததாகும். ஏனென்னில் வாயு என்ற பூதத்தால் வாத

நோய்களும், தீ என்ற பூதத்தால் பித்த நோய்களும், நீர் எனப்படும் பூதத்தால் சிலேத்தும நோய்களும் தோன்றுவதற்கு காரணமாய் அமைகின்றன.

ஆகவே இதனுடைய கலப்பு முறைகளை யோகிகளான சித்தர்கள் ஆராய்ந்து அளவிட்டுள்ளார்கள். இவ்வளவு முறைகளையும் தோஷக் குறிகளையும் முறையாக அறிந்து கொண்டு மனதிலுள்ள மயக்கத்தையும் உடலிலுள்ள தோஷங்களையும் அகற்றிக் கொள்ளுங்கள்.

வாதக் குணம் நோதல்

அறியதிம் மூன்றினது ஆண்மை சொன்னார் நந்தி
எறிய நல்வாதம் எறிக்கும் குணங்கேளு
குறியெனக் கைகால் குளைச்சு விலாச் சந்து
பறியென நொந்துடல் பச்சைப்புண் ஆகுமே. 19

புண்ணாய் வலிக்கும் பொருமுங் குடலோடி
தண்ணா மலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணான ஆசனம் உறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம் பகுத்திடும் வாதமே. 20

மூன்று வகையான தோஷத்தின் குணங்களைப்பற்றி நந்தியானவர் எனக்குச் சொன்னார். அதில் முதன்மையான வாதத்தின் குணங்களைச் சொல்கிறேன் கேள்.

கை, கால், விலாப்புறம் போன்ற இடங்கள் நொந்து குடைச்சலும், புண்ணும் உண்டாகி தேகம் முழுவதும் வலியுண்டாகும். மேலும், குடலும் புண்ணாகி வலிக்கும். மலமானது கழியாமல் வயிற்றினுள் தம்பித்து நிற்கும். ஆசனவாய் உட்புறமாய் சுருங்கி விடும். இது மட்டுமின்றி உடலை குளிரவைத்து சீதத்தை வெளிப்படுத்தும்.

பித்தக் குணம் கைத்தல்

பகுத்திடில் பித்தம் பலபல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
யகுத்திடும் மேனியில் மாட்டி எரிப்பேறும்
மிகுத்து தவனிக்கும் மிக விடாய்க்குமே. 21

பித்தமானது பல விதமான சிந்தனைகள், வாந்தி அதிக வாய்நீர், உடலெரிச்சல், தேகத்தில் அதிக உஷ்ணம், உடல் நடுக்கம் போன்றவைகளை உண்டாக்கும். அதுமட்டுமன்றி வாயில் கசப்புச் சுவையை தோற்றுவிக்கும்.

ஐயக் குணம் காய்தல்

விடங்கிய ஐயம் மேல் இரைப்பு ஏற்றிடுந்
தடங்கி இருமிடும் தனிவிலா இரண்டும் நோம்
அடங்கிச் சுரங்காயும் அளவற்ற கோழைநீர்
இடங்கி உடல்வற்றி இரத்தமும் கக்குமே. 22

கக்கிய மூவர் களிற்பெலன் கேளு
ஒக்கிய வாயு உடல் கூடிடில் பெலன்
தக்கிய வாயு சகலத்துக்கு ஆதாரம்
சிக்கிய நோயைச் சிறக்க விளக்குமே. 23

தேகம் இளைத்தல், இருமல், இரண்டு பக்க விலாப்புறவலி, வறட்டு சுரம், சளி, (கோழை), உடல்வற்றிப் போகுதல். இரத்தங் கக்குதல் போன்றவை யாவும் சிலேத்துமத்தின் குணங்களாகும். இம்மூன்று வகையான தோஷங்களும் ஒன்றுடன் ஒன்று கூடுவதால் ஏற்படும் பலனைக் கூறுகிறேன் கேள். வாயுவானது மற்ற இரு தோஷங்களுடன் கூடினால் சகலவிதமான நோய்களையும் வளர்க்கும். ஏனெனில் வாயுவே சகலத்திற்கும் ஆதாரமாகும்.

தாபச் சுரமும் சீதச் சுரமும்

விளக்கிய வன்னியும் வாயுவும் மேற்கொண்டால்
தளக்கிய தாபச் சுரங்காணும் தோஷமாம்
வளக்கிய அப்புவும் வன்னியும் மேற்கொண்டால்
இளக்கிய சீதச் சுரங்காண் இதன்பேரே. 24

வாயு என்ற பூதத்துடன் வன்னி (தீ) என்ற பூதம் சேர்ந்தால் தாபச்சுரம் உண்டாகும். அப்பு என்ற (நீர்) பூதத்துடன் வன்னி என்ற பூதங் கூடினால் சீதச்சுரம் உண்டாகும்.

தோஷ நிறக்குறி

பேரான தோஷம பிறக்கும் முறை கேளு
வாரான வாதமும் வன்னி கருந்தோஷமாம்
தாரான பித்தமும் தழலூடில் வெண்மையாம்
சேரான ஐயமும் சிவப்பேறும் வாய்விலே. 25

தோஷம் பிறக்கின்ற முறையும் அதன் நிறக்குறிகளும் கூறுகிறேன் கேள்! திரிதோஷங்கள் அளவுக்கு மீறி நடப்பதாலும், ஒன்றுடன் ஒன்று கலப்பதாலும்

வியாதிகள் தோன்றுகின்றன. வாதத்துடன் தீ என்ற பூதம் கலந்தால் கருந்தோஷம் ஏற்படும். இக்கருந்தோஷம் கொண்டவர்களின் நாவானது வெண்மை நிறங் கொள்ளும், சிலேத்துமத்துடன் வாயு என்ற பூதம் கூடினால் நாவானது சிவந்த நிறங் கொள்ளும். (ஆகவே இந்நிறங்களை கொண்டு தோஷத்தின் தன்மையை அறியலாம்)

வாயு அடங்கினால் வளமான தோஷம்போம்
வாயு எழும்பினால் மண்ணும் நீர் ஒன்றாகும்
வாயுவும் நீரால் வழங்கிய வன்னிசாம்
வாயுவும் ஆகாசம் மண்டல ஓசையே. 26

வாயுவானது உடலில் சரியான அளவு கலந்து நின்றால் சகலவிதமான தோஷங்களும் விலகும். வாயு என்ற பூதமானது மண்ணையும், நீரையும் ஒன்றாகக் கலக்கச் செய்யும். வாயுவும் நீரும் கலந்தால் தீ என்ற பூதம் அடங்கி நிற்கும். அனைத்தையும் அடக்கும் வாயுவானது சப்தம் என்ற குணங் கொண்ட ஆகாசத்தில் அடங்கி நிற்கும்.

ஓசையில் ஏழும் ஒளியினில் ஓரைந்தும்
நாசியில் மூன்றும் நாவினில் இரண்டும்
தேசியும் தேசனும் சேர்ந்து பிரிந்திடம்
மாசிலா நந்தி மகிழ்ந்து வுரைத்தாரே. 27

தச நாடிகளில் இயங்கும் நம் உடலில் செவியில் ஏழுவிதமான நாடிகளும் கண்களில் ஐந்து விதமான நாடிகளும் மூக்கில் (நாசியில்) மூன்று விதமான நாடிகளும் (அதாவது இடை பிங்களை-சுழிமுனை என்ற நாடிகளும்) நாலில் இரண்டு விதமான நாடிகளும் புகுந்து நின்றும் பிரிந்தும் செயல் படுகின்றன. இதை நந்தி பகவான் எனக்கு கூறியிருக்கிறார்.

ஓராண்டிலும் ஈராண்டிலும் சாகும் குறி

உரைத்து நாசி உறுதிக் குறிகேள்
விரைத்திடப் பிங்கலை விடாதோடில் மூன்று நாள்
இரைத்தசடம் ஆண்டில் எய்திடும் ஆகாசம்
பரத்தில் இரண்டு நாள் பாயிலிரண்டு ஆண்டெண்ணே. 28

நாசி வழியாக ஓடும் மூச்சின் மகிமையைக் கொண்டு மரணம் ஏற்படும் காலத்தை அறியும் விதத்தைக் கூறுகிறேன் கேள். பிங்களை எனப்படும் சூரிய நாடியானது மூன்றூ நாட்கள் தொடர்ந்து ஓடினால் ஒரு வருடத்தில் மரணம் சம்பவிக்கும். (அதாவது மூன்று நாட்கள் தொடர்ந்து வலது நாசியில் மூச்சு ஓடினால் ஒரு வருடத்தில் மரணமுண்டாகும்). அதே போல் இரண்டு நாள் விடாதோடினால் இரண்டு ஆண்டுகளில் மரணம் சம்பவிக்கும்.

மூவாண்டிலும் ஆறு திங்களிலும் சாகும் குறி

எண்ணி யிருநாள் இயங்கிடில் பின்கலை
தண்ணிய மூவாண்டில் தப்பாது மாரணம்
ஒண்ணியு பயத்தில் ஓட்டிடில் பத்துநாள்
மண்ணில் மதியாறில் மரிப்பான் குறியாதே. 29

ஒரு நாள் முழுவதும் வலது நாசியில் மூச்சு ஓடினால் தப்பாமல் மூன்றாண்டில் மரணம் சம்பவிக்கும். இதே போல் பத்து நாட்கள் தொடர்ந்து மூச்சானது வலது நாசியில் நடந்தால் ஆறு மாதத்தில் மரணம் உண்டாகும்.

நாள் மூன்றிலும், பதினைந்திலும் சாகும் குறி - வேறு

குறிகேளு மூக்கன்றி குலவியவாய் வழியோடில்
மறிகேளு மூன்றா நாள் மரித்திடுவன தப்பாது
தெறிகேளு மும்மலமும் திரண்டுமிகக் குறைந்துவரில்
பரிவாடும் பட்சமதில் பார்உயிர்தான் தப்பாதே. 30

மூக்கின் வழியாக மூச்சோடாமல் வாயின் வழியாக மூச்சோடுமாயின் மூன்று நாட்களில் மரணம் சம்பவிக்கும். மூன்று நாட்களில் மரணம் சம்பவிக்கும். மூன்று விதமான மலங்கள் (அழுக்குகள்) குறைவாக வெளிப்படுமாயின் பதினைந்து நாட்களில் மரணம் சம்பவிக்கும்.

திங்களிலும் உடனேயும் சாகும் குறி

தப்பாது வாய்நீர்தான் தாக்கில்தன் மேல்விழிலே
ஒப்பாகத் தனுமறைய ஒழிந்திடுவன் மதியாறில்
செப்பாகத் தானிருக்க சேர்ந்தநிழல் ஐந்திடினும்
அப்பா கேள் சாவு நிசம் அறிந்து கற்பங் கொண்டிடே. 31

வாய் நீரானது அதிகமாக வழிந்து நிற்காமல் மேலே விழுந்தால் அவ்வியாதியஸ்தன் ஆறு மாதங்களில் மரணமடைவான். மேலும் தன்னுடைய நிழலானது கண்ணுக்கு தெரியாமல் மறைந்தால் ஐந்து நாழிகைக்குள் மரணமடைவான். ஆகவே இதையறிந்து கற்ப மருந்தை உட்கொண்டு உடலை தேற்று

நாளிற் சாகும் மரண தோஷக் குறி

கொண்டிடும் தோஷக் குறிசொன்னார் எந்நந்தி
தண்டும் உதடும் தனிப்பல்லும் நாக் கொன்றாம்
மண்டிடுந் தாதுவள மாய்க் கறுப்பேறில்
ஒண்டிடுமே ஆறாநாள் உறுதியாய்ச் சாவானே. 32

தோஷத்தின் குறிகளை எனது குரு நந்தியானர் எனக்கு தெரிவித்தார் அதை றுகிறேன் கேள். உதடு, பல், நாக்கு, இந்திரியம் போன்றவைகள் கரிய நிறங் கொண்டதாக மாறினால் அன்றிலிருந்து ஆறாவது நாளில் மரணமடைவான்.

மாதத்திற் சாகும் குறி

உறுதியாம் பித்தம் உடம்பு இளைப்பதாம்
பொறுதியாய்த் தூலிக்கில் போவான் மதியொன்றில்
அறுதியாம் ஐயம் அஸ்தி உலர்ந்துமே
உறுதியோர் மதியில் ஒடுங்கிடுஞ் சீவனே. 33

பித்தம் அதிகரித்து உடம்பு இளைத்துப் போய் துரும்பு மாதிரி காணப்பட்டால் ட்டாயம் ஒரு மாதத்தில் இறப்பான். மேலும் கபம் அதிகமாகி அதனால் அஸ்தியான லும்புகள் உலர்ந்து போனால் கட்டாயம் ஒரு மாதத்தில் இறந்து போவான்.

சாகாக் குறியும் சாகும் குறியும்

சீவ களையரய்ச் சேர்ந்திடும் நாடியில்
ஆவக் கரம்வைத்து அழுத்திடின் தமலேறும்
தாவொத்து மேல்நோக்கில் சாகான் ஒரு நாளும்
பாவொத்து கீழ் நோக்கில் பதையாமல் சாவனே. 34

சீவகளைகள் நாடியில் நிலைத்து நிற்பவைகளாகும். அதனால் ஒருவனுட ரத்தில் தோன்றும் நாடியை கை வைத்து அழுத்திப் பார்க்கும்பொழுது நாடியானது மல் நோக்கி எழும்பிக் குதித்தால் ஒரு காலும் இறப்புண்டாகாது. அவ்வாறின்றி ழ்நோக்கி அழுத்தினால் கட்டாயம் இறப்பு நிச்சயம்.

அமிர்தம் உண்டும் சாகுதல்

பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
கதைக் கொண்டு இருந்தாலும் தோற்றியே வுயிர்விடும்
பிதைக் கொண்ட வாத பித்தமும் பெலனாமே. 35

மூன்று வகையான நாடிகள் பக்குவமின்றி பதைப்புற்று ஓடும் பொழுது வாதம் த்தம் எனப்படும். இரண்டுவகையான நாடிகள் அடங்கிப் போயிற்றானால் மிர்தமே உட்கொண்டாலும் உடலில் உயிர் நிலைக்காது. இது தான் வாதமும் த்தமும் அடங்கியதால் ஏற்படும் குணமாகும்.

பிணியரிடம் போகாக்குறி கிட்டாக்குறி மருந்து ஈகுறி

பித்தம் அடங்கினால் பேசாதே போய்விடு
எத்திய ஐயம் எழும்பிடில் கிட்டாதே
எத்திய வாதம் எழும்பில் மருந்து செய்'
எத்தியிம் மூன்றின் இயல்பை அறிந்திடே. 36

பித்தம் அடங்கினால் வயித்தியம் செய்யாதே செய்தாலும் மரணமுண்டாகும். கபம் எழும்பினால் மருந்துகள் உள்ளே இரங்காது. வாதம் எழும்பி ஓடினால் வயித்தியம் பார்க்கலாம். முறையாக மூன்றின் குணத்தையும் அறிந்து செய்.

சாகாக்குறி சாகுங்குறி

அறிந்திடு இம்மூன்றும் அடங்கியே முட்டிலும்
எறிந்துமிக ஓடிலும் எய்தாது சாவுதான்
பறிந்துநல் தாது பற்றற்றுக் கீழ்நோக்கில்
மறிந்தே வுயிர் சென்று மறலி கைப்புக்குமே. 37

மூன்று வகையான நாடிகளும் மெதுவாகவும் சமமாகவும் மிக வேகமாகவும் எழும்பினால் (மேல் நோக்கி முட்டினாலும்) நோயாளி சாக மாட்டான். மூன்று வகையான நாடிகளும் தளர்ந்து (கீழ் நோக்கி அமுந்தினால்) ஓடினால் கட்டாயம் அவன் எமனிடம் சிக்குவான்.

மகா தோஷக் குறி

புக்கி உந்தியிற்கை பொருந்த ஒருவிரல்
எக்கி உயரம் எழும்பில் மகாதோஷம்
அக்கிய உந்திதான் ஆதாரம் வாய்விற்கு
வைக்குந் தலமென வகுத்தனர் தாதுஇதே. 38

நோயாளியின் உந்தியில் ஒரு விரல் வைத்து அமுத்தி பார்க்குங்கால் அது மிக வேகமாக எழும்பி வோடினால் அதற்கு மகா தோஷம் என்று பெயர். ஏனெனில் உந்தியே வாயுவிற்கு ஆதாரமாகும். மேலும் தசநாடிகளின் (இருப்பிடமாகவும் இது இருக்கிறது) இருப்பிடங்களில் ஒரு இடமாக இதை முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

தச நாடிகள் இருப்பிடம்

தாது முறைகேள் தனித்த குதிச் சந்து
ஓதுறு காம்யம் உந்தி நடுமார்பு
காது நெடுமூக்கு கண்டம் கரம் புருவம்
போதுறும் உச்சி புகழ்பத்தும் பார்த்திடே. 39

தச நாடி எங்கு நிற்கிறது என்று கேட்பாயாகில் கூறுகிறேன் கேள். குதம் (மலவாய்), குய்யம் (பாற்குறி) உந்தி (தொப்புழ்), நடுமார்பு, காது, நெடுமூக்கு, கண்டம், கை (கரம்), புருவமையம், தலை உச்சி போன்ற ஸ்தானங்கள் தசநாடிகளின் இருப்பிடங்களாகும்.

சாகாக் குறி சாகுங் குறி

பார்க்கில் தசநாடி பதைப்புண்டாய் நின்றிடில்
ஏர்க்கில் சிலநாள் இருப்பான் இறந்திடான்
காக்கிடும் காம்யம் கழன்று சுழித்தோடில்
ஆர்க்கில் எமனுக்கு அடைவது உண்மையே. 40

தச நாடிகளின் சலனங்கள் இருக்குமானால் (அதாவது அடங்காமல் குதித்தால்) இறப்புண்டாகாது சில நாட்கள் பூமியிலிருப்பான். மேலும் காம்யம் எனப்படும் குய்யத்தில் நாடி நடை கழன்று காணப்பட்டால் நிச்சயமாக அவன் இறந்து போவான்.

உமிர் நீர்க் குறியாற் சாவு

உண்மைகேள் இன்னும் உமிந்திட நோயுள்ளோன்
தண்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடில் சாவில்லை
கண்மையாம் வாயு கழன்றிடில் கிட்டிடும்
வண்மையாய்ப் பார்க்க வகுத்தனர் நந்தியே. 41

வியாதியஸ்தனை எச்சில் உமிழச் செய்து பார்க்கும் பொழுது எச்சிலானது சற்று தூரம் போய் விழுமாயின் மரணம் சம்பவிக்காது. அவ்வாறின்றி வாயுவால் தடைப்பட்டு கழன்று போனால் சாவு உண்டாகும். இம்முறையை எனக்கு குருவான நந்தி வகுத்து கூறினார்.

வாயு நோய் சுரம் திரிதோஷம்

வகுத்த முறைப்பாடு மந்தத்தால் வாயுவாம்
மிகுத்தநல் வாயுவால் விளைந்திடும் நோயெலாம்
பகுத்திவை இரண்டால் பார் அச் சுரமுறும்
முகத்திவை மூன்றால் முத்தோஷங் காணுமே. 42

மேலும் அவர் வகுத்த முறைகளைக் கூறுகிறேன் கேள். உடலில் மந்தம் ஏற்பட்டால் வாயு தொல்லை உண்டாகும். வாயுவால் எல்லா நோய்களும் உண்டாகும். மேலும் வாயுவும் மந்தமும் கூடுவதால் சுரமும், சுரம், வாயு, மந்தம் மூன்றும் கூடுவதால் உடலில் வாத பித்த கபங்களில் தோஷமேற்பட்டு நோய்கள் உண்டாகின்றன.

மந்தம் வருகுதல்

காணுமே மந்தம் கவளிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமாமிசம் மீறில்
காணுமே மந்தம் கலந்தமாப் பண்டத்தால்
காணுமே மந்தம் கடுமேதிப் பாலுக்கே. 43

மந்தமானது அதிகவுணவாலும், மிகுதியாக மாமிசம் உட்கொள்வதாலும், மாவுப்பண்டங்கள் உண்பதாலும் எருமைப் பால் அதிகம் குடிப்பதாலும் உண்டாகிறது.

மேவிய அன்னத்தால் விளங்கியது இச்சடம்
பாவியே கொன்று பழியுறும் அன்னந்தான்
ஆவில் மிதப்பில் ஐயுற்று நோயாகும்
சாவில் இவையெலாங் கண்டு கொள் அன்ன மே. 44

அன்னமான உணவினாலேயே இவ்வுடம்பு வளர்கிறது. அதே அன்னத்தில் தான் இவ்வுடலும் அழிகிறது. அளவுக்கு மிஞ்சி உணவு கொள்வதால் நோயுண்டாகிறது. அதனால் மரணம் சம்பவிக்கிறது. ஆகையால் முதலில் இதை அறிந்து கொள். ஆக அன்னமே அனைத்திற்கும் ஆதி.

அன்னம் பிறந்தது அனைத்து விதையிலும்
மன்னிய வெட்டை மகாசீதம் இரண்டினால்
பன்னி அறிந்திதைப் பார்ப்பார் பெரியோர்கள்
கன்னி மயக்கத்தால் கண்டிடும் மேகமே. 45

அன்னமானது உலகிலுள்ள செடிகளின் விதைகளில் தோன்றுகிறது. அதே போல் மனிதனுடைய பீஜத்திலும் வெட்டை, மகாசீதம் என்ற இரண்டு வகையாக தோஷங்கள் தோன்றுகின்றன. மேலும் பெண் மேல் உள்ள மயக்கத்தால் மேகம் என்ற வியாதி உண்டாகிறது.

மேகம் பிறந்த விதஞ்சொன்னார் எந்நந்தி
ஆகம் இளந்தைப் பருவத்தில் மோகித்துப்
போகம் தினஞ்செய்யில் புகழ் மந்தத்தே கூடில்
வாகப் பசியால் வழங்கும் சையோகமே. 46

மேகம் பிறக்கும் விதம்

சையோகம் செய்யத் தனித்த சுழியோடும்
ஐயா அமிர்தம் அடங்கிக் கனலேறும்
மெய்யாக விந்து விழவிழப் புண்ணாகும்
மையான மேகம் வளரும் கிரந்தியே. 47

மேகம் என்ற நோய் தோன்றுவதற்கு ஆதிகாரணத்தை நந்தி பகவான் எனக்கு சொன்னார். அதை கூறுகிறேன் கேள். சிறு வயதில் இளமைப் பருவத்தில் பெண் மேல் மயல் கொண்டு மோகித்து அனுதினமும் சம்போகம் செய்வதால் வாயுவானது சுழிந்து வோடும் அச்சமயம் தேகத்திலுள்ள குளிர்ச்சி நீங்கி கனலுண்டாகும். மேலும் இக்கனலால் விந்து வெளியேறும் பொழுது புண்ணுண்டாகும். இப்புண்ணே ஆரம்பத்தில் மேகமாகவும் பிறகு கிரந்தியாகவும் வளருகிறது.

சீழ்மேகம் வாயு சூலை பலமேகம் பலநோய்

கிரந்தி இரணம் கிளர்ந்திடும் சீமேகம்
உரைந் திவையிரண்டால் உறுவாய்வு சூலையாம்
பரந்த திவை முன்றால் பலப மேகங்கள்
துரந் திவை தொட்டு சூழ் நோய்கள் உற்றதே. 48

கிரந்தி ரணமானது சில நாட்களுக்குள் கீழ் மேலாக வளரும். சீழ் மேகத்தாலும் கிரந்தியாலும் சூலை வாய்வு உண்டாகிறது. சூலை வாய்வு, சீழ் மேகம், கிரந்தி இவை மூன்றாலும் பல வகையான மேக நோய்கள் உண்டாகின்றன. இம்மேக நோய்களை மையமாக கொண்டு மற்ற நோய்கள் உண்டாகின்றன.

இலங்கனம் இடுதல்

உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாய்வுக்கும்
அற்றே வரும் மட்டும் அன்னத்தைக் காட்டாதே
முற்றக் கனல்ராசா முன்வழியே வரில்
ஒற்றே நிறைந்தோடில் ஒன்றுக்கும் அஞ்சாதே. 49

சுரம் மற்றும் வாயு நோய்கள் உடலில் இருக்கும் வரை அன்னத்தை உட்கொள்ளாதே. அன்னத்தை உட்கொள்வதால் வாய் வழியாக மீண்டும் வெளிப்படும் (வாந்தியாகும்) வாதம், பித்தம், கபம் எனப்படும் மூன்றும் ஒன்றாக நடக்கும்பொழுது பயங்கொள்ளாதே ஒன்றும் ஆகாது.

காய சித்தியாக

அஞ்சி யுகத்தில் அழியாமல் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றெட்டு
தஞ்சம் உறவே தான்தின்ன வல்லோர்க்கு
பஞ்சு நரைபோய்ப் பதிந்தோங்கி வாழ்வாரே. 50

பயந்து மாளாமல் என்றும் சீவித்திருக்க நான் நூற்றுஎட்டு வகையான கற்பங்களை கூறியுள்ளேன். அதன்படி உட்கொண்டு வருவார்களானால் நரை திரைகள் நீங்கப் பெறறு உலகம் உள்ளவரை வாழ்வார்கள்!

வளமான பித்தத்தில் மருவிக் கபங்கூடில்
தளமான வாயுவால் தானே வெதுப்பேறி
களமான சுண்ணத்தில் கட்டியே மூலமாம்
உளமாஞ் சுரத்தில் உறுகின்ற வாயுவே. 51

மலசலக் கட்டு, மேல் மூச்சு, இரணம், உருத்திர வாயு

வாயு வினாலே மலசலங் கட்டிடும்
வாயு வினாலே வாங்கிடும் மேல்மூச்சு
வாயு வினாலே மலரும் இரணங்கள்
வாயு வினாலே வரும் ருத்திரரோகமே. 52

பித்தத்துடன் கபம் இணைந்து கூடுவதாலும் வாயுவால் வெதுப்பேற்றப்படுவதாலும் மூலம் என்ற கட்டிகள் உண்டாகின்றன. மேலும் பலவகையான சுரங்களும் தோன்றி அதனுடன் (அச்சமயத்தில்) வாயு தாக்கப்படுவதால் மலசலங் கட்டி மேல்மூச்சு வாங்கும். இதனால் கடுமையான பலவகை இரணங்கள் உடலில் தோன்றி ருத்திர ரோகத்தை உண்டு பண்ணிவைக்கும்.

பேசிக் கொண்டிருக்கையில் சாகுதல்

ரோகம் கபத்தில் நுழைந்தேறி வாயுதான்
வாகுற்ற நெஞ்சில் வலித்தே மயக்கிடும்
போகுற்ற பித்தத்தை போகாமல் தம்பித்து
பாகுற்றுப் பேசையில் பதையாமல் கொல்லுமே. 53

வாயுவானது கபத்தின் வழியாக புகுந்து நெஞ்சில் தங்க வைத்து வலியுண்டாக்கி மயக்கமடையச் செய்தும் பித்தத்தை மேலேற விடாமல் தம்பிக்கச் செய்தும், பேசிக் கொண்டிருக்கையிலேயே மரணத்தை உண்டாக்கும்.

சுக ஜன்னி வரும் காரணம்

பதமாம் சுகசன்னி பாயும் விதங்கேளு
நிதமாக மூழ்கி நிறையவே சாப்பிட்டு
சூதமாக மந்தத்தில் கூடிடில் வாயுவால்
அதமாம் அனுபோகம் அணைந்திடில் சன்னியே. 54

சுக சன்னி உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள்! எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று உடனே வயிறு நிறைய உணவருந்துவதால் மந்தம் உண்டாகும். இம்மந்தத்தால் வாயு ஏற்படும். இச்சமயத்தில் பெண்ணுடன் கூடினால் சுக ஜன்னி என்ற நோய் சம்பவிக்கும்!

வியர்வை, கண்சிவப்பு, மாதோஷம், காயமழிதல்

சன்னி சுகத்தில் தானேறும் வியர்வைதான்
சன்னி சுகத்தினால் கண்கள் சிவப்பேறும்
வன்னி சுகத்தினால் வழங்கும் மகாதோஷம்
அன்ன சுகத்தினால் அழிந்திடும் காயமே. 55

சுக சன்னி கண்டால் உடனே உடல் முழுவதும் வியர்க்கும். கண்கள் சிவப்பாகும். நாடிகள் அளவுக்கு மீறி எழும்பி மகாதோஷத்தை உண்டாக்கி தேகத்தை அழியச் செய்யும்.

மூலம் வரும் காரணம்

காயத்தில் மூலம் கண்ட வாதங்கேளு
பாயொத்த தீபனம் பரிந்தே அடக்கினும்
மாயை மயக்க மலத்தை அடக்கினும்
ஓயுற்றக் குண்டலிக்கு உள்புகும் வாயுவே. 56

முளை மூலம்

வாயு புகுந்து மலத்தோட பானத்தைத்
தேயுவைக் கூட்டி திரட்டிக் கருக்கிடும்
தோயம் மலம்வரில் சுருக்கி முன்னே நின்று
ஆயு முளைபோல் அபானன் இறுக்குமே. 57

இரத்த மூலம்

இறுக்கும் சிலமூலம் ஏழு மண்டலம்போல
மறுக்க ரிணங்கொண்டு உருகும் சிலமூலம்
உறுக்கிய வாயுவால் உதிரமுந் தான்கூடி
தறுக்கி விழுக்காட்டுந் தான் ரத்தமூலமே. 58

மூலம் உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள். உணவு உட்கொள்ளாமல் பசியை அடக்குவதாலும், மலத்தை அடக்குவதாலும் வாயுவானது குண்டலிக்குள் செல்லும். அப்படிச் சென்ற வாயுவானது உஷ்ணம் ஏற்பட்டு மலவாயை சுருக்கும். அது மட்டுமில்லாமல் மலம் வரும்பொழுது அதை வெளியேற விடாமல் அபானத்தை சுருக்கி முளைபோல் நிற்கச் செய்யும். இதற்கு முளை மூலம் என்று பெயர். சிலசமயம் இம்மூளையே பெரிதாக வளரும். சிலசமயம் இதில் இரணங்கள் தோன்றும். சில சமயம் வாயுவால் உந்தப்பட்டு உதிரமான ரத்தத்தை வெளிப்படுத்தும். இதற்கே இரத்த மூலம் என்று பெயர்.

பசி கெடும், விந்து நாசம், இரைச்சலாம் கழிச்சலாம்

மூலம் எழுந்திடில் முன்னே பசிபோகும்
மூலம் எழுந்திடில் முனைவிந்து நாசமாம்
மூலம் எழுந்திடில் முழங்கும் இரைச்சல்தான்
மூலம் எழுந்திடில் முகியாக் கழிச்சலே. 59

மூலம் தோன்றினால் முதலில் பசியகலும், பிறகு விந்து கெட்டு நாசமாகும். அது மட்டுமில்லாமல் வயிற்றில் ஒரு சப்தத்தை உண்டாக்கி கழிச்சலை ஏற்படுத்தும்!

கிராணிக் கழிச்சலில் ஆறுவிதம்

கழிச்சல் கிராணிக் கழியும் விதங்கேளு
அழிச்சிய பித்தம் அனல்வாதம் ஐயமாம்
செழுச்சிய வாயு சேர்ந்திவை மூன்றால்
பழிச்செனப் பேதிக்கும் பார்பெலம் போகுமே. 60

கழிச்சல் கிராணி உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள்! வாதம், பித்தம், கபம் எனப்படும் மூன்று வகையான தோஷங்களுடன் வாயு கூடுவதால் பேதியுண்டாகும். இதனால் உடலில் உள்ள பலங்குன்றும்.

பெலமான மேகத்தில் பிறந்த தொருபேதி
குலமான மூலத்தில் கொடியது ஒருபேதி
சலமான வாயுவால் சங்கித்தது ஒருபேதி
வுலமான ஆறும் வகுத்த முறையாமே. 61

வாதத்துடன் வாயு கூடுவதால் ஒரு வகையும், பித்தத்துடன் வாயு கூடுவதால் ஒரு வகையும், ஐயத்துடன் வாயு கூடுவதால் ஒருவகை பேதியும் உண்டாகின்றன. இவைத் தவிர, மேகத்தால் ஒரு வகையும், மூல வியாதியால் ஒரு வகையும், சலத்துடன் வாயு கூடுவதால் ஒருவகை பேதியும் ஆக ஆறு வகையான பேதிகள் வாயு கூட்டுறவால் உண்டாகின்றன.

பித்த மேக நிறக்குறி

முறையான மேகம் முழங்கும் இருபதும்
துறையானது எல்லாம் சொல்லினார் என்னந்தி
கரையாகும் சீலையில் கண்டில் மஞ்சள்போல்
பறையான பித்தத்தால் படுகின்ற மேகமே. 62

இருபது வகையான மேக வியாதிகளின் குறிகளையும் தோன்றும் விதத்தையும் நந்திபகவான் எனக்கு கூறினார். அதை இங்கு கூறுகிறேன் கேள்! மேகமானது வெளிப்பட்டு சீலையில் விழும்பொழுது மஞ்சள்நிறமாக இருந்தால் அது பித்தத்தால் ஏற்பட்டது என்று அறிதல் வேண்டும்.

வாதமேக, ஐயமேக நிறக்குறி

படுகின்ற சீலைதான் பாங்காம் வெளுப்பாகில்
அடுகின்ற ஐயத்தால் ஆகுங்காண் அம்மேகம்
மடுகும் கபனத்தில் மயில்நிறம் போல்பட்டால்
விடுகின்ற ஐயத்தால் விழுகின்ற மேகமே. 63

மேகம் வெளிப்பட்டு விழுந்த துணியின் நிறம் வெண்மையாக இருந்தால் வாத மேகமென்றும், மேகம் வீழ்ந்த கௌபீனம் மயிலைப்போல் நீலமாக காணப்பட்டால் ஐயமான சிலேத்துமத்தால் ஏற்பட்டதென அறிதல் வேண்டும்.

தமரெரி மேகம் நீர்த்துளி மேகம்

மேகம் இவை' மூன்றில் வெவ்வேறு குணங்கேளு
வாகிய பித்தமும் வாயுவும் கூடிடில்
தாகிய நாமத் தமர லெரிந்திடும்
போகும் நீர்கட்டிப் பொசிந்துளித்தே விழும். 64

இம்மூன்று வகையான மேகங்களில் வாயுவின் கூட்டுறவால் வெவ்வேறு வகையான மேகங்கள் உண்டாகின்றன. அதைப் பற்றி கூறுகிறேன் கேள். பித்தத்துடன் வாயு கூடினால் துவாரத்தில் எரிச்சலுண்டாகும். இதற்கு தமரெரிமேகம் என்று பெயர். சில சமயம் நீர் சிறிது சிறிதாக வெளிப்படும். இதற்கு நீர்த்துளி மேகம் என்று பெயர்.

சிக்கா நீர் மேகம் கல்லெரிப்பு மேகம்

விழுகும் சிலநேரம் விடுபட்டு நீரோடும்
ஒழுகிய வாயுவும் ஒதுங்கினால் நோகாது
வழுகிய மந்தத்தால் வாயுவந்தே புகில்
கழுகி முதிர்ந்திடும் கல்லெரிப்பு ஆடுமே. 65

சில நேரங்களில் வாயு துவாரத்தை விட்டு நீங்கும் சமயம் நீரானது தடையில்லாமலும் வலியில்லாமலும் வெளிப்படும். இதற்கு சிக்கா நீர் மேகம் என்று பெயர். மந்தத்தால் வாயு கூடி கல்லெரிப்பு உண்டாகும். மேகத்திற்கு கல்லெரி மேகம் என்று பெயர்.

மேகமிடும் மேனி கருகும் தாது நாட்டமாம்

ஆகிய வாதமும் வாயுவும் கூடிடில்
தாகிய வெள்ளை தடையற்று மெத்தவாய்
போகிய மேனி பொருமிக் கறுப்பேறும்
வாகிய தாது வழங்காது நஷ்டமே. 66

வாதத்துடன் வாயு கூடி மேக வியாதி உண்டானால் தடையில்லாமல் வெள்ளைப்படும். மேலும் உடல் கருத்த நிறங் கொள்ளும். அதுமட்டுமில்லாமல் வீரயம் நஷ்டமாகும். இது ஒரு வகை மேகம்!

வெளிக் காணா தெலும்பாய் இருமும் மேகம்

வழங்கிய ஐயமும் வாயுவும் கூடிடில்
பிழங்கிப் பொசியாது பிறவெள்ளை காணாது
தழங்கி இளைத்துத் தானஸ்தி போலாவான்
இழங்கும் புகைந்தே இருமிடும் மேகமே. 67

சிலேத்துமத்துடன் வாயு கூடி மேக வியாதி உண்டானால் பசி எடுக்காது வெள்ளையும் படாது. (வெள்ளை ஒழுக்கும் ஏற்படாது) ஆனால் தேகமானது நாளுக்கு நாள் இளைத்து எலும்பு போல் ஆகி புகைந்த இருமல் உண்டாகும். (இதுவும் ஒரு வகை மேகமாகும்.)

இருமிய பித்தமும் வாதமும் கூடிடில்
மருவச் சலமேகம் வாரிதி போலோடும்
உருவம் வேறாக்கும் உண்டஉடற் காய்ந்திடும்
உறாகவே ஊனோடு உறிஞ்சி இனிக்குமே. 68

பித்தமும் வாதமும் கூடி மேக வியாதி உண்டானால் வெள்ளையானது மழைப் போல் கொட்டும். அதுமட்டுமின்றி உடலைக் காயச் செய்து அடையாளம் தெரியாமல் பண்ணுவிக்கும். மேலும் சதையை மாம்பழய் போல் உறிஞ்சி இளைக்கச் செய்யும்.

மதுமேக குணம்

இனிக்கின்ற வாதத் திடைசேரில் ஐயந்தான்
பனிக்கின்ற கள்ளுப் பதனிபோல் நீரோடும்
கனிக்கின்ற மேனி கரைந்து வெளுப்பேறும்
தனிக்கும் அதுமேகந் தப்பாது ஐயனே. 69

வாதத்துடன் சிலேத்துமம் கூடி மேக வியாதி ஏற்பட்டால் கள்ளுப்பதனிப் போல் நீர் வெளிப்படும். மேலும் உடல் குலைந்து வெளுத்த நிறங் கொள்ளும். இத்தற்கு மதுமேகம் என்று பெயர். (இது உயிரையும் குடிக்கும்.)

இரத்த மேகம்

ஐயமும் பித்தமும் அணைந்திடும் காலத்தில்
நொய்யுறும் இரத்தம் கொப்பளிக்கும் தண்டில்
மையுறும் சுண்ணாட்டு மகத்தாம் பெரும்பாடாம்
வையுறும் மேகம் வரிசை முறை கேளே. 70

சிலேத்துமமும் பித்தமும் கூடி மேக வியாதி கண்டால் குறியில் இரத்தம் வெளிப்படும். இதற்கு இரத்த மேகம் என்று பெயர். மையை கண்ணில் தீட்டும் பெண்களால் ஏற்படும் இம்மேக நோய்கள் அவர்களையும் தாக்குகிறது. அதன் வகை முறையை இனி கேள். (இதுவரை கூறியது ஆண்களுக்கு.) (இனி பெண்களுக்கு ஏற்படும் விதம்.)

முறை கேட்கின் ஒன்பது முயற்சியால் வந்தது
துறை கேட்கில் கர்ப்பத்தில் துவக்கிய மேகங்கேள்
நறைபூத்த கொங்கையாள் நாயகன் மோகத்தால்
மறை போற்றும் கர்ப்பத்தில் வளர்ந்தது மேகமே. 71

முன் கூறிய ஒன்பது வகையான மேகமும் அவர்களிடத்தே தோன்றும். இனி கர்ப்பத்தில் தோன்றும் மேகத்தைக் கேள். பெரிய ஸ்தனத்தைக் கொண்ட பெண்கள் ஆணிடம் ஏற்படும் காம மயக்கத்தால் மறைவிடமான கர்ப்ப மேகம் உண்டாயிற்று.

வளர்ந்தது கர்ப்பத்தில் வகுத்தமுறை அஞ்சு
உளர்ந்திய வுந்தியில் வுற்பத்தியாம் மேகம்
அளுந்திப் படும்வெள்ளை ஆகாச் சுரலேகம்
தளர்ந்திய அஸ்தியைத் தணலாய் வுருக்குமே. 72

தணல் காயும் மேகம் தண்ணீர்ப் பகைமேகம்
உணக்கால் முழுக்கற்றால் உருகும் சிலமேகம்
பிணக்கால் பசி கெட்டால் பெற்றப் பெருமேகம்
வணக்கால் சையோகத்தால் வருங் கடுமேகமே. 73

கர்ப்ப மேகத்தில் மொத்தம் ஐந்து வகைகள் உள்ளன. இதைத் தவிர உந்தியில் ஒருவகை மேகமும், வெள்ளைத் தள்ளும் ஆகாசச் சுரமேகமும், அஸ்தியை தணலாய் உருக்கித் தண்ணீர் போல் வெளிப்படுத்தும் பகை மேகமும், பசியின்மையால் ஒரு வகை மேகமும் சம்போகத்தால் ஒரு வகை மேகமும் உண்டாகின்றன.

கடும்பசி தோன்றிடில் காணும் சிலமேகம்
அடுவுற்ற பாஷாணத்தால் ஆம் சிலமேகம்
அடுவுற்று இவையேழும் அஞ்சும் முன்னொன்பதும்
எடுவுற்று இருபத்தொன்று ஏற்றினார் மேகமே. 74

மேலும் அதிக பசியால் ஒரு வகை மேகமும், பாஷாணத்தால் ஒரு வகை மேகமும் ஆக ஏழு வகையான மேகங்கள் உண்டாகின்றன. முன் கூறிய ஒன்பது வகைமேகமும், கர்ப்பத்தைச் சார்ந்துவரும் ஐந்து வகை மேகமும் மேற்கூறிய ஏழு வகை மேகமும் கூட்டி மொத்தம் இருபத்தொரு வகைகளாக நந்தி பகவான் எனக்கு எடுத்துரைத்தார்.

பித்த குன்மம்

ஏற்றிய குன்மம் எழுந்த விதங்கேளு
தோற்றிய பித்தமும் வாயுவும் தொந்திக்கில்
சேற்றிய அன்னம் செரிக்கில் வலிப்பேறும்
மாற்றிய நீரூறி வாந்தியாம் பாருமே. 75

இனி குன்மம் என்ற வியாதியைப்பற்றிக் கூறுகிறேன் கேள். பித்தமும் வாயுவும் ஒன்று கூடி நின்று உணவு செரிக்கும் பொழுது வலி ஏற்பட்டு வாந்தியாகும். இதற்கு பித்த குன்மம் என்று பெயர்.

வாத குன்மம்

பாருமே வாதமும் வாயுவும் கூடிடில்
ஒருமே கும்பியில் உழன்று மிகநோகும்
கோருமே குத்தும் குடலை முறுக்கிடும்
வாருமே வாதத்தில் வழங்கிய குன்மமே. 76

வாதமும் வாயுவும் ஒன்று கூடி கலப்புற்று நின்று குன்மத்தை உண்டாக்குங்கால் வயிற்றில் அதிக வலி ஏற்படும். குடல் முறுக்கேறும், குத்துவலியுண்டாகும். இதற்கு வாத குன்மம் என்று பெயர்.

ஐய குன்மம்

வழங்கிய ஐயமும் வாயுவும் கூடிடில்
தழங்கிய அன்னத்தைச் சந்திக்க வொட்டாது
பழங்கிய அன்னம் புளிப்புக் கொடுத்தேறி
உழங்கிய முறுக்கி உடலை வலிக்குமே. 77

சிலேத்துமமும் வாயுவும் ஒன்று கூடினால், அன்னத்தை செரிக்க விடாமல் புளிப்பு ஏற்படச் செய்து உடலை முறுக்கி வலியுண்டாக்கும். இதற்கு ஐய (சிலேத்தும) குன்மம் என்று பெயர்.

மேக குன்ம நோய்

வலிக்கிய மேகமும் வாயுவும் கூடிடில்
பலிக்கிய மலசலம் பதையாமல் கட்டிடும்
இலிக்கிய விடப்புறம் இயல்பாம் வலப்புறம்
வலிக்கும் முறுக்கும் வருஞ்சூலைக் குன்மமே. 78

மேகத்துடன் வாயு கூடி (மேகம் = ஓர் வகை நோய்) நின்றால் மலசலம் கழிக்க முடியாமல் கட்டி விடும். மேலும் இடது விலாவும், வலது விலாவும் மாறி மாறி வலியுண்டாக்கி உடலை முறுக்கச் செய்யும். இதற்கு மேக குன்மம் என்று பெயர்.

குன்மம் இவை நாலில் கூறினார் எண்விதம்
வண்மையாய் நோய்க்கு மகாநோய்காண் பொல்லாது
கன்மமே செய்து கடத்துக்கு இதுவெய்தும்
நன்மையாம் தர்மஞ்செய் நாட்டோர்க்கும் வாராதே. 79

இந்த நான்கு வகையான குன்மம் நோயில் எட்டு வகையான பிரிவுகள் உள்ளன. நோய்களிலே இவைதான் மிகவும் கொடுமையானவை. இந்நோய் பாவம் செய்தவர்க்கே வரும். தர்மம் செய்புவர்க்கு ஒருக்காலும் வராது.

பித்த சூலை நோய்

நாட்டிய பித்தமாம் சூலை முறைகேளு
மாட்டிய அன்னம் ருசிகெட்டு வாந்தியாம்
ஆட்டிய கைகால் அதன்சந்து பின்தண்டு
நீட்டி வலித்து நிலையாய் எரியுமே. 80

பித்த சூலையின் குணத்தைக் கேள்! அன்னம் ருசியில்லாமல் வாந்தியுண்டாகும். மேலும் கைகால்களிலும் மற்றும் முதுகுத் தண்டு வடத்திலும் வலி ஏற்பட்டு எரிச்சல் உண்டாகும்.

வாத சூலை நோய்

நிலையான வாதத்தில் நின்றிடும் சூலைதான்
குலையான கைகால் குளைச்செல்லாம் புண்போல்
கலையாய் வலித்து கனத்திடும் கீழ்வயிறு
தலையான மேனி தானிளைந்து ஆடுமே. 81

இனி வாத சூலையின் குணத்தைக் கேள்! கை கால்களில் குடைச்சல் ஏற்பட்டு புண் போல் வலிக்கும். அடி வயிறு கனமாகி உடம்பு இளைத்து ஆட்டம் காணச் செய்யும்.

ஐய சூல நோய்

இளைத்திடும் மேனி இருமி வறண்டிடும்
குளைத்திடும் கைகால் குத்தி மிகநோகும்
தளைத்திடும் மார்பில் சளிமிகத் தாக்கிடும்
அளைத்திடும் ஐயத்தால் ஆகாத சூலையே. 82

உடல் இளைத்து இருமல் உண்டாகி வறட்சி ஏற்பட்டு கைகால்களில் குத்தும் வலியும் ஏற்படும். மேலும் மார்பில் சளி கட்டி மூச்சு தடைப்படும். இதுவே சிலேத்தும சூலையாகும்.

வாத பித்த சூலை நோய்

ஆகாத வாதமும் பித்தமும் சூலையாய்
வாகான கைகால் வளமாய்க் கரடேறும்
தாகான மேனி தனில்வெடிப் புண்ணாடும்
போகாமல் நின்று புணர்ச்சியாய்க் கொல்லுமே. 83

வாதமும், பித்தமும் கூடுவதால் ஏற்படும் சூலையை பற்றி கூறுகிறேன் கேள். கை கால்கள் கரடுமுரடாகி, தேகத்தில் வெடித்துப் புண்ணுண்டாகும். இந்நோய் ஏற்பட்டால் உடலை உருக்கி கொன்று விடும்.

ஐய பித்த சூலை நோய்

கொல்லிய ஐயமும் பித்தமும் கூடிடில்
மல்லி யெலும்பில் வளமாய்த் துளைத்துநோம்
அல்லிச் சுரங்காயும் அதிகத் தாபமுமாகும்
எல்லி இருமிடும் இதுகாணும் சூலையே. 84

சிலேத்துமமும் பித்தமும் கூடுவதால் அஸ்தியான எலும்பில் வலி ஏற்படும். மேலும் சுரமுண்டாகி தாபம் அதிசப்பட்டு இருமல் உண்டாகும். இதுவே ஐய பித்த சூலையாகும்.

ஐய வாத சூலை நோய்

காணுமே ஐயத்தில் கனவாத சூலை கேள்
பூணும் கபாலம் புடைத்து வெடித்திடும்
ஆணி முளையாம் அடங்காக் குளிர்சுரம்
பேணி எலும்பெலாம் பெலன்கெட்டு நோய்மாறே. 85

ஆறுவகை சூலையில் அறுமூன்று பேர் சொல்வார்
வேறும் இதையல்லால் வெவ்வேறும் ஒன்றில்லை
கூறும் இதன் நாமங் கோடி குணஞ் சொல்வார்
பேறுமறு சூலைப்பேர் சொன்னார் நந்தியே. 86

சிலேத்துமத்தில் வாதம் நுழைவதின் காரணமாக ஏற்படும் சூலையானது மண்டை (கபாலம்) வெடித்துப் போவதைப் போல் வலியுண்டாக்கும். மேலும் அடங்காத குளிர் சுரம் உண்டாக்கி உடலில் பலம் குன்றி எலும்புகள் அசதியாகும். இந்த ஆறு வகையான சூலையில் பதினெட்டுவகையான பிரிவுகள் உள்ளன. இதன் குணங்களும் பெயர்களும் வெவ்வேறு வகைப்படும். அதைப் பற்றி நந்தியானவர் எனக்கு நன்றாக கூறி அருளினார்.

ஆறு வித கர்ப்ப நோயால் பெண் மலடு

நந்தி உரைத்தது நலமான கர்ப்பத்தில்
அந்திய நோய்தான் அறுவகை கேளுநீ
புந்தியில் வாயுவும் தேயுவும் கூடிடில்
மந்தி மலடாவாள் மரண வரைக்கென்னே. 87

நந்தியானவர் மேலும் கர்ப்ப வியாதியைப் பற்றி கூறினார். அதில் ஆறு வகைகள் உள்ளன. கர்ப்பப் பையில் வாயுவுடன் தேயுவான அக்னி கூடி நின்றால் அவள் உயிருள்ளவரை மலடியாக இருப்பாள்.

மலட்டுப் புழுவால் மலடு

வரையான கர்ப்பத்தில் மலட்டுப் புழுப்புகில்
விரையாம் சுக்கிலத்தை விரைந்து வுண்டிடும்
கரையாமல் அடியாங் காணதைப் போக்கிடில்
துரையானப் பிள்ளை சுகமாய்ச் செனிக்குமே. 88

மேலும் கர்ப்பப் பையில் மலட்டுப் புழு உண்டானால் (புழு இருந்தால்) அது ஆணின் சுக்கிலத்தை உட்கொண்டு குழந்தை உண்டாகாதபடி செய்யும். ஆகவே அப்புழுக்களை அகற்றினால் பிள்ளை உண்டாகும்.

செனிக்கின்ற பிள்ளைத் திறமாய் பிறக்கையில்
கனிக்கின்ற சீயு நீர் கலந்துள்ளே சிக்கிடில்
பனிக்கின்ற கைகால் பாவியே குத்திடும்
தனிக்கும் பசிபோகும் தான்வயிறும் பாரிப்பே. 89

பெண்களுக்கு குழந்தை பிறக்குஞ் சமயம் சீயும் நீரும் கலந்து உள்ளே சிக்கிக் கொண்டால் கைகால் குத்து வலியுண்டாகி பசியகன்று வயிறு பெரிதாக உப்பலாகும்.

பாரிய வாய்வு பரிந்து குழிப்புகில்
தாரிக் கழிந்து சதநித்தங் கூப்பிடும்
வாரி உடம்பெலாம் வலிக்கும் இடைநோகும்
ஆரியன் சொன்னான் அறிந்தவர் சித்தரே. 90

வாயுவானது கர்ப்பக் குழியில் புகுந்தால் பிள்ளை தங்காமல் வெளிப்படும் மேலும் உடலிலும் இடையிலும் வலியுண்டாகும். இதை சிவபெருமான் கூறினார் அவர் கூறியபடி அறிந்தவர் எவரோ அவர்களே சித்தராவார்.

சித்தான கர்ப்பத்தில் சேர்ந்திடும் இரத்தந்தான்
வத்தாம் வுருண்டு வாயுபோல் ஓடிடும்
உற்ற பசிபோகும் உழன்றே இரைந்திடும்
வற்றாக் கழிச்சலாம் வன்சூதக வாயுவே. 91

மேலும் கர்ப்பக் குழியில் வாயுவுடன இரத்தமும் சேர்ந்து உருண்டு அங்கு மிங்கும் ஓடச் செய்து பசியை அகற்றி கழிச்சலுண்டாக்கும். இதற்கு சூதக வாயு என்று பெயர்.

சூதான மாமிசம் சுழித்திடில் கர்ப்பத்தில்
வாதான மேகத்தால் வழங்கிச் செனிப்பிக்கும்
போதா முடம்பெலாம் புண்போல் மிகநோகும்
நீதா மயக்கமாய் நிர்ச்சீலன் ஆவளே. 92

ஆகின்ற நோய்கள் அறுவிதங் காண் கர்ப்பத்தில்
பாகொன்றி நின்றால் பலியாது கர்ப்பந்தான்
வாகின்ற தைப்போக்கில் மலடி பெறும் பிள்ளை
ஆகின்ற நோய்க்கெலாம் அறைந்த முறை பாரே. 93

மாமிசங்கள் கர்ப்பக் குழியில் தங்கி மேக நோயை ஏற்படச் செய்து உடம்பில் புண் போல் வலியுண்டாக்கி மயக்கமடையச் செய்யும். இதுவும் ஒரு வகை கர்ப்ப நோயாகும். இவ்வாறு ஆறு வகையான கர்ப்ப நோய் தோன்றுவதால் குழந்தை பிறக்காது. ஆகவே இதையறிந்து முறைப்படி போக்கினால் பிள்ளையுண்டாகும்.

கர்ப்பச் சன்னி குன்மம்

அறைந்திடச் சன்னிகள் ஆகாது கர்ப்பத்தில்
இறைந்திடும் சீயின் உட்புகும் வாயுவால்
விறைந்துமிக வியர்க்கும் மெய்யில் மயக்கமாம்
துறைந்திடு பற்கிட்டும் சோம்பிக்கும் பாருமே. 94

இதே போல், கர்ப்பவதிகளுக்கு சன்னிகளும் வரக் கூடாது. சன்னி ஏற்படுவதால் சீயானது வாயுவால் தள்ளப்பட்டு கர்ப்பக் குழியினுள் சென்று தோஷ முண்டாக்கும். இத்தோஷத்தால் தேகத்தில் வியர்வைத் தள்ளும் புத்தியில் தடுமாற்றம் ஏற்படும். மேலும் பற்கள் கிட்டி சோம்பிக்கும். இதனால் கர்ப்பம் கலைந்து போகும்.

பாருமே பெண்தான் பச்சுடன் பாங்காலம்
தாறாம் அனுபோகம் தனிக்காடி வுண்ணுதல்
ஆருக்கு மாப்பண்டம் ஆகாது மாங்கனி
கோருமே கொண்டிடில் கொண்டிடும் சன்னியே. 95

மேலுங்கேள் கருவுற்ற (பச்சுடம்புக் கொண்ட பெண்கள்) காலத்தில் கர்ப்பதோஷமுள்ள பெண்கள், புளிப்பான காடி வகைகளையும், மாவுப் பண்டங்கள், மாங்கனி, போன்றவற்றையும் உட்கொள்ளக் கூடாது. அப்படி மீறி உட்கொண்டால் சன்னிகள் உண்டாகிக் கர்ப்பம் கலைந்து போகலாம்.

கொண்ட மலடிக்குக் கூறிடும் சன்னிதான்
மண்டி இருக்கையில் மாத்தின்பாள் மோருண்பாள்
தண்டி அனைவாள் தனிச்சூதக் காய் தின்பான்
ஒண்டிய பெண்களுக்கு ஓரெட்டுச் சன்னியே. 96

மலடி எனக் கூறப்படும் கர்ப்ப தோஷமுள்ள பெண்கள் குறை நீங்கி கருவுற்ற காலத்தில் உணவின் மேலுள்ள ஆசையால் மாவுப் பண்டங்களையும், மோர் வகைகளையும், புளிப்பான காய்களையும் உட்கொள்வாள். மேலும் சம்போகத்தில் அதிக நாட்டம் உண்டாகும். இதனால் அவர்களுக்கு எட்டு வகையான சன்னி ஏற்பட்டு கர்ப்பம் கலைந்து போகலாம்.

ஓரெட்டுச் சன்னி உழண்டது பெண்ணுக்கும்
வாரெட்டு ஆணுக்கும் மகத்தாம் சுகசன்னி
நேரிட்டுப் பார்க்கில் நிகழ்ந்தது வெவ்வேறு
பாரெட்டு மெய்ச்ச பகுத்த முறைபாரே. 97

பெண்களுக்கு மேற்கூறிய எட்டுவகையான சன்னியாலும். ஆண்களுக்கு சுக சன்னி முதற்கொண்ட பலவகை சன்னியாலும் கர்ப்பம் வாய்க்காமல் போகும். ஆகவே இதை முறைப்படி பகுத்தறிந்து குணப்படுத்துதல் வேண்டும்.

கண்ணில் நோய் வருதல்.

பாரே பொடிக்கடல் பருவெயில் மேற்படல்
வாரேறு கொங்கையாள் மாயை மிகச்செய்யல்
சாரே முழுக்கறல் சுண்ணால் அனல் பார்த்தல்
சீரேறு பாஷாணம் தின்றதால் கண் நோயே. 98

வெய்யில் மேற்படும்படி கடற்கரையில் உலாவுதாலும் அதிகமான போகத்தாலும், எண்ணைத் தேய்த்துக் குளிப்பதை அறவே ஒழித்தலாலும் (எண்ணைத் தேய்த்துக் குளிக்காததாலும்) கண்ணால் உஷ்ணமான பொருளை உற்றுப் பார்ப்பதாலும், சுத்தி செய்யாத பாஷாணங்களை உட்கொள்வதாலும் கண் நோய்கள் உண்டாகின்றன.

கண்நோய் வருகின்ற காரணம் இன்னுங்கேள்
பண்ணான மேகத்தால் பருவெட்டை வாயுவால்
தண்ணாம் மலக்கட்டால் தன் சலக் கட்டினால்
புண்ணாம் இரணத்தில் போடும் காரத்தாலே. 99

காரச் சுறுக்கால் கடுமிரசத் தூமத்தால்
தேரொத்த சாரம் நிறை மூக்கின் வாசத்தால்
பாரொத்த பேதியால் பலப்பல தண்ணீரால்
சீரொத்தக் கண்ணில் சிறக்கும் வியாதியே. 100

மேலும் மேகத்தாலும், வெட்டை வாயுவாலும், மலத்தை அடக்குவதாலும் (மலச்சிக்கலாலும்) சிறு நீரை அடக்குவதாலும், புண்ணில் இடப்படும் காரமருந்தினாலும், பாதரசப் புகையாலும், நவசாரம், எவசாரம் போன்ற மருந்துகளை (அமிலங்களை) முகர்வதாலும், அதிகமான பேதியாலும், பல வகையான தண்ணீரை அருந்துவதாலும், முக்கிய உருப்பான கண்ணில் வியாதிகள் உண்டாகின்றன.

குட்ட நோய் பதினெட்டான காரணம்

வியாதியுண் மூவாறு விளங்கிய குட்டங்கேள்
சுயாதிக் கிரந்தி சுழல் மேகத்தால் ஆறும்
பயாதிய மண்ணுணிப் பல்வண்டினால் எட்டும்
நியாதிப்புழு நாலுமாய் நின்றிந்தக் குஷ்டமே. 101

பதினெட்டு வகையான குஷ்ட நோய்கள் உண்டாவதற்கு மூல காரணத்தைக் கேள்! கிரந்தி என்ற சுழல் மேகத்தால் ஆறு வகையான குஷ்டங்களும், மண்ணில் வாழும் பல வகையான வண்டுக் கடிகளினால் எட்டு வகை குஷ்டமும் வஸ்திரப் புழு எனப்படும் ஒரு வகைப்புழுவால் நாலு வகையான குஷ்டமும் உண்டாகின்றன.

திருமூலர் கருக்கிடை வைத்தியம் 600ல் கூறியவை

தன்வந்திரி பகவான்

நாடி கூறுகிறார்

காப்பு

செக்கர் மதிப் பிறைமௌலித் தவளமேனித்
திகம்பரர் பொன் மாமேருச் சிலையார் செம்பொன்
முக்கணுடைக் கடவுளொரு பாகம் நீங்கா
முதல்வியணி பவளவிதழ் முத்தமூரல்
மைக்கயற்கட் சிறுவனுதை தனத்துத் தீம்பால்
மருவிநுகர் அருவிமத மொழுகி நீண்ட
கைக்கரட மாலியானை முகத்தோனாதி
கற்பகக்கன் றிருசரணங் கருத்துள் வைப்பாம். 1

(இ-ள்) சிவந்த அந்திவானத்தில் தோன்றும் இளம்பிறைச் சந்திரனைத் தரிப்பவரும், வெண்ணிறமான (திருநீறு பூசிய) தேகத்தையுடையவரும், திக்குகளையே வஸ்திரமாகத் தரித்தவரும், பொன்மயமான மேருபர்வதத்தையே வில்லாகக்கொண்டவரும், ஆகிய சிவபெருமானுடைய புதல்வரும், மூன்று கண்களையுடைய பரமசிவனின் இடப்பாகத்தினின்று பிரியாதவளும், பவளம் போன்ற உதடுகளையும், முத்துக்களை யொத்த பல்வரிசைகளையும், கரிய நீலோத்பலம் போன்ற கண்களையும் உடைய பார்வதியின் தனங்களில் உதைத்து இனிய பாலினைப் பருகுபவரும், அருவியைப்போல் மதஜலத்தைச் சொரியும் நீண்ட துதிக்கையையுடைய யானைமுகத்தோனான கற்பக விநாயகரின் இரு பாதங்களையும் நாம் மனதில் எண்ணுவோமாக.

ஆயுர்வேதத்தின் வரலாறு

செய்ய மாதுக் கிறையவன் செப்பிய
துய்ய வாயுள் மறையிற் றுலங்கிய
மெய்யை மாதவன் மேதினி வாழ்வுற
ஐயன் தன்வந் திரிக்கருள் கூறினான். 2

(இ-ள்) பரமசிவன் சொன்ன ஆயுர்வேதத்தின் உண்மைக் கருத்தை மஹாவிஷ்ணு உலகம் உய்யவேண்டித் தன்வந்தரிக்கு உபதேசித்தார்.

சாஸ்திர விஷயங்கள்

ஓதுநாடித் தொகைபு மதிலுறு
வாத பித்தச் சிலேற்பன வன்மையும்

பேத மான வியாதியின் பெயர்களும்
ஆதியான அருந்தவன் ஓதினான். 3

(இ-ள்) நாடிகளின் எண்ணிக்கையும், அதிலிருக்கும் வாத, பித்த, கபம், இவற்றின் வலிமை, வியாதிகளின் பெயர்கள் இவைகளை முனிவன் நன்றாகத் தெரிந்துகொண்டான்.

வியாதிகளை அறியும் விதம்

திருமறை முனிவன் கூறும் வாகடச் செய்கைதன்னில்
வருபல வியாதியான வகையறி குவதே தென்னில்
உருவுறு நாடி யாலு மொண்முக மலநீ ராலும்
தெரிவிழி நாவி னாலுந் தந்தலக் கணத்தி னாலும். 4

(இ-ள்) தன்வந்தரி கூறிய ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறிய வியாதிவகைகளை அறியும் வழியென்னவென்றால், 1. நாடிகள் 2 மலம் 3. மூத்திரம் 4. விழி 5. நாக்கு 6. பற்கள் 7. முகம் இவைகளின் பேதங்களிலிருந்து அறிந்து கொள்ளவும்.

நாடி லக்ஷணங்கள்

உரைத்திடுந் தானமேழில் உறுகுறியுரைக்குங் காலை
வருத்திய நாடிச்செய்கை மங்கையே வகுக்கக் கேளாய் !
பெருத்தெழும் உந்திக்கீழே ஓமெனும் பிரண வத்தே
பருத்தகுண் டலியேமூல மாயெழு நாடிபத்தே. 5

(இ-ள்) முற்கூறிய ஏழுவகை பரீக்ஷைக் கிரமங்களைக் கூறு பிரித்து முதலில் நாடியை எடுத்துக்கொள்வோம். தொப்புளுக்குக் கீழே மூலாதாரத்தில் "ஓம்" எனப்படும் பிரணவ ஸ்வரூபமான குண்டலியிலிருந்து எழும் நாடிகள் பத்தாகும்.

நாடிகளின் பெயர்

பத்தின்பே ரிடையினோடு பிங்கலை சுழுனை பார்க்கில்
அத்திசிங் குவைகாந் தாரி யலம்புடை புருடனோடு
வைத்திடு குகுவும் மற்றை சங்கினி வகுத்த நாடித்
தெத்தினில் எழுபத்தீரா யிரம்நரம் பென்று செப்பே. 6

(இ-ள்) 1. இடை 2. பிங்கலை 3. சுழுமுனை 4. அத்தி 5. சிங்குவை 6. காந்தாரி 7. அலம்புடை 8. புருடன் 9. குஹூ 10. சங்கினி.

இவைகளிலிருந்து பிரியும் நரம்புகள் எழுபத்தீராயிரமாகும்.

தேகத்தில் நரம்புகள் பரவிநிற்கும் விதம்

செப்பிய யெழுபத் தீரா யிரநரம் புடலில் சேர்தல்
எப்படி யெண்ணவேண்டாம் எழுவட விழுதுபோல

மைப்படு விழியின் மானே! வளர்சிர மடியீறாக
ஒப்பரு நாடி நிற்கும் அடைவினை யுணர்ந்து கொள்ளே. 7

(இ-ள்) எவ்வாறு மேற்கூறிய எழுபத்தீராயிரம் நரம்புகள் தேகத்தில் பரவிநிற்கும் என்று கருதவேண்டாம். ஓங்கி வளரும் ஆலமரத்தில் காணப்படும் விழுதுகளைப்போலத் தலை முதல் பாதம் முடிய தேகத்தில் விஸ்தாரமாகப் பரவி நிற்கின்றன என்று தெரிந்து கொள்வாயாக.

நாடிகளின் எண்ணிக்கை

உந்தியே மூலமாக வுரிபோன்று கீழுமேலும்
வந்துறு நாடிதன்னை வகையுடன் வகுக்கக்கேளாய்
அந்தமாஞ் சென்னிமீது ஏழாயிரத் தறுநூறாகும்
பைந்தொடி செவியிரண்டிற் பார்மூவா யிரத்துப்பத்தே. 8

(இ-ள்) உந்தி (அதாவது) தொப்புளிலிருந்து உரியைப்போல மேலேயும் கீழேயும் பரவிநிற்கும் நாடிகளைக் கூறுமிடத்து.

தலையில் 7600 நாடிகளும், 2 காதுகளிலும் 3010 நாடிகளும், உள்ளன.

இதுவுமது

வரிவிழியிரண்டில் நாலா யிரமதா மானே மூக்கில்
அரியமூ வாயிரத்து முந்நூற்று முப்பதாகும்
பொருவிய வலது கன்னம் பொருந்தையா யிரமதாகும்
உருவுறு பிடர்கீழ்த் தோள்மே லுரையாறா யிரத்தெண்ணூறே 9

(இ-ள்) இரு விழிகளிலும் 4000 நாடிகளும், மூக்கில் 3330 நாடிகளும், கன்னப்பிரதேசங்களில் 5000 நாடிகளும், பிடரி, கீழ்த்தோள் முதலான இடங்களில் 6800 நாடிகளும் வியாபிக்கின்றன.

இதுவுமது

கண்டத்தா யிரமதாகும் கைமூவா யிரமதாகும்
தொண்டைக்கீ ழாகத்தானே சுழி தொப்புள் மேலதாக
வொண்டொடி கேளா யொன்பத் தாறாயிரத் தொருபத்தாகும்
அண்டத்துள் முனிவர் கூறும் ஆயுரு வேதமாமே. 10

(இ-ள்) கழுத்தில் 1000 நரம்புகளும், கைகளில் 3000 நாடிகளும், தொண்டைக்குக் கீழே தொப்புளுக்கு மேலாக 9610 நாடிகளும் இருக்கின்றன.

இதுவுமது

குறுக்கின்மேற் பிடரிக்கீழே கூரெண்ணா யிரத்தொண்ணூறா
மறுத்திரு விலாவில் நாடி வளர்நாலா யிரத்து நாற்பன்

உறுப்பிடை யிலிங்கம் யோனி யடிவயி றுற்றநாடித்
திறத்தவேல் விழியாய் ! யேழா யிரத்தெழு நூறாஞ் செப்பே. 11

(இ-ள்) முதுகின்மேல் பிடரிக்குக் கீழே 8800 நாடிகளும், விலாப்பக்கங்களில் 4040 நரம்புகளும், ஆண்குறி, அல்லது பெண்குறி, அடிவயிறு, முதலான இடங்களில் 7700 நரம்புகளும் உள்ளன.

இதுவுமது

பேசிய மூலநாடி பெயரய்யாயிரத் தைந்நூறுங்
காசணி முலையாய் ! சந்திலிரண்டாயிரத் திருநூறு காணும்
வீசிய பாதந்தன்னில் விளம்புமா யிரத்தினோடு
மோசைசே ரெழுநூற் றன்பத் தாறென வோதுநூலே. 12

(இ-ள்) மூல நாடிகள் 5500ம், சந்து (தொடையிடுக்கு)களில் 2200 நாடிகளும், இரு கால்களிலும் 1756 நரம்புகளும் இருக்கின்றன.

குறிப்பு:- மேற்கூறிய செய்யுட்களிலிருந்து நாடிகளைக் கணக்கிட்டால் 72126 வருகிறது. அதிகப்படியாக 126 நரம்புகள் உள்ளன.

நாடி முடிச்சுகளின் இருப்பிடம்

மொய்குழல் மானேநாடி முடிச்சுடன் றலங்கள் கூறி
லெய்திய கோசமுந்தி யிதயமோ டின்னங் கேளாய்
பையர வல்குல் மூலம் பகர்பிடர் முடிச்சோடுச்சி
வைகுறு மெழுபத்தீரா யிரமதாய் வகுக்கலாமே. 13

(இ-ள்) நாடி முடிச்சுகள் 1. கோசம் 2. தொப்புள் 3. இருதயம் 4. ஆண் அல்லது பெண்குறி 5. மூலாதாரம் 6. பிடரி 7. தலையின் உச்சி பாகம் இவைகளில் காணப்படும். ஆக இவை 72000 நரம்புகளாகக் கூறப்படுகின்றது.

தேகத்தில் நாடி பார்க்கும் விதம்.

இப்படி யெழுபத்தீரா யீரநரம் பென்று கண்டு
ஒப்புறு நாடிபார்க்கு மடைவினை யுரைக்கக் கேளாய்
வெப்புறு வாதபித்தச் சிலேத்மன மிக்கமூன்றுந்
தப்பிலா தறிந்து கொள்ளுங் குறிகுணஞ் சாற்றுவோமே. 14

(இ-ள்) இவ்வாறாக 72000 நரம்புகளையும் அறிந்த பின்னர், நாடிகளை அறிந்துகொள்ளும் விதத்திற்கு ஸாதகமாக வாதம், பித்தம், சிலேத்மம் இம்மூன்று தோஷங்களின் குறிகளைச் சொல்லுவோம்.

ஸ்திரீ புருஷர்களுக்கு நாடி பார்க்கும் விதம்.

இயம்பிய புருடருக்கு வலக்கர நாடியெல்லை
வயங்கிளை மின்னினாருக் கிடக்கர மானே கேளாய்

நயம்பெற நெட்டிவாங்கி நலங்குமங் குட்டமூலம்
தயங்கிடு மசைவைத்தள்ளிப் பார்ப்பது நாடிதானே. 15

(இ-ள்) புருஷர்களுக்கு வலக்கையிலுள்ள நாடியையும், ஸ்திரீகளுக்கு இடக்கை நாடியையும் பிடித்துப் பார்க்கவும். கைகளைப் படித்து நெட்டி வாங்கிக் (சொடுக்கி) கட்டை விரலுக்குக்கீழே துடிக்கும் இடத்தையும் நீக்கி விட்டுப் பின்னர் பார்க்கவும்.

நாடிகளையறியும் விதம்

செந்திரு வளையாய் கேளாய் ! (சேர்) வாத பித்த சிலேத்மம்
அந்தமில் விரல்கள் மூன்று மடைவினில் வைத்தபோது
முந்து தர்ச்சனியே வாத மொழிந்த மத் திமையே பித்தம்
பைந்தொடியநாமி சேத்ம மென்றுதான் பகரலாமே. 16

(இ-ள்) வைத்தியர் நோயாளியின் கைகளில் தனது ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் இவைகளை வைத்துப் பார்க்கையில் ஆள்காட்டி விரலில் வாதமும் நடுவிரலில் பித்தநாடியும் மோதிரவிரலில் கப நாடியும் ஓடும்.

வாதநாடி லக்ஷணம்

தந்திரமாக மூன்று தானமு மறிந்து கொண்டால்
முந்திய வாதநாடிக் குணந்தனை மொழியக் கேளாய்
கொந்துறு குயிலே யன்னங் குக்குட மயிலே போல
வுந்திய நாடிகண்டால் வாதமென் றுரைக்கலாமே. 17

(இ-ள்) வாதநாடியின் நடை குயிலைப்போலவும், அன்னம், கோழி, மயில் இவைகளையொத்த நடையைப்போலவும் காணும்

பித்தநாடி கபநாடி லக்ஷணங்கள்.

தாக்கிய பித்தநாடி தான்செய்யுங் குறிகுணங்கேள்
வீக்குவர் முலையா யட்டை யாமைபோல் நடக்கு மென்க
வீக்கமாஞ் சிலேத்மநாடி யூர்ந்திடுந் தவளை பாம்பு
போக்குறு நடையதாகு மெனமுனி புகன் றவாறே. 18

(இ-ள்) பித்தநாடி அட்டை, ஆமை முதலான ஜந்துக்களின் நடையையொத்திருக்கும். கபநாடி தவளை, பாம்பு இவைகளைப்போல் ஊர்ந்து செல்லும்.

வாதம் இரண்டு பித்தம் ஒன்றுமாயுள்ள நாடிகளின் லக்ஷணம்.

வாழ்விழி மானே ! ரண்டு வாதமும் பித்தமொன்றும்
கோளுற நடக்கும் வன்மை கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு
நாளுற நடப்போனாக நடுவினிற் சலியா தோடு
மூளுறப் பித்தம் ரெண்டுஞ் சிலேத்மமொன் றுரைக்கக்கேளே. 19

(இ-ள்) தலையில் சுமையைத் தூக்கிக்கொண்டு நடந்து செல்லும் மனிதனைப்போல் நாடியின் நடை தென்படும்.

பித்தம் 2, கபம் 1 மாக இருக்கும் நாடிக் குறிகளும் சிலேத்மம் 2, வாதம் 1 மாக இருக்கும் நாடிக் குறிகளும்

கடுவிழி மானேபிள்ளைக் கண்வளர் தொட்டில் போல
நடுவிர லசைத்தலாகும் நாடுஞ்சிலேத் துமமிரண்டு
மிடருறு வாதமொன்று மெழும்பிடிற் பிணையில் நாகங்
கடுகிய புணர்ச்சிபோல நடப்பது கண்டுகொள்ளே. 20

(இ-ள்) தூங்கும் குழந்தையின் தொட்டில் ஆடுவதைப்போல நடுவிரலில் நாடி அசைந்து அசைந்து ஆடும்.

கபம் இரு பங்கும் வாதம் ஒரு பங்குமாக நாடி ஓடும்போது, பிணையலில் உள்ள நாகங்களை யொத்திருக்கும்.

வாதம் 2 கபம் 1 ஓடும் நாடிகளின் லக்ஷணங்கள்

கொள்ளுக வாதம் ரண்டு மொன்றுசிலேத் பனமுங்கூடில்
அள்ளிலை நடுவேற்கண்ணா யரணைவால் முறிந்து வீழ்ந்து
துள்ளியே சுழல்தல் போலாஞ் சோர்வுறு பித்தம் ரண்டு
மொள்ளிய வாதமொன்றுங் கூடிலோ வுரைக்கக்கேளே. 21

(இ-ள்) அரணைவால் முறிந்து விழுந்தால் அது எவ்வாறு துள்ளித்துள்ளி கழன்று வருமோ அவ்வாறு நாடியும் சுழன்று சுழன்று துள்ளியோடும்.

பித்தம் 2, வாதம் 1ம் ஓடும் நாடிகளின் குறிகளும் சிலேத்மம் 2, பித்தம் 1ம் ஓடும் நாடிகளின் குறிகளும்

துடியினை யடித்தாபோலத் துடித்திடும் சிலேத்மம் ரண்டுங்
கடுகிய பித்தமொன்றும் நடப்பது காணவேண்டிற்
படவர வல்குல் மானே ! மஞ்ஞைபாம் பென்னவோடு
மடவிலே யறிந்துகொள்ள ஓதிய யாயுள்வேதம். 22

(இ-ள்) அடித்தால் துள்ளிவிழுவதைப் போன்று நாடிகளின் நடைகாணும், சிலேத்மபித்த நாடி இரையெடுத்த பாம்பைப் போன்ற கதியை அடைந்திருக்கும்.

தேகத்தில் வாதபித்த கபதோஷங்களின் இருப்பிடம்

வேதமேயுரைத்த வாதத்தின் வீடு பாயு தொப்புள்
ளோதிய பித்தத்தின் வீடுதாமே சிலேத்மனத்துக்
காதியா மிதயமே வீடாகு மீதென்று தானே
தீதில்லா முன்னோர் பேசும் வாகடச் செய்மைதானே. 23

(இ-ள்) குதப்பிரதேசம், வாதத்தின் ஸ்தானமாகும். பித்தம் தொப்புளிலும், கபம் இருதயத்திலும் இருந்து வருகிறது.

வாத தோஷம் அதிகரித்ததின் லக்ஷணங்கள்.

மேவிய வாதஞ்செய்யுங் குணந்தனை விளம்பக் கேளாய்
தாவிய வயிறுமந்தஞ் சந்துகால் பொருந்து நோவாஞ்
சேவிய தாதுநாசஞ் சேர்த்துநீர்க் கடுத்து வீழும்
ஆதியா னுரைத்த பான்மை ஆயுருவேதமாமே. 24

(இ-ள்) வயிறு மந்தமாகும். மூட்டுகள், கால்கள் முதலான இடங்களில் வலியுண்டாகும். தாது நஷ்டமுண்டாகும். சிறுநீர் கடுத்து இறங்கும்.

பித்த தோஷம் அதிகரித்ததின் குறிகள்.

ஏலவார் குழலாய் ! பித்தஞ் செய்குண மியம்பக் கேளாய்
கோலவேல் விழிசிவந்து குழிந்திருண் டிருக்கு மல்லாற்
சீலநீர் கடுத்து நொந்து சுறுக்கென சிவந்து வீழும்
ஞாலமே கிறுகிறுத்து நாவுலர்ந்திருக்குங் காணே. 25

(இ-ள்) விழிகள் சிவந்து காணும். கண்கள் குழிவிழும். பார்வைக் குறைவுமேற்படும். சிறுநீர் கடுத்துச் சிவந்த நிறத்தடன் வீழும். தலைச் சுற்றல் நாவரட்சி யிவைகளுமேற்படும்.

கபக் குறிகள்.

சேத்துமஞ் செய்குணங்கேள் சில்லென வுடம்பு வேர்க்கும்
மேற்றமாய் மிகநீருறி யினித்துநா வழுவழுக்கும்
நாற்றநீர் மாய்ந்துவீழும் நலம்பெற வெளுக்குமேனி
தோற்றுமிக் குணங்கள் கண்டாற் சிலேத்பனத்தொகுதியாமே. 26

(இ-ள்) உடம்பு வியர்த்துச் சில்லிட்டுவிடும். வாயில் அதிகமாய் உமிழ் நீர் ஊறும். நாக்கில் தித்திப்புச் சுவையும், வழவழப்பும் உண்டாகும். உடம்பு வெளுத்துப்போகும். இவைகள் கபம் அதிகரித்தலால் ஏற்படும் குறிகள்.

வாத பித்தக் குறிகள் (வாதம் 2 + பித்தம் 1)

அந்த வாதங்கள் ரண்டு மடுத்திடும் பித்தமொன்றுந்
தொந்தித்து நடக்குமாகிற் றோன்றிடுங் குணத்தைக் கேளாய்
வந்துநொந் ததுதான்விம்மி வலித்திடும் தாகமோகஞ்
சிந்தனை மிகவுண்டாகும் புசிப்பையுஞ் செரியாதாக்கும்
பைந்தொடி வாதபித்த மென்றுதான் பகரலாமே. 27

(இ-ள்) உடம்பில் வலி, தாகம், மயக்கம், தீராத மனக்கவலை, உணவு செரியாமை இவைகளேற்படும்.

பித்தச் சிலேத்மக் குறிகள் (பித்தம் 2 + கபம் 1)

ஏய்ந்ததோர் பித்தம்ரெண்டுஞ் சிலேத்மமொன் றெழுந்ததாகில்
லாய்ந்ததோர் பசியுமில்லை யடிக்கடி யுதரம் விம்முந்
தோய்ந்ததோர் நயனநீருஞ் சுத்தமா மஞ்சள் போலாம்
பேய்ந்தபேய் போற்பிதற்றும் பித்தச்லேத் மங்களாமே. 28

(இ-ள்) பசி எடுக்காது, அடிக்கடி வயிறு உப்பும், கண்கள் மஞ்சள் நிறமாகும். சிறு நீரும் மஞ்சள் நிறத்துடன் இறங்கும். பிதற்றலேற்படும் இவைகள் பித்தகபக் குறிகள்.

கபவாதக் குறிகுணங்கள் (சிலேத்மம் 2 + வாதம் 1)

சேப்பிய சேத்மம் ரண்டும் வாதமு மொன்று சேரில்
வெப்புறு கபமேலிட்டு இனிப்பையே மிகவும் வேண்டும்
தப்பிலாப் பசியுமுண்டாந் தபனமே பற்றிநிற்கும்
இப்படிக் குணங்கள் கண்டால் சிலேத்தும வாதமென்னே. 29

(இ-ள்) நோயாளி இனிப்பை யதிகம் விரும்புவான். பசி அதிகமாயிருக்கும். உடலில் காங்கையேற்படும். இவை கபவாதக் குறிகளாகும்.

பித்தவாதக் குறிகள் (பித்தம் 2 + வாதம் 1)

எண்ணிய வாதமொன்றும் பித்தமிரண் டெழுந்துதாகில்
புண்ணென வுடம்புநோவாம் புகையெழ யெரியும் நெஞ்சு
திண்ணமாய் நாவரண்டு சிறுத்துநீர்க் கடுத்துவிழும்
அண்ணலார் உரைத்தவுண்மை யாயுரு வேதந்தானே. 30

(இ-ள்) உடம்பில் குடைச்சல் வலியேற்படும். புகைச்சல் உண்டாவது போல் நெஞ்செரிச்சலுண்டாகும். நாவறட்சியுடன் மூத்திரமும் கடுத்து இறங்கும். இவை பித்தவாதக் குறிகளாகும்.

கபபித்தக் குறிகள் (கபம் 2 + பித்தம் 1)

ஓங்கிய சேத்மம் ரண்டும் பித்தமொன் றெழுந்துதானா
லோங்கிய சன்னிபுண்டா முச்சிநோஞ் செவியுங்கேளாப்
பாங்குட நாவினித்துப் பத்தியஞ் செரியாதாகும்
பூங்கொடி யணையாய் ! பித்தச் சிலேத்மனம் புகலுங்காலே. 31

(இ-ள்) சன்னி உண்டாகும் (உடல் குளிர்ச்சியுண்டாகும்) தலையுச்சியில் வலியேற்படும். காது கேளாது. நாக்கில் தித்திப்புச் சுவை இருக்கும். ஆகாரம் சீரணியாது. இவை கபபித்தக் குறிகளாகும்.

வாத கபக் குறிகள் (வாதம் 2 + கபம் 1)

மானனாய் வாதம் ரண்டுஞ் சிலேத்ம மொன் றெழுந்த தாகி
லானதோர் சரீரம் நோவாம் அங்கைகால் திமிர்த்துக் காட்டு

மூனமா முதரத்துள்ளே வூதையு மிகுந்து விம்மும்
பானலங் கண்ணாய் ! வாத சிலேத்பனம் பரிந்துபாரே. 32

(இ-ள்) சரீரத்தில் வலியுண்டாகும். கை, கால்கள் இவைகளில் மதமதப்பு ஏற்படும். வயிற்றுவலியுண்டாகிப் பொருமலும் உணடாகும். இவை "வாதகபக் " குறிகள்.

வாத பித்த கபக் குறிகளும், மரண லக்ஷணமும்.

பார்க்கினில் வாதபித்தம் பரிந்தசிலேத் மனங்கள் மூன்றுந்
தோற்றிடு மரணைவால்போற் றுடித்திடு மசைவை நோவாம்
வேற்றடற் பட்டுத்தானே மெய்யெல்லாங் குளிர்ந்ததாகிற்
காற்றொடி வளைக்கை நல்லாய் மரணமாங் குறியிதாமே. 33

(இ-ள்) நாடிகள் அரணைவால் துண்டித்துப் போனால் அது எவ்வாறு துடிக்குமோ அவ்வாறு துடிக்கும். உடலில் கையை வைத்தால் உடல் முழுவதும் குளிர்ந்து கூசும். இவை மரணக்குறிகளாகும்.

மரணக் குறிகள்

மேவிய அகங்கையாலே மிக்கதோர் முகத்தை (நீவும்)
ஆவலாய் மனிதர்தன்பா லன்புகள் பேசி நோக்கும்
பூவையே பெருமூச்செய்தும் போனகந்தேடுமென்னிற்
காவியங் கண்ணினாளே ! மரணமாங் காலந்தானே. 34

(இ-ள்) வாதபித்தகப நாடியோடுகையில் அந்நோயாளி தன் கைகளினால் முகத்தைத் தடவிக்கொண்டு தன் பக்கத்திலுள்ள மனிதர்களுடன் அன்பாகப் பேசுவான். பெருமூச்சு உண்ட ாகும். இவைகளும் மரணக்குறிகளாகும்.

இதுவுமது

எடுபிடி யென்றுவீழு மெழுமுடல் மயங்கிக்காட்டும்
புடையுறு மூக்கி நீரும் பொசித்திடும் வியர்வையுண்டாம்
வடுவிழிசிவப்பதாகும வாங்கிடும் விலாவிரண்டுங்
கடுக்குமிக் குணங்களானால் மரணமாங் காலந்தானே. 35

(இ-ள்) "எடு" , "பிடி" என்று கத்திக்கொண்டு எழும்பிப் பின்னர் படுக்கையில் மடங்கி விழுவான் மூக்கிலிருந்து நீர் பொசியும். வியர்வையரும்பும். விழிகள் சிவப்பாகும். விலாப்பக்கங்களில் கடுப்பு வலியுண்டாகும். இவைகளும் மரணக் குறிகளாகும்.

இதுவுமது

இயம்பிய விலாவிரண்டு பூருபூரென வெடுத்துத்
தயங்கிய தொண்டைக்குள்ளே சலதியொத் திரையுங் கண்டாய்

வயங்கிழை மின்னே கண்ணில் மாற்று................நீருமோடிற்
றியங்கிட வேண்டாமிங்கன் செய்குண மரணமென்னே. 36

(இ-ள்) இரு விலாப் பக்கங்களிலும் புர்புரென்று அரிப்புண்டாகும். தொண்டைக்குள் கபம் விருத்தியாகி யடைக்கும். கண்கள் பஞ்சடைந்து நீரைப்பொசியும். இவைகளும் மரண லக்ஷணங்களாகும்.

அவஸ்தைக்குறி.

கொண்டிடு மவத்தைக் கேளாய் கூர்விழி மூக்குக்காது
திண்டிற லுந்திமார்பு செய்யத்தான் குளிர்ந்து தாழ்ந்து
மண்டையி லனல்போல் காந்தி மயக்கமுங் கபமுங்காணி
லண்டரு மறியச்சொன்னோ மரணமாந் தகையுமஞ்சே. 37

(இ-ள்) விழிகள், மூக்கு, காதுகள், வயிறு, மார்பு, கால்கள் முதலான இடங்கள் குளிர்ந்து விடும். மண்டையில் சூடேறும். மயக்கம், கபம் இவைகளுமேற்படும். இக்குறிகள் கண்டால் மரணமென்று கூறவும்.

90 நாழிகைக்குள்ளேற்படும் மரண லக்ஷணம்.

உண்மையாய் வாதபித்த நாடிகளுடனே மாய்ந்து
வண்மையாஞ் சிலேத்பனந்தான் வளர்துடியடியே போலாய்த்
திண்மையா யுடல்வெளுத்து மார்பது குளிர்ந்த தென்னி
லண்ணலா ராணைசாவுக் கடிகைத்தொண் ணூறதாமே. 38

(இ-ள்) வாத பித்த நாடிகள் குறைவடைந்து கபம் மேலிட்டு, உடல் வெளுத்து, மார்பு குளிர்ந்துவிட்டால் 90 நாழிகைக்குள் நோயாளி இறப்பது நிச்சயம் என்று அறிந்துகொள்ளவும்.

2 நாட்களுள் ஏற்படும் மரணக் குறிகள்.

மேதினியுள்ளோர்க்கெல்லா மெய்யுட னுரைக்கலுற்றேன்
ஓதியு வுழலைத்தாக முலர்ந்து நாவறண்டு காணுந்
தீதுறுச் சிலேத்மநாடிச் செருமிடு மெழுந்து வீழும்
ஆதியானுரைத்த வுண்மை யடுத்தநா ளிரண்டிற் சாவே. 39

(இ-ள்) உடம்பில் அழற்சி, தாகம், நாவறட்சி, இவைகளும் கபநாடி அதிகமாகிப் பின்னர் தாழும். இக்குறிகள் உண்டானால் 2 நாட்களுள் நோயாளி இறப்பான்.

வைய்யதோர் பித்தம் நீங்கி வாயுவு மிகுந்து காட்டி
லய்யமே விட்டுக்கண்ட மடைத்திடு மிளைப்பு மாகும்
துய்யசெவ் விழியுந்தாழுஞ் சோருநீ ரிடமே சுற்றும்
அய்யனா ருரைத்த வுண்மை கண்பஞ்சா மவத்தையொன்மான். 40

(இ-ள்) பித்தநாடி மிகக்குறைந்து, வாயுவும் கபமும் அதிகரித்துச் சளி

தொண்டையை யடைத்து மூச்சுத்திணரலையுண்டாக்கும். கண் விழிகள் தாமும் சோர்வையடையும். *இவைகள் பஞ்சாமவத்தைக் குறிகளாகும்.

சீவன் சாக்கிரம் முதலான அவஸ்தைகளில் இருக்கும் நிலைமை.

சாக்கிர அவத்தைத்தானே பிணவெடி சார்ந்து நாறு
மேக்குறுஞ் சொப்பனத்தி லெய்திடு முடிச்சுவீழும்
நோக்கருஞ் சுழுத்தியாகி நுவன்றிடும் பலபேச்சாகத்
தாக்கியத் துரியந்தானே தம்பிதம மயங்குஞ் சீவன். 41

(இ-ள்) இச்செய்யுளின் பொருள் விளங்கவில்லை.

முதல் 4 அவஸ்தைகளின் குறிகள்.

சாவுறு முதலவத்தைத் தக்கங்கள் பேசுமிரண்டில்
மேவிய வுடம்பு நாறு மிக்கமூன் றாமவத்தைப்
பாவகத் தெளிவுநீங்கிப் பதறும்நா லாமவத்தை
ஆவலாய் வெற்றிபேசி யரற்றியே சீதமாமே. 42

(இ-ள்) முதல் அவஸ்தையில் தர்க்கங்கள் பேசுவான். 2-ம் அவஸ்தையில் உடம்பு நாற்றமெடுக்கும். 3-ம் அவஸ்தையில் மனதில் தெளிவு இராது. பதட்டமுண்டாகும். 4-ம் அவஸ்தையில் வெற்றி பேசிக்கொண்டு அரற்றிக்கொள்வான்.

5 வது முதல் 8 வது அவஸ்தைகளின் குறிகள்.

சீதமஞ் சாமவத்தைத் தெளிவுற முகடுபார்க்கும்
ஓதுமா றாமவத்தை யுடலது குளிர்ந்து காட்டும்
பேதமே ழாமவத்தைப் பேதித்துப் புசிப்பு வேண்டு
மாதியா னுரைத்த யெட்டிற் கண்பஞ்சா மவத்தை யொன்பான். 43

(இ-ள்) 5வது அவஸ்தையில் முகம் தெளிவாகக் காட்டும்.
6வது அவஸ்தையில் உடல் குளிர்ச்சியாகும்.
7வது அவஸ்தையில் பேதியுடன் ஆகாரத்தில் இச்சையுண்டாகும்.
8வது அவஸ்தையில் கண்கள் பஞ்சடையும்.

தீதிலா வுடல்வெளுக்குஞ் சீதமாஞ் சரீரம்பற்றி
லாதிய யாயுள் வேதத் துரைவிதிப் படியேமுன்னோர்
பேதமாய்ப் புகலும்நீதிப் பெருமையை யறிந்துகொண்டு
ஓதும்வா கடத்தினோர்க்கு முறையிதென் றோதுநூலே. 44

காலமறிதல்.

முன்னோருரைத்தார் மானிடர்க்கு மொழிந்த வயது நூறென்றே
இன்னே மூன்று பங்காக மியம்பு மிளமை சிலேத்மமென

அன்ன நடுவிற் பித்தமென அப்பால் வாத மதுவாகும்
பொன்னே யிந்தக் காலத்தில் மக்கள் ரோகம் பொல்லாதே. 45

(இ-ள்) மனிதர்கள் ஆயுளான 100 வயதில் மூன்றிலொரு பங்கு அதாவது 33 ½ வயது வரை கபத்தின் காலமாகும். நடுப்பங்கு அதாவது 66 2.3 வரை பித்தம் அதிகரித்திருக்கும் காலமாகும். கடைசி மூன்றிலொருபங்கான 66 2.3 முதல் 100 வரை வாதத்தின் காலமென அறிந்து கொள்ளவும்.

தினத்தில் தோஷங்கள் பிரகோபிக்கும் விதம்.

உதயத்தில் வாதம் பத்தா முச்சியில் பித்தம் பத்தாம்
பதியினிற் சாயங்காலம் பத்துமே சிலேத்மமாகும்
விதிபெரு வரோகிக் கேலகை வியாதிகொண்டுடையோர்க் கன்று
மதியுடன் வைத்தியர்க்கு முரைத்தவா கடங்களாமே. 46

(இ-ள்) காலையில் உதயம்முதல் 10 நாழிகைவரை கபம் மேலிட்டிருக்கும். நடுப்பகல் 10 நாழிகைவரை பித்தத்தின் காலமாகும். சாயங்காலம் 10 நாழிகைகள் கபத்தின் காலமாகும். ஆனால் இது ரோகமில்லாத சாதாரண மனிதர்களுக்காகும். வியாதி உள்ளவர்களுக்கன்று.

குறிப்பு:- ஆயுர்வேத சாஸ்திரங்கள் காலையில் கபம் அதிகரிக்கும், சாயங்காலம் வாதம் அதிகரிக்கும் காலமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

தோஷங்களும், சுவைகளும்

வாதமே புளிப்பு வேண்டும் வருபித்தம் கசப்பு வேண்டுந்
தீதில்லாச் சேத்மனந்தான் சேர்ந்திடு மினிப்பை வேண்டு
மோதிய வாதபித்த சிலேற்பனத் தொந்தத் தோர்க்கே
காதலாய் துவர்த்தல் கார்த்த லுவர்ப்பொடு நுகருங்காணே. 47

(இ-ள்) வாததோஷம் மேலிட்டிருந்தால் புளிப்பில் இச்சையுண்டாகும். பித்தம் அதிகரித்தால் கசப்பில் ப்ரீதியேற்படும். கபம் அதிகரித்தால் தித்திப்புச் சுவையில் இஷ்டமதிகமாகும். வாதம், பித்தம், கபம் இவைகள் தொந்தித்திருந்தால் துவர்ப்பு, கார்ப்பு, உப்பு முதலான சுவைகளில் இச்சையுண்டாகும்.

முகக்குறி

வாதரோக மனிதர்கள் மாமுக
மோதிலோ கருப்பாகிடு முண்மையே
வேதநீதி விளம்பிய பித்தத்தோர்க்
கேதுவாய் முகம் மஞ்சளென் றெய்துமே. 48

(இ-ள்) வாதம் அதிகரித்தால் நோயாளியின் முகம் கரு நிறத்தை அடையும். பித்தம் அதிகரித்தால் முகம் மஞ்சளாகும்.

கபம் அதிகரித்தாலுண்டாகும் குறி

எய்து சிலேத்ம மெழுந்தவர் மாமுகம்
மெய்யதாகக் கருகி வெளுத்திடும்
அய்யனா ருரை செய்தவரும் பொருள்
செய்தியான வயித்தியச் சிரேட்டரே. 49

(இ-ள்) கபம் அதிகரித்ததெனில் நோயாளியின் முகம் முதலில் கருநிறமடைந்து பின்னர் வெண்ணிறமாகும். இவற்றைக்கொண்டு தோஷங்களை அறிந்தவர்கள் வைத்யச்ரேஷ்டராவார்கள்.

மலக்குறி.

வாதபித்த மலக்குறிகள்.

மேவும் வாத முடையவர் மெய்மலஞ்
சீவிதாகக் கருகிடுஞ் செம்மியே
பாவையே பித்தத் தோர்மலம் பார்த்திடி
லாவியே யெழு மன்னிற மஞ்சளே. 50

(இ-ள்) வாதம் அதிகரித்தால் மலம் கருநிற மடையும். பித்தம் அதிகரித்தால் மலத்திலிருந்து ஆவியெழும்புவதுடன் நிறமும் மஞ்சள் நிறத்தையடையும்.

கபம் அதிகரித்தால் மலத்தின் குறிகள்.

மன்னு சேத்மனத் தோர் மலம் வீழ்குறி
உன்னல் தீர விழும் வெளுப் போங்கியே
சொன்ன விக்குண மன்றிமுத் தொந்தத்தோர்
யென்னில் மூன்று நிறமல மெய்துமே. 51

(இ-ள்) கபம் மேலிட்டால் மலம் வெண்ணிறமாகும். தொந்த தோஷமுள்ளவர்களுக்கு அந்தந்த தோஷங்களுக்குள்ள நிறங்களுடன் மலம் காணும்.

நீர்க்குறி.

வாத, பித்ததோஷங்கள் அதிகரித்தவர்களின் குறிகள்.

ஓங்கிய வாதத்தோர்க்கு நீர்விழுங் குணமுரைக்கிற்
பூங்கொடி கடுத்துநொந்து சிறுத்துடன் பொருமி வீழும்
பாங்குடன் பித்தத்தோர்க்குப் பொசிய நீர் சிவந்துகாட்டி
யேங்கவே சுறுக்கதாக யெரித்துடன் கடுத்து வீழும். 52

(இ-ள்) வாதம் அதிகரித்தவர்களுக்கு மூத்திரம் கடுப்புடன் கொஞ்சமாக நுரையுடன் வெளிவரும்.

பித்த தோஷம் மேலிட்டவர்களுக்குச் சிறுநீர், சிவந்து எரிச்சலுடன் கடுப்புடன் வெளியாகும்.

கபதோஷம் அதிகரித்த நீரின் குணம்.

வீழுமே சிலேத்மத்தோர்கள் நீர்க்குணம் விளம்பக் கேளாய்
நாளுமே வெளுத்திலாய்ந்து நலம்பெற வீழுங் கண்டாய்
வாள் விழி மானே ! தொந்த ரோகிமா னிடர்க்குத்தானே
தாழுநீர் பலநிறந்தா னென்னவே சாற்றினோமே. 53

(இ-ள்) நீர் வெண்மையாக இறங்கும். வாதம், பித்தம், கபம் இவைகள் தொந்தமாக அதிகரித்தால் சிறுநீர் பலநிறமாகக் காணும்.

விழிக்குறிகள்.

வாதத்தால் விழி கறுத்து வளரிமை தாழ்ந்திருக்கும்
தீதற்ற பித்தத்தார்க்கு செலவிழி மஞ்சணிக்கும்
கோதற்றச் சிலேத்மத்தார்க்குச் கூர்விழி வெளுத்திருக்குந்
தீதுற்ற தொந்தரோகி விழிபல நிறமதென்னே. 54

(இ-ள்) வாதம் அதிகமானால் கண்விழிகள் கறுநிறமாகும். இமைகள் தாழும். பித்தம் அதிகரித்தவர்களுக்கு விழிகள் மஞ்சள் நிறத்தையடையும். கபம் மேலிட்டவர்களுக்கு விழிகள் அதிவெண்மையாயிருக்கும். கபம், பித்தம், வாதம் இவைகள் சேர்ந்திருப்பவர்களுக்கு விழிகள் பற்பல நிறமடையும். அதாவது அந்தந்த தோஷங்களின் நிறங்களும் காணும்.

நாவின் குறி.

ஊதை மிகுந்து வாதநா வுயரம்போலு முன்னிதமாம்
நாதமில்லாப் பித்தத்தோர் நாவுகசந்து மஞ்சணிக்கும்
கோதில் சிலேத்மரோகிக்குக் குணங்கேள் நாவுவெளுப்பாகி
ஓத வரிதாய் வழுவழுத்து நோயதாயிருக்கு மொண்ணுதலே. 55

(இ-ள்) வாயில் அழுக்கு அதிகம் சேர்த்து தடிப்பாகும். இவை வாத நோய்க் குறிகளாகும். பித்தம் அதிகரித்தால் நாக்கு மஞ்சள் நிறமாகிக் கசப்புசுவையுடனிருக்கும். கபம் மேலிட்டால் நாக்கு வெளுப்புநிறமாகி, வழவழப்புள்ளதாக ஆகும்.

தந்தக் குறிகள்.

விளம்பிய வாதரோகி தந்தமே மிகக் கறுக்கும்
பழம்படு பித்தரோகி பல்லுமஞ் சணித்திருக்கும்
முழங்கொள சிலேத்மரோகிக்குப் பல்வெளுப்பாகு முண்மை
துளங்கிடா தொந்தரோகிக் குணமிதிற் றொகுத்துச் சொல்லே. 56

(இ-ள்) வாதரோகம் உள்ளவர்களின் பற்கள் மிகவும் கறுமை நிறமாக இருக்கும். பித்தரோகிக்குப் பற்கள் மஞ்சளாக இருக்கும். கபம் அதிகரித்தால் பற்கள் வெண்ணிறமாகும். தொந்தரோகமுள்ளவர்களுக்கு அந்தந்த தோஷநிறங்களைக் கொண்டிருக்கும்.

வாத சரீர குணம்.

வாத தேகந் தடித்திருக்கும் வாயுவளருங் குளிர்ந்திருக்கும்
போதஞ்சிறக்கும் பசிபொறுக்கும் புசிப்போதெனினு மிகவருத்துஞ்
தாது சிறுக்குமுடல் கடுக்குஞ் சாருஞ் சஞ்சலமில்லையென்று
மோது மெரிப்பு ருசிவேண்டு முபாயஞ்செலுத்து மெனலாமே. 57

*உடல் பருத்திருக்கும். வாயு அடிக்கடிப் பரியும். உடலில் குளிர்ச்சியுண்டாகும். பசி நன்றாக இருக்கும். உடலில் கடுப்புவலியேற்படும். கார்ப்பில் அதிக இச்சையுண்டாகும்.

பித்ததேக லக்ஷணம்.

பித்ததேக மெலிந்திருக்கும் பெருகவெயிலிற் சஞ்சரியா
தொத்த உறக்கங் கனவுபெறு முள்ளே வெதும்புங் காமமிகும்
புத்தி கலங்கி யொருமிக்கும் புளிப்பு விரும்பி சிறு புசிப்பாஞ்
சித்தஞ் சினம் போய் பசிபொறுத்தே தேறாதிவைகண்டறிவீரே. 58

(இ-ள்) பித்ததேகமுள்ளவர் இளைத்திருப்பார்கள். வெயிலில் சஞ்சரிக்கமாட்டார்கள். அடிக்கடி தூங்குகையில் ஸ்வப்னம் காணுவார்கள். உடம்பில் காங்கையுண்டாகும். ஸ்திரீகளிடத்தில் அதிக இச்சையுண்டாகும். அடிக்கடி புத்தி தடுமாறும். புளிப்புச் சுவையில் ஆசையுண்டாகும். கொஞ்சமாக சாப்பிடுவான். அடிக்கடிக் கோபம் உண்டாகும்.

கபப்பிரக்ருதி லக்ஷணம்.

செய்யுஞ் சிலேத்மச் சரீர குணந் திடாரித்திருக்குமனம் பலக்கும்
பொய்யு மெய்யதாயுரைக்கும் போதப் பொசுக்கு மங்கையர்க்கு
மய்யல் வருத்து முடல் வியர்க்கும் வாரம்பொருந்தி யுபசரிக்கும்
கையுங் காலுங் கசிந்திருக்குங் காசங்கக்க லுண்டாமே. 59

(இ-ள்) உடல் திமிர்த்து விடும். மனோதிடம் உண்டு. பொய்யை மெய்போலுரைப்பான். ஸ்திரீகளிடத்தில் ஆசையதிகரிக்கும். உடலில் அடிக்கடி வியர்வையுண்டாகும். வந்தவர்களை உபசரிக்கும் இயல்பைப் பெற்றவன். கை, கால் முதலான இடங்களில் வியர்வையரும்பி நிற்கும். சிறு இருமலும், கோழை வெளிப்படுதலும் ஏற்படும்.

வாதபித்தப் பிரக்ருதி முதலானவர்களின் குணங்கள்.

வாதபித்தத் தேககுணம் வகுக்கி லிரண்டுங் கலந்திருக்கும்
வாதசிலேற்பக் குணமுமதாம் வளரும் பித்தச்சிலேற்பனத்தின்
பேதகுணமுமதுவேயாம் பிறழா தரிந்தத்தித்தகத்தி
லோதும் வியாதி கலந்திருக்கு முபாயமறிந்து செய்வீரே. 60

(இ-ள்) வாத பித்தம், வாத கபம், பித்தச் சிலேத்மம் இவைகளுள்ள பிரக்ருதிகள் அந்தந்தப் பிரகிருதிகளின் குறிகளைப் பெற்றிருப்பார்கள். அது வித்யாஸப்படில் வியாதியுள்ளவர்கள் என்று தெரிந்துகொள்ளவும்.

தேசக் குணம்.

மேருவாதிக் குமரியந்தம் விரியுந் தேசந்திரிபாகஞ்
சாரும் பிரதமம் வாதமதாந் தரிக்குந் துதியம் பித்தமதாம்
பாரிலந்தஞ் சிலேற்பனமாம் பகருந் தேசக்குணமறிந்து
சேரும் வியாதிக் கவுடதங்கள் செய்வானவனே வைத்தியனே. 61

(இ-ள்) மேருமுதல் குமரிவரையுள்ள தேசத்தை மூன்று பாகங்களாக்கி இமாசலம் முதல் மத்யபாகம்வரை வாததேசமாகவும், மத்திய பாகத்தை பித்ததேசமாகவும் கடைசியான தட்சிணபாகம் கபதேசமாகவும் அறிந்துகொள்ளவும். இவைகளுக்குத் தக்கபடி ஔஷதங்களும் நல்கவும்.

நிலங்களும் தோஷங்களும்.

குறிஞ்சிநிலமே வாதமதாங் கூறும்பாலை பித்தமதாஞ்
செறிந்த மருதஞ் சிலேத்மமதாஞ் சிலேத்மவாத முல்லையதாம்
நிறைந்த நெய்தல் வாதபித்தம் நிலங்களதனை மயக்காயி
லுறைந்த வியாதி கலந்திருக்கு முபாயமறிந்து செய்வீரே. 62

(இ-ள்) குறிஞ்சி நிலம் (அதாவது மலைப்பிரதேசங்கள்) வாதத்தை அதிகரிக்கச் செய்யும். பாலை (மணல் பிரதேசங்கள்) நிலம் பித்த தேசமாகும். மருதம் (வயல் பிரதேசங்கள்) கபத்தையதிகரிக்கச் செய்யும் தேசமாகும். முல்லைப் பிரதேசங்கள் (காட்டுப் பிரதேசம்) கபத்தையும் வாதத்தையும் பிரகோபிக்கச் செய்யும். நெய்தல் (கடற்கரை) பிரதேசம் வாதம், பித்தம் இவைகளை அதிகமாக்கும். அந்தந்த பிரதேசங்களுக்குத் தக்கவாறு மருந்துகள் கொடுக்கவும்.

தோஷங்கள் அதிகரிக்கும் மாதங்கள்.

மார்கழி முதல் நான்கு மாதமும் வாதமாகும்
போமரி முதல் நான்கு மாதமும் பித்தமாகும்
சேரரி முதல் நான்கு மாதமும் சிலேத்மமாகும்
பார்மிசை யறிந்து செய்ய ஆயள் நூல் ஓதும்வாரே. 63

(இ-ள்) மார்கழி, தை, மாசி, பங்குனி இந்நான்கு மாதங்களும் வாதம் அதிகரிக்கும் காலமாகும். சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி முதலான மாதங்களில் பித்தம் விருத்தி செய்யும் மாதங்களாகும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மாதங்கள் கபத்தை விருத்தி செய்யும் மாதங்களாகும்.

வியாதிக்குக் காரணங்கள்.

வாதமடாதே மேனிகடாதே வளர்பித்தம்
தீதுகொடாதே சத்தியெடாதே சிலேத்மத்தின்

கோதமடாதே இருமலெடாதே குடர்தன்னிற்
சீதமடாதே சுரமும் விடாதே திறமாமே. 64

மந்தம் வராதே சுரமும் வராதே சுரம்வந்தால்
மந்தமறாதே சுரமுமறாதே மலசீத
முந்தியுறாதே வாயுவுறாதே வுயர்வாயுவுத்
தொந்தமெடாதே விக்கலெடாதே சொலுவாமே. 65

(இ-ள்) வாதப்பிரகோபம் இல்லாமல் உடம்பு வாட்டமடையாது. பித்தம் உடம்பைக் கெடுக்காமல் வாந்தியும் உண்டாகாது. கபப் பிரகோபம் இல்லாமல் இருமல் இல்லை. குடலில் குளிர்ச்சி ஏற்படாமல் சுரம் தீராது. மந்தம் ஏற்படாமல் சுரம் உண்டாகாது. மந்தம் மாறாமல் ஜ்வரமும் மாறாது. வாயு அதிகரித்தால் விக்கலும் அதிகரிக்கும்.

(இதுவுமது)

சீரணமன்றிச் சுரமும் விடாதே திரிதோஷக்
காரணமன்றிச் சந்நிவராதே கபமான
நீரதுவன்றிச் சோகைவராதே நெடுமேகச்
சார்வதுவன்றிச் சூலைவராதே தவறாதே. 66

அபத்யமன்றித் தோஷவிகார மணையாதே
அபத்தியமன்றி யவுஷத யீன மணுகாதே
கபத்தினையன்றிக் காசச்சுவாசங் கலவாதே
கபத்தினையன்றி வியர்வை குளிர்ச்சிகள் காணாதே. 67

(இ-ள்) சீரணம் ஏற்படாமல் சுரம் விடாது. (ஆமம் பக்குவமானால் தான் ஜ்வரம் விடும்) திரிதோஷக் காரணங்களில்லாமல் சந்நி உண்டாகாது. நீர் இல்லாமல் சோகையேற்படாது (இரத்தம் முறிந்து நீராகிச் சோகையை உண்டாக்கும்) மேகரோகம் இல்லாமல் சூலை ரோகம் ஏற்படாது (பிரமேஹம், நீரிழிவு முதலான ரோகங்களிலிருந்து சூலை நோய் (கீல்வாயு) ஏற்படுகிறது என்று புலப்படுகிறது.)

அபத்தியமில்லாமல் தோஷப் பிரகோபங்கள் குறைவடையாது. (தோஷங்களுக்கு ஸமான குணமான வஸ்துக்களால் தோஷம் அதிகரிக்கும். தோஷப்பிரகோபத்திற்கு எதிரிடையான குணமுள்ள வஸ்துக்களின் உபயோகத்தால் தோஷங்கள் குறைவடையும்) அபத்தியமில்லாமல் அவுஷதங்களின் குணம் குறைவடையாது. (அதாவது அபத்தியம் செய்தால் மருந்துகளின் வீர்யம் குறையும்) கபப்பிரகோபமன்றி காசரோகம், சுவாசரோகம் இவைகள் ஏற்படாது. கபமில்லாமல் வியர்வையும் குளிர்ச்சியும் உண்டாகாது.

குறிப்பு:- முற்கூறிய செய்யுட்களிலிருந்து பொருள்கள் ஊகித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாடி பரீக்ஷை முற்றும்.

தசவாயு நிதானம்.

என்புதோ லிறைச்சி மேதை மயிரிவை யைந்து மண்ணாந்
துன்சி லேற் பனநீர் பித்தஞ் சுக்கில மிரத்த நீராம்
வன்பசி யுறக்கஞ் சோம்பல் (சொப்) னங் கோபந் தீயாம்
நன்கிட யிருத்தல் நிற்றல் நடத்தலோ டுதல் காற்றாமே. 68

ஆகிய குரோதங் காம மத மோகம் கோபமைந்தும்
வேகனின் கூறாம் பத்து வாயுவின் விபரம் சொல்வா
மோகவுந் தியிலெழுந்துச் சிரசினை முட்டி முன்னான்
கேகி நால்கன் றோரெட்டு முட்புகல் பிராணனென்னே. 69

(இ-ள்) எலும்பு, தோல், மாம்ஸம், கொழுப்பு, மயிர் இவ்வைந்தும் பிருதிவியின் அம்சங்களாகும். கபம், நீர், பித்தம், சுக்லம், இரத்தம் முதலானவைகள் அப்பின் (தண்ணீர்) அம்சங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. பசி, தூக்கம், சோம்பல், சொப்பனம், கோபம், போகம் முதலான குணங்கள் அக்னியின் அம்சங்களாகும். இருத்தல், நிற்றல், நடத்தல், ஓடுதல், (கிடத்தல்) முதலான செய்கைகள் வாயுவிலிருந்து உண்டாகின்றன. வஞ்சனை, காமம், திமிர் மயக்கம், கோபம் இவைகள் ஆகாசத்தின் தத்வங்களாகும். (அம்சமாகும்)

வாயுவானது உந்தியாகிய தொப்புளிலிருந்து உண்டாகிச் சிரஸில் மூட்டிப் பின்னர் தேகத்தில் சஞ்சரிக்கும். இது பிராணவாயுவாகும்.

அபானவாயு முதலான வாயுக்களின் குணங்கள்

என்னுமுந் தியினில் நின்று மலசல மிறக்கு விக்கு
முன்னிய வபானனன்ன சாரத்தை நாடியூடே
துன்னிடும் வியானன் சோற்றைச் செரிப்பிக்கு முதானன் சொல்லி
லன்னிய வாயுவெல்லாஞ் சமன் செயுஞ் சமானனாமே. 70

(இ-ள்) வயிற்றில் இருந்துகொண்டு மூத்திரம், மலம் இவைகளை வெளித்தள்ளும் இயல்புடையது அபானவாயுவாகும். வியானவாயு ஆகார ரஸத்தை நாடிகளின் மூலம் தேகமெங்கும் வியாபிக்கச்செய்யும். உதானவாயு ஆகாரத்தை சீரணம் செய்யும். சமானவாயு இதர வாயுக்களையெல்லாம் சமநிலையாக்கும்.

நாகன், முதலான வாயுக்களின் குறிகள்.

ஏவிய விக்கல் கக்கலிவை நாகன் றகுவன் கண்ணில்
மேவியே நிமைக்கும் கூர்மன் மிகமுக மலர்ச்சிமூறி
தாவிய நகை கொட்டாவி தருங்கிரு கரன்தானாமே
(பா)வகக் கோபதேவ தத்துவனாகும் பாரே. 71

பார்த்திடி னுச்சிதன்னிற் பதைத்திடிற் றனஞ்செயன்தான்
போர்த்திடும் வாயுவெல்லாம் போகினுமுடல் பொருந்தி

வேர்த்துடல் விரிந்து வீங்கி விம்மியுடல் தன்னைக்
காத்திருந் தடுத்தோர் மூன்றிற் கபாலத்தைப் பிளந்துபோமே. 72

(இ-ள்) நாகன் என்ற வாயு விக்கல், வாந்தி செய்தல் முதலான செயல்களைச் செய்யும். கூர்மன் என்ற வாயு கண்களில் நின்று இமைத்தலைச்செய்யும். சிரிப்பு, கொட்டாவி, இவைகளைக் கிரிகரன் என்ற வாயு உண்டாக்குகிறது. தேவதத்தன் என்று கூறப்படும் வாயு கோபத்தை ஏற்படுத்தும். தனஞ்சயன் என்று சொல்லப்படும் வாயு மண்டையுச்சியில் தங்கிநின்று சாகுங்காலத்தில் தேகத்திலுள்ள வாயுக்கள் சென்றபின்னரும் உடலில் 1.3 சாமம் சூக்ஷ்மமாக இருந்து வியர்வை, வீக்கம் இவைகளை யுண்டாக்கிப் பின்னர் கபாலத்தின் வழியாக வெளியேறும்.

இடை, பிங்கலை முதலான நாடிகளின் லக்ஷணம்.

இடையது வலதுகாலிற் பெருவிர லெழுந்திடத்தி
லுடைதரு நாசிமட்டா முயர்ந்தபிங் கலையிடக்கா
லடுபெரு விரலைப்பற்றி வலநாசி யளவாய் நிற்குந்
தொடுசுழி முனை மூலத்தைத் துடங்கியே சிரஸுமட்டாம். 73

மட்டிடுஞ் சிங்குவை நாவை வளைந்த புசிப்புக்கொள்ளுங்
கட்டிய புருடன் கண்ணிலலம்புழை காதிலாகுந்
தட்டு சங் குனி வினாத்தண் டளவதாகுங் குதந்தான்
விட்டிடு மபானமட்டாய் மேவிடும் வாயுப்பத்தே. 74

(இ-ள்) இடை என்ற நாடியான வலது கால் பெருவிரலில் ஆரம்பித்து இடது நாசியில் முடியும். பிங்கலையென்ற நாடியோவெனில் வலது கால் கட்டைவிரலில் ஆரம்பித்து இடது நாசிப்புழையின் நுனியில் நிற்கும். சுழிமுனை என்ற நாடி மூலாதாரத்திலாரம்பித்து சிரஸ் வரையில் நிற்கும். சிங்குவை நாடி நாக்கிலிருந்துகொண்டு ரஸத்தை அறியவைக்கும். புருடன் என்ற நாடி கண்களில் நிற்கும். அலம்புடை என்ற நாடி காதுகளில் இருக்கும். சங்கினி என்ற நாடி ஸ்திரீ, புருஷர்களின் குறிகளில் நிற்கும். குதம் என்ற நாடி அபானத்தளவிலே நிற்கும்.

குறிப்பு:- இந்நூலில் காந்தாரி நாடியைப்பற்றியும், அஸ்திபிங்கு என்ற நாடியைப்பற்றியும் கூறப்படவில்லை. காந்தாரி இடது கண்ணிலும், அஸ்திபிங்கு என்ற நாடி வலது காதிலும் நிற்கும். "குதம்" என்று இங்கே கூறப்படும் நாடியானது சில கிரந்தங்களில் "குரு" என்று கூறப்பட்டிருக்கிறது.

உ

சிவமயம்

மகா மகத்துவம் பொருந்திய

யூகிமுனிவர்

நாடி கூறுகிறார்

இப்பகுதியில் யூகிமுனிவரின் தத்துவ விதி 99 பாடல்களும் நாடி நிதானம் 37 பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

மனித உடலில் உள்ள 96 தத்துவங்களைப் பற்றியும் யூகிமுனி கூறியுள்ள பாடல்கள் அற்புத மானவை. இவை மருத்துவம் பயிலும் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டியவை.

உடல் தத்துவம் பற்றி அறிந்து கொள்ளாமல் மருத்துவம் பயில முயல்வது எழுத்துக்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் பாடம் படிக்க முயற்சிப்பது போன்றதாகும்.

தத்துவ விதி

சொல்லிய தோர் விபரமெல்லாந் தூய்மை கேளாய்
சூட்சுமமதாம் பஞ்சபூ தத்தின் கூறும்
தெல்லியதோர் தசநாடி சத்த தாது
திரிநாடித் தசவாயு சுரபே தங்கள்
தல்லியதோர் சன்னியொடு குன்மஞ் சூலை
தாக்கான வாதமொடு பித்தஞ் சிலேட்மம்
மெல்லியதோர் மேகம்நீ ரிழிவு குட்டம்
மிக்கான பாண்டோடு காமாலை கேளே. 1

இதுவரை கூறிய விவரங்களைக் கேட்பாயாக. பஞ்ச பூதத்தின் தத்துவம், பத்துநாடிகள், ஏழு தாதுக்கள், வாத, பித்த, கப பேதங்கள், பத்துவாயுக்கள், சுரபேதங்கள், சன்னி, குன்மம்,

சூலை, வாதம, பித்த, கபம், மேகநோய்கள், நீரிழிவு, குட்டம், பாண்டு, காமாலை நோய்கள் குறித்தும்,

கேளுமகோதரங் கிராணி பவுத்ர மூலம்
கெடியான அசீரணங்கள் விகூழி விக்கல்
வேளுமே பலபல வாதி நாமம்
விளங்குகின்ற சாத்தியமு மசாத்தி யந்தான்
பாளுமே பண்டிதரின் குணமும் ரோகி
பக்குவமு தாகவர்க்க மூலி வர்க்கம்
காளுமே கடைச்சரக்கின் குணமுந் தானும்
கஷாயமொடு சூரணங்கள் கற்கந் தானே. 2

கிராணி, பவுத்திரம், மூலம், அசீரணம், விக்கல போன்ற வியாதிகளின் குணங்களைப்பற்றியும், அவற்றின் பெயர், சாத்தியம், அசாத்தியம் குறித்தும், வைத்தியர்களின், குணம், நோயாளி நடந்துகொள்ளவேண்டிய பக்குவமும், மூலிகைகள், கடை சரக்குகள் பற்றிய விவரம், கஷாயம், சூரணம் கற்கம் ஆகியவற்றோடு

கற்கமோடு வடகங்கள் ரசாய னங்கள்
கடினமாம் லேகியங்கள் கிருதந் தானும்
வர்க்கமொடு தைலங்கள் எண்ணெய் நெய்தான்
மாத்திரையும் பற்பங்கள் செந்தூ ரந்தான்
பற்பமாம் புடத்தைலந் திராவ கங்கள்
புகையோடு பொட்டணமும் பூச்சு நசியம்
அற்பமா மஞ்சனங்கள் கெண்டூ ஷங்கள்
ஆகமாம் விரேசனத்தி னட.வு மாமே 3

வடகம், இரசாயனம், லேகியம், கிருதம், தைலம், எண்ணெய், நெய், மாத்திரை, பற்பம், செந்தூரம், புடத்தைலம், திராவகம், புகை, பொட்டணம், பூச்சு, நசியம், அஞ்சனம், கஷாயம், விரேசனம் ஆகியன குறித்தும்.

அடவான வாயுரு வேதந்தன் னைத்தான்
ஐயருமே அம்மைதனக்கு அருளிச் செய்ய
நடவான வம்மையும் நந்திக்குச் சொல்ல
நந்தியுமே சீடர்களுக் கருளிச் செய்யத்
தடவான தன்வந்திரி யசுவனிக்குச் சொல்ல.
சமரசமா மகத்திய முனி தேரையற்குச் சொல்ல
நிடவான ரிஷிதேவர் சொன்ன நூலின்
நேர்ப்பெல்லாம் விபரமதாய் நிகழ்த்தி னேனே 4

ஆயுள் வேதத்தின் வாயிலாக சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி தன் சீடர்களுக்கும், தன்வந்திரி யசுவினிக்கும், அகத்தியர் தேரையருக்கும் அவர்பின் மற்ற ரிஷிகளுக்குக் கூற வழி வழியாய் நூல் வந்தது.

பஞ்சபூதம்

நிகழ்ந்தசீர்ப் பிரிதிவி மப்பு தானும்
நேரான தேயுவொடு வாய்வு மாகும்
அகழ்ந்தவா காயத்தோ டைந்தாம், பூதம்
அரிதான பிரிதிவி மண்ணு மாகும்
தாழ்ந்தவப்பு சலமாகும் நெருப்பாம் தேயு
தாக்கான வாயுவது காற்று மாகும்
இகழ்ந்த வாகாயமது சத்த மாகும்
ஏற்றப்பி ரிதிவிபொன் னிறம தாமே 5

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பதுவே பஞ்ச பூதங்களாகும். இவற்றில் பிரிதிவி மண்ணும், அப்பு நீரையும், தேயு நெருப்பையும், வாயு காற்றையும், ஆகாயம் ஒலியையும் உள்ளடக்கி யிருக்கும். இவற்றின் நிறத்தைக் குறிக்கையில் பிரிதிவி பொன்னிறமாகும்.

பஞ்சபூதத்தின் நிறம்

ஆமேதான் அப்புநிறம் படிக மாகும்
அக்கினியின் நிறந்தானே சிவப்பு மாகும்
காமேதான் வாய்வுநிறங் கருப் பதாகும்
கார்மேகப் புகைநிறமா காயந் தானும்
தேமேதான் வண்ணமும் இப்படியே யாகும்
சேர்ந்து நின்ற தெய்வத்தின் நலமே கேளாய்
போமேதான் பிரிதிவிக்குத் தேவன் பிர்மா
பெரிய சுவாதிட்டான மிருப்ப தாமே 6

நீரின் நிறம் ஸ்படிகமாகும், அக்கினியின் நிறம் சிவப்பும், வாய்வு நிறம் கருப்பும், ஆகாயத்தின் நிறம் புகை நிறமுமாகும், பஞ்சபூதத்திற்கு தெய்வமும் இருப்பிடமும் யாதென்று நோக்கினால் பிருதிவிக்கு தெய்வம் பிரம்மாவு மாகும். அவரின் இருப்பிடம் சுவாதிட்டமானம்.

பஞ்சபூதத்திற்கு தெய்வத்தைலம்

இருப்பான வீடதுமூ லாதார மாகும்
இதழாறு பிரிதிவியின் பீசம் நவ்வாம்
மருப்பான மயிர்நரம்பு தசைதோ லென்பு
மாசற்ற அப்புவற்கு விஷ்ணு தெய்வம்

செருப்பான மணிபூர வீடு மாகும்
சிறுபிறை ரூபம்போர்பத் திதழ்தான் சுற்றி
அருப்பான வப்பினுக்குப் பீசம் மவ்வாம்
அதின்கூறைத் தான்கேளு முதிரஞ் சீயே 7

பிரிதிவியின் இருப்பிடம் மூலாதாரமாகும். அதன் பீசம் நவ்வாகும். நம் முடலில் உள்ள மயிர், நரம்பு, தசை, தோல், என்பு ஆகியன பிருதிவியின் அம்சமாகும். அப்புவிற்கு தெய்வம் விஷ்ணுவும், இருப்பிடம் மணிப்பூரமு மாகும். சிறுபிறை போன்ற பத்திதழ் கொண்ட அப்புவின் பீசம் மவ்வாகும், நம் உடலில் அப்புவின் கூறாக விளங்குபவை இரத்தம் சீழ் ஆகியவற்றோடு,

சீயான நீரோடு மூளை மச்சைத்
தேய்வுக்கு ருத்திரன்தான் தெய்வ மாகும்
மூயான முக்கோண மநாதகம் வீடு
முயற்சியாய் ஈராறாகு இதழ்தாம் சுற்றில்
தேயான சிவ்வதுவுந் தேயு பீசம்
சிதையாமல் இதழுக்குள் சேர்ந்து நிற்கும்
ஆயான ஆகாரம் துஞ்சில் போகம்
அவருடைய கூறதுதான் பயமுஞ் சோம்பே 8

நீர், மூளை, மச்சை ஆகியுனவாகும், தேயுவுக்கு தெய்வம் உருத்திரன். அதன் இருப்பிடம் முக்கோண வடிவுடைய அநாதகம் ஆகும். இது 12 இதழ்களை உடையது. தேயுவின் பீசம் சிவ்வாகும். உணவு உட்கொள்ளல், செரிப்பித்தல் தூங்குதல், போகம் செய்வதும், பயமும், சோம்பலும் தேயுவின் அம்சமாகும்.

சோம்பான வாயுவுக்கு மகேசன் தெய்வம்
சோடசமாம் இதழோடே விசுத்தி வீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வு பீசம்
அவருடைய தன்கூறு நடத்த னிற்றல்
வாம்பான வாடலோ டிருத்த லோடல்
வகையான அறுகோணங் குடியி ருப்புத்
தேம்பான ஆகாய மாக்கினைக் குள்ளே
சிதையாம லிரண்டிதழோ டிருக்கும் பாரே 9

வாயுவுக்கு தெய்வம் மகேசன். பதினாறு இதழ்களுடன் கூடிய விசுத்தியே இதற்கு வீடாகும். வாயுவுக்கு பீசம் வவ்வாகும். நடத்தல், நிற்றல், ஆடல், ஓடல் ஆகியன தேயுவின் கூறுகளாகும்.

ஆகாய பூதமானது. இதவை வீடு அறுகோண முடையது. ஆக்கினைக்குள்ளே இரண்டு இதழ்களோடு கூடியதாக இருக்கும்.

இருக்கின்ற வாக்கினையின் கூறு கேளாய்
ஏற்றகா மக்குரோத லோப மோகம்
மருக்கின்ற மதமுமாற் சரியத் தோடும்
வானுக்குச் சதாசிவமே தெய்வ மாகும்
பிருக்கின்ற வாகாய பீசம் யவ்வாம்
பேரான வைம்பூதம் பிரிவு மாகும்
தெருக்கின்ற தசநாடிச் செயலை யெல்லாம்
செப்புகிறேன் றெளிவாகச் சிறந்து கேளே 10

ஆகாயத்தின் தெய்வம் சதாசிவமாகும், காமம், குரோதம், மதம், மாற்சரியம் ஆகியன ஆகாயத்தின் கூறுகளாகும். இதன் பிசாட்சரம் யவ்வாகும். இதுவரை ஐம்பூதங்களின் பிரிவுகளைக் கூறினேன். இனி தசநாடிகளின் செயலை தெளிவாகக் கூறக் கேளே.

தசநாடிகளின் இயல்பு

சிறந்த இடை பிங்கலையுஞ் சுழிமுனை யினோடு
சிறப்பான காந்தாரியத்திச் சிங்கு வையாம்
பிறந்தலம் புருடனோடு குகுதன் றானும்
பேரான சங்குனியும் வயிர வன்றான்
திறந்தவை பத்துந்தான் றசநாடி யாகும்
திரிமூன்று நாடியினி லொடுங்கும் பாரு
மறந்தஇடை பிங்கலையுஞ் சுழிமுனை மூன்றும்
வாதத்தி லொடுக்கமென வகுக்க லாமே 11

இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி சிங்குவை, அலம்புடை, குகு, சங்கினி, வைரவன் ஆகிய பத்துமே தசநாடி எனப்படும். இவை மூன்று நாடிகளில் ஒடுங்கும். இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்றும் வாதநாடியில் ஒடுங்கும்.

வகுக்கவிதன் குணங்கள்மந் தமொடு குளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறு மாகும்.
அகுக்கவே காந்தாரி யத்திசிங் குவையாம்
அலம்புருட னிதுநாலும் பித்தத்தின் கூறு
இகுக்கவே யிதன்குணங்க ளுட்டின தாகம்
உயர்மோன முழலைவாய் வும்மே னோக்கும்
நகுக்கவே நாடியது படபடத்து டிக்கும்
நாசமாம் பயமொடு கோப மாமே 12

இதன் குணங்கள் யாதெனில் மந்தம், குளிர்மை, மலக்கட்டு ஆகியன வாகும். காந்தாரி, யத்தி சிங்குவை, அலம்புருடன் ஆகியன நான்கும் பித்தத்தின் கூறாகும். வெம்மை, தாகம், எரிச்சல், மேல்நோக்குதல், வாய்வு, நாடிபடபடத்தல்,பயம், கோபம் ஆகியன இந்நாடிகளின் குணங்களாகும்.

ஆமேதான் குகுதன்சங் குனிவை ரவனும்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும் பாரு
மாமேதானிதின் கூறுவாய் வாற்றான் பரியும்
மலர்விழியுங் குழிந்திருக்கு முகமும் வேர்க்கும்
தேமேதானென் சடைக்குந் திசைகலங்கி யிருக்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றி விக்கும்
பாமேதான் பத்தினி டப்பண்பு மாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசி தாமே 13

குகு, சங்குனி, வைரவன் ஆகியன கபநாடியில் அடங்கும். வாயுகீழ்நோக்கிப் பிரிதல், விழி குழிதல், முகம் வியர்த்தல், வியர்வைகாணல், நெஞ்சடைத்தல், திகைத்தல், நீர்வேட்கை எடுத்தல், விக்கல் ஆகியவற்றை இவை தோற்றுவிக்கும். இவைகளே பத்துநாடிகளின் பண்புமாகும். இதற்குத் தக்கவாறு பரிகாரஞ் செய்யவேண்டும்.

பரிசான விடையினொடு பிங்கலையு மொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம் பற்றிச்
சுரிசான பாகங்கண் மாறி மாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட்டேறும்
திரிசான திருவணைக்கால் போலே மாறிச்
சிரசளவு தான்முட்டித் திரும்ப மீண்டு
விரிசான மூக்குநடுப் புருவ நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம் புக்கும் 14

இடகலையும், பிங்கலையும் குதத்திலுள்ள மூலாதாரத்தில் இருந்து எழும்பி கத்தரிக்கோல் போல் உச்சிவரை மாறி மாறி ஏறி மீண்டும் அங்கிருந்து நெற்றி, புருவம், மூக்கு நடுப்பகுதி யாகியவற்றில் புகுந்து மூலத்தைச் சேரும்.

புக்குகின்ற காந்தாரி நாபி பற்றிப்
பெருநரம்போ ரேழினுக்கும் ரூப மாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலே யோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம் புக்கி

நக்குகின்ற நாவடியிற் சிறந்திருக்கும்
நலமான வத்திசிங்குவையிரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலே பற்றி
மேலேறி யிரண்டுசெவி தனைத் தொட்டாமே 15

காந்தாரி என்னும் நாடியானது நாபியைப் பற்றி மேலேறி ஏழு நரம்புகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து பத்து வாயுக்கள் மேலேயோடித் தலைவரை சென்று கழுத்து வழியாக இறங்கி நாக்கின் அடியில் வீற்றிருக்கும். அத்தி, சிங்குவை ஆகிய இரண்டு நாடிகளும் மூலாதாரத்தைப் பற்றிக் கொண்டு மேல் நோக்கிச் சென்று இரு காதுகளையும் கலந்து நிற்கும்.

தொட்டேறி நரம்பெல்லாங் கலந்து வீசித்
துறையான நயனமிரண் டினிலே நிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிரவன் றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப் பற்றிக்
கட்டேறி யிரண்டுகன்னந் தனிலே நிற்கும்
கனிவான சங்குனியுங் குகுதன் றானும்
நட்டேறி நாபித்தானத்திற் றோன்றி
நலமான குதமளவு நடிப்பர் பாரே 16

இரு காதுகளையும் கலந்தபின்பு காந்தாரியானது விழிகளில் தங்கிவிடும். அலம்புருடன், வயிரவன் என்ற நாடிகள் மூலாதாரத்தில் தொடங்கி கன்னங்களில் வந்து நிற்கும். சங்குனியும், குகுவும் நாபியில் இருந்து தோன்றி குதம்வரை பரவி நிற்கும்.

பார்க்கவே சடந்தான் சென்மிக்கும் வாறு
பகர் சுக்ல சுரோணிதத்தி னோடே கூடி
மூர்க்கபவ ளப்பையின் முத் துதிர்ந்தாற் போல
முனையறுகு நுனிபனிபோற் சுரோணிதத்திற் சேர்ந்து
தார்க்கச்சு 'ரோணிதந் திரண்டுதன் ரூபமாகித்
தமர்வாசற் றினைமூடும் வாயு தானும்
வேர்க்கவே வேலியைப்போல் வளைத்து காக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்கு மாமே 17

சுக்கிலமும் சுரோணிதமும் கூடி இவ்வுடல் பிறக்கும் சிப்பிக்குள் உள்ள முத்துபோலிருக்கும் நாதத்துடன் புல்லின் மேல் உள்ள பனியின் வடிவத்தையுடைய சுக்கிலம் கூடி திரண்டு வடிவம் பெறும். அண்டத்தின் துவாரவாசல் மூடும். வாயுவானது வேலிபோல் வளைத்து நின்று காக்கும் விந்துவில் நிற்கும் பிராணவாயு அதனைக் காக்கும்.

விளக்குகின்ற வபானவாயு வெளியி னிற்கும்
விந்துவுடன் பிராணவாயு வுடன் கலக்கும்
களக்குகின்ற உதானனது கருவ ளர்க்கும்
கருவுக்குள் வியாதி மூன்றும் கலக்கும்
இளக்குகின்ற ஐந்தாநாள் கருப் போலாகும்
ஈரைந்தா நாள்தனிலே திரளும் பாரு
முளக்குமூ வைந்தா நாள் முட்டைப் போலாம்
முதற்றிங்கள் கம்பமாய் முளைபோ லாமே 18

அபானவாயு வெளியில் இருந்து காக்கும், பிராண வாயுவுடன் விந்துவில் கலக்கும். உதானன் கருவை வளர்க்கும். கருவில் வாதபித்த கப குற்றங்கள் வியாதியாய் கலந்துவிடும். ஐந்தாம்நாள் கரு உண்டாகி பத்தாம்நாள் திரண்டிருக்கும். பதினைந்தாம்நாள் முட்டைபோலிருக்கும் - முதல் மாதம் கம்புமுனைபோல நீண்டிருக்கும்.

ஆமே ரெண்டாந்திங்கள் தலைமுதுகு தோன்றும்
அடுத்த மூன்றாந்திங்கள் அரைவிரல் கைகாலாம்
நாமே நாலாந்திங்கள் பதமூக்குண் டாகும்
நலத்த வைந்தாந்திங்கள் செவிநாவு கண்ணாம்
வாமே யாறாந்திங்கள் கண்க ளாகும்
மருவியே வேழாந்திங்கள் மயிரெலும்பு நரம்பாம்
தாமேதான் சடமோடு சலம லங்கள்
தாங்கிய வோர்தாதுவொடு மூச்சுண் டாமே 19

இரண்டாம்திங்கள் முதுகும், மூன்றாம்திங்கள் அரை விரல்கள், கை, கால்களும், நான்காம்மாதத்தில் பாதங்களும் மூக்கும் தோன்றும். ஐந்தாம் திங்களில் செவி, நாக்கு கண்கள் தோன்றும். ஆறாம திங்கள் கண்கள் முழுவளர்ச்சியடையும். ஏழாம் மாதம் மயிர், எலும்பு, நரம்பு, தோன்றும. உடலில் மலசலங்கள், மூச்சு ஆகியன தோன்றும்.

மூச்சுண்டா மெட்டினிற்றா யுண்ட சார
முனையான கதிர்போல உருவ் பாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழியே சென்று
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சி யாகும்
பேச்சுண்டா மொன்பதிலே அறிவு தோன்றிப்
பிறப்பித்தோன் தனைநினைத்து தவமே செய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வா யென்றுங்
கொடிய பத்தாந்திங்க ளாகும் பார்வையாலே. 20

எட்டாம் திங்களில் மூச்சுண்டாவதுடன் தாயுண்ட உணவின் சத்து சூரிய ஒளிபோல குழந்தைக்கு இரத்தத்தின் மூலம் கலந்து முதலில் கபால உறுப்புகளுக்கு சென்றுபின்பு மற்ற பாகங்களுக்கு பரவும். ஒன்பதாம் மாதம் அறிவு தோன்றும். தன்னை படைத்த வளை நினைத்து கைகூப்பி அருள்வாய் என்று தவநிலையில் இருக்கும். பத்தாம் மாதம்நன்கு வளர்ந்து முடிவுற்ற நிலையில் இருக்கும்.

பார்வையா மபானன்கீழ் நோக்கி வைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்ற பின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதி யாகி
அழுதுகொண்டு வாத்துமத்திற் கருவி பாசம்
பார்வையாய் மாயாசத்தி கிரியாசத்தி
மயக்கத்தில் அறிவழிந்து நல்தீ வினையாம்
கோர்வையாய் விதியும் வந்துற் பவித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்ம மாச்சே 21

முற்றும் வளர்ந்த கருவை அபானவாயுவானது கீழ்நோக்கி திருப்பிவிடும். குழந்தை பூமியில் பிறந்தவுடன் கருவில் இருந்த அறிவு குன்றும். ஆத்மாவின் மாயாசக்தி, கிரியாசக்தி முதலியவைகளின் பார்வையாலும் நல்வினை தீவினை இவற்றின் செயல்களாலும் வந்து பிறந்த குழந்தையானது சுரைக்கொடி படர்ந்து வளர்வது போல வளரும்.

சென்ம மாஞ் சரீரந்தொண் ணூற்றாறங்கு லமாம்
செய்கின்றவ வரவர்கள் கையா லேதான்
தன்னமா மிரத்த மாங்கிசமு மேதை
தசைமச்சை யோடுசுக்லந் தாதே ழாகி
உன்னமா உருவென்னும் சரீர மாகி
உயர்சட்டை ரசஞ்சேர்ந்து ரோக மாகி
வன்னமாம் வாதபித்த சேத்ம மாகி
வருகின்ற சடத்தினிட வண்மை கேளே 22

மனித உடலின் உயரமாவது அவரவர்கள் கையால் தொண்ணூற்றாறு அங்குலமாகும. இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, என்பு, மூளை, விந்து ஆகிய ஏழும் சப்த தாதுக்களாகி மனித உடலுக்கு உருவம் தருகின்றன.

வண்மையாம் வாதமது முப்ப தாண்டு
மட்டுமே வளருகின்ற கால மாகும்
செண்மையாம் பித்தமது முப்பத்தி மூன்று
பேணியே வளருகின்ற கால மாகும்

திண்மையாஞ் சேட்பமது முப்பத் தேழு
செயலோடு வளருகின்ற கால மாகும்
உண்மையாய்ச் சடமதனுக் கொருநூ றாண்டு
உகாந்தமாங் கருவிகளின் உறுதி கேளே 23

நம் வாழ்நாளில் வாதம் முப்பதாண்டும், பித்தம் முப்பத்தி மூன்று ஆண்டும், சிலேத்துமம் முப்பத்தேழு ஆண்டுகளும் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி செய்யும். ஆக உடலுக்கு ஆயுட் காலம் நூறு ஆண்டாகும். இனி கருவிகளைப் பற்றி அறிவாயாக.

உறுதியாம் பூதாதி ஒரைந் தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந் தாகும்
கருதியாம் கன்மவிந் திரியம் ஐந்தும்
கடிதான ஞானேந் திரிய மைந்தும்
திருதியாம் தீதான கரணம் நான்கும்
திறமான வறிவொன்று தசநாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்து மாகும்
மகத்தான விடயமஞ்சு கோச மஞ்சே 24

பூதங்கள் ஐந்து, பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து. கரணங்கள் நான்கு, அறிவு ஒன்று, நாடிகள் பத்து, வாயுக்கள் பத்து. விடயங்கள் ஐந்து, கோசம் ஐந்து.

அஞ்சவே யாதார மாறு மாகும்
அரியமண்ட லமூன்று மல மூன்றாகும
தொஞ்சவே தோஷ மூன்று ஏடணைதான் மூன்று
தோதகமாங் குணமூன்று வினை யிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டாம வத்தை யைந்து
தயங்கியதோர் கருவிகளாம் தொண் ணூற் றாறு
ஒஞ்சவே ஒவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதி உரைக்கக் கேளே 25

ஆதாரம் ஆறு. மண்டலம் மூன்று,. மலம் மூன்று, தோடம் மூன்று, ஏடனை மூன்று, குணம் மூன்று, வினை இரண்டு, ராகம் எட்டு, அவத்தை யைந்து ஆக கருவிகள் தொண்ணூற்றாறாகும். இனி அவற்றை ஒவ்வொன்றாக விளக்கிக் கூறுகிறேன்.

உரைக்கவே பிரிதிவி யப்பு தேயுவும்
உரிமையாம் வாயுவோ டாகா சமாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்ச தாச்சு
பொரியைந்தின் விபரமதைப் புகலக் கேளாய்

திரைக்கவே சுரோத்திரமுந் தொக்கு சட்சு
சிங்குவையாக் ராணமிவை யாக வைந்தும்
துரைக்கவே சுரோத்திரந்தான் செவியு மாகும்
தொக்காவது டம்பென்றே சொல்ல லாமே 26

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன ஐம்பூதங்களாகும். செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐந்தும் ஐம்பொறிகளாகும். சுரோத்திரம் என்பது செவியும் தொக்கென்பது உடலும் ஆகும்.

சொல்லவே சட்சதுதான் கண்ணு மாகும்
தூய்யநா சிங்குவையாக்க ராண மூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக் கேளு
புகழான சத்தமொடு பரிசம் ரூபம்
நல்லவே ரசகெந்த மாக வைந்தாம்
நலமான சத்தமது கேள்வி யாகும்
சொல்லவே செவியினிடக் கூற தாகும்
செய்பரிசஞ் சுகதுக்க மறிதல் காணே 27

சட்சு என்பது கண், சிங்குவை என்பது நாக்கு, ஆக்ராணம் என்பது மூக்குமாகும். ஐம்புலன்களின் கூறுகள் யாதென்றால் சப்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்று ஐந்தாகும். சப்தமென்பது கேள்வி, அது செவியின் கூறு. பரிசமென்பது இன்பதுன்பங்களை நுகர்தலாகும்.

காணவே தேகத்தின் கூற தாகும்
கன்ரூப மாவதுதான் காண்ப தாகும்
தாணவே கண்ணினிடக் கூற தாகும்
ரசமாவ தறுசுவையை அறித லாகும்
பூணவே நாக்கினிடக் கூற தாகும்
புகல்கெந்தம் துர்க்கந்தநற் கந்த மறிதல்
தோணவே மூக்கினிடக் கூற தாகும்
சுகமான பொரியைந்தின் சூட்சந் தானே 28

ஸ்பரிசம் தேகத்தின் கூறு. உருவத்தைக் காண்பது கண்ணின் கூறாகும். இரசம் என்பது அறுசுவைகளை அறிதல். அது நாக்கின் கூறு ஆகும். கெந்தம் என்பது நல்ல தீய வாசனைகளை அறிதல், அது மூக்கினுடைய கூறு ஆகும். இதுவே பொறிகள் ஐந்தின் தொழிலாகும்.

தானான கன்ம விந்திரிய மைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்கு பாதம்
பானான பாணியுடன் பாயுரு முபத்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்கு வாயாம்

கானான பாதமது காலே யாகும்.
　　கனமான பாணியது கையு மாகும்
ஊனான பாயுரு தானபான மாகும்
　　உபத்தமது லிங்கமென வுரைர்க்க லாமே 29

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆகிய ஐந்தும் கன்ம விந்திரியங்களாகும். வாக்கு என்பது வாயு வாகும், பாதம் என்பது காலாகும், பாணி என்பது கையாகும். பாயுரு என்பது அபானமாகும். உபத்தம் என்பது இலிங்கமாகும்.

ஆமென்று கன்மவிந் திரிய மைந்தின்
　　அடைவெல்லாஞ் சொன்னதன் பின்பப்பா கேளாய்
நாமென்ற கன்மேந்திரிய விடயு மைந்தை
　　நவின்றிடவே வசனமொடு கமன மாகுந்
தாமென்ற தானவிசர் சனமா னந்தம்
　　தாக்காக வீதைந்து சாற்றி னேனான்
பாமென்ற விதனுடைய விபர மெல்லாம்
　　பரிவாக வொவ்வொன்றா யுரைக்கின் றேனே 30

கன்மேந்திரியங்களின் செய்கைகளாவன, வசனம், கமனம், தானம், விசர்சனம், ஆனந்தம் ஆகிய ஐந்தாகும். இதன் விவரங்களை ஒவ்வொன்றாகக் கூறுகின்றேன் கேட்பாயாக.

உரைக்கவே வாக்கதுதான் வசனிப் பாகும்
　　உறுதியாம் பாதமது நடத்தி வைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்கு விக்கும்
　　பாயுருதான் மலந்தனையே பிரித்து வைக்கும்
துரைக்கவே யுபத்தமது சுக்கில மூத்திரம்
　　துரிசாக விடுவிக்குஞ் சுப்ர மாகும்
நரைக்கவே கன்மேந்திரிய் விஷய மைந்தின்
　　நலமதனை நவின்றிடவே நண்பா மென்னே 31

பேசுவதே வாக்கின் கூறாகும். பாதம் நடத்திவைக்கும். கைகள் கொடுத்தல் முதலிய செயல்களை செய்யும். பாயுரு என்பது மலத்தை உடலிலிருந்து பிரித்து வெளிப்படுத்தும். உபத்தம் என்பதுவும் அதுபோலவே சுக்கிலம், மூத்திரம் ஆகியவற்றை பிரிக்கும். இவைகளே கன்மேந்திரியங்களின் செயல்பாடுகளாகும்.

என்னவே கரணமது நால தாகும்
　　ஏற்றமனம் புத்தி யாங்காரஞ் சித்தம்
நன்னவே நாலினிடை விரிவைக் கேளாய்
　　நலத்தமன மாவ தொன்றைத் தானி னைக்கும்

பொன்னவே புத்திதான தனை விசாரிக்கும்
பேரான, வாங்காரம் கொண்டெ முப்பிவைக்கும்
தென்னவே சித்தமதைச் செய்து முடிப் பிக்கும்
சிறந்துவந்தக் கரணந்தா னான்கு மாச்சே 32

அந்தக்கரணம் நான்காகும். மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற அவை நான்கின் விரிவைக் கேட்பாயாக. மனம் நினைத் தலையும், புத்தி அம்மனத்தின் செயல்களை விசாரித்தலையும் ஆங்காரம் செயலை எழுப்பிவைத்தலையும் சித்தம் செயலையும் முடிவுசெய்தலையும் கொண்டிருக்கும்.

ஆச்சுதே அறிவொன்றின் விசாரணையைக் கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் கண்டந் தானாய்க்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்க ளாகிக்
கொடிய தீவினையாய் நல்வினையு மாகிப்
போச்சுதே பெண்ணாய்ப் பிரபஞ்ச மாகிப்
புகலரிய நிர்க்குணநின் மலமு மாகித்
தீச்சுதே சிவமாகிச் சீவ மாகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்த வாறே 33

அறிவின் விசாரணையைக் கேட்பாயாக. இவ்வுலகில் அனைத் தையும் பார்த்துக் கொண்டிருக்கும். அண்டத்தில் அதுவே குருவாக வும், தத்துவங்களாகவும், நல்வினை தீவினையாகவும், பெண்ணாக வும் பிரபஞ்சமாகவும், குணமாகவும், நீர் மலமாகவும், சிவமாகவும், சிவனாகவும், செழுமையான சுடரின் ஒளியாகவும் இருக்கும்,

வாறாண தத்துவமோர் முப்ப துந்தான்
மன்னியதோ ராத்ம தத்துவ மேயாகும்
நாறான நாடிபத்தின் விபரங் கேளாய்
நயந்தவிடை பிங்கலையுஞ் சுழிமுனை காந்தாரி
ஆறான வத்திசிங்கு வையுமலம் புருடன்
அருங்குதன் சங்கினியு வைரவனீ ரைந்து
மூறான விதன் பிரிவை முன்னே சொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமை பாரே 34

இதுவரை கூறிய முப்பது தத்துவங்களும் ஆதம தத்துவமாகும். இனி நாடி பத்தின் விவரங்களைக் கேட்பாயாக. இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், குகன், சங்கினி, வைரவன் ஆகிய பத்துமாகும். இனி வாயுக்கள் பத்தின் விரிவைக் கேட்பாயாக.

முறைமையாம் பிராணனோட பானன் வியானன்
மூர்க்கமா முதா னனொடு சமான னாகன்
திறமையாங் கூர்மனொடு கிரிக ரன்றான்
தேவதத்த னொடுதனஞ் செயனு மாகும்
பிறமையாம் இதன்பிரிவு பிராண வாய்வு
பெருமூலா தாரத்தின் கட்டோன் றித்தான்
உறமையாம சவையெனு மந்தி ரத்தால்
ஓங்கார முதலெழுத்தை உன்னித் தானே 35

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன், ஆகிய பத்தும் தசவாயுக்களாகும். பிராணவாய்வானது மூலாதாரத்தில் தோன்றி ஓங்காரம் என்னும் முதலெழுத்தைப் பற்றி மேலேறும்.

உன்னியே மேலெழுந்து பனிரெண் டங் குலந்தான்
உயர்ந்த வெட்டங்குலந் தான்மீள வாங்கி
நன்னி நாலங்குலந்தான் பாழிற் பாயும்
நலமான குணமெல்லாம் பிராண வாய்வு
பன்னவே நீலவர்ணந் தேவதைதான் சந்திரன்
பலபலவாம் பொசிப்பெல்லாஞ் சீரணம தாக்கும்
முன்ன நாழிகைக்கு முந்நூற்றறுபது சுவாசம்
முயர்ந்த நாளொன்றுக்கு மூச்சை கேளே 36

பிராணவாயுவானது பன்னிரெண்டங்குலம் மேலெழுந்து பின்பு எட்டங்குலம் மீண்டு வாங்கி நாலங்குலம் வீணாகப் போகும். இது உணவை சிரணிக்கச் செய்யும். நீல வர்ணமுடை யது. இதன் தேவதை சந்திரன். ஒரு நாழிகைக்கு முன்னூற்றறுபது சுவாசம் நிகழும்.

நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத் தறுநூறு
நலமான சுவாசந்தா னெழுந் திருக்கும்
கோளொன்றிப் பதினாலா யிரத்து நானூறு
குவித்தமூலா தாரத்துள் ளொடுங் கும்
பாளொன்றி யேழாயிரத் திருநூறு சுவாசம்
பாழிலே பாய்ந்திடு மென்றறிகப் பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சா தித்தால்
எப்போதும் பாலரா யிருக்க லாமே 37

ஒரு நாளைக்கு நாம் சுவாசிக்கும் சுவாசம் இருபத்தி யோராயிரத்து அறுநூறு ஆகும். இதில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் மூலாதாரத்துள் ஒடுங்கிப் போகும். மீதியுள்ள ஏழாயிரத் திருநூறு சுவாசம் வீணாகப் போகும். அவ்வாறு வீணாகப்போகும் சுவாசத்தை நிறுத்தி உள்ளடக்கினால் எப்பொழுதும் பாலகராக இருக்கலாம்.

இருக்கவே அபானத்தி னியக்கங் கேளாய்
ஏற்ற சுவா திட்டானத் துற்பத் தியாகும்
மருக்கவே கீழ்நோக்கி மலம்நீர் தள்ளும்
வாகாக நிறந்தானும் பச்சை யாகும்
அருக்கவே ஆசனத்தைச் சுருக்கி வைக்கும்
அன்னசாரத் தையெல்லாம் சேர வைக்கும்
திருக்கவே தேவதையும் வரத ராசன்
திறமான வியானனிடச் சிறப்பைக் கேளே 38

அபானவாயுவின் இயக்கத்தினைக் கேட்பாயாக. சுவாதிட்டானத்தில் இருந்து உற்பத்தியாகி கீழ்நோக்கி மலம், சிறு நீர் ஆகியவற்றை தள்ளும். இதன் நிறம் பச்சையாகும். ஆசனத்தை சுருக்கிவைத்திருக்கும். உணவின் சாரத்தை யெல்லாம் உடலில் சேரவைக்கும். இதன் தேவதை வரதராசன் வியானனுடைய சிறப்பைக் கேட்பாயாக.

சிறப்பான வியானனது தோளில் நின்று
திகழெழுபத் தீராயிர நாடியிலுஞ் சென்று
தறுப்பான சரவசரந் தனிலே நின்று
தானீட்டல் முடக்கல்பண் ணிப் பரிசங் களறியும்
அறப்பான அன்னசாரந் தன்னைத் தானாங்
காங்கே நிறைப்பித்தாக் கையை ரட்சிக்கும்
பறப்பான ததுபாலின் வண்ண மாகும்
பாரினிற் தெய்வந் தானேம னாமே 39

வியானன் என்னும் வாயுவானது தோளில் இருந்து எழுபத்தி ரெண்டாயிரம் நாடியிலும் சென்று அவயவங்களில் தங்கி நீட்டல், முடக்கல் போன்ற செய்கைகளைச் செய்து ஸ்பரிசத்தை அறியச்செய்யும். செரித்த உணவின் சாரத்தை அவயவங்களில் சேர்ப்பிக்கும். உடலை காக்கும். இதன் நிறம் பாலின் நிறமாகும். இதன் இறைவன் இயமன் ஆகும்.

ஏமனா முதானனிட வேற்றங் கேளாய்
எழிலான உதரவக் கினியை யெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தன் னைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்தி வைக்கும்
காமனா யெடுப்பித்துங் கலக்கி வைத்தும்
கலக்கியே வகுத்துவைக்கும் வளப்ப மாகும்
வீமனா மின்னனிட வண்ண மாகும்
விளங்கியதோர் அக்கினிதான் தெய்வ மாமே. 40

உதானனின் செயலைக் கேட்பாயாக. வயிற்றிலுள்ள அக்கினியை எழுப்பி உண்ட உணவை செரிப்பித்து சாரத்தை

உடலில் அங்கங்கே நிறுத்தி வைக்கும். உடலை வகுத்து வளம்பெறச் செய்யும். இது மின்னலின் நிறத்தை ஒத்து இருக்கும். இதன் தெய்வம் அக்கினியாகும்.

ஆமென்ற சமானனிட வாணமை கேளாய்
　　அடிநாபி பாதாங்கஞ் சமன் கொண்டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சவொட் டாமல்
　　மடக்கியே சமன்செய்து மருவப் பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீ ரன்னம்
　　சமன்செய்து சரீரமெல்லாம் சாரப் பண்ணும்
வாமென்ற வண்ணமது புட்ப ராகம்
　　மகத்தான தெய்வமா தித்த னாமே 41

சமானனுடைய செயலாக்கத்தை கேட்பாயாக. நாபி, பாதம், ஆகியவற்றில் சமமாக நின்று மற்ற வாயுக்களை மிஞ்சி விடாமல் பாதுகாத்து சமனப்படுத்தும். உணவின் அறுசுவையையும், தண்ணீர், உணவு ஆகியவற்றை உடலின் எல்லாபாகத்திலும் பரவச்செய்யும். இதன் வண்ணம் புஷ்பராக கல்லைப் போலிருக்கும். இதன் தெய்வம் சூரியன்.

தெய்வமா நாகனிட சிறப்பைக் கேளாய்
　　செயலான சகலகலை யாக்கி வைத்து
பைவமாய்ப் பாடிவைக்கும் கண்விழிப் பிக்கும்
　　பாங்காகச் சிமிளிக்கும் ரோமமசை விக்கும்
பெய்வமாம் பொன்னிட வர்ண மாகும்
　　பெரிதான தெய்வந்தா னனந்த னாகும்
கொய்வமாங் கூர்மனிடக் குணத்தைக் கேளாய்
　　கொடிய மனந்தனில் நின்று நிமைக் கொட்டாமே 42

நாகனின் சிறப்பைக் கேட்பாயாக, சகலகலைகளையும் உடலில் செய்யப்பண்ணும் பாடச்செய்யும், கண்களை விழிக்கச் செய்யும். கண்களை சிமிட்டச் செய்யும், உடல் ரோமங்களை சிலிர்க்கவைக்கும். இது பொன்னின் வர்ணமுடையதாக இருக்கும். இதற்கு தெய்வம் அனந்த னாகும். இனி கூர்மனின் குணத்தைக் கேட்பாயாக.

நிமைகொட்டுங் கொட்டாவி தானுங் கொள்ளும்
　　நேராக வாய்மூடும் பெலனுண்டாகும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கு மூடப் பண்ணும்
　　காட்சியெல்லாங் காண்பிக்கும் விழிநீ ரோடும்
விமைக்கொட்டும் வண்ணமது வெளுப்ப தாகும்
　　மேலான தெய்வந்தான் விஷ்ணு வாகும்
கமைக்கொட்டுங் கிருதராதி யின்கு ணந்தான்
　　கடுநாவு நாசிதனிற் கசிவுண் டாமே 43

இமையை கொட்டல், கொட்டாவிவிடல், வாய்மூடல், வன்மையை தரல், கண்ணை விழித்தல், மூடச்செய்தல்; காட்சிகளை பார்க்கச்செய்தல், விழியில்நீரோடுதல் ஆகியன இதன் தொழிலாகும். இதன் நிறம் வெளுப்பு. தெய்வம் விஷ்ணுவாகும். இனி கிருகரன் என்ற வாயுவின் குணத்தைக் கேட்பாயாக. இது நாக்கு மூக்கு ஆகியவற்றில் நீரைச் சுரப்பிக்கும்.

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ் செல்லும்
கண்ணியே விருத்தலொடு போத லாகும்
துசிவுண்டாய் தும்மலோ டிரும லுண்டாகும்
சுயமான வண்ணமது கறுப்ப தாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றா னாகும்
திரோதையின் கூறான திறமு மாகும்
குசிவுண் டாம் தேவதத்தன் குணத்தைக் கேளாய்
குடிதலமாய்ச் சோம்பு முறித்திடுத லாமே 44

மிகவும் பசியை உண்டாக்கும். உட்கார்தல், செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகளைச் செய்யும். தும்மல் இருமல் ஆகியவற்றை உண்டாக்கும். இதன் நிறம் கறுப்பு. தெய்வம் சிவன். இனி தேவதத்தன் என்னும் வாயுவின் குணத்தைக் கேட்பாயாக இது. சோமபலை முறிக்கச்செய்யும்.

முறித்திடுதன் மொழிக்கும் போமுயற்சி யாகி
முகுளிதமாய்க் கண்ணினையே யோடி யுலாவித்துத்
தரித்திடுதல் சண்டை கொளற் றாக்கல்பேசல்
சண்டாளக் கோபத்தை உண்டு பண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத் தன்றிக்
கூர்ந்த தெய்வந்தே வேந்திரன் பவள வண்ணம்
தரித்திடுநற் றனஞ் செயனைச் சாற்றக் கேளாய்
சாங்கமாய் மூக்கினின்று தடிக்குந் தானே 45

உடலை முறிக்கச் செய்தல், வாக்குவாதம் செய்தல், கண்ணினை மறைத்தல், சண்டை கொள்ளல், தாக்கல், பேசுதல், மிகக் கடுமையான சினத்தை உண்டாக்குதல், எருவாய், நீர்தாரை ஆகியவற்றை ஆட்சிசெய்தல் ஆகியன இதன் செயல்கள். இதன் தெய்வம் இந்திரன், நிறம் பவள வண்ணமாகும். இனிதனஞ் செயன் எனும் வாயுவின் செயலைக் கேட்பாயாக. மூக்கில் தங்கி தடிக்கச் செய்யும்.

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப் பண்ணும்
தந்திரமாய் கன்னத்திற் சமுத்திரம் போலத்
திடித்துமே சுந்தரமாய் கோட்ட மாகித்
திரண்டுமே துஞ்சிய காலந் தனிற்றான்

வடித்துமே வாயுவெல்லாம் போன பின்பு
　　வளமான தலைவெடிக்கும் மூன்றா நாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற் போகும்
　　அதன் வண்ணம் நீலவண்ண மறிந்து கொள்ளே 46

உடலை தடித்து வீங்கச் செயயும் கன்னத்தில் சமுத்திரம்போல் நீரை தங்கச்செய்யும். இறந்தபின் எல்லா வாயுக்களும் உடலைவிட்டு போனபின்பு மூன்றாம் நாளில் உடலில் வெடிப்புண்டாகி அதன்வழியே செல்லும். இதன் நிறம் நீல நிறமாகும்.

அறிந்ததோர் தெய்வந்தன் வந்திரி யாகும்
　　ஆகவிந்த வீரைந்து மாதியாம் வாய்வு
வெறிந்ததோர் வசையமைந்தின் லிபரங் கேளாய்
　　மீறியதோரா மவசையம் பகுவசையத் தோடு
தறிந்ததோர் சலவசைய மலவசையத் தோடு
　　தாக்கான சுக்கிலமாம் வசைய மைந்து
எறிந்ததோரா மவசை யமன்னம் தண்ணீர்
　　இருக்குமிட மென்றுதா னியம்பி டீரே 47

தனஞ்செயனின் தெய்வம் தன்வந்திரியாகும். ஆக பத்து வாயுக்களையும் கூறியாயிற்று. இனி ஆசயங்கள் ஐந்தினைக் கேட்பாயாக, ஆமவசையம், பகுவசையம், சலவசையம், மலவசையம், சுக்கிலமவசையம் என்று ஐந்தாகும். ஆமவசையம் உணவும் நீரும் உடலில் எங்கு தங்கி யிருக்கிறதோ அதன் அந்த இடமாகும்.

இயம்பிடவே பகுவசைய மாவதுதான் விளம்பில்
　　இயன்ற வன்னந்தண்ணீர் தானேக மாராய்ந்து
புயம்பிடவே பிறியுமிடமா மலவசையம் புகலில்
　　புசித்த தெல்லாம் மலமாகிப் போக்குமிடமாம்
தயம்பிடவே சலவசையஞ் சாப்பிட்ட நீர்தான்
　　தாங்கியே யிருக்குமிடஞ் சலப் பையாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ் சொல்லில்
　　சுகமாகச் சுக்கிலப்பை யென்று சொல்லே 48

பகுவசையம் என்பதின் செயலாவது உணவையும், நீரையும் பிரிக்குமிடமாகும். மலவசையம் என்பது உண்ட உணவை யெல்லாம் செரிப்பித்து மலமாக மாற்றுமிடம். சலவசையம் என்பது சாப்பிட்ட நீர் தங்கியிருக்குமிடமாகிய சலப்பையாகும். சுக்கிலவசையம் என்பது சுக்கிலப் பையாகும்.

சொல்லான வசையமை ந்தின் தொகுப்புச் சொன்னேன்
சூட்சமாங் கோசமைந்தின் சுருக்கு கேளாய்
அல்லான வன்னமய கோசத் தோடும்
அரிதான பிராணமய கோச மாகும்
மல்லான மனோமயமாம் விக்யான மயமாம்
மகத்தான வானந்த மயமு மைந்து
மெல்லான விதின்விரிவு விளம்பக் கேளாய்
மெய்வாய் கண்மூக்கோடு செவியு மாமே 49

இதுவரை வசையங்களின் தொகுப்பைக் கூறினேன். இனி கோசத்தின் சுருக்கைக் கேட்பாயாக. அன்னமயக் கோசம், பிராணமயக் கோசம், மனோமயக் கோசம், விக்யானமய கோசம், ஆனந்தமய கோசம். இதன் விரிவைக் கேட்பாயாக, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஐம்பொறி களாகும்.

ஆமென்ற தைம்பொறியின் பிரிதிவியின் கூறால்
அன்னமயக் கோசத்தில் அப்புவந் தணைந்தால்
ஊமென்ற வூனுண்டாகும் பிராணமய கோசம்
உந்தியிலே தேயுவந்தால் புத்தி யுண்டாம்
பாமென்ற மனோமயமாங் கோச மாகும்
வாயுவிதில் வந்தடைந்தால் விகார முண்டாம்
நாமென்ற விஞ்ஞானமய கோசமெனப் பேராம்
நலத்தவாதம் வந்தால் சுகமுண் டாமே 50

ஐம்பொறிகளும் மண்ணின் கூறுகளாகும். அன்னமயக் கோசத்தில் நீர்வந்து அமைந்தால் உடலில் ஊன் பெருகி பிராணமயக்கோச மாகும். உந்தியிலே தேயுவந்து கூடினால் புத்தியுண்டாகி மனோமயக் கோசமாகும். இதில் வாயு வந்து சேர்ந்தால் விகார முண்டாகும். அதற்கு விஞ்ஞானமயக் கோசம் எனப்பெயராம். இதில் நல்ல குணமுள்ள வாதம் வந்து அணைந்தால் சுகமுண்டாகும்.

வந்தாலா னந்தமய கோசமெனப் பேராம்
மகத்தான கோசமைந்தில் எடுத்தவுட லதுதான்
குந்தான கோசமைந்தின் குணத்தைச் சொன்னேன்
குறிப்பான ஆதாரம் ஆறுங் கேளாய்
முந்தான மூலாதாரஞ் சுவாதிட் டானம்
முதிர்ந்தம ணிபூரகம னாதகம் விசுத்தி
அந்தாலாக் கினையுமா தார மாகும்
அடுக்கான ஆதாரத் தாண்மை கேளே 51

அவ்வாறு வாதம் சேர்ந்தால் அதற்கு ஆனந்தமய கோச மெனப் பெயராகும். இவ்வாறு ஐந்து வகை கோசத்தால் ஆனது

இவ்வுடலாகும். கோசமைந்தின் குணத்தைக் கூறினேன். இனி ஆறு ஆதாரங்களைக் கேட்பாயாக. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கினை என்று ஆறாகும்.

கேளே மூலாதாரங் குதங்குய்யத் துக்கும்
கெடியாக நடுவிருக்கு மபானத் தின்மேலே
வேளே வீணாத்தண்டின் கீழி ருக்கும்
மிக்க நடு வேயோரங் குலப்பிர மாணம்
மூளே முக் கோண நாலிதழ்க் கமலமாகி
முனித்த நாலிதழ்தனினா லட்சரத்தை யுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்திரம் ரீங்காரய்
வல்லபையாஞ் சத்திவலப் பக்க மாமே 52

மூலாதாரம் குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவில் அதாவது எருவாய்க்கும் நீர்த்தாரைக்கும் நடுவில் அபானத்துக்கு மேலே வீணாத்தண்டின் கீழே அமர்ந்திருக்கும். இது ஓரங்குலப் பிரமாணம் முக்கோண நாலிதழ்க் கமலமாகி இத்மூக்கு ஒரு அட்சரம் வீதம் நான்கு அட்சரத்தை உடையது. இது முக்கோணத்தின் நடுவில் ரீங்காரம் என்னும் மந்திரம் அமைந்திருக்கும். இக்கோசத்தின் வலப்பக்கம் வல்லமையாக சக்தி வீற்றிருப்பாள்.

பக்கமா மந்திரமும் ரீங்கார மாகும்
பகரான தெய்வம்விக் கினேசு ரன்றாள்
வக்கமா மூலத்தில் வங்கென்று நிறுத்தி
வாசியைநீ மறவாமல் மாட்டி யூதி
ஒக்கமா மூலத்தின்கீ ழடியிற் றானும்
ஒங்காரக் கம்பமதின டியிற் கட்டி
இக்கமா மிருவரையுந் தெரிசித் தக்கால்
இகபரமும் வெளியாகி யேறலாமே

இதன் மந்திரம் ரீங்காரம் தெய்வம் விக்கினேசுவரன் இதனை மூலத்தில் வங்கென்று நிறுத்தி சுவாசத்தை மடக்கி மூலாதாரத்தில் இருக்கவைத்து இருவரையும் தரிசித்தால் மூலாதாரத்தில் இருந்து அடுத்த ஆதாரத்திற்கு ஏறலாம்.

ஏறவே பளிச்சென்று மூலத் தீதான்
இதற்குமே லிரண்டாமங் குலத்தின் மேலே
கூறவே நால்வட்ட மாறி தழ்த்தான்
குறித்தசுவா திட்டான மின்னொ ளித்தான்
ஆறவே யாறாமட் சரமு டைத்தாய்
அதற்குள்ளே பிருதிவி தான்குடி யிருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோ டல்லாம்
விளங்கியதோ ரட்சரமு நகார மாமே 54

மூலத்தியானது மேலெழுந்து மூலாதாரத்துக்கு மேல் இரண்டங்குலத்தில் உள்ள சுவாதிட்டானம் என்னும் ஆதாரத்தில் தங்கிவிடும். இது மின்னலின் ஒளியைப் போன்றது. இதில் பிருதிவி குடியிருக்கும். இதில் ஆறிதழ்கொண்டதாக இருக்கும். இது வேதம் இருக்குமிடம், இதற்கு அட்சரம் நகாரம் ஆகும்.

நகாரமா மெழுத்ததுவும் பிரம னாகும்
லவ்வான பீசமது பிரிதிவிக் காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக் கொண்டு
உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவு தோன்றும்
சிகாரமா முப்புரிநூல் சிரசு நாலு
சிறந்தசர சுவதியுமங் கேதெளிவாய்க் காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம் பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்ப தாமே. 55

இதன் கடவுள் பிரம்மனும் சரசுவதியுமாகும். லகாரம் என்பது பிருதிவியின் பீசாட்சரம். இந்த மந்திரத்தின் நடுவாகிய உகாரத்தை மனதில் எண்ணிக் கொண்டு மூச்சை கும்பகம் செய்ய அறிவு தோன்றும். முப்புரிநூலை அணிந்த நான்கு தலைகளையுடைய பிரம்மன், மற்றும் சரசுவதியை தொழுது தரிசித்து வந்தால இவ்வுலக மாயையிலிருந்து விடுபட்டு பண்புள்ளவனாக ஆகலாம்.

பன்மையா மாறாமங் குலத்தின் மேலே
பதிந்தபிறைப் போலமணி பூர கந்தான்
தொண்மையாஞ் சுற்றிலும்பத் திதழ தாகிச்
சுயம்பான வட்சரமும் பத்துந் தானாய்
அன்மையா மப்புதனக் கிடம தாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விண்டு வாகித்
தன்மையாம் பக்கத்திற் சக்திலட் சுமியாம்
தயங்காத வட்சரந்தான் மகார மாமே. 56

சுவாதிட்டானத்துக்கு ஆறங்குலத்துக்கு மேலே பிறைபோல் வடிவத்திலுள்ளது மணிப்பூரகமாகும். பத்திதழைக் கொண்டது. எனவே அட்சரமாகிய எழுத்துக்கும் பத்தாகும். இது நீரின் இருப்பிடமாகும். இதன் கடவுள் திருமாலும், இலட்சுமியுமாகும். இதன் அட்சரம் மகாரம்.

மகாரமா மட்சரந்தான் விஷ்ணு வாகும்
மகத்தான மவ்வதுவு மப்பு பீசம்
விகாரமாம் வேதமதோ யசுரு வாகும்
மெய்நிறைந்த கவுத்வமணி பஞ்சா யுதம்

நிகாரமாமி லக்குமிதான் பாக மாகி
நேர்மையாய் வாசியைத்தான் மங்கென நிறுத்தி
உகாரமா யூதினால் உலக வாழ்க்கை
ஒருநொடியில் வெளியாகும் மூணிப் பாரே 57

மகாரம் என்ற எழுத்து திருமாலாகும. "மவ்" என்பது நீரின் அம்சமாகும். இதன்பேதம் யசுர்வேதமாகும். உடலெங்கும் கவுத்வமணிமாலைகளை அணிந்து கையில் ஐந்துவகை ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இலட்சுமியை பக்கத்தில் அமர்ந்திருக்கச் செய்யும் திருமால் இவ்விடத்தில் வீற்றிருப்பார். வாசியோகம் பயிலும் காலத்தில் உகாரத்தில் ஊதி மங் கெனும் எழுத்தில் கும்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உலகவாழ்க்கையின் சூட்சுமம் ஒரு நொடியில் தெரியும்.

ஊணியிதன் மேலிரு நாலங் குலந்தான்
உத்தமமா மனாகதத்திவ் வீடு மாகும்
தோணியேதிரி கோணம்பனி ரெண்டாமிதழ் தான்
சுற்றிலுமே பனிரெண்டட் சரமு டைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்பு மாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்பு மாகிப்
பூணியே பூதபீசம் ரவ்வு மாகிப்
புகழான உருத்திரனும் புரிந்தார் பாரே 58

இவ்விடத்துக்கு எட்டங்குலம் மேலே அனாதகத்தின் வீடு ஆகும். இதன் வடிவம் முக்கோணம். இது பன்னிரெண்டு இதழ்களையும் இதழுக்கு ஒரு அட்சரமாய் பன்னிரெண்டு எழுத்துக்களையும் உடையது. இது தேயு பூதத்துக்கு இருப்பிடமாகும். இதன் பீசாட்சரம் 'ரவ்' ஆகும். இதன் தெய்வம் உருததிரன் ஆகும்.

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன் ருத்ரியும்
புகழாக வாசிவைத்துச் சிங்கென் றூது
கரித்திருந்த காயமுமோ வாலை யாகும்
கனிசாம வேதத்தின் கருத்துத் தோன்றும்
பரித்திருந்த விதற்குமேல் பனிரெண்டங்கு லந்தான்
பார்வையாய் மேலேறில் விசுத்தி வீடு
அறிந்திருந்த வறுகோண சோடசமா மிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சரமு மாமே 59

உருத்ரனும், உருத்திரியுமாகிய சிவனும் பார்வதியும் குடியிருக்கும் அநாதகத்தில் வாசியோகம் பயில்வோர் சிங்கென்று ஊதினால் அவர்களுடைய உடல் வலுக்கும். இளமைபெறும். கனிவைத் தரும். சாம வேதத்தின் உட்பொருள் விளங்கும். இதற்கு

பன்னிரெண்டங்குலம் மேலே இருப்பது விசுத்தியின் வீடாகும். இது ஆறுகோணவடிவமும், பதினாறு இதழ்களையும் இதழுக்கு ஒரு அட்சரமாக பதினாறு அட்சரமும் இருக்கும்.

ஆமெனவே வகாரந்தான் அறுகோண நடுவே
அமர்ந்திருந்தார் மகேசுரன் மகேசு வரியும்
வேமெனவே யதர்வண வேதத் தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக் குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வு மாகும்
புகழாகக் கும்பகஞ் செய்தூ திவூதி
வாமெனவே வங்கெனவு மிருத்திப் பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதில் காணே 60

அறுகோணத்தின் நடுவில் உகாரம் இருக்கும். இதன் தெய்வங்கள் மகேசுவரனும், மகேஸ்வரியும் ஆகும். அதர்வண வேதத்தின் இருப்பிடமாகும். வாயு பூதத்தின் இருப்பிடம். இதன் பீசாட்சரம் 'யவ்'வாகும். இதில் சுவாசத்தைக் கும்பகம் செய்து 'வங்' என்று ஊதி இருத்திவைக்க ஒரு வருடத்தை ஒரு நாளாகக் காணலாம்.

காணவிதன் மேலிரெட் டங்கு லந்தான்
கண்டமா ருதம் புருவ மளவா யாகி
ஊணவே யிரண்டிதழா யோங்கி நிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டு மாகும்
ஆணவே நடுவுக்குள் யகாரம் நிற்கும்
ஆக்கினையின் வீடாகு மாகாச மிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வு மாகும்
புகழான மாணிக்கப் பிரபை யாமே. 61

விசுத்திக்கு எட்டங்குல உயரத்தில் புருவமையத்தில் இரண்டு இதழாக ஓங்கி நிற்கும் இதழுக்கு ஒன்றாக அட்சரமும் இரண்டாகும். இதன் நடுவில் யகாரம் இருக்கும். இங்கு ஆகாய பூதம் தங்கி இருக்கும். இதன் பீசாட்சரம் 'யவ்' வாகும். இதன் ஒளி மாணிக்கம் போன்றது.

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்தி நிற்கும்
யங்கென்று கும்பித்தா லனேக சித்தி
மவ்வு பரமானந்தம் மருவி நின்று
மகிழ்ச்சியாங் கருவிகளி னிடம தாகி
அவ்வுடமை யைம்புலன்றனையு மறியப் பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயக்கங் காட்டி
உவ்வுள்ளபடி நடத்திக்காண் பனகேட் பனவாய்
உகந்துகுரு வெழுந்தருளி விவாதிப் பாரே. 62

அந்த இடத்தில் சதாசிவனும் சத்தியும் வீற்றிருப்பர். அங்கு சுவாசத்தைக் கும்பித்து 'யங்' என்று கும்பித்தால் அனேக சித்தி உண்டாகும். பரமானந்தத்தை அடைவார்கள். ஐம்புலன் களையும் ஆட்சிசெய்து அறிவு நினைவு என மயக்கம் காட்டி வைக்கும். இது குரு எழுந்தருளி விவாதம் செய்யுமிடமாகும்;

பார்க்கவே யாதார மாறு மாச்சே
பரிந்திட்ட தத்துவங்கள் முப்பத் தாறும்
சேர்க்கவே சிவதத்துவ மாகுங் கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கண் மூன்றுங் கேளாய்
ஆர்க்கவே யக்கினி மண்டலத்தி னோடு
ஆதித்தமண் டலஞ்சந்தி ரமண்ட லந்தான்
தோர்க்கவே யிதன் சூட்சி சொல்லக் கேளாய்
கருதியா மூலமென்ற துடர்ச்சி தானே 63

இதுவரை ஆதாரம் ஆறையும் விளக்கிக் கூறிவிட்டேன். இதுவரை கூறிய தத்துவங்கள் முப்பத்தியாறும் சிவதத்துவங்கள் ஆகும். இனி மூன்று மண்டலங்களைக் கூறுகிறேன் கேட்பாயாக. தீமண்டலம், ஞாயிறு மண்டலம், சந்திரமண்டலம், என்ற மூன்றும் ஆகும். இனி அவற்றை விரிவாகக் கூறுகிறேன் கேட்பாயாக.

துடர்ச்சியாஞ் சுவாதிட்டா னத்தின் கீழே
சுகமாக நடுமைய மணிமண் டலந்தன்
முடர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும் பரவி
முனைந்தசு வாதிட்டான மட்டு நிற்கும்
மடர்ச்சியா மணிபூர மனாதகத்தின் நடுவே
வளையம் போன்ற சூரியமண் டலந்தா நிற்கும்
படர்ச்சியா மணிபூர மனாதக கத்திற்
படர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான் பாரே 64

தொடர்ச்சியாக சுவாதிட்டானத்துக்குக் கீழே நடுமையமாக மூலாதாரம்வரை முச்சுடராக மணிமண்டலம் பரவி நிற்கும். சுவாதிட்டானத்துக்கும் மணிப்பூரத்திற்கும், மணிப்பூரகத் திற்கும் அநாதகத்துக்கும் இடையில் சூரியமண்டலம் இருக்கும்.

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப் போமோ
பரந்தோடும் வாசியைநீ மாட்டிப் பாரு
வேரென்றால் விசுத்தி மேலாக்கினையின் கீழே
விளங்கியெழுஞ் சந்திரமண் டலந்தான் பாரு
தூரென்றால் துவாதசாந் தத்தின் மட்டும்
சுடரொளியாய் பிரகாச மாகி நிற்கும்
மூரென்றால் மண்டலங்கள் மூன்று மாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவு கேளே 65

இதை பிராணாயாமம் முறைப்படி செய்பவாகள் மட்டுமே கண்டுகொள்ளமுடியும். மற்றவர்களால் முடியாது. விசுத்திக்கு மேலும் ஆக்கினைக்கு கீழும் உள்ளபகுதி சந்திரமண்டலத்துக்கு உரியதாகும். அதிலிருந்து துவாதசம்வரையுள்ள பகுதி தீ மண்டலத்துக்கு உரியது. ஆக மூன்றுமண்டலங்களினையும் குறித்துக் கூறியுள்ளேன். இனி முன்றுமலங்களையும் பற்றிக் கூறுகிறேன்.

முடியான வாணவமு மாயை காமியம்
முயற்சியாய் யிதின்பிரிவான் முடியு மாறு
திடியான செம்பினிற்றான் களிம்பு போலும்
சிறுநெல்லி னுமிபோலு மாத்து மாவை
முடிவான மேலெழவொட் டாமற் காத்து
முடிவித்துத் தன்னதெல்றே காத்தி ருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக் கொண்டே
வருகிறது தெரியாமன் மடிக்குந் தானே 66

ஆணவம், கன்மம், மாயை என்பவையே மும்மலங்கள் ஆகும். இவை செம்பிலுள்ள களிம்பு போலவும், நெல்லின் உமியைப் போலவும் ஆன்மாவை மேலெழவொட்டாமல் தடுத்துக் காத்து பின் முடிவடைய் வைக்கும். தான், தனது என்ற உணர்வை மேலோங்கி நிற்கச் செய்யும் மாய்கையானது. ஆணவத்தைத் துணைக்கொண்டு பின்பு வருவதை தெரிய விடாமல் மடித்து விடும்.

மடிக்கின்ற காமியம் கண்டதுக் கெல்லாம்
மகிழ்ந்திடுதன் மாயைமுற்று வித்து நிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலு மாச்சு
தோடமூன் றாவனவாஞ் சுளுவு கேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேட்ப மூன்று
நலமான விதன்விரிவு நாட்டக் கேளாய்
வடிக்கின்ற வாதமது வாயுநிலை கலங்கி
மத்தியமா மக்கினியு மார்க்க மாமே 67

அழிவை உண்டாக்கும் காமியம் ஏல்லாவற்றுக்கும் மகிழ வைக்கும். மாயை என்பது எல்லாவற்றையும் முடித்து வைக்கும். இவை மூன்றுமே மும்மலங்களின் செயல்களாகும். இனி முத்தோடங்களைக் கேட்பாயாக. வாத, பித்த, கபம், என்னும் மூன்றுமே அவையர்கும். இனி அவற்றின் விரிவைக் கேட்பாயாக. வாதமானது வாயு கலங்கி இடையிலுள்ள அக்கினியின் வழி செல்லும்.

மார்க்கமாம் பித்தந்தா னக்கினியி னிலையை
மசக்கிவைத்து மாய்கையுடன் வருத்தி வைக்கும்
தூக்கந்தான் சேட்பமது சலமிகுதி யாக்கித்
துவாரங்க டோறுமிடை விடாம னிற்கும்
மூர்க்கந்தான் தோடமிது மூன்று மாச்சு
மூண்டடதோ ரேடணைகள் மூன்றைக் கேளு
நோர்க்கந்தா னர்த்த வீடணை யினோடு
லோக வீடனைகாம வீடணை மூன்றாச்சே 68

பித்தமானது அக்கினியின் நிலையை மயங்கச் செய்து மாயையுடன் இணைத்து வருத்த வைக்கும். கபமானது நீர்த்தன்மையை அதிகமாக்கி உடலில் உள்ள துவாரங்கள் அனைத்திலும் இடைவிடாமல் நிற்கும். ஆக தோடங்கள் மூன்று ஆச்சு. இனி ஏடணைகள் மூன்றைக் கேட்பாயாக. அர்த ஏடணை, உலக ஏடணை, காம ஏடணை என்ற மூன்றாகும்.

ஆச்சென்ற மூன்றையுந்தா னறியக் கேளாய்
அதிகமா அர்தவீ டணைகு ணந்தான்
வேச்சென்ற வர்த்தமதின் மேலாசைப் படுதல்
விளங்கியதோர் லோகவீடணை யதனைக் கோளாய்
காச்சென்ற காணியுட னுறவுந் தேடிக்
காரியங்க ளதின்மே லாசை யாகும்
ஆச்சென்ற காம ஏடணை காமியத்தைத் தேடி
யாசையது படுதலீடணை மூன்றாமே 69

ஏட்ணைகள் மூன்றின் விரிவைக் கேட்பாயாக அர்தவேடணை என்பது பொன் பொருட்களின் மேல் ஆசை வைத்தல். லோக ஏடணை என்பது மண்ணின் மீது ஆசை வைத்தல். காம ஏடணை என்பது பெண்மீது ஆசை வைத்தல் ஆகும். ஆக ஏடணைகள் மூன்றாச்சு.

மூன்றான பின்புதான் குணந்தான் மூன்று
மொழியவே ராசதந்தா மதஞ் சாத் வீகம்
வேன்றான விதின்விரிவு விளம்பக் கேளாய்
வெகுளிபல பேசாதிருத்தல் வேண்டுவது கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந் தாரைக் காத்தல்
தகமையுட லுயிர்களைத்தம் முயிர்போ லெண்ணல்
பான்றான பகைவரை வென்றிடுத னீங்கல்
பலகலைகள றிதல்பயில் பண்புண் டாமே 70

குணம் எனப்படுவது மூன்றாகும். அவை இராசதம் தாமதம், சாத்வீகம் என்பனவாகும். அதன் விரிவைக் கேட்பாயாக. வெகுளி பேசாதிருத்தல், பிறருக்கு தானம்செய்தல், தன்னைச் சார்ந்து

உள்ளவர்களைக் காத்தல். மற்ற உயிர்களையும் தன் உயிர்போல காத்தல். பகைவர்களை வெல்லுதல் பலகலைகளை கற்றல், ஆகியவையும்,

உண்டுலகினுக் கங்கோருறுதி யென்ன வாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழே பூண்டல்
தண்டுதா டாண்மையொடு மேம்பாடான
சாற்றியதோர் குணமெல்லா ாாசதத்துக் காகும்
மிண்டு தா மதகுணமு மேதோ வென்னில்
மிகுதியாய் வஞ்சனையே செய்த லாகும்
வண்டுவழி பாடொழிதல் வாதுபோ ராடல்
வணக்க மில்லாவெகுளியே விளம்ப லாமே 71

உலகில் ஓர் உறுதிஉண்டு என வாழ்தல், உண்மையாக ஆய்ந்தறிதல், புகழை அணிகலனா விரும்பல், ஆகிய குணங்களும் இராசத குணத்துக்காகும். தாமத குணத்தின் பண்புகள் என்னவென்றால் வஞ்சனை செய்தல், பழமையான வழிபா களை ஒழித்தல், வாக்குவாதம் செய்தல், மரியாதை செய்யாதிருத்தல் வெகுளல் ஆகியவை ஆகும்.

விளம்பவே செய்தநன்றி மறத்தல் விந்தை
மிகப்பேசல் சிதைந்துமுரை மிடுக்குப் பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக் கூறல்
முகத்துடனே பேசல் பகையுடனே வாழ்தல்
புளம்பலே பொய்கொலைகள் களவு காமம்
பொல்லாங்கு யாவையுமே புகன்று பேசல்
களம்பலே காமத்தின் குரோத மிக்க
கடிந்திடுந் தாமத குணத்தின் காட்சி யாமே 72

மேலும் செய்நன்றி மறத்தல், பொய்யாக பேசல், பலமாகப் பேசுதல், பழிகூறல், பகை கொண்டும் பகைக்கப்பட்டும் வாழ்தல், பொய், கொலை, களவு, புறஞ்சொல்லல், தகாத இச்சைவழிச் செல்லல், ஆசையினால் கோபம் கொள்ளுதல், ஆகியனவும் தாமத குணத்தின் பண்புகளாகும்.

காட்சியாஞ் சாத்வீகந்தா னேதோ வென்னில்
கமறு கடிவு சாந்தம்வாய் மைதயை யொடுக்கம்
தாட்சியந் தண்ணளிவுக் குகந் திடுநற் சீலந்
தயவான குணமன்பு பெருமைபுகழ் பூண்டல்
மாட்சியா மறையனிறை மண் மயக்கம் பூண்டல்
வறிஞோரை வாழ்வித்தல் நல்லோர்க் கீதல்
நாட்சியா யிறைவனடி யினைப் ப்ணிதல்
நல்லோர்க்குப் பொருளீதலறந் தேடல் தானே 73

சாத்வீக குணத்தின் பண்புகள் என்னவெனில் சாந்தம், வாய்மை, அடக்கம், தன்னால் இயன்றவற்றை செய்தல், நல்ல பண்புகள், அன்பு, பெருமை, புகழ், அளிக்கக் கூடியவற்றை மட்டும் செய்தல், நல்ல நூல்கள் கூறியபடி வாழ்தல், ஏழைகளை வாழவைத்தல், நல்லவர்களுக்கு தானம் செய்தல், இறைவனைத் தொழுதல், அறம் செய்தல் ஆகியனவும்.

அறந்தேடல் உறவின்முறை சுற்றத் தாரை
அகதிபர தேசியருக் கன்ன மீதல்
திறந் தேடல் தெய்வமறை யோரை காணல்
தேவதைகட் குபசாரச் சிந்தை செய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேட லின்பப்
பூசுரருக் காகுதிகள் பலிகொ டுத்தல்
தறந்தேடல் சாத்வீகத்தின் குணமீ தென்று
சாற்றினோங் குணமூன்றின் தன்மை தானே 74

அறத்தை மட்டுமே செய்தல், உறவினர், சுற்றத்தார், அநாதைகள், வேறு ஊரிலிருந்து வந்தவர்கள் ஆகியோருக்கு உணவளித்தல் வேதவிற்பன்னர்களுக்கு உபசாரம் செய்தல், தேவதைகளுக்கு பூசைசெய்தல், உபசார சிந்தனை, புண்ணியங்கள் தேடுதல் பலிகொடுத்தல் ஆகியவை சாத்வீக குணம் என்று கூறினோம்.

தன்மையாய் வினையதனைச் சாற்றக் கேளாய்
சார்ந்ததோர் நல்வினை தீவினை யிரண்டாம்
பன்மையாம் வினையிரண் டின் பயனே தென்னில்
பரவிய நல்வினையதுதான் புண்ய மாகும்
தின்மையாந் தீவினைதான் பாவ மாகும்
சேர்ந்தவினை யிரண்டாலே நரக சொர்க்கம்
புண்ணியஞ் செய்தவர்க்குநல்ல சுவர்க்க மாகும்
பொல்லாத பாவிகட்கு நரக மாமே 75

வினையின் இரண்டுவகையைக் கேட்பாயாக. நல்வினை, தீவினை என்று இரண்டாகும். அவற்றின் பயன் என்ன வென்றால் நல்வினை செய்ய புண்ணிய மாகும். தீவினை செய்ய பாவமாகும். இதனால் நன்மை செய்தோர்க்கு சுவர்க்கமும், தீமை செய்தோர்க்கு நரகமும் உண்டாகும்.

ஆமேதானிராக மெட்டை யறையக் கேளாய்
அதிகாமக் குரோதமொடு லோப மோகம்
வாமேதான் மதமாற்சரிய மிடும்பை வேகம்
வகையாக விதன்குணத்தை வழுத்தக் கேளாய்

காமேதான் காமமெனல் ஆசை யாகும்
கடிதான குரோதமெனல் பிணக்க தாகும்
போமேதன் லோபமெனல் பிடிப்ப தாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரிய மாமே 76

என்வகை இராகங்களைப்பற்றி இனி கூறுகிறேன் கேட்பாயாக. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் மாச்சரியம் இடும்பை, வேகம், என்பனவாகும். இனி அவற்றின் குணத்தைக் கேட்பாயாக. காமம் என்பது ஆசையாகும். குரோதம் என்பது பிணக்கு ஆகும். உலோபம் என்பது ஏதேனும் ஒரு பொருளில் பிடிப்பேற்படுவது. மோகம் என்பது பிரியமாகும்.

பிரியா மதமதுதான் கெர்வ மாகும்
பெரிதான மாற்சரிய மிடும்பாங் காரம்
உரியமா மிடும்பையுதா சனை களாகும்
உறவேக மாவதுக டூர மாகும்
நரியமா மிராகத்தின் தன்மை சொன்னேன்
நாசமா மவத்தை யைந்தினாட் டங்கேளாய்
அரியமாஞ் சிற்றவத்தை யாமிதனின் போக்கு
ஆக்கிர சாக்கிரமுஞ் சொற்பனமு மாமே. 77

மதம் என்பது கர்வமாகும். மாச்சரியம் எனப்படுவது பொருமையாகும். இடும்பை என்பது உதாசீனம் செய்தலாகும் வேகம் என்பது கொடூரமான செயல்களாகும். இவ்வாறாக இராகம் எட்டின் தன்மைகளைக் கூறினேன். இனி அவத்தைகள் ஐந்தின் போக்கினைக் கேட்பாயாக. சாக்கிரம், சொற்பம் என்பவற்றோடு,

சொற்பனஞ் சுழுத்திதுரியந் துரியா தீதம்
சொல்லுமிவை தானவத்தையைந் தாகச் சொல்வர்
நிற்பனமாஞ் சாக்கிரந்தா நெற்றி நேரே
நிறைந்திருக்குங் கருவியிட நியம மாகக்
கற்பனமாஞ் சொற்பனமுங் கண்டத் தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத் தோடே
இற்பனமாஞ் சுழுத்தி தானிதயத் துள்ளே
இயங்கி நிற்குங்கருவியுட னியம்பி டாயே 78

மேற் கூறியவற்றோடு சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை ஐந்து சிற்றவத்தைகளாகும். நெற்றிக்கு நேரே உள்ள ஆதாரத்தில் சாக்கிரமும், கழுத்துக்கு நேரேயுள்ள ஆதாரத்தில் சொப்பனம் என்னும் அவத்தையும், இதயத்துக்குச் சரியாக சுழுத்தி என்னும் அவத்தையும்,

இயம்பிடவே துரியநாபிக் கமலந் தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கி நிற்கும்
முயங்கு துரியாதீத மூலா தார
மூர்க்கமாங் கருவியுட்னமர்ந் திருக்கும்
கயம்பிடவே கருவிகடான் தொண்ணூற் றாறும்
காரியமாய் தேகத்தைக் காத்து நிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத்து வமாந் தானே
வேதமாம் வித்தியாதத் துவமா மென்னே 79

நாபிக் கமலத்துக்கு இணையாகி துரியம் இருக்கும். மூலாதாரத்தில் துரியாதீதம் அமர்ந்திருக்கும். ஆக தொண்ணூற்றாறு கருவிகளும் இணைந்து நின்று உடலைக் காக்கும். இந்த முப்பது தத்துவங்களும் வித்தியா தத்துவங்கள் எனப்படும்.

தத்துவமாங் கருவிக்டான் றொண்ணூற் றாறும்
சடத்தி லெங்குமூடா டித்தகமை யாகும்
உத்துவமாயு டலதனி லுண்மை கேளாய்
உதிரவங் கனெனும்புவி யிலுற்ப வித்து
அத்துவமாமப் போதுதுள்ளித மாய்ம லர்ந்து
அத்திமுகத் துக்கருவிட்டாக வுருத் தரித்து
சத்துவமாவவ் வுருவாய்அ வயத் தின்கண்
தாக்கான அவ்வென்னுமட் சரந்தா னாமே 80

இவ்வாறு கருவிகள் யாவும் உடலில் முழுதுமாக சென்று தத்தம் பணிகளைச் செய்யும். வயிறு என்னும் புவி வாழுமிடத்தில் உள்ளிதமாய் தோன்றி அத்திமுகத்துக்கு இருப்பிடமாகவுள்ள இடத்தில் இருந்து உருவமாக மாறி சத்துவ குணத்தைப் பெற்று அவ்வென்னும் அட்சரத்தை தன் எழுத்தாகக் கொண்டு அமைந்திருக்கும்.

அவ்வென்னு மட்சரத்தி னாடி தோன்றும்
அந்நாடி தனினின்று தத்துவந்தான் தோன்றும்
எவ்வென்னு மெலும் புதசையின் புடையும் நரம்பும்
ஈரெட்டுப் ப்ழுவோடிரண் டுகொங் கையுமா
முவ்வென்னு மூட்டுக்காலெட் டெட்டு வளையா
மூட்டிய்மனத் தவ்வனே யோருரு வமாக்கி
சுவ்வென்று மிடையோடு பிங்கலையுஞ் சேர்த்துச்
சுழிமுனை யென்றொருதொளையும் வழிய தாமே. 81

அவ்வென்னும் அட்சரத்தில் இருந்து நாடி தோன்றும். அந்நாடியிலிருந்து தொண்ணூற்றாறு தத்துவங்களும் தோன்றும். அது எலும்பு, தசை, புடை நரம்பு, பழு எலும்புகள், மார்புகள்,

மூட்டுகள் ஆகியவற்றைக் கொண்டு ஒரே உருவமாக்கி, இடகலை, பிங்கலை, சுழிமுனை என்று சுழன்று ஓடும்.

வழியதுவாய் வாசல்வள மெனக் கொண்டங்கே
வளமாக வுடனுண்ட வன்மை யெல்லாம்
சுழியதுவாய்க் காளவாய்க்கி டுகாந் தலாகிக்
ககனம்போ லெரித்துமே மடியப் பாய்ந்து
சுழியதுவாய்த் தூராத குழிய தாகத்
துர்ப்பாவை நிணமுமாய்ப் பற்றி யீரலுமாய்ப்
பொழியதுவாய்க் காளித நாறிய பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியாமே 82

நாம் உண்ட உணவின் சாரமானது சுழிமுனைவழியாக சுண்ணாம்புக்காளவாய்க்கு தீயிட்டதுபோல் மேல் நோக்கிப் பாய்ந்து குழந்தையின் உடலுக்குள் பாய்ந்து நிணமாகவும், ஈரலாகவும், உண்டாகி பித்தம் ஏற்பட்டு பொருமலும், செருமலும் போன்ற செயல்களை உண்டாக்கி கிருமியாக அமையும்.

கிருமியாய் வகைதோறும் வாயுவைத்தா னிறுத்தி
கிரணமுந் நூற்றறுபது மோங்குட னிரங்கலாகி
அருமையாயர்த்த விருத்திய மாந்தகுட லதுதான்
அமர்ந்த முப்பத்திரெண்டு முழங்குடலு மாகும்
ஒருமியா யொப்பமுட னொன்பது வாய்மடித்து
உற்றசுக்ல மலசலந்தான் மூன்று மாகி
வருமியாய் வச்சிரத்தோல் மேலே போர்த்து
வழி பலவாய் மொழி மொழியாய் சந்து மாச்சே 83

கிருமியாய் அமையுமிடத்தில் எல்லாம் வாயுவை நிறுத்தும் முந்நூற்றறுபது கிரணங்களுடன் கூடிய குடலானது முப்பத்திரெண்டு முழம் இருக்கும். அதில் ஒன்பது மடிப்புகள் இருக்கும். குடலினுள் சுக்கிலம், மலம், சலம் ஆகிய மூன்றும் தங்கி வச்சிரத்தோலால் மூடப்பட்டிருக்கும். குடலில் வழி பல இருந்து, குமிழ் குமிழாய் பல சந்துகளை உடையதாக இருக்கும்.

சந்துமூன்ற ரைகோடியு ரோமத் துவாரம்
தாக்கான நாலெட்டு உறுப்பு மாகி
இந்து விருபது விரலுமை நான்கு முகிரு
எட்டுச்சாண் நீளமுமா யேக மாகி
நந்துநற்சாண் பெருமைமெய் வாய்கண் மூக்கு
நலத்த செவியுடல் பிரிதிவியின் கூறாகிப்
பந்துரெண்டு காலுமாயி ரெண்டு கையாய்ப்
பதினாறு கவருடைய வீணாத் தண்டே. 84

உடலின் சருமத்தில் மூன்றரை கோடி உரோமத் துவாரம் உள்ளது. முப்பத்திரெண்டு உறுப்புகளாகி இருபது விரல்களும் இருபது நகங்களும் தோன்றும். எட்டு சாண் நீளமுள்ள உடல் முழுவடிவம் பெறும். இதில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் பிருதிவியின் கூறாக அமைந்துள்ளது. உடலானது இருகாகல்களும் இருகைகளும் பதினாறு பிளவுகளைக் கொண்ட வீணாத்தண்டுடன்,

தண்டோடே யாறுதெரு வேழுக டலாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பது வாஞ் சத்து
எண்டோடே யெழுபது பேரெலும்பு தானாம்.
ஏற்றமா மொழி முச்சா ணெலும்பு மாகும்
முண்டோடே யெலும் புமுச்சாண் சதை யாகும்
முக்கியமா மெண்பலமீர லுமா மென்ப
நண்டோடே நானாழியு திர மாகும்
நாற்பத்து வாசலையு முடைத்த தாமே 85

ஆறு ஆதாரங்களையும், பருத்த எலும்புகள் எட்டையும் தூணாகவும் எழுபது எலும்புகளையும், கை விரல்களில் முசசாண் எலும்புகளும், எட்டுபலம் ஈரலும். நான்கு நாழி உதிரமும் (இரத்தம்), நாற்பது வாசல்களையும் கொண்டது ஆகும்.

உடைத்திரட்சி யுதிரமாகி சமேதை யத்தி
உயர்ந்த சுக்கிலமச்சை சப்த தாது
படைத்த பல முப்பத் திரண்டு மாகும்
பண்பான பழுவெலும்பு பதினா றென்க
முடைத்த முதுகுத்தண்டு பன்னிரெண்டு கோவை
முதற் சூழ்ந்த தாளசைவ தைந்து மாகும்.
நடைத்த நரம்பெலும்பொன்றி யேழரையுங் கூறு
நலம் படவே சதைமேவி நாடிற் றன்றே 86

இரசம், இரத்தம், சதை, எலும்பு, மச்சை, மூளை, சுக்கிலம் என்பது ஏழுதாதுக்களாகும். இவை முப்பத்திரெண்டு பலமுள்ளதாக இருக்கும் பழு என்புகள் பதினாறு. முதுகுத்தண்டு பன்னிரெண்டு எலும்புகள் கோர்த்த ஒரு கொடி போலிருக்கும். ஐந்துவித அசைவுகளைக் கொண்ட மூட்டுக்களை கொண்டது. இவ்வுடல் மேலும் நரம்புகள் எலும்புகளுடாக ஓடி மேலே சதையை போர்த்தியிருக்கும்.

நாட்டியே பிடரியிற் கோத்த நாடி
நரம்புபின்ன லோரேழா யிரமா மென்க
ஆட்டியே ய்சைவுடலந் தான்று வக்கில்
ஆறாயிரத் துநாற்பத் தாற தாகும்

தூட்டியே தொழுததை யிரண்டாயி ரத்துத்
துடர்ந்து விண் வளருமையாயி ரமா மென்க
பாட்டியே கோணங்கள் பதினா றாகும்
பகர்சேட் டுமத்தின்குண் டலத்தி னனலே 87

பிடரியில் கோர்க்கப்பட்ட நாடிகள் ஏழாயிரம் ஆகும். உடலை அசைக்கச் செய்கின்ற நரம்புகள் ஆறாயிரத்து நாற்பத்தியாறு உடலை மேல்நோக்கி வளர்த்து இருக்கச் செய்கின்ற நரம்புகள் முதலில் இரண்டாயிரத்திலிருந்து பிறகு ஐய்யாயிரமாக கூடும். உடலில் கோணங்கள் பதினாறு உண்டு.

அனலெழும்பி வாயுபத்துநா டியிற் சுருங்கி
அல்லலுறும் வாசலொன்பதிற் கதவொன் றிட்டு
இனலெழும்பி யீசர்வாச லைத்தி றந்து
இடையினொடு பிங்கலைநாத னையே நோக்கி
நிணலெழுப்பி யன்பென்னு நெய் சொரிந்து
நேராக அமிர்தமென்னுந் திரியை விட்டு
வனலெழுப்பி மணிவிளக்கை நிறைய வேற்றி
வாசியைநீ வரவழைத்து வைத்துக் கொள்ளே 88

மூலாதாரத்தில் இருந்து அனல் எழும்பி பத்து வாயுக்களில் தங்கி ஒன்பது துவாரங்களில் கதவு ஒன்றை இட்டு அடைந்து நிற்கும். இடகலை, பிங்கலை என்று வழியே வாசலைத்திறந்து சென்று ஈசனை நோக்கி அன்பு என்னும் நெய்யைச் சொறிந்து, அமுதமென்னும் திரியைவிட்டு அனலை எழுப்பி வாசியை வரவழைக்கும்.

கொள்ளவே யைம்புலனை நாச மாக்கிக்
கோசமா மட்சரத்தை யள வறிந்து
அள்ளவே அன்பத்தோ ரட்ச ரத்தின்
ஆதார நிராதரஞ் சோதித் தேறி
உள்ளவே மண்டலத்தின் வலமாய் வந்து
உதிர மண்டலமொக் கப்பால் சொறிந்து
கள்ளவே காமம் வெகுளி மயக்க றுத்து
கடும்புரவி குசைதாங்கிக் கருதிப் பாரே 89

ஐம்புலன்களையும் அடக்கி, ஆறாதாரங்களிலும் கூறப் பட்டுள்ள ஐம்பத்தி ஒரு அட்சரங்களையும் ஒவ்வொன்றாக மேலேற்றி மேலுள்ள மண்டலங்களை வலம் வரவும். காமம், கோபம், மயக்கம் ஆகியவற்றை ஒழித்து குதிரைபோல் வேகமாக செல்லும் வாசியை அடக்கி உள்ளே காணவேண்டும்.

தாங்கியே யிருமூன்றுதெ ருவுஞ் சுற்றித்
தயங்காத வசுவங்க டெருவும் ரெண்டு
ஏங்கியே யேழாயிரத்திரு நூறு வாய்வு
இரவு பகலளவாக இமைப் பில்லாமல்
ஓங்கி ஓங்காரமெனு மூல நாடி
உறுதி கொண்டெழு பத்தீராயிர மாநாடி
நாங்கியே நரம்பொடு நாடியிவைக் கெல்லாம்
நலத்த வுரப்படுநாடியொன் றுண்டா குமே. 90

சுவாசமானது ஆறாதாரங்களையும் தாண்டி ஏழாயிரத்து இருநூறு சுவாசத்தை இரவு பகலாக நடக்கும். பிறகு ஓங்கார மூலநாடி மூலமாக எழுபத்தி இரண்டாயிரம் நாடி நரம்புகளில் தங்கி அவற்றை செயல்படுத்தும். இவை எல்லாம் சேர்ந்து ஒரு பெரு நாடியாகும்.

ஒன்றென்று மிதில் ஆதித் தன்போ னாடி
ஒருபத்தும் பிரித்துதான் பரந்த வாறும்
நன்றென்றுங் காலோடுகைநடுத் தாம ரையில்
நாடிநுழைந் துயிராகி மெய்யி லோடிப்
பிண்டுநரம் பாலெழும்பைப்பிணைப் பிசை வித்து
பெருநாடி புகுமத்தையறிந் தடங்கி நிற்கும்
அண்டெனவே நாடிபத்துஞ் செறிந் தடங்கி நிற்கும்
ஆதிமூல முந்திமுதலாகி யுறு மாமே 91

அந்த நாடியில் இருந்து சூரியன்போல் பத்து நாடிகள் பிரிந்து கைகால்களில் நடுவில் தாமரையாக உள்ள அநாதகத்தில் நுழைந்து உயிர் ஊட்டி உடலெல்லாம் சென்று எலும்பிலெல்லாம் புகுந்து அடங்கி நிற்கும். பிறகு பத்துவாயுக்களும் கூடி முன்போல்வே அந்த பெருநாடிக்குள் சென்று தங்கும்.

உறுமுடிக்குக் கீழ்மேலும்ப திந்து நிற்கும்
உகமையாந் தலையினிலே யீசு ரன்றான்
செறிவினை செய்வினைப்பயன் மூன்று மறிந்து
திகழிந்திர மான்றலைபோலி மைப்பா னுள்ளே
தறுவவுனைச் சத்தபரிசரூ பரச கந்தம்
தானம் வகைதொறுமுத்தி கொடுத்து நல்கி
துறுவினை செய்தகமை யறுத்துள்ளே தேக்கித்
தொண்ணூற் றாருங்கருவி தத்வ மாமே 92

தலையிலிருந்து பாதம்வரை எல்லா தத்துவங்களையும் பொருந்திய ஈசன், பழம்வினை, புதுவினை, ஆகியவற்றை முறைப்படி ஆய்ந்து அதற்குகந்தவாறு ஒலி, ஸ்பரிசம், உருவம்,

சுவை, மணம் ஆகியவற்றை உணரவைத்து முத்தி தருவார். அவ்வாறு தரும்பொழுது தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அது உள்ளடக்கியதாகவே இருக்கும்.

ஆமெனு நாடிநரம்பெழுபத் தீராயி ரமாம்
அதிவீறாம் நாடிவிஷ்ணு நாடி யாகும்
ஏமருத்ர நாடியிடை யொடுபிங் கலையும்
எழின்முது கெலும்புபதினாறு பழுவு மாகும்
மூமெனு முப்பத்தொருவாரக் கருவு மாகி
முதிர்ந்து நின்றவையுழக்கா முதிர மாகும்
நாமெனு நாழிவாத முந்நாழி பித்தம்
நானாழி சேட்டுமமு நலந்த தாமே 93

உடலில் எழுபத்திரண்டாயிரம் நாடிகள் உள்ளன. இதில் அதிக வீறுடயவை விஷ்ணுநாடி என்றழைக்கப்படும் உருத்ர நாடியானது இடகலையும், பிங்கலையுமாகும். முதுகெலும்பும் பதினாறு பழு என்புகளும் நம் உடலில் உண்டு. முப்பத்தி ஒரு வாரக் கருவாய் இருக்கும் பொழுது அங்கு இரத்தம் ஒரு உழக்களவு இருக்கும். அதில் ஒரு நாழியளவு வாதம், மூன்று நாழிஅளவு பித்தமும், நான்கு நாழி அளவு கபமும் இருக்கும்.

ந்லத்த மூன்ற ரைக்கோடி ரோமத்து வாரம்
நல்லி ருபத்தெண்கோடி மலத்து வாரம்
மூலத்த முப்பதெண்கோடி சலத்து வாரம்
முயன்றிரத்த மைப்பலமாங்கிச நூறுபலமாம்
கொலத்த கெந்தமெண்பலமாம் ரோமநூற் றெட்டு
கோடியாம் மேதையிருநூ றுபல மாகும்
பெலத்த தோல் முன்னூ றுபல மாகும்
பேரான நிணந்தானும் ஆறுப லமாமே 94

உடலில் மூன்றரைகோடி உரோமதுவாரங்களும், எட்டுகோடி கழிவுகளை அகற்றும் துவாரமும், முப்பத்தெட்டு கோடி நீர்த்துவாரங்களும் உண்டு. நம்முடலில் உள்ள இரத்தம் எட்டு பலமும், உரோமம் நூற்றெட்டு கோடியும், கொழுப்பு இருநூறு பலமும், தோல் முன்னூறு பலமும், நிணம் ஆறுபலமும் உடையதாக இருக்கும்.

ஆமென்ற குடன்முன்னூற்றே ழுபல மாகும்
அதிகமாம் வழுக்கையதுநாற் பலம தாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள் ரெண்டும்
சிறக்கவே நாலுகழஞ் சாகுங் கண்டாய்

நாமென்ற நாக்குநாற்க ழஞ்ச தாகும்
நற்கந்த மூக்கு தானது முக்க ழஞ்சு
காமென்ற கன்னஞ் சேர்நாற் கழஞ்ச தாகும்
கடிந்தெலும் பெலாநூறுநாற்பத் தெண்பல மென்னே 95

குடல் முந்நூற்றேழு பலமும், அதில் உள்ள அழுக்கு நான்கு பலமும், சீழ் ஒரு உரியளவும், இரண்டு கண்களும் நான்கு கழஞ்சளவும், நாக்கு நாற்கழஞ்சளவும், மூக்கானது மூன்று கழஞ்சளவும், கன்னச்சதை நான்கு கழஞ்சும், எலும்புகள் நூற்று நாற்பத்து எட்டுபலம் உள்ளது.

என்னவே யிறைச்சிபலம் நூற் றறுபத் தைந்தாம்
ஏற்ற முப்பலந்தானு மூளை யாகும்
பன்னுதா மரைமொட்டுமைங் கழஞ்ச தாகும்
பார்க்கவே சலப்பையு மோர் முழந்தா நீளம்
கன்னவே கருவிகடானது தொண்ணூற் றாறும்
கணக்காக வுடற்குறிப்பு காயந்தா னாகும்
தன்னவே தத்துவங்கடா னெல்லாஞ் சொன்னேன்
சார்ந்த நாடியின் தன்மை சாற்றி னேனே 96

உடலில் உள்ள மாமிசம் நூற்றறுபத்தைந்து பலமும், மூளை மூன்றுபலமும், இதயம் ஐந்து கழஞ்சும், சலப்பை யானது ஒரு முழந்தாள் அளவும் உடையது ஆகும். ஆக உடற் கருவிகள் தொண்ணூற்றாறையும் கூறினேன். உடலின் தத்துவங்களையும், நாடியின் தன்மைகளையும் கூறினேன்.

தத்துவ விதி முற்றிற்று

நாடி நிதானம்

சாற்றுகிறே னாடியிடப் பூர்வ மெல்லாம்
தாக்கான நாக்குமல மூத்ர மாகும்
காற்றுகிறேன் கண்ணோடு பேச்சு தானும்
காரியமா யெட்டுவகை பரிட்சை தன்னில்
ஆற்றுகிறே னவற்றிலுள்ள குணங்க ளெல்லாம்
அசாத்திய சாத்திய மறிந்த வையும் பார்த்து
நாற்றுகிறே னாடியிட பண்பை யெல்லாம்
நற்குணமுந் துர்க்குணமு நயந்து பாரே 97

நோயாளியின் உடலைப் பார்க்கும் பொழுது நாடி, நாக்கு, கண், மலம், மூத்திரம், ஸ்பரிசம், நிறம், பேச்சு, முதலான எட்டு வகை பரிட்சைகளையும் செய்து அவற்றின் குணங்களை அறிந்து சாத்திய, அசாத்தியங்களையும் கருத்தில் கொண்டு, நாடியின் குணத்தையும் மனதில்வைத்து பார்க்கவேண்டும்.

நயந்து நீநாடிதான் பார்க்கும் வாறு
நலமான புருவமுச்சி கண்ட நெஞ்சு
கயந்து கையிற்காலடியின் முழங்கை தன்னிற்
கணுக்காலின் முழங்கால்கை குழியி லாகும்
தயந்து தானங்கடா பரிக்கு நாடி
சகலநரம் பெழுபத்தீரா யிரமுஞ் சார்ந்து
தியந்து நிற்குமிவ்விடங் கணாடி பார்க்கில்
திரேகத்தின் பரிட்சையெல்லா மியம்பி டாயே 98

உடலில்நாடிகணமுற்பட்டால், புருவம், உச்சி, கழுத்து, நெஞ்சு, கை மற்றும் காலின் அடி, முழங்கை, கணுக்கால், முழங்கால், கைக் குழி ஆகியவற்றில் காணமுடியும். உடலிலுள்ள சகல நரம்புகள் எழு பத்தி இரண்டர்யிரமும் ஒன்றாக கலந்து நிற்கும். இவ்விடங்களில் நாடியை கணித்து உடலின் நிலையை கூறவேண்டும்.

நாடி பார்க்கும் விதம்

இயங்கிடவே அங்குட்ட விரலுக் கப்பால்
ஏற்றமாய் நெற்கிம்பிடை விட்டிப்பால் பார்க்கில்
முயம்பிடவே மூவிரலா னாடி தொட்டு
மும்மூர்த்தி நாடியின்மு ழக்கம் பாரு
பியம்பிடவே பிரமமது வாத நாடி
பேரான பித்தந்தான் விஷ்ணு நாடி
தியம்பிடவே சேட்பமது ருத்ர நாடி
செயலெல்லாஞ் செப்பிநீ தெளிந்தி டாயே 99

அங்குஷ்ட விரலின் முடிவுக்கு நெல்லளவுக்கு கீழே நாடியை மூவிரலால் சோதித்துப் பார்க்கையில் நாடியின் ஓசையைக் கேட்பாயாக. வாதநாடியானது பிரம்பநாடி பித்தநாடியானது விஷ்ணுநாடி, சேத்தும நாடியானது உருத்திரநாடியாகும். இவற்றின் செயல்பாடுகளைக் கூறி நோயைக் கணிப்பாயாக.

நாடிபார்க்கும் காலம்

தெளிந்திட்ட காலைநாழி கைதான் பத்தும்
திறமையாய் வாதத்தின் சுரப்ப தாகும்
பிழிந்திட்ட வுருமத்திற் பத்து நாழி
பித்தத்தி னாடியின்பிர தாபந் தானாம்
தெளிந்திட்ட வந்திதனிற் பத்து நாழி
சிலேட்டுமத்தின் செயலாகுங் கங்குற் போது
வழுந்திட்ட வாதத்தி னாடி யாகும்
வலிந்த நசிபத்தின்மேற் பித்த மாமே 100

காலையில் பத்து நாழிகை வாதத்தின் காலம். அதன்பிறகு உள்ள பத்து நாழிகை பித்தத்தின் காலமாகும். மாலையில் பத்து நாழிகை கபத்தின் காலமாகும். மீண்டும் இரவு தொடங்குகை யில் பத்து நாழிகை வாதநாடியும், நடுஇரவு பித்தநாடியும் ஓடும்.

ஆமென்ற வைகரையிற் சேட்ப மாகும்
அம்மூன்று நாடிகளுமடங்கி யெழுங் காலம்
நாமென்ற வாதத்துக்கிருப் பிடமே கேளாய்
நாபிக்குக் கீழென்று நவில லாகும்
பேமென்ற பித்தத்துக்கிருப் பிடமே கேளாய்
பேரான கண்டத்தின் கீழ தாகும்
தேமென்ற சேட்பமது சிறந்திருக் குந்தான்
செயலான வுச்சிக்குக் கீழ தாமே 101

வைகைரையில் சிலேத்தும நாடியாகும். வாதநாடிக்கு இருப்பிடம் நாபிக்குக் கீழ் என்று கூறலாம். பித்தத்துக்கு கழுத்துக்குக் கீழேயும், கபத்துக்கு கழுத்துக்குக் கீழும் இருப்பிடம் என்று கூறலாம்.

கீழான பெருவிரற் கீழ் தர்சினியாம விரலிற
கிளந்தெழுப்பும் வாதத்தி னாடி தானும்
மாழான மத்தியமத்தின் விரல்தான் பித்தம்
மகத்தான வனாமிவிரல் சேட்ப மாகும்
வாழான மன்னனுக்கு வலதுகை யினாடி
மங்கையருக் கிடதுபக்கம் வகுக்க லாகும்
காழான கைகாலி னாடி பார்க்கக்
கருவிகடான் கணக்கறிந்து கருதிப் பாரே 102

பெருவிரலுக்கின் கீழ் சுட்டுவிரலால் பார்ப்பது வாதநாடி. மத்திய விரலால் பார்ப்பது பித்தநாடி, அனாமிகை விரலால் பார்ப் பது கபநாடியாகும். நாடி பார்க்கும் பொழுது ஆண்களுக்கு வலது கையையும் பெண்களுக்கு இடது கையையும் பார்க்க வேண்டும்.

கருதியே நாடிகடான் காணு நேரம்
கதிருதயஞ் சித்திரை வைகாசிக் குத்தான்
அருதியே யானியோ டியைப் பசியும்
அமிர்தமாங் கார்த்திகைக்கு மத்தி யானம்
மருதியே மார்கழியுந் தையு மாசி
மாலை நேரந்தனிலே பார்க்க லாகு
யிருதியே புரட்டாசியாவணி பங்கு னியும்
பேரான கங்குலர்த்த ராத்திரி தானாமே 103

நாடிகள் பார்க்க வேண்டிய காலங்கள் யாதெனின் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மதியத்திலும், மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் மாலையிலும், புரட்டாசி, ஆவணி, பங்குனி ஆகிய காலத்தில் இரவிலும் பார்க்க வேண்டும்.

நாடி தோன்றாத காலம்

அத்தமா நாடிதெரி யாத பேர்கள்
அப்பியங் கஞ்செய் தோர்க ளன்னந் தண்ணீர்
குற்றமா மிகுதியுமே யுண்ட பேர்கள்
குதிரை கரிவெய்யில்விடா சிற்றின் பத்தோர்
மத்திய மாமதுகஞ்சா வபினி மாம்சம்
மச்சங்கள் மிகவுமுண்டோர் வாயு கும்பித்
தித்தமாய் நிறுத்தினோ ரிவர்கட் கெல்லாம்
திசைக லங்கிநாடியது தெளிந்திடாதே 104

நாடி நடை தெளிவாக தெரியாதவர்கள் யாரென்று காண்போமாகில், உடற்பயிற்சி செய்தவர்கள், அதிக உணவு, தண்ணீர் உட்கொண்டவர்கள், குதிரை சவாரி செய்தவர்கள், கடும் வெயிலில் நடந்து வந்தவர்கள், சிற்றின்பத்தில் ஈடுபட்டவர்கள், கஞ்சா, அபின் மயக்கத்தில் இருப்பவர்கள், மீன் அதிகம் உண்டவர்கள் ஆகியோர்க்கு நாடி நடை திசை கலங்கி இருக்கும்.

வாதநாடி

தெளிந்திட்ட வாதநாடி குணந் தானே
சிறுபிள்ளை தூங்குதொட்டி லாட்டம் போலும்
வளிந்திட்ட வளைந்துவ ளைந்தேந டக்கும்
மண்டூகந் தத்துதல்போ லோணான் போலும்
தளிந்திட்ட சர்ப்பம்போ லட்டை போலும்
தவழ்ந்து மேவேலியினிற் குருவி போலும்
அளிந்திட்ட வாமையின்றன் நடையைப் போலும்
ஆதியாம் வாதமது நடக்குந் தானே 105

வாதநாடியின் குணத்தைக் கேட்பாயாக. சிறுகுழந்தை தூங்கும் தொட்டிலாட்டம் போல் வளைந்து வளைந்து நடக்கும். தவளை தத்துவது போலும், ஓணான் நடைபோலும், பாம்பு அட்டை அசைந்து செல்லுதல் போலும், வலியுடன் குருவி நடப்பது போலும், ஆமையின் நடையைப் போலும் வாதநாடி நடக்கும்

பித்தநாடி

நடக்கின்ற பித்தத்தி னாடி கேட்கின்
நாகரிக மாகுமன்ன நடையைப் போலும்
மடக்கின்ற மயில்போலுந் தாரா போலும்
மாடப்பு றாவுமூர்க் குருவி போலும்
விடக்கின்ற மெத்தனவாம் மீண்டு மீண்டு
மேன்மையாய் முடுக்காக விளக்க மாகிக்
கிடக்கின்ற கெருடன்போற் பெலத்தே யோங்கிக்
கேசரம்போ லசையுமது பித்தந் தானே 106

பித்தத்தின் நாடி நடையை இனி காண்போம். அது அன்னத்தின் நடையைப் போலும், மயில், தரா, மாடப்புறா, ஊர்க்குருவி போல மீண்டும் மீண்டும் முடுக்கமாக கருடனின் இறகசைவைப் போல சற்றே பலமாக அசையும்.

சிலேத்தும நாடி

தானென்ற சிலேட்மத்தின் றாது கேளாய்
தயங்கியே தோற்றுமது தோற்றா தாகிக்
கோனென்ற கோழியின்றன டையே போலும்
கொக்கினு றக்கம்போலூர்க் குருவி போலும்
மானென்ற மங்கைநல்லார் மயக்கிற் சிக்கி
மருவின வன்றாதுபோல் மசக மாகித்
தேனென்ற சிலந்தியின் பூச்சு போலும்
சிலேத்து மநாடியது தெளிவாய்ப் பாரே 107

சிலேத்துமமாகிய கபத்தின் நாடி நடையைக் கேட்பாயாக. அது தெளிவாகத் தோன்றியும் தோன்றாததுபோல், கோழியின் நடையைப் போலும், கொக்கின் நடையைப் போலவும், ஊர்க்குருவி நடையைப் போலவும், பெண்ணாசை கொண்டு மயங்கியவன் நா:டிபோலவும் சிலந்திப்பூச்சியின் நடையைப் போலவும் இருக்கும்.

வாதபித்தநாடி

தெளிவான வாதபித்த நாடி செய்தி
செப்பவே சிறுகுருவி போன டந்து
வளிவான மயில்போல நடப்பு காணும்
மருவியபின் னோந்தியின் மார்க்க மாகும்
களிவான வாதசேட் பத்தி னாடி
கானகத்தின் கோழியதுபோன டந்து
அளிவான அட்டையின்றன் மார்க்கங் கண்டால்
அதிகமாய் முன்சொன்ன நாடி யாமே 108

வாதபித்த நாடியின் நடையைக் கேட்பாயாக. சிறுகுருவி நடப்பது போலவும், மயில் நடப்பது போலவும், பச்சோந்தி நடையைப் போலவும், காட்டுக்கோழியின் நடையைப் போலவும், மற்றும் அட்டையின் அசைவு போலவும் வாதபித்த நாடி நடை காணப்படும்.

பித்த சிலேட்ப நாடி

நாடியே பித்தசிலேத் துமத்தின் தாது
நண்ணியே நடக்கும்வகை நட்பை கேளீர்
பாடியே பாம்புபோல சைந்து பின்னை
பதித்த தவளைக்குதித்தல் பதரும் போலாம்
ஆடியே சீரண நாடி தானே
அசைந்து மதயானைபோன டைந டக்கும்
தேடியே தீபனத்தி னாடி தானே
சிறுகாக்கை தூங்குதல்போற் றுடிக் குமன்றே 109

பித்தகபநாடியின் நடையைக் கேட்பாயாக. பாம்பின் அசைவு, தவளை குதித்தல், மதயானையின் நடை, சிறுகாக்கை யின் தூக்கம் ஆகியவற்றைப் போல் பித்தகப நாடி நடக்கும்.

சன்னிநாடி

துடித்திட் டங்கசைந் தசைந்து நாடி நின்று
சொல்லும் விறகுத்தலையோன டையே யானால்
கெடித்திட் டுக்கிறுகிறென்றே சுற்றி நாடிக்
கீழோடி வளைந்துமேப தறிச் சுற்றி
அடித்திட்டு அன்னம்போ லட்டை போல
அசமந்த மாகவேமெ லிந்த தானால்
தடித்திட் டுக்குடிலமாய்ச் சிக்கென் றானால்
சன்னியென்ற நாடியென்றே சாற்ற லாமே 110

சன்னி நோயின் நாடியானது, தலையில் விறகுச்சுமை கொணரும் நடையைப் போல கிறுகிறுவென்று சுற்றி கீழோடி வளைந்து பதறி சுற்றியும், அன்னம், அட்டை ஆகியவற்றின் நடைபோல மெதுவாகவும் அசைந்து கொடுக்கும். இவ்வகை நாடி நடைகளே சன்னி நோய்க்கு நாடிநடையாகும்.

சுகசன்னி

சாற்றியே மந்தமாய் நாடி தானும்
 தனித்ததொரு குக்குடம்போற் பாம்பு போல
மோற்றியே மூஞ்சுறு போல வாகி
 முனையாகிச் சுடராகிக்கொ முந்தே யோடி
ஆற்றியே யடங்கிநின்றங் கெழும்பிற் றானால்
 அப்பியங் கஞ்செய்தரிவைய ணுகி னோர்க்கும்
தோற்றியே சுகசன்னி யென்னும் நாடி
 சூட்சாதி சூட்சமாய்த் துஞ்சும் பாரே 111

கோழி, பாம்பு, மூஞ்சுறு ஆகியவற்றின் நடையைப் போல விளக்கின் தீச்சுடர் போல படபடப்பாக நடந்து பின்பு அடங்கி நின்றாலும், உடற்பயிற்சி செய்தவர்களும், உடலுறவு செய்தபின்னும் சுகசன்னி நாடி தெரியும்.

வாதசுரம்

துஞ்சியே வாளைமீன் போலப் பாய்ந்து
 துடித்துமே தடித்துத்தான் சிக்க லாகி
அஞ்சியே சர்ப்பம்போல டங்கி நின்று
 ஆனை மும் மதம்போல வார்ப்ப ரித்து

நெஞ்சியே நெறநெறன்று நிமிஷந் தானும்
 நிலைவிட்டு நீங்கியே மீண்டும் புக்கில்
வஞ்சியர் மேல்விகாரமாய் மனதைப் பூண்ட
 வாதசுர நாடியென்றே வகுக்க லாமே 112

வாளைமீன்போல பாய்ந்து துடித்து பிறகு பாம்புபோல அடங்கி நின்று பிறகு யானைக்கு மதம் கொண்டதுபோல ஆர்ப்பரித்து நெறுநெறுவென்று ஒரு நிமிடம் அந்த இடத்தை விட்டு அகன்று மீண்டும் வந்து சேர்வது போல உள்ள நாடிநடை வாதசுரத்துக்கான நாடியாகும்.

மரணநாடி

வகுக்கவே வாதத்தி னாடி தானும்
 வளைந்துமே முன்னோடிப் பிரண்ட தாகில்
வகுக்கவே மந்தமது மெத்த வாகில்
 மயிற்றா ராவன்னநடை போன்று நின்றால்
நிகுக்கவே நின்றுநின்று நேரோ டாமல்
 நிலைதப்பி முன்பாய்ச்சல்பின் பாச்ச லாகிச்
செகுக்கவே சடந்தானு மெட்டு நாளிற்
 சிவபுரத்துக் கெய்திவிடுந் தின்ணந் தானே 113

வாதநாடி வளைந்து முன்னே ஓடி பிரண்டதனாலும், மந்தமாக மயில் அன்னம் ஆகியவற்றின் நடைபோல இருந்தாலும், நின்று நின்று நேராகச் செல்லாமல் தன்நிலை மாறி முன்னும் பின்னுமாகப் பாய்ந்து ஓடினால் அவ்வுடல் எட்டு நாளில் மரணம் எய்திவிடும்.

திண்ணமாய்ப் பித்தத்தி னாடி தானும்
தேள்கொடுக்கு தெறிப்பதுபோற்றெறிக்கு மாகில்
வண்ணமா மாதத்தின் மரண மென்க
வல்லூறு சர்ப்பமதுவ ளைந்து காண்கில்
பன்னியே பட்சத்தின் மரண மென்க
பருவர ணைத்துடிசெய்யி லெட்டு நாளாம்
மின்னியே யிந்தவித மீண்டு மீண்டு
மிரட்சியே மீண்டுவந்தால் மீளா தாமே 114

பித்தநாடியானது தேள்கொடுக்கு தெறிப்பதுபோல் தெறித்தால் அது ஒரு மாதத்தில் மரணமேற்படுவதைக் குறிக்கும். வல்லூறின் காலிலுள்ள சர்ப்பம்போல வளைந்து காணப்பட்டால் அது பதினைந்து நாளில் மரணமேற்படுவதைக் குறிக்கும். அரணைவால் துடிப்பது போல் துடித்தால் எட்டு நாளில் மரணம். பித்த நாடியானது அழுந்தி மீண்டு மீண்டு வந்தால் அது அவ்வுடல் மரணத்தில் இருந்து மீள முடியாது. உடனே மரணம் சம்பவிக்கும்.

மீளவே உந்தியினிற்சு ழியைப் பற்றி
விளங்கியதோர் வாதபித்த சேட்டு மந்தான்
ஆளவே யையமென்ற நாடி தன்னில்
ஆதித்தன் சுடரொளிபோற் றோன்று மாகில்
காளவே காந்தத்தின்க னலாய்க் காணில்
கலங்கியே தானம்விட்டுக்க டைசி யாகில்
பாளவே பம்பரம்போற்சு ழலு மாகில்
பரமப தமடையுமென்றே பகர லாமே 115

உந்தியில் பற்றி எழுந்து மூவகைநாடிகளில் கப நாடியானது சூரியனின் ஒளியைப் போன்று கனலாகக் கண்டாலும், தன் இடத்தை விட்டு நகர்ந்து கடைசியில் பம்பரம் போல் சுழலுமானால் அவ்வுடல் விரைவில் மரணமடையும்.

பகரவே வாதத்தி னாடி தானும்
பருகியதோர் பித்தத்தின் வீட்டைச் சேர்ந்து
பிகரவே பித்தத்தி னாடி தானும்
பேரான சேட்டுமத்தின் வீட்டைச் சார்ந்து

அகரவே யையமென்ற நாடி தானும்
அதன்வீட் டைவிட்டுமே யப்பா லேகித்
திகரவே கண்டத்தை சேரு மாகில்
செடம லைந்துசிவலோகஞ் சேர்வர் தாமே 116

வாதநாடியாது தன்னிடத்தை விட்டு பித்தத்தின் இருப்பிடத்தை அடைந்தாலும், பித்த நாடியானது கபநாடியின் இடத்தை அடைந்தாலும் கபநாடியானது தன்னிடத்தை விட்டு அகன்று அப்பால் செல்லுமானாலும் அவ்வுடல் மரணமெய்துவிடும்.

சேரவே வீணைபோற்றெ றிக்கு மாகில்
சித்தமா யத்தினமூன்று நாளிற் றீர்வர்
ஆரவே யையமா நாடி தன்னில்
அதிர்ந்துமே தவளைப்போற் குதிக்கு மாகில்
போரவே பாம்புபோற்பி ரள்வுற் றூர்ந்து
பொறிய ரவந்தன் னுடைய நடைகண் டாலும்
மாரவே மரந்தன்னிற்கொடி பின்னி னாற்போல்
வந்திடி னுமரணமென வகுக்க லாமே 117

கபநாடியானது வீணை தந்திபோல் தெறித்தால் மூன்றுநாளில் மரணம். மேலும் அந்நாடி தவளைபோல் குதித்தாலும், பாம்புபோல பிரண்டு ஊர்ந்து நடந்தாலும், மரத்தை கொடி பின்னுவதுபோல உடனே மரணம் அந்நோயாளியைப் பற்றிவிடும்.

நாடி பார்க்குமியல்பு

வகுக்கவே மானிடர்தம் வலக்கை பற்று
வளைவன்றி முடக்கன்றி நெட்டி வாங்கி
முகுக்கவே மூவிரலாற் றொட்டுப் பார்க்கில்
முன்னாடி வாதம்பின் னாடி பித்தம்
சிகுக்கவே யனாமிவிரல் சேட்ப மாகும்
செயலெல்லா மறிந்துணர்ந்து சேதி கேட்டு
நகுக்கவே நோயதனி னன்மை கண்டு
நாடியிடச் செயலறிந்து நாடி டாயே 118

மனிதர்க்கு நாடி பார்க்க முற்படுகையில் முதலில் வலக்கையை நெட்டி வாங்கி, மூன்று விரலால் தொட்டுப் பார்க்கில் முதல் விரல் வாதநாடியையும், அடுத்தவிரல் பித்தநாடியையும், அனாமிகைவிரல் கபநாடியையும் குறிக்கும். நாடிகளின் குறிப்பினால் நோயை அறிந்து அதன்படி நடக்கவேண்டும்.

பூத்தமங்கை நாடி

நாடியே யெறும்புதா னூர்தல் போலும்
நல்லாமை யசைவதுபோல் வாத நாடி
கூடியே குளிர்ச்சியாய் மெதுவு போன்று
குடிலங்க ளில்லாமற் றோன்று மாகில்
வாடியே மங்கையர்க்குக் கெர்ப்ப மாகும்
மகத்தான பஞ்சுபோன்மெ துவா யுற்றுப்
பூடியே கின்னரத்தின் பொலிவே யானால்
பூத்தமங்கை நாடியென்றே புகல லாமே 119

வாதநாடியானது எறும்புபோல் ஊர்ந்து சென்றாலும் ஆமை அசைவதுபோல் அசைந்து சென்றாலும், குளிர்ச்சியாய் மெதுவாக கலங்கி நில்லாமல் தோன்றினால் அது கர்ப்பநாடியாகும். பஞ்சுபோல் மெதுவாக கின்னரத்தின் ஒலிபோல இருந்தால் அது பூத்த மங்கையின் நாடி என்று கூறலாம்.

விகற்ப நாடி

புகலவே புழுப்போல நிமிரு மாகில்
பொருகால வண்டினிட வொலியும் போல
நிகலவே கோஷ்டத்தின் னெய்தான் வீழ்ந்து
நேர்ந்தெழும் புமக்கினியி னருமை போலும்
திகலவே கிளியெழும்புஞ் செய்கை போலத்
திரையெழும்பி யொடுங்கும்போற் பித்த நாடி
விகலவே படபடத்துத் தோன்று மாகில்
விகாரத்தி னாடியென்றே விளம்ப லாமே 120

பித்தநாடியானது புழுவைப்போல நிமிர்ந்து நிமிர்ந்து எழும்பினாலும், பொருகால வண்டின் ஒலியைப் போலவும், நெய்யைவிட கிளர்ந்தெழும் சுவாலையைப் போலவும், கிளி யெழும்பி பறப்பதுபோல படபடத்துக் காணப்பட்டால் அது விகாரத்தின் நாடியாகும்.

பூதநாடி

விளம்பவே மீதினியிற்கல் லெறிதல் போலும்
மிகப்புரவி யாட்டுக்கிடாய் பாச்சல் போலும்
திளம்பவே செக்கினிடத் திருகல் போலும்
சீறுகின்ற மூஞ்சூறு சசியே போலும்
இளம்பவே பந்தடித்து யெழும்பல் போலும்
ஏற்றம்போ லேறியிழித்தி டுதல் போலும்
புளம்பவே பித்தத்தி னாடி தோன்றில்
பூதத்தி னாடியெனப் பேச லாமே 121

பித்தநாடியானது கல்லெறிதல் போலவும், குதிரை மற்றும் ஆட்டுக்கிடாவின் பாய்ச்சலோட்டத்தைப் போலவும், செக்கின் திருகல் போலவும், மூஞ்சூறு சீறுவது போலவும், பந்து எவ்வாறு அடிபட்டு மீண்டெழுகிறதோ அதுபோலவும் ஏற்றம்போல் ஏறிஏறி இறங்கினாலும் அது பூதநாடியாகும்.

மரணநாடி

பேசவே பிங்கலையின் நாடி தானும்
பேணிநா[illegible]ல் பிரளா மற்றான்
வாசவே மூவாண்[illegible]மரணஞ் சொல்லும்
வாதமா நாடியது வலுமை யாகி
ஏசவே யிரண்டுநாள் முழுது மோடில்
ஈராண்டின் மரணமெனவி யம்ப லாகும்
நாசவே நாண்மூன்று வழுவா தோடில்
நமனுக் கங்கிறையாவா ணாண்டிற் றானே 122

சுவாசமானது பிங்கலையிலே ஒருநாள் முழுதும் ஓடினால் அவன் மூன்று ஆண்டுகளில் மரணமாவான். வாதநாடியானது வலிமையாகி இரண்டு நாட்கள் தொடர்ந்து முன்போலவே ஓடினால் இரண்டாண்டில் மரணம் நேரிடும். அதுபோல மூன்றுநாள் தொடர்ந்து ஓடினாலும் ஒரு ஆண்டில் மரணம் நேரிடும்.

தானென்ற பித்தத்தி னாடி தானும்
தரியாம னாளொன்று தயங்கு மாகில்
ஆனென்ற வாறுதிங்கள் மரணஞ் சொல்லும்
அசைவிலா திரண்டுநா ளோடு மாகில்
மோனென்ற மூன்று திங்கட் குள்ம றிப்பன்
மூர்க்கமாய் மூன்றுநா ளோடு மாகில்
நானென்ற நாற்பதோ டைந்தா நாளில்
நசிச்சுமே நமனிடத்தி னல்கு வானே 123

பித்தநாடியானது ஒருநாள் தொடர்ந்து தயங்கியோடினால் ஆறு மாதத்தில் மரணம். இரண்டுநாள் முன்போல ஓடினால் மூன்று திங்களில் மரணம் நேரிடும். அது மூன்றுநாள் ஓடினால் நாற்பத்தைந்தாம் நாள் மரணம் நேரிடும்,

நல்கவே சேட்பத்தி னாடி தானும்
நாண்மூன்று கடிதோடி லைந்து நாளாம்
மல்கவே யிரண்டுநா ளோடு மாகில்
மரித்திடு யனீரைந்து நாளிற் றானும்

ஒல்கவே யொருநாளே யோடு மாகில்
உறுசீவன் பதினைந்து மட்டு நிற்கும்
பல்கவே பத்துநாழி கையே நின்றால்
பயமில்லைப் பார்தனிலே பாலிப் பாரே 124

சிலேதும நாடியானது மூன்றுநாள் தொடர்ந்து ஓடினால் ஐந்துநாளிலும், இரண்டு நாள் ஒடினால் பத்து நாளிலும், ஒருநாள் தொடர்ந்து ஓடினால் பதினைந்து நாளிலும் மரணமடைவர். பத்து நாழிகைக்குள் நின்று ஓடினால் பாதகமில்லை. அவர் உயிர் பிழைத்து விடுவார்.

பாலித்த பித்தத்தி னாடி தானும்
பகட்டியே மூன்றுநாள் புரளு மாகில்
ஆலித்த வரவினாக் கசைதல் போலும்
ஆடியே யமர்ந்துதா னிருக்கு மாகில்
மாலித்த மணியசை தலோசை போலும்
மகத்தான வுடுக்கையின்றன் றொனியைப் போலும்
கோலித்த நாடியின் குறிகள் கண்டால்
கொடுமற லிநகர்தனையே குடி கொள்வாரே 125

பித்தநாடியானது மூன்றுநாள் புரண்டு ஓடினாலும், பாம்பின் நாக்கு அசைவது போலசைந்தாலும், ஆடி அமர்ந்து காணப்பட்டாலும், மணியோசை அசைவது போலவும் உடுக்கையின் ஒலியைப் போலவும் நாடியின் குறிகள் தெரிந்தால் எமன் அவ்வுடலில் குடிகொண்டு விடுவான்.

சரீர லட்சணம்

கொள்ளவே வாதத்தின் றேகந் தானும்
குளிர்ந்து மேசிறுதிடத் தேயுஷ்ண மாகித்
தெள்ளவே துடிதுடித்தே யிருக்கும் பித்தம்
தேகந்தான திகவுஷ்ண மாயி ருக்கும்
தெள்ளவே சேட்டுமத்தின் றேகந் தானும்
சிக்கென்று குளிர்ந்திருக்குந் தொந்த தேகம்
பன்னவே பலவிதந்தான் பெற்றி ருக்கும்
பரிந்து தொட்டுதேகத்தைப் பார்த்துச் சொல்லே 126

வாத தேகம் சிறிதளவு குளிர்ந்தும் சிலசமயம் சிறிது உஷ்ணமாயும் இருக்கும். பித்ததேகம் அதிக வெப்பத்துடன் காணப்படும். கப தேகம்மானது மிகவும் குளிர்ந்திருக்கும். இவ்வாறு பலவிதமாகவுள்ள தேகத்தினை தொட்டு உணர்ந்து அறிந்து கொள்ளவும்.

தேகத்தி னிறந்தானுஞ் செப்பக் கேளீர்
சிறுமையாய் வாதந்தான் கறுத்தி ருக்கும்
போகத்தின் பித்தநிற மஞ்ச ளாகும்
பொருஞ் சேட்பரோகிக்கு வெளுப்பு மாகும்
பாகத்தின் தொந்தரோகிக்குத் தானும்
பலபல வர்ணமுமாகிப் பறந்து நிற்கும்
ஆகத்தினிறம் பார்த்து நாடி பார்த்து
அஷ்டவிதப் பரிட்சையெல்லா மடவாய்ப் பாரே 127

வாததேகியின் நிறம் கறுத்திருக்கும். பித்த தேகியின் நிறம் மஞ்சளாகும். கபதேகியின் நிறம் வெளுத்திருக்கும். தொந்த ரோகிக்கு பல வண்ணங்களுடன் இருக்கும். எனவே நாடியுடன் எட்டுவித சோதனைகளையும் கூர்ந்து பார்ப்பாயாக.

வசனப் பரிட்சை

பார்வாத ரோகிக்கு வார்த்தை தானும்
பக்குவமா யச்சட்டத மாயி ருக்கும்
பேர்பித்த ரோகிக்கு வார்த்தை தானும்
பேசிடிலோ பெலத்துமே புரத்தி ருக்கும்
சேர்சேட்ப ரோகிக்கு வார்த்தை தானும்
சிறுத்துமே யீனசுர மாயி ருக்கும்
வேர்தொந்த ரோகிக்கு வார்த்தை தானும்
வெகுவித மாயிருக்குமென் றேவிரித் திடாயே. 128

வாதரோகிக்கு குரல் அயச்சட்டத்தின் ஒலியைப் போலிருக்கும். பித்த ரோகிக்கு வார்த்தை பலத்துடன் உரமாக இருக்கும். கபரோகிக்கு வார்த்தை ஈனசுரமாயிருக்கும். தொந்தரோகிக்கு பலவிதமாக இருக்கும்.

நேத்திரப் பரிட்சை

விரித்திட்ட வாதமென்ற ரோகிக் குத்தான்
மீறியே கண்கறுத்துத் தண்ணீர் பாயும்
பரித்திட்ட பயித்தியரோ கிக்குக் கண்தான்
பச்சென்று சிவந்திருக்குஞ் சேட்ப ரோகி
பிரித்திட்ட பீளைசாறும் வெளுத்தி ருக்கும்
பெருஞ்சன் னிவாதரோ கிக்குக் கண்தான்
கரித்திட்டுச் சிவந்துபச் சென்றி ருக்குங்
காமாலை ரோகிக்குபசு மஞ்ச ளாமே 129

வாதரோகிக்கு கண்ணானது கறுத்து தண்ணீர் வடியும். பைத்திய ரோகமுள்ளவர்கள் கண்ணானது சிவந்து காணப்படும்.

கபரோகிக்கு கண் வெளுத்து பீளைசாடும். சன்னிவாத ரோகிகளுக்குக் கரித்து சிவந்து பச்சென்றிருக்கும். காமாலை ரோக்கிக்கு கண் பசுமஞ்சள் நிறத்தில் காணப்படும்.

மலப்பரிட்சை

மஞ்சளென்ற வாதரோகிக்கு மலந் தானும்
மலபந்த மாகியேக றுத்தி ருக்கும்
பிஞ்சலென்ற பித்தரோ கிக்குத் தானும்
பொருகியே வெச்சென்று சிவந்தி ருக்கும்
திஞ்சலென்ற சேட்டுமரோ கிக்குத் தானும்
சிதறிமலம் வெளுத்துமே சீத மாகும்
பஞ்சலென்ற தொந்தரோ கிக்குத் தானும்
பலவர்ணமா யிருக்கும் பண்பு தானே 130

வாதரோகிக்கு மலம் மலக்கட்டாகி கறுத்திருக்கும். பித்த ரோகிக்கு சிறுநீர் சிவந்து காணப்படும். கபரோகிக்கு மலம் சிதறி வெளுத்து சீதத்துடன் காணப்படும். தொந்த ரோகிக்கு மலம் பலவர்ணமாயிருக்கும்.

பண்பாக வாதரோ கிக்கு மூத்ரம்
பாரித்துத் தெளிந்திருக்கும் வெண்மை யாகும்
மண்பான பித்தரோ கிக்கு மூத்ரம்
மார்க்கமாய் மஞ்சளித்துப் பசந் திருக்கும்
தின்பான சேட்டுமரோ கிக்கு மூத்ரம்
சேறுபோற் பொருமியே நுரைத் திருக்கும்
கன்பான தொந்தரோ கிக்கு மூத்ரம்
கண்டபல நிறமாகுங் கருதி டாயே 131

வாதரோகிக்கு சிறுநீர் வெண்மையாக தெளிந்திருக்கும். பித்தரோகிக்கு சிறுநீர் மஞ்சளாகக்காணப்படும். கபரோகிக்கு சிறுநீர் சேறுபோல பொருமி நுரைத்துக் காணப்படும். தொந்தரோகிக்கு சிறுநீர் பலவர்ணமாக இருக்கும்.

நாவின் பரிட்சை

கருதியே வாதரோகிக்கு நாக்கு
கறுத்திருக்கு முள்ளுபோலவெடித்தி ருக்கும்
பருதியே பித்தரோகிக்கு நாக்கு
பச்சென்று தானிருக்குஞ்சி வந்திருக்கும்
வெருதியே சேட்டுமரோகிக்கு நாக்க
வெளுத்து மேதண்ணீ ருண்டாயிருக்கும்
துருதியே தொந்தரோகிக்கு நாக்கு 132
சூட்சாதி பலவர்ண மாகுந் தானே.

வாதரோகியின் நாக்கு கறுத்து முள்போல தடித்து காணப்படும். பித்தரோகிக்கு நாக்கு சிவந்திருக்கும். கபரோகிக்கு நாக்கு வெளுத்து நீர்சுரந்து காணப்படும். தொந்தரோகிக்கு நாக்கு பலவர்ணமாயிருக்கும்.

வன்னமா மெட்டுவகைப ரிட்சை பார்த்து
வகையான நாடியிட குணமுங் கண்டு
தின்னமாந் தேகத்தின்செ யலும் பார்த்துத்
தேசதே சாபேதச் செய லறிந்து
கன்னமாங் காலகா லங்கள் பார்த்துக்
கனமான வக்கினியின் கணக்க றிந்து
பன்னவாம் பலபலவா நூலைத் தேர்ந்து
பரிகாரப் பயனறிந்துப் பார்த்துச் சொல்லே 133

எட்டுவித பரிட்சைகளையும் செய்து, நாடியின் குணத்தையும் கண்டு தேகத்தின் அமைப்பையும் கண்டு காலத்தின் அமைப்பையும், அக்கினியின் கணக்கையும் அறிந்து கொண்டு பல நூல்களை ஆராய்ந்து மருந்துசெய்து நோயினை நிவர்த்தி செய்ய வேண்டும்.

நாடி நிதானம் முற்றிற்று

உ

கடவுள் துணை

அகஸ்தியர்
இரத்தினகிரிகிடம்

நாடிப்பரிட்சை

பூரணமாய் நிறைந்திருக்கும் பரைதாள்போற்றிப்
புகலுகிறேன் வயித்தியரத் தினச்சுருக்கம்
வாரணமா முகத்தோனைப் பணிந்துபோற்றி
வரிசையாய் அந்நூறு வகையாய்ச் சொன்னேன்
காரணமாய் செந்தூரம் பற்பம் லேகியம்
கலிக்கம் யெண்ணெய் மாத்திரையும் யிட்டுவேறு
சூரணம் மையேழயிலம் ஒத்துச் சுரசம்பத்
முதுதகை முற!ச்சல்கீறலுடன் கியாழம். (1)

மைசூடும் நசியமது கிருதம்வேது
மகாகோர்வை ஆக்கிராணம் சகலகாது
பையுடனே குருநாடி தொகுப்புரோகம்
பரவசமாயந் நூற்றில் பார்க்கச் சொன்னேன்
பொய்யில்லை ரத்தினமாங் கிரிகிடம்போல்
பொறுமையாய்ச் சொல்லிவிட்டேன் சிவனுக்கொப்பாய்
வையகத்தில் வயித்தியரே அறிந்துபார்த்து
மருந்து செய்யரோகத்தின் வகுப்பைக்கேளே. (2)

அகஸ்தியர்-சுந்திரர்க்குச் சொன்னது

கேளப்பா வியாதியுடன் தொகுப்புச் சொல்வேன்
கெடியாகச் சுந்திரா சொல்லக்கேளு
நாளப்பா குறிகுணங்க ளறிவதற்கு
நயமாகச் சொல்லுகிறே னறிந்துதள்ளி
வாளப்பா மலமோடு நீர்ப்பரிட்சை
வகுப்பான பரிசமொடு நயனஃநாடி
பாளப்பா அறிவாலே சாத்தியங்கள்
பாங்கான அசாத்தியங்கள் பணிந்துபாரே. (3)

4448 வியாதிக்கும் பெயர்

பாரப்பா வாதமிது எண்பத்திநாலு
பருக்கவே பித்தமது நாற்பத்தெட்டு
தாரப்பா சேத்துமங்கள் தொண்ணூற்றாறு
தனுர் வாய்வுமுன்னூறு சயமோஏழு
வேரப்பா பெருவயறு யெட்டதாகும்
வெகுசூலைய்ருனூறு பாண்டு பத்து
நாறப்பா நேந்திரநோய் தொண்ணூற்றாறு
நறுசிலந்தி யறுபதுவுங் குணமுமெட்டே. (4)

இதுவுமது

எட்டப்பா சன்னிவகை எழுபத்தாறு
எழுவையுடன் பொருவழலை தொண்ணூற்றஞ்சி
மட்டப்பா சுரமதுமே எண்பத்தஞ்சி
மகோதரமோ யேழுக்குஞ் சிரசில்வீக்கம்
முட்டப்பா அஞ்சிக்கும் உடம்பில் வீக்கம்
முதிரவே பதினாறு பிளவைபத்து
குட்டப்பா படுவனது பதினொன்றாகும்
குமிளிநோய் ஏழுக்கும் பீலிஎட்டே. (5)

இதுவுமது

பீலியுடன் உறுவசியம் அஞ்சதாகும்
பொறிகறப் பான்தொண்ணூறு கெண்டைபத்து
காலிநோய் குட்டமது இருபதாகும்
கமர்வீச்சு மூன்றாகு மதிட்டை அஞ்சி
சோலிநோய் சோபமது பதினாறுக்கும்
செல்லிசுவு ஆறுக்கும் மூர்ச்சைஏழு
வேலிநோய்ப் படுவதிலே நாற்பத்தாறு
வெகுமூல மொன்பதாம் கழல்நோய்பத்தே. (6)

இதுவுமது

பத்தாகும் பீனிசங்கடிவிஷ மெழுபத்தாறு
பிணிநாக்குப் பல்லுநோய் எழுபத்தாறு
கத்தாகுங் கிராணியது இருபத்தஞ்சி
கண்ணுடேனே மாலையது இருபதாகும்

கொத்தாகும் அதிசாரம் இருபத்தஞ்சி
கோள் கட்டிபனிரெண்டு கிறுமிஆறு
முத்தாகு மூட்டுநோய் முப்பதுக்கும்
முதிர்ந்த நோய்இருபது சத்திஅஞ்சே. (7)

இதுவுமது

அஞ்சாகுங் கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாய்வு தொண்ணூறு திமிர்நோய்பத்து
மஞ்சாகும் விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேகம் இருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும் விஷபாகம் பதினாறுக்கும்
பகர்காது நோய்பத்து விக்கல்பத்து
துஞ்சாகும் அரோசியங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்கு நோய்பத்து உலகத்தாரே. (8)

இதுவுமது

குத்தாகுங் கடிவிஷமோ அந்நூறுக்கும்
குறிகாயம் குத்துவெட்டு எழுநூறுக்கும்
பத்தாகுங் கிரந்தியுமே நாற்பத்தெட்டு
பறக்கின்ற பொறிவிஷமோ எண்ணூறுக்கும்
முத்தாகுந்தாள் கிட்டும் பிறநீர்கோர்வை
முதிரவே இருநூறு துடிநோய்நூறு
கொத்தாகும் பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன் வியாதியுட விபரந்தானே. (9)

லோகத்தில் டீரணமறிவது

கூறினேன் வயித்தியனை அழைக்குமுன்னே
கொல்லாது எழுநூரு வயித்தியன் கையில்
மாறினோம் நோய்கள் தெரியாமல் பார்த்து
வகையாகச் சாகிறது எண்ணூறாகும்
தேறிய பலநூலும் பார்த்த பேர்க்கும்
செயமாகும் யிருபத்து வைந்துநூறு
பேரரிது நாநூற்று நாற்பத்தெட்டு
பெருவயது உள்ளமட்டும் போந்திடாதே. (10)

வைத்தியருடகிரமம்

பேந்திடாதென்று சொன்ன சுந்திராகேள்
பெரும்பாவஞ் செய்த குற்றமுறைமையாலே
சேந்திடாப் பாவத்தை நிவர்த்தி செய்தால்
தீருமே அபமிருத்து ச் செயிக்கலாகும்
வாந்திடா துமையவர்க்கு ம்ருத்திரற்கும்
வயிரவர்க்கும் பூசைசெய்து அவிழ்த மீய்ந்தால்
ஏந்திடா துனைப்போலே வயித்தியர்களுண்டோ
இயலாக வுமையவட்கு சிவன்சொல்கேளே. (11)

வியாதித்தொகுப்பு

கேளடா வுமையவட்கு அரனார்சொல்ல
கெடியாக வுமையவள்தான் முருகவேட்கு
நாளடா நாற்பத்து நாலுநூறு
நயமுடனே நாற்பத்து எட்டுரோகங்
கேளடா முருகவேளெனக்குச் சொன்னார்
குணமாக வயித்தியற்கு கூறினேன்யான்
வாளடா பெருநூலைச் சுருக்கியானும்
வகையாக அந்நூறு தொகையாய்ச் சொன்னேன். (12)

கெர்பமழிதல்

சொல்லுகிறேன் குறிகுணங்க ளாதியாக
துருசா நாதவிந்து சேரும்போது
வெல்லுகிறேன் விதிவசத்தால் கர்மத்தாலே
விசப் புழுவால் கிருமியால் மூலத்தாலும்
மல்லுகிறேன் கிரந்தியால் கற்பமானால்
மதிமேக வெட்டையா லழிந்துகெர்பம்
வள்ளுகிறேன் யிதுகளுக்குத் தப்பியேதான்
வந்தபிள்ளை தனக்குமினிவகை சொல்வேன். (13)

பிறந்த பிள்ளை வியாதியால் இறக்கிறகுறி

வகை சொல்வேனென் சுணமொன்றுங் கரப்பானென்றும்
மாந்தமென்றும் பேராம் பல்யிசிநோ யென்றும்
துகை சொல்வேனிது தப்பிவாத பித்தஞ்
சொல்லைய மிதுனாலே வியாதிமெத்த

நகை சொல்வேன் குருநாடி வலுமைமெத்த
 நயமாகப் பெருநூலிலொளித்து வைத்த
பகை சொல்வேன் அந்நூற்றில் வெளியாய்ச் சொல்லி
 பார்ப்பதற்கு தூதனுடன் பனச்சை சொல்வேன். (14)

கர்மங்கள் செய்தவர்கள்

சொல்லுவேன் கறுப்புடனே பழுதுரோகஞ்
 சொல்குருடன் காதுமந்தம் பூனைக்கண்ணன்
வெல்லுவேன் ரோமங்கள் சிவந்த பேர்கள்
 மெயிநடுக்கில் துடியர்கள் வெடிச்சோர்கள்
பல்லுமே பழுதாகுங் கண்சிமிட்டல்
 பறந்த சொல்யிவர்களையும் பார்த்தபோது
கொல்லுமே யவர்களைத்தான் கண்டாயானால்
 கும்பமுனி சொல்வசனங் குறிப்பைக் கேளே. (15)

சயனமரணக்குறி - வேறு

கேளே முன்னேதூதன் வந்துகிளரும் வார்த்தை நிக்கலுமே
சூளே பித்தமேலேறிச் சொல்லும் வார்த்தை பலவிதமாய்
வாளே பரந்து பறந்தழைக்கல் வகையாய்ச் சொலல் நிலங்கீரல்
சாளே சாவன்யிவர் சொல்லில் சடுதிபோகா திருந்திடீரே. (16)

தொடுமரணக்குறி

இருந்தீர் முகத்தில் கைவைத்தால்யேறும் பிணிகள் தீராது
வருந்தி மார்பில் கையைவைத்தால் வணங்கும் பிணிகள் மாலரிய
பொருந்தி கைகால் தோள்தொட்டால் போகும் பிணிகள்
 தீர்ந்திடுமே
பருந்திக் கேளுஞ் சுந்தரனே பாங்காயுரைத்தேன் பரையரிய. (17)

சொல்வசனத்தில் சாத்திய மசாத்திய மறிதல் திணக்குற்

சொல்லும் வசனமுதலெழுத்தை சூட்சமாகவே துதித்து
இல்லியிருக்கு வியாதி கொண்டான் யிவன்பேரெழுத்தையும் கூட்டி
நல்லியிருபத் தேழையுமே நாளும் பக்கத்துடன் கூட்டி
வல்லதுகையேழில் பெருக்கி வகையாயெட்டில் கழிப்பீரே (18)

இதுவுமது

நின்ற விலக்கந்தனைக்கண்டு நோயுஞ் செபமும் ஒன்றுபிணி
மண்டில் தீராரெண்டு தின்மை வளருமூன்றூரன் சொல்லும்
என்றே நாலுவினையேறார் யியல்பாலைந்து மரணமுமாம்
கொண்டே ஆறுவெகுபிணியாம் குறையுமேழுந் தீர்ந்திடுமே. (19)

திசைகுறி அறிவது-வேறு

நாற்பெருந் திசைகளாநாடி கோணமே நான்குபெண்ணாம்
நாற்பெருந் திசையில்வந்து வினவின கருமநன்றாம்
நாற்பெருந் திசையைவிட்டு கோணமே நான்குமாகில்
நாற்பெருங் கோணம்வந்து கருமமே நாசமாமே. (20)

வைத்தியரை அழைக்கிற சகுனம்

முன்னமே ஆணாய்வந்து மொழிந்த பின்பெண்ணாய் வந்தால்
முன்னமே கருமம் தீதாம் பின்பு நன்றாகுமென்ன
முன்னமே பெண்ணாய் வந்தால் முயன்றனா ஆணாய் வந்தால்
சொன்னவை முன்பு நன்றாம் சூதிடு காடுமாமே. (21)

வழிசகுனம் மரணக்குறி அறிவது

தண்டு குடுவை பிலித்தாலுந்தன் கைகயறு கண்டாலும்
முண்டு மோடிமூக்கிறையன் மிகவுங்குருடன் விரிதலையன்
கொண்ட விறகுகட்டுலுப்பைக் கொள்ளி கையில்கொடியிடமும்
மிண்டு மிவரைக் கண்டாக்கால் மிகவே மரணமியம்பீரே. (22)

வழிசகுனம் பார்த்தல்

தலை விரிமொட்டைசட்டை தவசிசந்நியாசி பார்ப்பான்
முலை யினில்வெறியகும்பமும் முக்கறைவிறகு கட்டு
கலை யிலாச்செக்கான் தட்டான் கதிரொத்தப் பார்ப்பான்சேர்வை
எலை யினிலிவரைக் கண்டால்லேந் திழைக்கருயந்தீதே. (23)

கன்னியர் தாசிவேசி கடிமணம் ரெட்டைப் பார்ப்பான்
மன்னிய புரசங்குமங்கில்ய கழுத்தியோடு
தன்னிய நெய்பால் செற்றோர் தோன்றியே எதிரேகண்டால்
வன்னிய வசனம்நன்று மகிழ்ந்தவர் முனிவர் சொன்னார். (24)

பட்சி சகுனம்

சொன்னதோர் நாரைகாகம் போத்துடன் வலமேயாகில்
இன்னமே கருமம்நன்றா யியல்பெறக் காடைவால்
முன்னமே கெருடன்கோழி முத்துடன்யிடமே நன்றாம்
வன்னமாய் முனிவன்சொன்ன வைத்திய மார்க்கமாமே. (25)

வாதக்குறிப்பு வேறு

மார்க்கமடா வப்படியே யோடுமாகில்
மயிலினுட கால்போலே சாட்சியாகும்
மூர்க்கமுள்ள குணங்கேளு நடக்கும்போது
முழங்காலும் பிடரியெல்லாங் கடுப்புக்காணும்
பார்க்கையிலே மேகத்தைச் சுத்திவிட்டு
பாங்கான சீழொழுகி விதனமாகி
நாக்கெல்லாம் வரண்டுவிடும் தாகமெத்த
வயிற்றெரிவும் காந்தலுண்டாம் வரிசைபாரே. (26)

பித்தம்-1-வாதம்-¼-குறிப்பு

காந்தலுண்டாம் பித்தமொன்று வாதங்காலாய்
கதித்தெழுந்தால் நாடியடா அட்டைபோல் குண்ணும்
வாந்தியுண்டா மந்திக்கு வயரெரிப்பு
வளமாக சுரங்காணும் கண்ணுங் காந்தும்
ஊர்ந்துவிடும் பண்டாகு மாசனத்தில்
உற்றதோர் மூலமாம் புண்ணுமாகும்
தீர்ந்துவிடும் அனுபானம் அறிந்துபோடு
திசைக்கொன்றாய் ஓடிவிடும் தெளிவுதானே. (27)

தெளிவான பித்தமே தெளிந்துதானே
செவியடக்கும் நண்ணொளியைத் திகைத்துக்காட்டும்
ஒளியாத உடல்வெதுப்பும் உயிரும்போகும்
ஒருவருடன் பேசாது பீச்சுபோலாம்
நளியாது மேனியெங்கும் நடுக்கல்காணும்
நாடாது நீர்ப்பாய்ச்சல் நவின்றேயோடும்
அளிவாகுமிது கண்டால்மருந் தீயவேண்டாம்
ஆச்சரிய சுரமென்றே யறிந்துபாரே. (28)

வாதம் தனிக்குறி

அறிந்து பார்வாதமே தணிந்துதானால்
அன்னம்போல் நடக்குமப்பா நாடிபாரு
சரிந்திடவே கால்நடக்கும் போதுக்கட்டும்
தரியாது வன்னத்தை யுண்ணொட்டாது
எரியாது தாகமுண்டாம் சன்னியாகும்
யீயாது சிவன்பற்பம் அஞ்சவேண்டாம்
குறியாக நாளெட்டில் குணமுமாகும்
கூகூவென்றலையாதே கொடுத்துப் பாரே. (29)

(வாதம்-¾-பித்தம்-½-சிலேற்றுமம்-¼-குறிப்பு)

பாரடா வாதமுக்கால் பித்தம்பாதி
பரிவாக சிலேற்றுமத்தில் கால்தான்கூடில்
மார்படா பாம்பதுபோல் புனைந்துவீழும்
வகையறிய வதினுடைய குணத்தைக்கேளு
வேறாகும் வியாதியெல்லாம் வெவ்வேறாகும்
வேற்குமது சீதமுண்டாம் மேகமாகும்
தேறாது உடல்தடிக்கும் கால்வெடிக்கும்
தெரிந்துகொண்டு அனுபானம்செய்துக் கொள்ளே. (30)

(பித்தம்-½-சிலேற்று ம்-½-வாதம்-¼)

செய்யடா பித்தத்தில் பாதியாகில்
சிலேற்றுமத்தில் சரிபாதி வாதங்காலாம்
உய்யடா நாடிதான் சுருண்டு விம்மும்
உரைக்கிறேன் உலகிலுள்ளோர் அறிந்துகொள்வீர்
பய்யவே வாய்காந்தும் வாய்நீறூரும்
பரிவாக கண்சுழட்டும் யிரும்பல்காணும்
கையடா கால்களெல்லாம் வெடிப்புக்காணும்
கருங்குட்டம் புகுமடா கண்ணுஞ்சாவே. (31)

(வாதம்-1, சிலேற்றுமம்-1, பித்தம்-1, குறிப்பு)

சாவில்லை சாகாத நாடிகேளு
தனியான வாதமொன்று சீதமொன்று
சாவில்லை பித்தமப்பா அதுவுமொன்றாய்
சடுதியிலே காட்டாது கூடினாக்கால்

சாவில்லை சாகாம லிருக்கலாகும்
சாத்தியத்தில் குணங்களப்பாயிது களெல்லாம்
சாவில்லை நோயில்லை வறுமையில்லை
சாதியிலே முடிவிலே யடங்குவாறே. (32)

(சிலேற்றுமம்-1-பித்தம்-¼-வாதம்-¼)

அடங்குகின்ற சிலேட்டுமந் தானொன்றேயாகில்
அப்பனே பித்தமடா காலுமானால்
திடம்பெறவே யதினுடைய குணத்தைக்கேளு
செவியடைக்கு மிரும்பலுண்டாஞ் சிரசுவேர்க்கும்
வடம்பெறவே விழிமூக்குஞ் சலந்தானூரும்
வகுக்கவொரு மயக்கமுண்டா முடனேதீரும்
விடங்குணங்கள் கண்டாக்கால விழ்தம்வேண்டாம்
விபரமாய்ச் சொல்லிவிட்டேன் விரும்புவீரே. (33)

(வாதம்-¼-பித்தம்-1)

விரும்புவாய் வாய்வுசெய்யுங் கூத்தைக்கேளு
வேரையொரு கூத்துமில்லை விபரஞ்சொல்வேன்
உரும்புடனே வாதமப்பா காலுமாகில்
உற்றதொரு பித்தமே கதிப்புமானால்
திரும்பியே வாய்வப்பா நிற்குங்கூத்து
தீயிலே பாய்ந்துவிடுந் திரமாய்ச் சொன்னேன்
மரும்பியே திறந்துவிட்டேன் வெளியதாக
மானிடரவ ரறியார்கள் துஷிப்பார்கள். (34)

மிரும்பியே வாதமடா கதிப்பதானால்
மேன்மையுள்ள வாய்வப்பா அப்புவிலேபாயும்
தெரும்பியே பிரித்துவிட்டேன் சித்தனானால்
சிவசூட்ச மறிந்து கொண்டு தேறுவானே. (35)

தேறுவாய் சிலேற்றுமந்தான் கதிப்பதானால்
திறமாக பித்தமங்கே அரைதான் சேரில்
மாறுவாய் வாதமப்பா கால்தான் கூடில்
வகையாக வாசியுட பாய்ச்சல் கேளு
கூறுவேன் அப்புவிக்கும் விண்ணுக்குத்தான்
குதிக்குமப்பா வாயுவிட நடனம்பாரு
காறுநீசதா நித்தங்கண்டு பார்த்தால்
கயிலாச வாசலுக்கு தடங்காணும்பாரே. (36)

வாதம்-1-பித்தம்-¾-சிலேற்றுமம்-1-அசாத்தியம்

தடமான வாதத்திலொன்ற தாகில்
தனித்து நின்றபித்தமப்பா முக்கால்கூடில்
இடமான சிலேற்றுமந் தானொன்ற தானால்
எலியது போலோடுமப்பா நாடிபாரு
விடமான வுந்திக்கு வுண்ணாக்குமேல்
மூச்சதாயிருக்குமப்பா விதங்கள் சொன்னேன்
படமான நெஞ்சடைக்கும் சர்வாங்கம் நோவும்
பரிவாகச் சொல்லுகிறேன் பாருபாரே. (37)

பாரப்பா கண்டநாள் மரணமாகும்
பரிவாக யில்லாவிட்டால் மூன்றிற்கொல்லும்
சோரமதில் தணிந்து நின்றால் புத்தியெல்லாஞ்
செயலாக மயங்கிவிடும் கோபங்காணும்
காரடா கண்டாக்கால் நாடிதானுங்
கழுவினுட தலைபோலே காட்டிக்குண்ணும்
சீறடா வெட்டாநாள் கொல்லுங்கொல்லும்
குணமாக ஒன்பதிலே கூடுபோமே. (38)

பூதநாடி

போகுமப்பா வாதமென்றநாடி யொன்றாய்
புகழாகத் தனித்து நின்றால் பூதநாடி
ஆகுமப்பா அரணைவால்போல் துடித்துகாணும்
அகன்றுவிடும் வாய்வப்பா திரேகங் குத்தும்
தாகுமடா சுகஜன்னி மார்க்கமாகும்
தானவனாய் நோக்கி நின்றால் சாகான்பாரும்
பாகுமடா சிலேற்று மந்தான் சிதறித்தாக்கில்
பதையாமல் தானிருப்பான் பரிந்துகேளே. (39)

கேளப்பா யிப்படியே கணித்துச் சொன்னேன்
கிருபையுள்ள மைந்தனென்றாலறிந்து கொள்வான்
ஆரப்பா என்னைப்போலே சொன்னார் சித்தர்
ஆருமில்லைச் சொல்லுகிறேன் சடுதிசொல்வேன்
தாளப்பா காயசித்தி மாயசித்தி காண்பார்
வளமாக யென்னுடைய நூல்கண்டோர்கள்
தேளப்பா யென்மாய் கைவைத்த தெல்லாம்
தெளிந்து நின்றறிந்தவனே சித்தர்தானே. (40)

இரத்தின கிரிகிடம்-முற்றியது

உ

கடவுள் துணை

அகஸ்தியர்

குணவாகடத்தின் வைத்தியசாரம்

கணபதி தோத்திரம்

சொல்வைத்திய சாரசுருக்க முப்பாத்தாறும்
அல்லும் பகலுமறிவுணர நல்ல
குணபதியாம் பூரணத்திற் கூடிபேவாமுங்
கணபதியின் பாதமலர் காப்பு.

மருந்து கொடுக்கக் கூடாதபேர்கள்

அன்னிய தாரத்தாசை கொள்வோன் வஞ்சனான
கஞ்சாகள்ளு வொப்பினுண் போன்றீமையான
துன்னிய சூனியக்கா ரன்சண்டைக்காரன்
துறும்புகிள்ளி விருந்துண்பான்திருடன் துஷ்டன்
குன்னிய நித்திரை மிகுத்தோன் கொடாதலோபி
குணமில்லான் மதியில்லான் மானமில்லான்
பன்னிய பண்டிதர் பகைஞன் செவிடனூமை
பாசு பதமறியானைப் பார்க் கொண்ணாதே. (1)

முன்னே பணம் வாங்கிக் கொண்டு பின்னே வைத்தியஞ் செய்யவும்

கைச்சுலிகை யொப்புக்கள வின்கூலி
வியாபாரக் கூலி மிகவுடையான் கூலி
ஒப்பரியபிணி தீர்க்குமொருவன் கூலியோ
துவிக்கு முபாத்தியாயன்றன் கூலி
அப்போதைக்கப் போதே வாங்காராகில்
ஆர்பெறு வாரார் தருவாரவனி மீதே. (2)

துஷ்டர்களுக் கிம்மூன்றுஞ் சொல்லக்கூடாது

மந்திரமும் வாகடமும் பழையநூலும்
வருவிக்கும் பெரியோரே வளமைகேளீர்
தந்திரமாய்க் காய்ந்த முகமூடிபற்று
தன்மெய்து போற்றொடர்ந்து தரிப்பாராகில்

சுந்தரமாம் புகழுடைய குலமானாலுந்
துஷ்டர்களுக்கும் மூன்றுஞ் சொன்னாராகில்
அந்தரமா யெழுநரகிலழுந்திப் பின்னு
மறிவிலா சண்டாள ராவார் பாரே. (3)

இந்நான் வகைகளும் அறியாமல் வைத்தியஞ் செய்பவர்களுக்கு நரகம் வரும்

பார்க்கின்ற சோதிடமும் பிராயகாலம்
பகரும்விபகாரமொடு பிராயச் சித்தம்
ஏற்கும்வைத்தியம் இவைகள் நான்கும் வல்லோர்
இதன் வழியே சிகிச்சை செய்வாராகில்
ஆர்க்குமே தோஷமில்லை யிலவகளையா
அறியாதார் சாஸ்திர வல்லவர்கள் போல்
தீர்க்கமடி பிடியாகச் செய்வாராகில்
சீவ பிரமத்திவதை சேர்வாரன்றே. (4)

கண்கள்-3-தலைகள்-4-முகங்கள்-5-கைகள்-6 சரீரங்கள்-7 கால்கள்-10 இந்த ஆறுவித குணங்களறியரர் ரோகிகளைக் கொன்றதினால் நரகமடைவார்

வாதகுறி வைத்தியரே சொல்லக் கேளீர்
வாகாக கண்மூன்று தலைகள் நான்கு
நீதமுடன் முகங்களைந்து கைகளாறு
நிலைசரீரங் களெட்டு கால்கள் பத்து
இதம்இதன் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்
விதம் அறியா மானிடரைப் பழியே செய்வார்
சேதமாஞ் செய்மருந்து பலித்திடாது
செய்தபின்பு தீநரகிற் சேருவாரே. (5)

கண், தலை, கை, சரீரம், கால் பிண்ட நிலை விபரங்கள்

மருந்து சுத்திகுணம் நிகண்டு கண்கள் மூன்றாம்
வாதபித்த சிலேட்டும தொந்தந்தலைகள் நான்காம்
அருந்தும் அறுசுவை யறிதல் கைகளாறாம்
அஷ்டவிதக் குறியறிதல் சரீரம் எட்டாம்
இருந்த தசநாடி தசவாய் விரண்டும்
இதமாகப் பார்த்திடில் கால்கள் பத்தாம்
பொருந்தியதோர் பிண்ட நிலைமுகங்களைந்தாம்
பொதிகமலை யகஸ்தியனார் புகன்றவாறே. (6)

வாகடத்தின் பயனறியார் நாடிகாணார்
வளர்கையைப் பிடித்திழுத்து வார்த்தை சொல்வார்
ஆகடியமாகவே நல்லோர் தம்மை
அசாத்திய நோயோரென்று அறைந்துபோவார் தீர்க்கமாட்டார்
ஓகோ கோவைத்தியர் தாமென்று சொல்வார்க்
கொருகாலும் மோட்சமில்லை நரகந்தானே. (7)

அச்சமற வைத்தியரே நோயுள்ளோர்க்கு
அசாத்தியமும் சாத்தியமு மறிந்து நன்றாய்
பட்சமற குறிக்குணமெய்ப் பரிட்சை
பார்த்து பரிகாரமாய் மருந்து பகராராகில்
தச்சமறக் கிளைக்குலங்கள் வேரோடற்று
தரணிதனில் வெகுபாவந் தலைமேற் கொண்டு
இச்சைபெற வெழுநரகிலழுந்திப் பின்னும்
ஈடேற்றமில்லா மலிருப்பர் தானே. (8)

தரணி தனிலவுஷதத்தின் சுத்திகண்டு
தகமைபெற நோயாளி சரீரம் பார்த்து
கரநியாசன வகையுங்கண்டு பின்னுங்
கைப்பரிட்சை மெய்ப் பரிட்சை கருதும்நாடி
திரநிகரில் குருமுகமாய்ப் புத்தியாகித்
தெளிந்தோர்கள் யோசனையும் செய்துகேட்டு
முரணியினா லிந்தவகை செய்யாராகில்
மூவேழு சுற்றமும் வேரற்றுப் போமே. (9)

கருத்துறவே வாதிமகன் வைத்தியஞ் செய்யில்
கசடறவே நோயாளி குருவாயெண்ணு
கருத்துறவே மருந்துக்குப் பத்திவேணுங்
கைகண்ட வைத்தியரை யறிந்து நன்றாய்
கருத்துறவே மனது வரநடக்க வேணுங்
கழுதையைப் போலிருந்தவர்க்குப் பலியாதொன்றுங்
கருத்துறவே யிவையறியச் சித்தர்தானுங்
காட்டினாரவர் மனம்போல் நடந்து கொள்ளே. (10)

நடந்து கொள்ளும் நோயாளி ராஜாவாக
நாட்டினால வர்க்கங்கே மருந்தூணாது
தொடர்ந்துமே யவரிடத்திற் பத்திவைத்தால்
துரும்பாகப் போகுமடா நோய்களேது

அடர்ந்துபோ யவர்வாசற் கார்த்தாரானால்
அக்கினியிற் பஞ்சது போல் நோய்கள்போகு
தொடர்ந்து நோய் வந்தால் குருவேயென்பார்
சாதரியமாய்த் திரிந்தால் தம்பியாமே. (11)

தம்பியென்பார் நோயெல்லாந் தீர்ந்தபின்பு
தாய்தங்கை குருவென் பார்தீரும்முன்னே
வெம்பியதோர் ரோகங்கள் தீர்ந்தபின்பு
வேண வுபசாரம் பின்னா கட்டென்பார்
கும்பியே கொதித்து மிகவுள்ளம்வாடி
குருவான வைத்தியர் தன்மனது நொந்தால்
சம்பியே முகம் வாடித்தான் வாரார்கள்
சாற்றினேனி வையறிந்து மருந்து வாங்கே (12)

வஞ்சமற்றா ரென்ற பிணியாளர் தம்மை
மகவதிலும் பதின்மடங்கு மருந்துசெய்யில்
நெஞ்சில் நோயாளியின் பிணிநிதானம்
நிறுத்துமந்த வைத்தியர்க்கு நிதிகொடாமல்
பஞ்சைமொழி பகருமரும் பாவியோரைப்
பாழ்நரகி லழுந்தியெ மன்பாசத்தாலே
அஞ்சயிழுத்தே யடித்துத் தள்வானென்று
அகஸ்தியரும் முந்நூலிலருள் செய்தாரே. (13)

பிண்டவுற்பத்தி

கேளப்பா மனமான வாயுகூடி
கெடியான சித்தமா காயம் பொங்கி
வேளப்பா ஆங்காரமிஞ்சி மேவுதற்குப்
பெண் மேலே மோகமாகும்
நாளப்பா ஐந்துக்கும் பலமே தென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
தாளப்பா மனதோடே வியானங் கூடுந்
தனியான நாதத்தில பானன்தானே. (14)

தானென்ற விந்துவினிற் சமானங் கூடும்
தனியான சித்தத்தில் வியானங்கூடும்
கானென்ற ஆங்காரம் கர்ச்சிப்போடோ
கலந்து நிற்கும் உதானனப்பா கண்டுகொள்ளு

வேனென்ற பத்தும் ஒன்றாய் மனதுங்கூடி
மேவியவன் கலந்து விழுகும் போது
மானென்ற மௌன பரவசமேயாவன்
மருவுகின்ற பெண்ணுக்கம் முறைதான் கேளே. (15)

கருத்தரிக்கும் விதம்

முறையான பெண்ணாணும் மௌனமுற்றால்
மோசம் இல்லை கருவங்கே தரிக்கும்பாரு
நிறையான வலத்தோடி லாணேயாகும்
நேராக இடத்தோடிற் பெண்ணேயாகும்
உறையான கருப்பையில் சுக்கிலம் பாய
வுத்தமனே சுரோணிதந்தா னுறைந்து கொள்ளும்
கறையா கப்பாய்ந்த வெளிதமருபோலக்
கழற்கொடிக்காய்ப் போற்றிரண்டு சிரசும் ஆமே. (16)

ஆமப்பா சிரசோடே கையுங்காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்புமூளை
ஓமப்பா அஸ்திமுதலு। ரோமத்தோடு
வுத்தமனே பதினொரு வாசலுமே காணுங்
காமப்பா விழுந்த வழிசிரசினாலே
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ்செல்லும்
சேமப்பா நடுமையத் தொப்புளாலே
சென்றதெலா மலமாகக் கழியுந்தானே. (17)

தானென்ற பதினொன்றாற் சடந்தான் முன்னே
சாதகமா யெடுத்து வரும் மலடெவ்வாறு
ஊனென்றப் பெண்ணுக்கு மனதுவேறாய்
உருக்க முற்றுமௌனம் உண்ணாப் பாவத்தாலே
கானென்ற மலடாவாள் புருஷனுக்குங்
கைமுறையா யிப்படிதான் கண்டுகொள்ளு
தேனென்ற மொழியாட்கு பரனார் சொன்னார்
ஜெகமெலாம் இப்படிதான் செனித்த வாறே. (18)

தசவாயுவுகளின் பெயர் பிராணவாயு மிருப்பிடம்

பிலத்து நிற்கும் பிராணனோட பானனெனும்
பிரியாவியானன் சமானனொடு கூர்மன்
நலத்து கின்ற நாகனெழிற் கிருகரன்றானாகும்
நற்றேவதத் தனொடுதனஞ் செயன்பத்தாகும்

இலக்கமுடன் பிராண நிலைமூலமதிற் றோன்றியெழுந்து
சிரசளவு முட்டியிரு விழியின் கீழாய்
கலக்கமற நாசிவழியோடும் நிராறில் கடுகியெட்டு
வுட்புகுந்துக் கழியும் ஓர்நான்கே. (19)

அபானன் வியானன் உதானன் சமானவாயுகள்

உந்தியெனுந் தலத்தின்கீழ பானன்நின்று
உறுமிமலங்களையுங் கழலச் செய்யும்
விந்தையெழில் வியானன் தோள்தனில் நின்று
மிகக்களையுந் தவனமும் உண்டாகச் செய்யும்
பிந்த உதானன் செயலுண்டசனந் தன்னைப்
பொருநாடி நரம்புவரு யூட்டல்செய்யும்
இந்த வுடலதனை வளர்க்குஞ் சமானன்தானு
மியாவையு மேமிஞ்ச வொட்டா திருக்குமென்றே. (20)

கூர்மன்-நாகன்-கிருகன்-தேவறத்தன்-தனஞ்செயன்-வாயுகள்

கூர்மனிரு விழியில் நிமைத்திடுமே நாகன்
கொட்டாவி விக்கலெனுங் கொடுமைசெய்யும்
தீர்மை கிருகானீட்டி முடக்கி வைக்குந்
தேவதத் தன்விழித்துமே வசனஞ்செய்யும்
பேர்மன்னுந் தனஞ்சயன்மேற் சிரசிரண்டாய்ப்
பிளந்திடும் போதது வோடிப் போவதாகும்
நேர்மை யறிந்திடுவை யினிநாடிபத்தின்
நிலை தெரிந்திடவிபரம் உரைசெய்வோமே. (21)

தசநாடிகளின் பெயர்கள் சுழிமுனைநாடி இடகலைபிங்கலை

சுழிமுனையாம் இடகலைபிங்கலை காந்தாரி
தூயத்தி சிகுவையலம் புடைபுருடன்றானாம்
நெழுகுருவன் சங்கினி யோடீரைந்தாக நின்ற
தசநாடி பத்தும் நிலைத்த நாமம்
மொழிவது கேள் சுழிமுனையென் பது மூலத்தில்
முளைத்து நடுவெழுந்து சிரசளவு நிற்கும்
பிழிவழியச் சுழிமுனையிற் கலைகள் தோன்றிப்
பிறந்து யிருநாசியிடம் ஒடிநிற்கும். (22)

காந்தாரி அத்திசிகுவை அலம்புடை, புருடன் குருநாடிகள்

கண்ட மதில்நின்று காந்தாரி நாவில்
கரைந்த நீர்பொசிய யுபாயங்கள் செய்யும்
அண்ட செவிதனிலத்திசி குவைநின்று
அவத்தையோர் நான்கினுக்கும் ஊஊஎன்னும்
விண்ட அலம்புடையபுருடன் இருவிழியில்
நின்று மெய் மறந்தபோது அசைவாகிநிற்கும்
கொண்ட குருநாடி தானீரல் பற்றிக்
குடல் புரட்டி வாயினீர் சுழற்றி நிற்கும். (23)

சங்கினிநாடி விடையம் ஐந்தின் பெயர்கள், வர்ணவிடையம்

சங்கினி யென்பது நாபி குய்யம்பற்றித்
தானிருக்கும் ஒன்றையு மேமிஞ் சொட்டாமல்
அங்கும் அதிகாரியனோடைம் பத்தொன்று
அறிவித்தோ முவசனாதி யைந்துங் கேளாய்
இங்குவ சனங்க மனந்தானத்தோடு
இருந்த எழில் விசர்க்கம் ஆனந்தம் ஐந்தில்
பொங்கு வசனாதி யவன்வாக்கில் நின்று
போருந்த வசனத்தையவன் பிறப்பிப்பானே. (24)

வியாதிகளை அஷ்டவிதப் பரிட்சைகளாலும் நிச்சயித்தறிதல்

தரணியுள்ள வியாதி தனையஷ்டாங் கத்தால்
தானறிய வேண்டுமது ஏதென்னில்
திரணியதோர் நாடிகண்கள் சத்தத்தோடு
தேகத்தின துபரிசம் வானம் நாக்கு
இரணமலம் இவைகளெட்டும் இதம்படவே
தான்பார்த்துக் குறிப்புங் கண்டு
பரனருளாற் பெரியோர்கட் பாதம் போற்றிப்
பண்புதவறாமற் பண்டிதஞ் செய்வீரே. (25)

நாடிகள் நிற்கும் இடங்களும் வாதநாடிநடையும் வருதலறிக

செய்கின்ற நாடி பெருவிரலின் மேலாய்
திருந்திழை மூன்றங்கு லத்தினடுவதாக
தைக்கின்றக் கோதும்பையரிசி போலசர்வம்
வியாபித்திருக்கும் அதுதான் கூறில்

கைபடியுங் காலடியும் நாடி நிற்குங்
கன்னியருக்கிடப் புறமாங் கணவர்க்கங்கே
மைகின்ற வலப்புரமாம் வாதநாடிவந்து
முன்னே நடக்குமப்பால் வகைசொல்வேனே. (26)

பித்தம்-சிலேட்டுமம்-வாதம்-நாடி நடைகள்

சொல்லுகின்ற பித்தநாடி தோன்றும் அப்பால்
தொடர்ந்து சிலேட்டும நாடிதோன்றும் அப்பால்
அல்லுநிறக் குழலாளே நாடிநின்றால்
ஆச்சரியநாடி யென்றறிந்து சொல்லு
மல்லுகின்ற வாதத்தில் நாடியங்கே
வக்கிரகதியா நடக்குந் தவளைபோல
நல்லுகின்ற தவளை யட்டைதொட்டி லாட்டல்
நல்லாயிப்படி நாடி நடக்குந் தானே. (27)

பைத்திய நாடி நடை-சிலேட்டும நாடிநடை-வாதமும் பித்தமும் தொந்திக்க நாடிநடை

நடக்கும் பைத்தியஞ் சவலைப் பிள்ளைபோலும்
நடனமயில் அன்னம் போறகாகம் போலும்
திடக்கும் சிலேட்டும நாடி இலங்கும்
பட்ன செய்யபுறா வூர்க்குருவி கோழி போலே
அடக்கமாய் நடக்குமது ·மயிலே சொன்னேன்
அவ்வளவே வாதபைத்தியத்தின் தோற்றம்
மடக்கின்ற காடைபோல் நடந்து பின்னை
மஞ்ஞை யென நடக்கு மதுவறிந்து கூரே (28)

வாதசிலேட்டுமந் தொந்தித்தநாடி அசீரணநாடி மத்திரிதயநாடி - ஸ்திரீசங்கைநாடி - மலபந்தநாடி சன்னி வாதநாடிகளின் வருகை

கூறுகின்ற வாதசிலேட்டும முங்கூடில்
கோழியட்டை யெனநடக்கும் அசீரணநாடி
தூறுகின்ற மந்திரிய தயத்திநாடி
தூங்குகின்ற காகநடையென்று சொல்வார்
தேறுகின்ற ஸ்ரீசங்கை இப்படியாய்
நின்று தீபரமாய் நடக்கும் மலபந்தநாடி
ஊறு மன்னம்போல நடக்கும் சன்னி வாதம்
உயர்நாடி விதிகளையும் உரைக்கக்கேளே. (29)

குடிலை சூக்ஷமவாயு-சன்னிவாதம்-சங்கினி காந்தாரி நாடிகளின் நடைகளறிக

உரைத்த விறகின் கட்டுக்குள் மூஞ்சூறு
உலவுதல் போலே நடக்கும் குடிலைவாயு
விரைத் தெழுந்தே மந்தமாயிருந்து பின்னும்
விதமாக நடக்குமது சூட்சமவாயு
புரைத் தருமை யிவ்வகையின் சன்னி வாதம்
பொருப்பாகக் குவிந்தமுலை போலுங்கொங்கை
முரைத் தெழுந்த சங்கினி காந்தாரிப் பின்னே
முறைமையதாம் நாடியென முனைவர்தாமே. (30)

தேகங்களின் பரிசங்களும் வருங்குறியறிதல்

முனைகின்ற தேகபரிசத்தை பார்க்கில்
முன்வாதத் தேகிக்குச் சக்ரஞ்சற்றே
அனைகின்ற உட்சணமாம் பைத்திய தேகிக்
கதிகமுண்டாம் அப்பால் சீதளமாய் நிற்கும்
சுனைகின்ற சிலேட்டு மந்தான் சூழ்தேகிக்கு
தொந்த குணம்நால் விதமாம் நிறந்தான் கூறில்
பனைவாத தேகநிறங் கறுத்து நிற்கும்
பைத்தியதேக நிறமஞ்சள் சிவப்பதாமே. (31)

சப்தலட்சணம்

தாமே சிலேட்டு மதேகநிறம் வெளுப்பு தான்
தொந்தேகம் இந்நால் விதமாய்நிற்கும்
மாமயிலே சத்தமது அறியவேண்டில்
வாதரோகிசம தொனியாய் வார்த்தைபேசும்
ஈமமுள்ள பித்தந்தான் இறைந்து கூறும்
இயம்பிடும் சிலேட்டும ரோகிக்கீனசத்தம்
நாமுரைத்தோம் தொந்த ரோகிக்குத் தானிந்த
நால்விதமாய் மொழிந்த சத்தம் நயந்து காணே. (32)

காணுகின்ற வாத ரோகிக்கு கண்கள்
கருநிறமாய் நொந்துமிகத் தண்ணீர்பாயும்
பூணுகின்ற பித்தரோகிகடி மஞ்சள் போலிருக்கும்
சிவப்பு நிறப்பொலிவு தோன்றும்

பேணுகின்ற சிலேட்ம ரோகிக்கு கண்கள்
பீளைகட்டி வெளுத்திருக்கும் சன்னிவாதம்
வாணுகின்ற சிவப்புடைத் தாய்வந்து வீங்கி
வந்திடுங் காமாலை யெனவகுத்து சொல்லே. (33)

வாதமலம்-பித்தமலம்-கபமலம்-தொந்தமலம் வாதச் சிறுநீர்நிறங்கள்

வந்தமாவாத ரோகிக்குத் தானும்
மலமிறுகக் கட்டுபட்டு கறுத்துத் தோன்றும்
சித்தபித்த ரோகி மலமஞ்சளாகில்
சிவப்பாகில் சேர்ந்திருக்குஞ் சிலேட்மருக்கு
தொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கட்டானந்
தொந்தர் மலம்பலவிதமாய் தோற்றிக் காணும்
விந்தமுள வாதரோகிச்சிறு நீர்தானும்
வெளுத்திருக்கும் பைத்தியர் நீர் விதஞ்சொல்வேனே. (34)

பைத்தியர் சிறுநீர்-கபநீர் தொந்தநீர்-வாதரோகநாவு-பித்தரோக நாவுநிறங்கள்

விதமுள்ள பைத்தியர் தன்சிறுநீர் மஞ்சள்
விதமுடைத்தாயிருக்கு மல்லால் சிவப்பு தோன்றும்
நுதையுள்ள சிலேட்டு மத்தோர் நீர்தான் மெத்த
நுரைகலக்குந் தொந்த நீர்நால்விதமாய்க் காணுஞ்
சதையுள்ள நாவிநிறஞ் சொல்லில் வாதந்
தோன்றினர்க்கு வெடித்து முட்போற் கறுத்திருக்கும்
கதையல்லச் சிவந்தாலும் பசித்தாலுந் தான்
கனமுள்ள பைத்தியர் நாவு கணக்குத் தானே. (35)

கபரோகநாவு-ஜன்னி ரோகநாவு-தொந்த ரோகநாவு

தானமொடு வாய்வெளுத்து நீருண்டா கிற்றான்
சிலேட்ம நாவாகும் ஈரம் அற்றே
அளைமுற்போற் கருக்கில் சன்னிரோக நாவாம்
அதமதொந்தம் நாநிறம் நால்விதமாய் தோன்றும்
ஆனஇவ்வகை எட்டும் அறிந்த பேரை
அவனிதனிற் பண்டிதரா யறியச்சொல்வார்
ஈனம்இலாப் பொறியடக்கும் பெரியோரன்றி
யெய்தாது யாவருக்கும் இயம்புங்காலே. (36)

குணவாகடத்தின் வைத்திய சாரம் முற்றிற்று

உ

கடவுள் துணை

அகஸ்தியர்
குணவாகடத்தின் நோயின் சாரம்

விநாயகர் துதி

கரிமுகக் கடவுளை கௌரி மைந்தனை
விரிகடல் வாயனை வேதவே தாந்தனை
அரிதரு மருகனை யாதி சோதியை
பரிவொடு தொழுதவர் பாதம் போற்றுவாம். (1)

மாதங்களில் நாடிபார்க்குங் காலங்களறிதல்

சித்திரை வைகாசிக்குஞ் செங்கதிருதையம் பார்க்க
அத்தமாம் ஆனியாடி யைப்பசி கார்த்தி கைக்கும்
மத்தியானத்திற் பார்க்க மார்கழிதை மாசிக்கும்
வித்தகக் கதிரோன் மேற்கே வீழ்கும் வேளையிற்றான் பாரே. (2)

தானது பங்குனிக்கும் தனதுநல்லா வணிக்கும்
வானமாம் புரட்டாசிக்கும் வர்த்தராத்திரியிற் பார்க்க
தேனென மூன்றுநாடி தெளியவேகாணு மென்று
கானமா முனிவர் சொன்னகாரிகை வேதநூலே. (3)

நாடிபார்க்கிற் பலித்திடா காலமறிதல்

எண்ணெயின் தலையின்போதும் ஈரமாய் நின்றபோதும்
உண்ணும் நல்லுணவின்போதும் உண்டாம் வெம்பசியின்போதும்
திண்ணமாய் நடக்கும்போதுஞ் சிற்றின்பம் மூட்டும்போதும்
பண்ணிய நாடிபார்க்கிற் பலித்திடா தென்று செப்பே. (4)

நோய்நாடி பார்க்கும் விபரமறிதல்

மருவிடு நோயிநாடி மதித்திடல் வலக்கை மைந்தர்க்
கரிவையர்க் கிடக்கைதன்னி லழுத்தியே சுட்டிக்காட்டும்
விரலதில் வாதமாகு மிகுநடுவிரலிற் பித்தந்
தருமணி விரலில்ஐயந் தானியல் பறிந்துபாரே. (5)

வாதமும் பித்தம்ஐயம் மருவிய குணபாடத்தை
தீதயமுனிவர் நூலைத் தேர்ந்தபின் திரட்டதாக
ஓதிய சுருக்க நூலை யொழுங்கொடு உணர்ந்துகொள்ள
வாதுதிர் வைத்தியற்கு வல்லிருள் விலக்கலாமே. (6)

மந்த சுரக்குணம்

வாதந்தான் தனித்துநின்று வந்திடும் பந்துபோலத்
தீதறவெழும்பி நின்றாற் சிக்கியே மந்தம் பற்றும்
ஏதுவாற் சுரங்கள் கண்ட திடைவிடா நிற்குமல்லாற்
தாதுவுங் குறைந்துநின்று தன்னையு மறக்கச்செயும். (7)

பத்திய சுரம் மலைச் சுரங்களறிதல்

உற்றிடும் வாதநாடி ஒருவிரலுள்ளே நின்று
பற்றியே சிலும்பிநின்று பையவே நடக்குமாயின்
பத்திய சுரமேயாகும் மலைச்சுரமது தானாயின்
அத்தியே மற்றியோடி யடங்கிடா தெழும்பி நிற்கும். (8)

சகலசுரங்களும் பாஷாணத்தாற்றீரும்

இப்படி சுரங்கள் கண்டா லெளிதல்லவேக முண்டாம்
அப்புற நாவரண்டன் நாவினிற் பிளப்புக் காணும்
வெப்புறு மிச்சுரங்கள் மேவிடாத் தலவேண்டில்
மெய்ப்படிப் பாஷாணத்தால் மீள்வது திண்ணந் தானே.(9)

(வனமூலிகஷாயம் மாத்திரைகற்பம் இவைகளாற்றீரும்)

நாட்டினிற் சுரங்கள்கண்டு நலம்படாதிருக்கு மாயிற்
காட்டினில் மூட்டியாலுங் கஷாயத்தின் வலிமையாலும்
மூட்டிய குளிகையாலும் முடிய கற்கத்தாலும்
வாட்டமா யென்றுநூலோர் வழுத்திய குணமீதாமே. (10)

மலபந்தநாடி

வந்திடும் வாதநாடி மடங்கியே துடித்துநிற்கில்
முந்திய பழமலங்கள் முடுகியே சிக்குமென்க
அந்தமாய் வாதந்தம்பித் தமிழ்ந்து நின்றசைக்கு மாகிற்
பந்தியாய் வயிற்றெரிப்பும் பரப்பும் வந்தடுத்த தென்ன. (11)

மந்தசன்னி

நீருறும் வாதநாடி நின்மதிற் கோபமானார்
பாரினி லெவர்க்கும் வாயு பற்றிடு மந்தமாகும்
வேரிசேர் குழலாய்வாதம் விரிப்பொடு எடுத்து நின்றால்
கூருறு சன்னிவந்து கூடிடு மூன்று நாளில். (12)

மேற்படி சன்னிதீர அண்டத்தைலம்

வந்திடு மூன்றுநாளில் வாதமாஞ் சன்னிகூடிற்
புந்தியை மறந்துவாயாற் புலம்பலோடலம்பற் பண்ணும்
பிந்திய நாலர்நாளிற் பிடரியிற் பின்னல் செய்யும்
அந்தமாகிய வண்டத்தின் தைலமே புகற்றிடாயே. (13)

தோஷக்குறியறிதல்

பரவிய வாதநாடி பக்கமே துடியாவண்ணம்
புரவிய புழுப்போலூர்ந்து புலன்கெடவ மர்ந்தேயோடில்
சுரமுறும் ஏழாநாளிற் றோஷம் வந்தணுகி நாவை
யுரமுறப் பேசவொட்டா துளரியே குளரிநிற்கும். (14)

மேற்படி தோஷந்தீர மயிலிநெய்

பேச்சது குளரிநின்று பெருகவு மூச்சுமுண்டாம்
ஆச்சு பன்னிரண்டு நாள்தா னப்படி கிடக்கிற்பின்பு
கூச்சற மயிலிநெய்யிற் குலவியவசம்பு கூட்டித்
தேய்ச்சு மேலுள்ளுங்கொள்ள தோஷமுஞ் சிதைந்து போமே. (15)

வாதமெலிவு தோஷம்

வாதமே மெலிந்து விம்மி வரண்டது புறண்டுதத்தி
சோகமா யரணைவால் போல் சிக்கியே துடித்துநிற்கில்
வாதையே பெருகிமேலில் வந்திடுந் தோஷந்தானென்று
ஓதினார் முன்னோர்ந்த தகமையைக் கண்டுசொல்லே. (16)

சர்வாங்க வாதசன்னிக் குணம்

கூறிட்ட வாதநாடி கோழிபோற் கிண்டிநின்றால்
வாரிட்ட முலைநல்லாளே வாதமாஞ் சன்னியாகும்
பாட்டெடுத் தெடுத்துப் பிரப்படத்தி யங்குமாகில்
ஆரிட்ட தேகத்துண்டாம் அதுசரு வாங்கமாமே. (17)

மேற்படி நோய்தீர மருந்து

பதறிய வாதநாடி பாய்பரிபோல வோடிற்
சிதறிய மூன்றாம்நாளிற் சேர்ந்திடுங் குதிரைவாலி
மதறியாய்த் தொண்ணூற்றாரு நாழியில் மரிக்காவிட்டால்
விதறியாய் வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித் தைலங்கூட்டே. (18)

வாதக்கதியால் வருநோய்கள்

வாதமே கதித்தபோது வாயுவும் எழும்புங் கண்டீர்
வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோஷம்
வாதமே கதித்தபோது வந்திடும் வியாதி மேலும்
வாதமே கதித்தபோது வல்லுடல் மெலிந்துக் கொல்லும். (19)

இருநாழிகையிலும் ஒருநாழிகையிலும் சாகுங்குறி

மந்தமாய் வாதநாடி மயிரூரும் பேன்போலோடில்
இந்த மானிடர்க் கிரண்டு நாழிகை யிருப்புமில்லை
வந்தவன் முகமும்வேர்த்து மஞ்சளி நிறமெய்யாகில்
முந்தவோர் நாழிகைக்குள் மடிவது திண்ணந்தானே. (20)

தனிவாயும்-நோயும்-வலிகுன்மமும்-மரணமும் வருங்குறி

வாதந்தான் தனித்து நிற்கில் வாயுவுந் தனித்துநிற்கும்
வாதந்தானு தறிநிற்கில் வலிகுன்மம் வந்துசேரும்
வாதத்தின் திரட்டதெல்லாம் இவ்வகை வடிவுதானே. (21)

கர்ப்பந்தரித்த நாடிக்குணம்

காரிகை தமக்குபிள்ளை கருப்பையைப் பற்றி நின்றார்
சூரியவாதநாடி குண்டலப்புழுப் போலூரும்
வீரிய மூன்றாந்திங்கள் விட்டில் போற்பதைத்து நிற்கும்
பாரிய வெட்டாந்திங்கள் பையவே புழுப்போலூரும். (22)

மாதர் கைப்பிடித்தபோது வந்திடும் வாதநாடி
தீதுறவெடித்துப் பாய்ந்து சிதறியே சிலம்பிநின்றார்
பேதை தன்வயிற்றிலுள்ளே பெருகு சுரோணிதமே தங்கி
வாதைகள் பண்ணமாத விடைகாலம் வருத்தஞ் செய்யும். (23)

கர்ப்பந் தரிக்கக் குழம்பு

இடுப்பொடு கடுத்து நொந்து இடைவிடாக்குத்த லுண்டாய்
தடுத்திடாகர்ப் பந்தன்னைத் தங்கிடா வண்ணஞ் செய்யும்
அடுத்த தோராவின்னெய்யி லானதோர் திருகுகள்ளி
கொடுத்திடாத் தும்மட்டின் காயின் குழம்பது கொடுக்கத்தங்கும். (24)

சூதகத்தில் வாயுதங்கிய குணம்

மாதர் கைப்பிடித்தபோது வந்திடும் நாடிமூன்றும்
சேதமாயிற்று நின்ற சேரவே பதிந்து நிற்கில்
ஓதுமே சூதகத்தி லோங்கிய வாய்வே நின்று
பேதையாய் வாதை பண்ணி பிணிகளை விளைக்குந்தானே. (25)

எரிகுன்ம வரலாறு தீருமருந்து

வாதமும் பித்தங் கூடிவன் பெலத்துடனே யோடிற்
றீதரும் வயிற்றினுள்ளே திரண்டதோர் மந்தம்பற்றி
வேதனை எரிப்புங் கூடிவிரண்டிடும் எரிந்த குன்மம்
ஆதிசேர் சீனிகூட்டி அஷ்ட சூரணந்தான் கொள்ளே. (26)

சூலநோய் வரலாறு

திருத்தமாய் வாதத்தோடே தீங்கொ்டு பித்தஞ்சேரிற்
பொறுப்புகள் தோறும்நொந்து போதவே பிடிக்குஞ்சூலை
பெருத்திடா வாயுகொள்ளும் பேசிய வயிறே போகுங்
கருத்தினா லறிந்துநன்றாய் கண்டிடாய் மனிதர்க்கெல்லாம். (27)

காலன் பிடிக்கும் நாடி

அறவின்றன் நாவைப்போல அடிக்கடியு தறிவாதம்
உறம்பெற நின்றுபித்தம் ஓடியே யொளிக்கு மாகில்
திரும்பிடாக் காலன்றானே தீங்குடன் பிடித்தானென்று
வரம்பெறு முனிவர்தானும் வாகொடு சொன்னார் தேர்ந்தே. (28)

மூலாதாரவாதையாற் சாதலும் பைத்தியம் பிடித்தலுமறிக

பிறந்திடும் பித்தநாடி பிரண்டுமே நிற்குமாகில்
வறண்டிடு மூலாதாரம் வாதையால் மடுவு செய்யும்
கறண்டத்து பித்தநாடி கதிப்பொடு துடித்து நின்றால்
அரண்டிடுப் பைத்தியந்தான் அடைவொடு வந்துகூடும். (29)

பேச்செழும்புதலும் அடங்கலும்-குளரலும் வருகை

உற்றிடும் பித்தநாடி யொழுங் கொடு எழும்பி நின்றால்
வற்றிடாப் பேசுகின்ற வசனமு மெழும்பி நிற்கும்
மத்திமப் பித்தநாடி மடங்கியே துடித்து நின்றால்
உத்தமம் பேச்சு தானும்ஒடுங் கிவாய் குளறிப்போகும். (30)

பைத்திய நோய்-வ்ரலாறும் தீருமருந்து

பித்தமாம் நாடி தானே பெலத்தோடு தனித்து நிற்கில்
மத்திமப் பைத்தியத்தை வளர்த்திடும் வாதநீர் சேரும்
உத்த மூளை தன்னில் உருகியே குறைந்து நிற்கும்
சித்தா முத்தாடும் எண்ணெய் சிரசிற்றேய் தூறப்போமே. (31)

கிறுகிறுப்புத் தீரக் கஷாயம்

உதறியே பித்தநாடி உழுவைப் போற்றுடித்து நிற்கிற்
பதரியே யுடம்பழுத்தும் பாய்ந்திடுஞ் சிறுநீர்வற்றும்
முதலிய புத்திமாறி கிறுகிறுத்த மூலையுண்டாம்
நிதவிய பயறாம் பச்சை நெல்லிக்காய் கஷாயங் கூட்டே. (32)

சுரத்தொடு கபாலக்குத்து வரலாறுந் தீரும் புகையும்

நடுவிரற் பித்தமற்று மந்தமாய் நடக்குமாகில்
வடிவுளவுடம் பழுத்திமந்தித்துச் சுரமுந்தோன்றி
யிடியிடித்தது போலோடிச் சிரசினிலிடித்துக் குத்தும்
படியவே சாதிலிங்கப் புகையுண்ணப் பறந்து போமே. (33)

வறட்சிசுரம் பிரமேகம் வரலாறு

வளர்ந்திடும் பித்தநாடி வலமிடம் பிசகாவண்ணம்
பிளந்தது தனித்துப் பச்சைப் புழுனுடங்கது போலோடில்
உளந்தனில்வற ட்சிதங்கியுடம் புலர்ந்தஸ்தி தன்னில்
வளைந்திடுஞ் சுரங்கள் வந்துவளர்பிர மேகமாமே. (34)

மஞ்சள்நிற நீர்க்கடுப்பு உடல் தளர்ச்சி தீர வங்கபற்பம்

சலநிறமஞ்சள் போலாய்க் கடுத்திடுந் தளர்ச்சி செய்யும்
உலவிய மூன்று மாதம் பழகிப் பின்னுடம்பு தன்னிற்
குலவியவங்க பற்பம் கொடுக்காம லூறுமாகில்
விலகிடாச் சூலைவந்து வெடித்துப் புண்ணாகு மென்னே. (35)

பித்தத்தாலுண்டாகு நோய்கள் வருதலறிக

பித்தமே தனித்தாற்சூடு பெலத்துட லுலரச்செய்யும்
பித்தமே மிகுந்தா லீளையிருமலும் பெலத்துநிற்கும்
பித்தமே மிகுந்து தானாற்பெலன் குறைந்துடம் பழுத்தும்
பித்தமே திரட்டி நூலிற் பேசினார் பெரியோர் தாமே. (36)

பெருவாதம்-உதரவாயு-பைத்திய முதலான பிணிகளுற்பவித்தல்

பித்தமே கதித்தபோது பெருத்திடும் வாதமுண்டாம்
பித்தமே கதித்தபோது பெருத்திடும் வயிற்றில் வாயு
பித்தமே கதித்தபோது பிதற்றிடும் பித்தே கேளு
பித்தமே கதித்தபோது பிறந்திடும் பிணியனேகம். (37)

சன்னி வாதம் பினற்றல் பியத்தல் நினைவிழப்பு வருகை

பித்தந்தான் வாதத்தோடு பிணைந்து நேர்தோன்று மாகில்
மத்திட சன்னி வாதம் வந்திடும் பினற்றலுண்டாம்
உற்றிடும் வாதத்தோடு வுறவதாய்ப் பித்தமீறில்
நித்தமும் பிதற்றிப் பேசிநினைவிழந் திருப்பா ரென்னே. (38)

மேற்படி நோய்கள் தீரமருந்தும் க்ஷயரோகமும் வரலாறும்

முற்றுமிக் குணங்கள் கண்டால் முயிறதன் முட்டைதன்னை
கத்தப் பாலினோடுங் கலந்தருந்திடு வாய்பின்பு
பித்தந்தானை யத்தோடு பெரு முகந்திரும்பி நிற்கில்
மத்தியக்ஷய ரோகத்தை வருகவென்றழைக்குந் தானே. (39)

சீழும்-விடாத சுரமுங்காணும்-க்ஷயரோகந்தீர குக்கிலாத நெய்யுஞ்சாறும்

இருமியே சீழும்விழுந்து இடைவிடா சுரமுங்காயும்
பருவமாய் நெஞ்சில் பற்றிபதறியே யிரத்தம் வீழும்
குருநிலைக்குக்கி லாதிகிருதத் தாற்குடி போம்பின்பு
எருநெரிகண்டந் தோடைவளைய தனீரைக் கொள்ளே. (40)

அசாத்திய சுரநாடிக்குக் குறியறிதல்

அய்யமாம் நாடிதானே யரணை வாலாற்று நேர்ந்து
பய்யவே மந்தந்தானும் பற்றிடா திருக்குமாகிற்
செய்வதொன்றில் லாக்காலன் தேடுவதுண்மை யென்று
கையினைப் பிடிக்க வேண்டாங் கழற்றிக்கொண்டப் பாற்செல்லே. (41)

இருமலீளை யிளைப்பு கோழைதீர

உற்றிடும் ஐயநாடியோங்கியே துடித்துநின்றால்
பற்றிடும் இருமலீளை பதறியே இளைப்புண்டாகி
மெத்தவே கோழைவாயு மிகுத்திடிற் கற்கத்தோடு
சுத்தமாய் தூதுவேளை தோடகை கண்டங் கூட்டே. (42)

தொண்டையும்-நெஞ்சுகட்டி-மழைக்காலு பாதித்தல் தீர குக்கிலாதி நெய்

இதமொடு இறுதி நாடிஇளகிடாதிறுகி நின்றாற்
பதமொடு தொண்டை கட்டும் பழுத்து நெஞ்சதனிற் கட்டும்
விதமொடு மழைநேரத்தில் மிகுதியாய் வாதை பண்ணும்
நிதியெனக் குக்கிலாதி நெய்யினால் மாறுந்தானே. (43)

பீனிசம்-நீர்ப்பாய்ச்சல்-மண்டைச்சூலை தலைகனப்புத் தீர நண்டு நெய்.

ஒடுக்க மாஞ்சிலேட்டும நாடியொழுங் கொடுபதறி நின்றால்
நடுக்கமாய்ப் பீனசங்கள் நாசிநீர்ப் பாய்ச்ச லாடும்
பிடித்திடும் மண்டைச் சூலைபொருத்திடுந் தலைகனப்பு
தடுத்திடும் ந்ண்டுநெய்யைத் தலையினிலப்பத்தீரும். (44)

ஓர்பகலுக்குள்ளிறக்கு நாடிக்குறி

மத்திய ஐயநாடி மந்தித்து வுழன்று நின்று
முத்திய ஈசல்போல முடிகியே பதறுமாகில்
நித்தமோர் பகலுக்குள்ளே நில்லாது மரணம்வந்து
சுத்தியே மரிப்பாரென்னச் சொல்லுவார் நல்லோர்தானே. (45)

குத்தங் கோழைவாயு மரண நிச்சயக்குறி

சிலேட்டும நா:டிதானே தெளிவொடு நிற்கிற் தீதாம்
சிலேட்டும மந்தம்பத்தில் சேர்ந்திடும் கோழைவாயு
சிலேட்டும மிருந்துநின்றால் செப்பிடும் மரணந்திண்ணம்
சிலேட்டுமத் திரட்டதெல்லாந் தெளிவொடு கண்டுகொள்ளே. (46)

சாகக் குறியறிதல்

ஐயந்தான் பித்தந் தன்னை யணைத்தெதுத் தேறுமாகில்
நையவோர் நாளிற்காலன் நாடியே வருவதுண்மை
பையவே ஐயம்பாய்ந்து வாதத்தைப் பற்றி நின்றால்
செய்யும் வாரென்ன சாவோர் நாழிகை திண்ணந்தானே. (47)

வியாதி தோஷம் - ஐயசன்னி மரணங்கள் வருகை

ஐயமேகதித்தபோது அணுகியே வியாதி யுண்டாம்
ஐயமேகதித்தபோது யறிந்திடும் தோஷ மாகும்
ஐயமேகதித்தபோது வையமாஞ் சன்னி யாகும்
ஐயமேகதித்தபோது அவ்வையமே மெலிந்து கொல்லும். (48)

சரீரக்குத்தலும் - நெஞ்சு நோக்காடுமாய்க் காணும் - மேகமறிக

பார்த்திடும் நாடிமூன்றும் பதிந்தது மெலிந்து நிற்கில்
தோர்ந்திடும் மேகம் உள்ளே தோன்றியே பொருந்தி மெய்யில்
ஆர்த்திடாக் குத்தலுண்டா மதனொடு நெஞ்சும் நோகும்
தோத்தமாயிக் குணங்கள் தெளியவே யறிந்திடாயே. (49)

பிணிவாராமையும் - வருகையுமறிக

வாதபிதமைய மூன்றும் வண்பலத்துடனே தத்தம்
பேதமென்றில்லா வண்ணம் பேசிய தானந்தன்னில்
நீதியாய் நிலைத்து நின்றால் நெடும்பிணி சிக்கலில்லை
தாதுவு மொன்றோடொன்று தாவிடிற் பிணிகள்தானே. (50)

சுழல் - வாதம் - மூலம் - சாவு - வாழ்வு வருகை

மூவரு முரந்து நின்றால் முதிர்ந்திடுங் கழல்வாதங்கள்
மூவரு மந்தமானால் முளைத்திடும் மூலமெல்லாம்
மூவரும் பதுங்கி நின்றால் முடிவது திண்ணங் கண்டாய்
மூவருந் தன்தன்காலத் துடித்திடில் வாழலாமே. (51)

ஆறுமாதத்திற் சாகுங்குறியறிதல்

காலையில் மூன்றுநாடி கதிப்பொடு புக்குமாகில்
வாலையா மூச்சிகாலம் வன்பித்தமழுந்து மாகில்
மாலையில் வாதந்தானு மையத்தி லுறையு மாகில்
நீலகண்டத் தாராலண நிலைச்சாவு மாதமாறே. (52)

மலசல அடைப்பும் விடுப்பும் வருதலறிக

பெருவிரலிரண்டு பக்கம் நாடிதான் பிசகி யோடில்
மருவிய மலசலங்கள் மந்தித்தே யடைத்துக் கொள்ளும்
பெருகலை யடிவயிற்றில் பிடித்துமே லெழும்புமாகில்
தடையில்லை மலசலங்கள் தானது கழன்று போமே. (53)

தொப்புளில் - மலசலம் - வாயு இடதுசந்து - இடதுமுதுகு

நடுவிரல் வலதுபக்கம் நாடிதானடக்கும் போது
மடைய தாமுந்தி தன்னில் மலஞ்சலம் வாயுசேரும்
வடநிலை முலையின் மாதே வாகொடுயிடது சந்து
இடமுது கழுத்தில்நிற்ப தென்பது முன்சொன்னோமே. (54)

தொப்புளின் கீழே - ஐயமும் - பித்தமும் - சேருங்குணமறிக

நடுவிரலிடது பக்கம் நாடிதான் நடக்கும் போது
அடைவொடு வுந்தியின் கீழையொடு பித்தஞ் சேரும்
கடகரியுரித் தோன்றன்னைக் கருத்தனிலிருத்திக் கொண்டு
வடுவறநாடி பார்த்து வந்தநோயறிந்து சொல்லே. (55)

கால்கைவலிப்பும் - உடல் நோக்காடுமாய் வருஞ் - சூலைநோய்க்குறி

சிறுவிரலிரண்டு பக்கம் நாடிதான் சிதறி யோடில்
மருவிய காலுங்கையும் வலித்துடல் மிகவே நோகும்
ஒருபொருளாகி நின்ற வுமையொரு பாதம் வைத்த
திருசடைச் சிவனை நோக்கி செப்பினேன் சூலையாமே. (56)

சூலைநோய் - கைத்தவாய் - நீர்மயக்கம் வாந்தி - அடிவயிற்றுச் சூலை வருகை

மோதிர விரலிடத்தே முடுகியே நாடியோடில்
காதியுஞ் சூலைநோயுண்டாம் கைத்திடும் வாய்நீரூறும்
வாதியான ருளினாலே மயக்கமும் வாந்தி யுண்டாம்
ஆதியே யடிவயிற்றிற் சூலையும மர்ந்து நிற்கும். (57)

கால்கை கடுப்பு - சோபம் - உந்திநோய் - தலைவலி வருகையும் சிகிச்சையு மறிதல்

மோதிர விரலிடத்தே முடுகியே நாடியோடில்
கால்களுங் கைகளுந்தான் கடுத்து பின்சோபமாகி
ஓதியே யுந்தி நொந்து வுறுதியாய்த் தலைவலித்தால்
ஆதியான ருளினாலே யவர்கட்குந சியம்பண்ணே. (58)

இரண்டாம் நாளிலும் - எட்டாம் நாளிலும் - சாகுங்குறி

வெள்ள நீரோடும் போல் சிலேட்டுமம் மீறியோடில்
வள்ளல் தானறியச் சொன்னோ மறிப்பது மற்றாநாளில்
தெள்ளிய வாதந்தானுஞ் சிதறியே யோடுமாகில்
உள்ளிய நாளோரெட்டி லுறிதியாய்ச் சாவாரென்னே. (59)

3-நாள்-15-நாள்-40-நாளிற் சாகுங்குறி

பித்தமிப்படியே யோடிற் பிதற்றிநாள் மூன்றிற் கொல்லும்
முத்தியவாத பித்தம் முயங்கியப்படியே யோடில்
பற்றச் சொன்னோங் கண்டீர் பதினைந்து நாளிற் கொல்லும்
நற்றிய ஐயங்கூடில் நாற்பது நாளிற் கொல்லும். (60)

உடனேயும்-3-மாதத்திலுஞ்சாகும்-நாடிக்குறி

அரணைவாற்றுடி போலாடி லாங்கவன் பிழைப்பதில்லை
பரவுதேட் கொடுக்குப்போலும் பதைத்திடிற் சாவுதிண்ணங்
கரையெறும்பது போலோடிற் கண்டிடாய்த் திங்கள் மூன்றில்
வரையணி முலைநல் மாதே மரணமென்றறிந்து கொள்ளே. (61)

மரணநாடிக் குறியறிதல்

ஐயமாஞ் சிலேட்டு மத்திலாகிய நாடிதானுந்
தொய்ய வேதவளைபோலத் தொங்கியே குதித்திட்டாலும்
பையவே புரண்டுபுத்துப் பாம்பென நடைகண்டாலும்
மைசெறி குழலினாளே மரணமென்ற றிந்துகொள்ளே. (62)

கண்ட விற்றிடிப்புமூண்டு கடியமுவிரலை மூன்றில்
விண்டையம் வாதபித்தம் மேவிய நாடி மூன்றும்
ஒண்டொடி மாதேகேளா யுயர்ந்ததோர் தோற்றமாகி
மண்டியே யெழுந்துபாயில் மரணமென்றறிந்து கொள்ளே. (63)

உ

கடவுள் துணை

சிவவாக்கியர் நாடிகூறுகின்றார்

வாதமான தேவனே யாதியாகி நின்றவன்
வாதமான தேவனே வையகம மைத்தவன்
வாதமான தேவனே யறுதொழில் வகுத்தவன்
வாதமான தேவனே வண்மை கண்டுகூறுமே. (1)

வன்னியோர் மிகுத்தவன் வரையெழுந்த மாருதி
தன்னை யொத்திருக்கவே சமத்திலே மிகுந்தவன்
மின்னை யொத்த காமகாரன் தன்னிலே மிகுத்தவன்
தன்னையொத்த் மெச்சிலான சமத்தன் பித்தராசனே. (2)

ஐயமான தேவனே யனாதியாகி நின்றவன்
ஐயமான தேவனே யறிவுவளர்ந் தோங்கிடும்
ஐயமான தேவனே அட்சரத்தை யோதியே
ஐயமான தேவனே யறிந்துணர்ந்து கூறுமே. (3)

வாதபித்த சேற்றும மருவியொக்க ஒட்டியே
வாசைமிக்க சீவனா ரலங்கரித்து நின்றிடும்
வாசை முற்றவாதமு மனமிகுத்த பித்தமும்
சூசியொக்க நின்றிடில் சுரோன் மிகுத்தபித்தமே. (4)

மட்டில்லாத வாதபித்த மருவியொக்க வோடிடில்
மட்டுலாவு சீவனார் மருவியங்கு அகன்றிடும்
யெட்டுமென்ற வீழ்ந்துபோ திருந்தவன் தனஞ்செயன்
கட்ட விழ்ந்தகாரணங் கணக்கறிந்து கூறுமே. (5)

மயங்கிநின்ற சீவனாற் வந்திடுவ தெப்படி
நிறங்குளுந்த பித்தமு நீதியொத்த வாதமும்
தலங்களிற் பொருந்தி நின்று தங்களுக்குள் கூடியே
கலந்திடில் கலந்திடாது கண்டுகொள்ளு முண்மையே. (6)

உண்மையான வாதபித்த சேற்றும மறுகிடி
லுண்மையான சீவனாரோசை கொண்டே யேங்குவ
பொண்மையாக வாழுமிந்த பூதலத்தி லுள்ளவர்
வெண்மையான சீவனார் விட்டிடம் விளம்புமே. (7)

நொத்த நாடிமூன்றிலேய ஞ்சுமாறு மொன்றதாய்
போற்றியே புகழ்நிறைந்த போதுபோது நன்றென
யேற்று தீபநாடியு மெல்லையில் மதித்திட
காத்த காண்டிருள் மயக்குங் காரணங்கள் காணுமே. (8)

விடங்கெரித்த நாடியில் விரண்டுநாடி வாதமாய்
யடங்கிநின்ற பித்தம்பே ாயடுத்த மாருகத்துள்ளே
துடங்கி நின்றவாத முஞ்சூத்திரத்தை யெட்டியே
மடங்கலைமறி யடித்தமாய மென்னமாயமே. (9)

அங்குலத் தடங்கியே யனலையப் பச்சீறியே
பொங்கிநின்ற வுதகமும் புரளையப் படுத்தியே
துங்கவன் கரியமூர்த்தி சுழற்றிடக் கொழித்ததும்
அங்கிநின்ற தேயபான வாயுநாடி மிஞ்சியே. (10)

மிஞ்சுகின்ற வன்னியு மிகுந்து வாதமீறியே
உஞ்சல் கொண்டிரங்குறாய் ஓங்குநாடி ஐயமாய்
அஞ்சுமிஞ் சதிற்ற குழலங்கலை மயக்கவே
துஞ்சவன் தொடுத்தமாயந் தோத்தும் வாரதெங்ஙனே. (11)

உதித்த காலைமாலையி லோடு நாடிமூன்றிலே
சதித்த நாடியின்ன தென்றுகண்டு கொள்ளவல்லியாய்
கெதித்தெழுந்த வாதமுங்குறைந் துழன்ற பித்தமும்
கதிக்கு வந்த தெவ்வை வந்ததன்மை யென்ன தன்மையே. (12)

மூண்டகாலை யுச்சியில் முயன்ற மாலைமூன்றிலே
பூண்டகங்கு லுருள்மயக்கம் புக்குவார தெங்கனே
மீண்டுமையம் வாதபித்தமிடறி யுற்றபோதிலே
தாண்டிருந் தனஞ்செயன் தடங்கருத்த காதலே. (13)

தீதுசெய்த வாதநாடி சேந்துவிண்ட லத்துளே
மேதியங் கெழுந்த போதில் ஓசைகொண்ட வன்னியே
மாதியான நாடிகெட்டலைந்து மேயமர்ந்ததும்
தீது செய்தகால நாடிதொண்டு லாறதெங்ஙனே. (14)

நல்ல வாதபித்தமும் நலங்குகின்ற வையமும்
தொல்லையுற்று துடர்வகுத்து சூதுசெய்த போதிலே
கல்லையுற்று நாணறுத்து காலனை யடுத்திடில்
எல்லையுற்று நாடிதானு மில்லையில்லை யில்லையே. (15)

இசைந்த நாடிமூன்றுமா யெழுந்த ஓசைபோன்றதாய்
அசைந்தசைந்த வாதந்தன்னை விட்டகன்ற வையமும்
பசைந்திருந்து நின்றதெவ்வும் பத்தலத்தி லுற்றுபேர்
தசைந்த வன்னியேரிடி லப்புவோசை ஐயமே. (16)

மாயமான வாதமு மரித்தவன்னி ஐயமும்
காயமான வஞ்செழுத்திற் கண்டநாடி யொன்றுமாய்
ஆயன்மையன் மாலுட னடுத்து நாடிமூன்றுமாய்
ஆதியான வாதநாடி யலங்கரித்து நின்றதும். (17)

நீதியான காயமும் நிறந்திலங்கி நின்றதும்
ஓதியங் குதித்தவன்னி வாதமும் முடிகியே
சூதுசெய்த காலநாடி தொண்டும் வாறதாகுமே
காயம் விட்டகன்றபோது காலமென்ன காலமே. (18)

அக்கரத்திலுந்தியி லடுத்த நாடிமூன்றுமாய்
கக்கரத்திலுந்தியி லமந்து ஓடில் நன்றென
அக்கரத்திலுந்தியில் கண்டுருண்டு ருண்டிற்
கக்கரத்தி லீசனேவ லடுத்த நாளதாகுமே. (19)

வேறு

உறுமையான வாதநாடி ஓடியங்கொளித்ததும்
    உலாவி நின்றவன்னியின் நிலத்துளே மதித்ததும்
அறுமையான விண்டில மடுத்த மாருதத்துள்ளே
    யரைந்து மோதவப்பினோசை யற்றுள்ளே சுழித்ததும்
குறுகிநின்ற மாருதங் குலாவியங் கெழுந்ததும்
    குரைந்து நின்றவன்னியுங் கொதித்தெழுந்து பொங்கியே
மறுகியே கொதித்தெழுந்த மாருதப்பினோ சையால்
    மாயமான மரணம்வந்த வாரதேது யீசனே. (20)

வன்னி பொங்கிமாருதம் வளைந்து விண்டலத்துள்ளே
    மருவிநின்ற போதுவன்னி யற்றுள்ளே சுழித்ததும்
பன்னி நின்றவாதமான பண்புநான் தனஞ்செயன்
    பதரியங் கெழுந்தபோதில் பண்புவன் சிதைத்திடு

மின்னி நின்றவன்னிபோல ஐயமுற்றபோதிதே
விரிந்தெழுந் தமந்தவாய்வால் விரண்மிட முந்த சன்னியு
முன்னி யுன்னிகாலனை யுலாவிசெய்த தோன்றலே
ஓதுமாதி வேதநூல் உண்மையிது உண்மையே. (21)

ஆதியான நாடியே யடுத்தமாருதத் துள்ளே
அமிழ்ந்து நின்றவாத முன்னடங்கியங் கெழும்பியே
ஓதுகின்ற வையமுமச் சலத்தினோசையால்
மூலநாடிவாய்வு மூண்டெழுந்த போதிலே
தீதுசெய்த வச்சலத்தில் அபான நற்கயத்துளே
சேர்ந்திருந்த மூவரால் திரண்டெழுந்த காலமும்
சூதுசெய்த வப்பினோசை சுக்கிலத்தைப் பற்றியே
துடர்ந்து காலைநாடி யொன்று சொல்லிநூலி னுண்மையே. (22)

உண்மையான வாதநாடி ஓங்குதுங் கெழுந்திடில்
ஓசையத்த வன்னியே லுலாவிநின்ற வையமும்
வண்மை கொண்ட மும்மலத்தடாக முற்றபொய் கையிலே
மயங்கிநின்ற மூவரால் வந்தடுத்த காலமும்
திண்மை கொண்ட வப்பினால் சேர்ந்திருந்த வையமும்
தியக்க முற்றடுத்தபித்தஞ் சேர்ந்திருந்த போதிலே
எண்மை கொண்டமாருத மீறவைப்பு சீரிடில்
இசைந்த காலநாடி யொன்றியல்பு கண்டுகூறுமே. (23)

கூறுகின்ற வாதவோசை கொண்டெழுந்த வன்னியால்
கொதித்தெழுந்த வப்பினோசை கொட்டிவிண்டலத்துளே
மாறுகின்ற வன்னிவோசை மாருதத்தை சூழ்ந்தபின்
மாயமான மூலவாய்வு மண்டியங் கெழுந்திடும்
சீரியே சினந்தெழுந்த வாயுவுவ பானத்திலே
சேர்ந்துநின்ற வோசைகெட்டு செய்தொழில மைத்திட
மாறுகின்ற வன்னிவோசை பத்திமாங் கிஷத்துள்ளே
பகைத்தெழுந்த வப்பினால் பகைகடுத்த காலமே. (24)

மூன்றெழுந்த வாதமுமுடிகி நின்றவன்னிய
முனிந்த மாருதத்துளே முறிந்துனின்ற ஐயமும்
பூண்டமச்சை தோலெலும்பு போர்வையான மூலமும்
பொறிகள் பத்திலோசையான புகழ்நிறைந்த வாதமும்

மீன்றுமச் சுரோணிதத் திசைந்த சுக்கிலங்களால்
    இரத்தமோடு மூளைகட்டெலும்பு கண்டபூண்களே
தூண்டெழு மலத்திலே துளக்கமற்ற ஓசையுந்
    துடர்ந்திருள் னின்றடர்ந்த தோதகங்கள் கூறுமே. (25)

காலமைய வன்னிமுத்துதித் தெழுந்தமாருதம்
    கனல்புனல் நிறைந்தயோசை கண்டமோடு வுச்சியும்
சீலமான கையினில் சிரத்தினில் மரத்தியில்
    சேர்ந்த லிங்கமோடு வண்டஞ் சேர்ந்து தாழமரத்தியில்
கூலமான வுந்தியில் குறித்தயேழு பத்தினில்
    கொட்டிக் கொள்ளுகொள்ளிரண்டா யிரங்களான வோசையு
தாலமாய் நிரக்கவே தனஞ்செயன் கலைந்ததும்
    தடுமைகொண்ட வாய்வினோசை தாதுயேதுயீசனே. (26)

காலமான பித்தமுங் காலனை யடுத்துங்
    கண்டுநின்றவாதமுங் கலங்கியங்கு நின்றதும்
தாலமாய் கொதித்தெழுந்த தனஞ்சயன் சலித்ததும்
    தண்மை கொண்டவாய்வினாலே சஞ்சரித்து நின்றதும்
ஞாலமென்ற போதிலே உறவுகொண்ட வையமும்
    யோங்கியங் கெழுந்தபோது உறவுகொண்ட வாதமும்
வேலைகொண்ட முப்புரந் தகைத்தெரிந்த வனனியும்
    வினையடுக்கயேகி வந்த வீரின்கண்டு கூறுமே. (27)

ஓங்குகின்ற மாருதத்தொடுத்த வையமந்தியாய்
    ஓசைகொண்ட பித்தமுமுலாவியங் கெழுந்திடில்
பாங்குகொண்ட மூவரும் பதரியங் கிளம்பிடில்
    படிந்தெழுந்த வாதமும் பரிவுகண்ட போதிலே
தூங்குநின்றிருள் மயக்கந் துடர்ந்தடர்ந்த வேளையில்
    துன்பவின் பமுங்கடந்து சூழ்ந்த காலைவன்னியே
பாங்கரிந்து கொண்டிடில் வுடுத்த காமந்தன்னிலே
    பகைக்கடுத்த வப்பினோசை பாங்குகண்டு கூறுமே. (28)

உரைப்பதற்கு வாதபித்த முண்மைகண்ட வையமும்
    ஓங்கிநின்ற மாருதத் துலாவி நின்றவன்னியும்
நிரைப்பமாக நின்றவாய்வு நின்றவன்னி யுற்றதும்
    நின்றவன் குறிகிவந்த நேர்மை கொண்டுநின்றதும்

பரைப்பதாகவே யடரபாங்கு கொண்ட போரிலே
பண்புகொண்ட மூவரும் பதரியங் கெழுந்தது
மிரைப்பதாக நின்றமூவர் கொல்லையிற் சுழண்டது
மிருவர் போகயொருவனு மிறந்தகாலமாகுமே. (29)

ஓடுகின்ற வாதமு முற்றபித்தமையமாம்
ஓசைகொண்ட போதிலே யுலாவி நின்றபித்தமும்
கூடுகின்ற ரெத்தமாங்கிஷுங் கொதித் தெழுந்தங்கே
குறைந்து நின்றநாடியின் கொள்கை கண்டபோதிலே
ஆடுகின்ற பித்தமு மசைந்தபோது வையமும்
மாதியான நாடியோ டமந்திடும் பரிசிலே
வாடுகின்ற வாய்வினோசை யாலுமுண்டு மெண்ணதாய்
மாயமான காலதூதன் வருவதான காலமே. (30)

அந்தவுந்தி தன்னிலே யமந்தெழுந்த மூலமா
யாதியான மூலநாடி யமந்திடும் பரிசிலே
வந்தடுத் தவப்புவின் வளமை கொண்டவாதமும்
வன்னியை யெழும்பியே தளைந்தடுத்த போரிலே
சந்துசந்து ஓங்கியே தடம்புனல் சுழியிலே
சண்ட மாருதத்திலே சடங்கறுக்கும் போதிலே
வந்துவந்து தாவியே மாருதப் புனலினா
லசைவு கொண்ட காலதூதன் வ்ருவதான காலமே. (31)

சிவவாக்கிய நர்டி முற்றும்.

உ
கடவுள் துணை

வியாசபகவான் நாடிகூறுகின்றார்

ஆயுறுவேதத்தின்படி பண்டிதன் ஆசாரம்

காப்பு

ஆயுறுவேதந் தன்னி லடைவுளவட நூல்தன்னைத்
தாயெனக் கண்டு கொண்டு தமிழினால் விரிப்பதற்கு
மாயன் மாமருகோன்மிக்க வல்லபையிடத் தோன்மங்கைக்
காயமாம பானதந்தைக் கரிமுகக் கடவுள் காப்பு. (1)

சீலநாசாரனாகில் சிறந்த விற்பன்னனாகி
வாலஞானியுமாய் மண்ணில் மக்கள்பால் வியாதிதன்னை
கோலமாயி தன்பாலுள்ள குணாகுணந் தோஷங்கண்டு
பால்தரு மன்னைபோலே பண்டிதனாவான் தானே. (2)

நேயமா மசுரர்தேவர் நிறைந்ததோர் பசாசுமற்றும்
மாயவிக்கினங்களுக்கு அலிபெலியர் சித்தேத்தி
தீயநற் கோடனைக் குச்சிறப்புடன் சாந்திபண்ண
பாயுநீருலகு தன்னில் பண்டிதனாவான் தானே. (3)

தானமந்தனை ருக்கீய்ந்து தருமமுமிகவே பூண்டு
ஊனமில் சிவதவங்கள் உறுதியில் பண்ணிவித்து
கானகத்தறுகு தன்னைக் கரியகோன் மருகர்க்கீய்ந்து
மானிலந் தன்னைக்கார்ப்பான் வைத்திய நாகுர்தானே. (4)

என்றுமோர் சீலநாகிலியன்ற வாசாரநாகிக்
கண்டிய வியாதிதன்னைக் கண்டுதான ருச்சியாமல்
ஒண்டிய தந்தைதாய்போல் உத்தநெஞ் சிரக்கம்வைத்து
நன்றிசெய் பவனே மண்ணில் நர்ப்பரி காரியாமே. (5)

ஆனபண்டிதரைக் கண்டாலவர்கள் தன்சீஷன் போலே
மானிலத்தவர்கள் சொன்ன மருந்துகள் பாகமாக
மோனமன்றிய லேசற்று முசிவரப் பரிகரிப்பான்
கானமாங் குழலினாளே கனபரி காரியாமே. (6)

கண்டுதான் வியாதி தன்னைக் களங்கவே யறவேபேசிப்
பண்டிதர் தம்மைக் கண்டால் பத்தியம் பரிவுங்கூர்ந்து
அண்டிய செனத்தில் வைத்து அடைக்காயு மிலையுமீய்ந்து
ஒண்டென மறையோர்க்காவன் ஓரௌடத மென்னலாமே. (7)

ஆமெனக் கடையிற் கொள்ளுமவிழ்த மேலுணர்ந்தா லொன்றே
கோமிரு மருந்து தன்னைக் குறிஞ்சி பாலையிலே வெட்ட
ஏமமா மீரமாகில் இரட்டிப்பு யெடுத்துக்கூட்டு
மாமுகில் அளகத்தாளே மருத்துவத் தொழிலிதாமே. (8)

வேறு

உண்டே பண்டிதன்திட வானாயுயர்ந் தேவவனும் வல்லபனாய்
பண்டே வேதநூல்படிக்கும் பகுத்த வாகடம் பலன்களையும்
கண்டே காலம் பகர்காலங் கருத்தில் காணவல்லவனாய்
கொண்டே யனுபான மறிந்துக் கொடுப்பான் காலனை தடுப்பானே. (9)

வேறு

பண்டுதான் மாந்தர்செய்த பாவத்தால் வந்தநோய்கள்
கண்டுதான் றோகம் தீர்க்கும் காவலர் தன்மை நோக்கி
விண்டுதான் குறைகள் சொல்லி மேவியதூ பங்காட்டி
கொண்டு தாம்பூலமேந்த குருக்கள் போல் நினைப்பார்தாமே. (10)

வேறு

மாதமாதம் விரோசன வாந்தியு
மாதந்தங்கள் இடம்போக்கு மட்டிலே
போதவுண்டு குருநடை கொள்வது
பூரணப்பட பாலே பருகுவாம்
வேதமுன் சொல்லும் வென்னீர் குளிப்பதும்
மீனுண்ணா மலிருப்பது முண்டெனில்
வாதபித்த சிலேற்றும பத்தரும்
மானிடர்க்கு மறலியு மில்லையே. (11)

பண்டிதனை யழைத்தல்

நோயறிகின்றான் தன்னை நொய்யமிட்ட ழைத்துவந்து
பாய்தனி லிருத்தி வைத்து பரிவுடன் யாளைநோக்கி
தூயதந்தை போலெண்ணி தன்கையின் நாடிகாட்ட
ஆவியைச் சொல்ல வல்லனவன் தந்தை குருவுமாமே. (12)

நீட்டியே கையைக் காட்டி நேருடன் வாங்கிக்கொண்டு
வாட்ட முற்றிருந்து பார்த்து மனதிலே மகிட்ச்சிகொண்டு
நாட்டிய நாடிமூன்றில் நடுவிரல் தன்னைப்பத்தி
கூட்டியே சொல்ல வல்லான் குருவவனென்னலாமே. (13)

தூரலட்சணம்

வயித்தியன் தனையழைக்க வந்தவன் தன்னைப்பார்த்து
திருத்தமாய்க் கிழக்கி லிந்திரன் செப்பிய நல்லதாகும்
எரிக்கு மக்கினியிற்திக்கு விப்போது மரணமென்கப்
பருத்திடும் யெமனின்திக்கு பயமொடு மரணந்தானே. (14)

நிருதியில் வந்தழைக்க நிச்செயம் சாவுசொல்லும்
வருணனில் வந்தழைக்க மத்திபம் வாய்வுமூலம்
திரமொடு வந்து சொல்லில் தீர்ந்திடா நோவுந்தானு
மிருமை சேர்குபேரனென்றும் மீசானியம் நல்லதாமே. (15)

தண்ணிக் குடமும் மாங்கிஷமும் தயிர்பால் மீனசந்தம் பூவும்
வண்மைப் படியேதான் காண வருந்துஞ் சாத்தியமாகும்
நன்னுங் கைகால் முகஞ்சுளித்து கற்பூசையசனஞ் செய்யில்
எண்ணியிருக்க கருமமெல்லாம் மியம்பும் சாத்தியமாமே. (16)

அந்தரந்தன்னைப் பார்த்து அழைத்ததால் மரணமாகும்
விந்தை கைகால்பிடித்து வேண்டவே வியாதிமாறா
முந்தவே முகம்சுழித்து முன்கையும் பின்கட்டாக
வந்தவனழைத்தால் போதே மரணமென்றறிந்து கொள்ளே. (17)

தலைதனை விரித்துக்கொண்டு தடிதனைக் கையில் பத்தி
கலகலென்றழைக்கும் போது கனமெனச்சாவு சொல்லும்
நிலைமையாயுடல் சொரிந்து நிகந்தனைக் கையில் கிள்ளி
லுலைவில்லா வசத்தியந்தான் சொல்லிடுந் தரணியோர்க்கே. (18)

சுவரின் தூண்பிடித் தழைத்தால் சொல்லக்கேள் சாத்தியந்தான்
விபரமாய் பயந்து தும்மி மிகுந்து கொட்டாவிநெட்டை
கவரெனு முதடுநாக்கு கடித்துமே யழைக்கில் தீதாம்
புவனமே புகழும் வியாசர் பூமியிற் சொன்னவாறே. (19)

வெண்பா

கைகால் சொரிந்து கருதுபல்லுந் தான்குத்தி
மெய்யிற் சிவப்புதலை மேலுடுத்தி - நொய்ய
வைத்தியனுக் கெண்ணையிடும் போதேயழைக்கில்தான்
சைத்தியத்தால் சாவானே தான். (20)

வியாசர்நாடி முற்றும்

வியாசர் சரீர சூத்திரம்

சரீரமாஞ் சூத்திரத்தை தமிழினாற் சாத்தவேண்டி
சீரிசை வடநூல் தன்னை தெரிந்த திலாய்ந்தெடுத்து
பாரினில் மானிடர்க்கு பரவுபகாரமாக
நேர்மையாய் செப்புகின்றேன் நிட்சயமாகத்தானே. (1)

ஆணுவம்கர் மமாய்கை யதுவந்தே பெண்ணுமாணும்
மாணுவம் வாதியாசை வகுத்திடும் திரேகமாகும்
காணவே யீராதாரக் களையது சடமேயெண்ணும்
பூணவே முனிவர்தானும் புகன்றனர் வுரைத்ததாமே. (2)

வாதம்

வாதமும் பித்தமைய மருவிடில் திரேகம் நன்றாய்
வாதமும் பித்தமெல்லா வகையிது நண்ணினாலே
வாதமே பித்தமாமா சயத்தினில் மருவிலப்போ
வாதமே பித்தமீறும் வகையிது கண்டுகொள்ளே. (3)

ஆகாரம் சயனங்காம மதுகளியொன் றொவ்வாமல்
மோகமாய் மாயசத்தில் முனிந்திடச் சத்ததாகில்
தேகமாம் தூதுதன்னில் சிக்கிடில் துரோகியாவான்
வேகமாய் பதினாலென்னும் வியாதியிற் பலிக்குந்தானே. (4)

சதிர்தச வேங்கத்தானும் சயலிற்றியாலே றோகம்
விதித்திடும் வாதம் தும்பல் மேவுனீர் மலங்கொட்டாவி
கதித்த தீபனமும் தாகம் காசம் நித்திரை யிளைப்பு
மதித்திருஞ் சத்திகண்ணில் லலருஞ்சுக்கில சுவாசம். (5)

வாதத்தைனி ரோதிப்பண்ண மார்நோவுகுன்ம வாய்வு
யேதித்த வுதரவாதம் பெருகிடு முடம்புநொய்தல்
வாதைகள் திரட்டிவில்லை மலசலங் கட்டுபட்டு
பேதயக்கினி மாந்தங்கள் பெருகிய மலிக்கையுண்டே. (6)

தும்பல்

தும்பலை நிறோதம் செய்ய தொகுத்திடும் தலைநோவுண்டாம்
இன்மையிந்திரமு மெல்லா மியல்புடன் தெரியலாகும்
செம்மையில் முகம்வலித்தால் தீர்த்த யரைவாதங்கள்
வெண்மையால் வாய்வுகொண்டால் விதித்திட்ட குணமிதாமே. (7)

நீர்

நீர்தனை நிரோதம்பண்ண நீர்கட்டு சலப்பிடிக்கும்
பாசஞ்சந்துசந்து பண்பிய நோவதாகும்
நேரிலம் வயருங்காமி நிச்சயம் நோதல்செய்யும்
பாரினில பானவாய்வு பண்புறச் சேருமென்றே. (8)

மலம்

மலமணி நிரோதம் பண்ண மலந்தனை வாய்வுதள்ளல்
சலதோ ஷமுழங்கால் கீழில் தன்மையாய் நோய்வுண்டாகும்
குலைவலி மிகவுண்டாகும் சத்தமாம பானவாய்வு
பிலமது குறைக்கும் வந்து பெருத்திடும் வியாதிதானே. (9)

கொட்டாவி

கொட்டாவிதனை யடைக்கிற் குறுகிடும் முகம்பல்லிகை
திட்டமா யன்னந்தானும் செறித்திடா மேகம்தாங்கும்
வெட்டையிற் பிரமசாட்டி மேவுந்தும் பல்குணங்கள்
அட்டியே இல்லாநோவு தந்தனைக் கிடமதாமே. (10)

தீபனம் தாகம்

தீபனநிரோதம் பண்ண திரேகத்தை யங்கபங்கம்
மேவுர சூலைபிர்மை மிகவுட விளைப்புண்டாகும்
தாவுர முகமேவாடி சந்துகள் நோய்தல் செய்யும்
சீலமக்கினிக் காதாரந் தேவரு முரைத்ததாமே. (11)

விழிநீர்

விழியினில் நீரடைக்கில் விதமான இறுத்தரோகம்
வழிப்படப் பீனிசங்கள் வந்திடும் நேத்திரரோகம்
அழுகிடுஞ் சிரசில்ரோக மதனுடன் வாதங்கூடில்
பழுதுபல்லிக் கைகு[redacted]ம் பற்றிடுங் குணமுமுண்டே. (12)

காசம் இளைப்பு

காசத்தை நிரோதம் பண்ண கதித்திடு மிருமல்மெத்த
வாசமாஞ் சுவாசமுண்டா மருகிடும் ருத்ரரோகம்
பேசியயிளைப் படக்கம் பெருத்திடு மேகங்குன்மம்
நாசஞ்செய் மூர்ச்சையோடு நளிர்தும் பல்குணமுமுண்டே. (13)

நித்திரை

நித்திரை யடக்கிலப்போ நின்றிடுங் கருமங்கேளும்
நித்த முந்தலைகனப்பு நின்றகண் நோய்தலாகி
சித்தத்தில் செவுடுண்டாகில் தெளிவரப் பேச்சுமண்டி
உத்ததோருறக் கந்தன்னு லுண்டதோர் வாய்வின் கூறே. (14)

சத்தி

சத்தியை யடக்கிலப்போ தடித்திட்ட கடிக்குஷ்டங்கள்
மெத்தவுந் தினவுபாண்டு மேவுகண்ரோக முண்டாய்
பித்துமிதில் விஷபாகங்கள் பெருகிடும் வாசம் காய்ச்சல்
பத்திய காசமாகில் பகர்ந்தவிக் குணங்களுண்டே. (15)

சுக்கிலம்

சுக்கிலந் தனையடக்கில் சுரமுடனீர்க் கட்டாகி
பக்கமாய் கைகாலசந்து பாரநோய் வழியிரங்கும்
மிக்கமார் நோவுண்டாகி மிகுத்திடும் பிரமேகங்கள்
தக்கதோர் போத்துமாகி தரித்திடும் வாய்வின் கூறே. (16)

சுவாசம்

சுவாசத்தை யடக்கிலப்போ துடர்ந்திடு மிருமல்நோவு
பவசமாய் வயர்பிரமி பண்புநாக்க ரோசியாகி
கவசமாங் குலையிடிப்பு காச்சலும் வெட்டையாகி
தவசமாய் வாய்வுதன்னில் தருங்குணமிவை களாமே. (17)

சரீரசூத்திரம் - முற்றிற்று

உ
கடவுள் துணை

தேரையர் நாடிகூறுகின்றார்

உள்ளூரை நாடிப் பரீட்சை

கருப்படைத் தவனைவாழ்த்தி கைதனில் நாடிப்பார்க்கப்
பெருவிர லங்குலத்திற் பிடித்துட நடுவே தொட்டால்
ஒருவிரலோடில் வாதம் யிருவிர லோடில் பித்தம்
திருவிரல் மூன்றிலோடில் சிலேத்தும நாடியாமே (1)

பாவையர்க் கிடதுகையாம் பார்ப்பது புருடர்க்கெல்லாம்
மேவிய வலக்கையாகும் மேன்படுமெருதுக் கெல்லாம்
தாவிய காலதாகு மந்திக்கு கன்னமாகும்
பூவுலகதனில் நாடி பொருந்தியே பார்க்கும்வாறே. (2)

வாதத்தின் படைவீடு னாபிக்குங் கீழே
வன்பித்தம் படைவீடு கண்டத்தி னுள்ளே
ஒதத்தின் படைவீடு உச்சிக்கி னுள்ளே
ஒன்றைவிட் டொன்று கூடினால் கொன்றிடுமே. (3)

வியாதி பிறக்கும் வழி

வாதமெண் பத்தினாலு வந்திடும் வகைகளாய்ந்து
ஓதியபித்தனாலு பத்துட னொருமையாக
மாதவ முடையோர் கேளீர் வருஞ்சன்னி பதிமூன்றாகும்
ஓதமே யிருபத்துனாலு உளத்தில் நீரிழிவு மென்றே. (4)

வாதமாம் நாடிமுன்னும் வரும்பித்தம் நடுவதாகும்
போதவே சிலேத்துமந்தான் புக்கிய கடையதாகும்
மாதவ முடையோரேகேள் வழுத்திய நாடிமூன்றும்
சாதகத் தறிவதென்று தவத்தவருரைத்த வாரே. (5)

அண்டிய வாதந்தானும் ஆனதோர் கவசம்போல
மிண்டியே உதைத்துக் காட்டும் மேலது காயும்தாகம்
அண்டியே உடம்புக்கெல்லாம் அங்கங்கே கடுத்துநோகும்
விண்டிடும் வாய்பெனத்தும் மிகுத்திடும் சுரங்களாமே. (6)

பித்தமாஞ் சுரங்கள் தானும் பெயத்திடுந் தாதுபித்தம்
மற்றது நடக்குஞ்சத்தே மறதியு மசதிகாணும்
நற்றமிழுடைய பேர்கள் நாளும் பார்த்தறியவேண்டி
உத்தது சொன்னோம் கேளீர் வுகமையாய் கண்டுகொள்ளே. (7)

வந்துதிடும் சிலேத்துமந்தான் வருவது பாம்புதேரை
குந்தியே நடுக்குங் காயும் குளிருடன் யிரும்பலுண்டாம்
சந்தது மார்புனோகும் தக்காதுகக் கலுண்டாம்
இந்தவார் சிலேத்து மத்தால் யெய்திடுஞ் சுரங்கள் தானே. (8)

வாதமும் பித்தந்தானும் வளர்ந்திடு மிப்பால்கேளீர்
போதவே தலைவலிக்கும் புத்தியு மறதியுண்டாம்
ஆகமுங் கடுத்து நோவாம் அடிபட்டாப் போலுளைக்கும்
சாதனமறிந்து கொள்ளீர் தருந்தொந்த ரோகமென்றே. (9)

மெத்தவே னாவரண்டு விக்கலும் தண்ணீர்தாகம்
பத்திய சுரமுமுண்டாம் பாயைவிட்டோட்டங் கொள்ளும்
உத்தது சொன்னோம் கேளீர் உலகுள்ளோ ரறியும்வாறு
மத்தது சன்னிவாதம் வந்திட்ட வியாதியாமே. (10)

வாதமும் பித்தந்தானும் வந்திடும் ஐயங்கூடில்
ஊதியே தலைவலிக்கும் உதித்திடும் மயக்கம்விக்கல்
போதவே யசதிகாணும் பொருந்திய ஒளிமயங்கும்
நாதமும் உடைத்துக் காட்டும் நடக்கும்பார் விழைச்சல்நாடி. (11)

அடர்ந்திடும் கண்சிவந்து அறிவழித்தயர்ந்து சோர்ந்து
விடர்ந்தது கொண்டவன்போல் மெய்மறந்த சதிகாணும்
மடந்தைகேள் திரிதோஷங்கள் வந்திடும் விபரந்தன்னை
நடந்திடும் நினைவினாலே நற்குறிகண்டு கொள்ளே. (12)

வயித்தினில் வலியுமுண்டாய் வரும்பக்க யிசுவுகண்டு
உயித்திடும் சுரங்களுண்டாம் உள்ளத்துள் சூலைதோன்றி
சயித்திய மடைந்து வாயு தக்கதோர் பல்கறுக்கும்
எய்த்திடும் சூலையாலே யெய்த்திடுந் தோஷந்தானே. (13)

அரணைவால் துடிப்புப்போலே அதுதுடித்திட்டால் வாதம்
பறவுதேள் கொடுக்குப்போலும் பதைக்க நாழிகை யீரெட்டில்
மரணமே யாகுமென்று மன்புடனு ரைக்கும் நூலோர்
விருமலர்க் கழலினாதன் விபரமோடறி குவீரே. (14)

சிறுவர்தம் தொட்டிலாட்டல் செய்யபா விழைச்சல்போலும்
இதுமெள்ள நடக்குமாகில் வியாதியு மீளாதென்று
குறுகிடும் முப்பத்தைந்தில் கூட்டைவிட்டேகு மென்று
நறுமலர்க் குழையினாளே நாட்டுள்ளோர்க் குரைத்திடீரே. (15)

மயிரிழை போலேதானும் வந்தெதிர் நடக்குமாகில்
உயிரது விட்டுப்போகும் வுத்ததோர் நாழியாறில்
பெயரது வாயடைத்து பெருமூச்சு மதிகமானால்
உயிரது வொழியுமென்று உரைத்திடீர் தோஷமென்றே. (16)

எறும்பது நடக்கும் போலே யியலுடன் வாதவீட்டில்
தறும்பியே நடக்குமாகில் தையலே கேளீர் சொன்னோம்
குறுகிடும் நாலுநாளில் கொய்திடு முயிரும் நீங்கும்
உறும்படி என்று நீங்களுரைத்திடீர் உலகத்தார்க்கே. (17)

பாம்புபோல் வளைத்துக்காட்டி பாய்ந்திடும் தேரைபோலாம்
ஆம்படியாறு நாளில் அப்பாலு மிப்பாலில்லை
போம்படி யறிந்துகொள்ளும் போய்விடு மாதந்தானும்
தேம்பிடு மடநல்லாளே செப்பினோ மறிகுவீரே. (18)

வாதமுந் துணிந்துமெத்த வரும்பித்தமு தரஞ்செத்துப்
போதவே சிலேத்துமத்தில் புக்கியே யிருக்குமாகில்
நாதமுங் குறைந்துபோகும் நாழிகை யிரண்டிற் சாவாம்
மீதுனா முரைத்தோங் கேளீர் யியலுட னுலகத்தோரே. (19)

தரினத்தில் தாதுகேளீர் சயித்தியமுட் கொண்டேகும்
அருகிய கண்மறைக்கும் ஆக்கமங்கை காலோயும்
மறதியு மசதியாகும் வாதமும் நாடாதங்கே
குறுகிடும் சீவன்மூன்றில் குன்றிடு மென்றுகூறே. (20)

ஒன்றை விட்டொன்றைநாடி வுதைந்து மேகிடக்குமாகில்
நன்றிலா மறதியாகும் நாளது பலன் குறைக்கும்
குன்றியே யஸ்திதன்னில் கூடியசுர முதித்தால்
சென்றது இருபத்தஞ்சில் சென்றிடு மென்றுகூறே. (21)

பித்தமே வாத நீட்டில் பெய்திடுமாகு மிப்பால்
உத்தது கூறிக்காட்டி உருமொழி மயங்கக்கண்டால்
அத்தது மாதமொன்றில் ஐயமென்ற றிந்துகூரே
கத்தவரு ரைத்தயிந்த கட்டிய சூஸ்திரங்கள் தானே. (22)

நாடிநடராசிக் குறிப்பறிவது

வருநமக்குத்த நாடி வலதுகை மானிடருக்கெல்லாம்
அரிவயர்க்கிட துகையில் ஆய்ந்தவர் பார்க்குங்காலை
பெருவிரல் வாதமாகும் பின்விரல் பித்மாகும்
திருமணி விரலில்நாடி சேத்தும மென்றுசெப்பே. (23)

அன்னமே கோழிஓணான் மயிலென நடக்கும்வாதம்
பின்னையே யாமையட்டை பெருத்திடும் பித்தமாகும்
தொன்னவாய் மொழிநல்லாளே சுத்திய பாம்புதேரை
அன்னமே ஐயமென்று அறிந்திடி றணை யாதானே. (24)

கையது நடக்குமெத்த கண்களை முழித்துப் பார்க்கும்
மெய்யது நடக்கும்வீட்டை விட்டுவிட்டோட்டங் கொள்ளும்
மையமாம் நிலம்புரண்டி யடிக்கடி யெழுந்திருக்கும்
வையகப் புலவோர் கேளீர் மரணமென்ற றிந்துகொள்ளே. (25)

பலபலபேச்சுப் பேசும் பாய்சீலை கிழித்துக்காட்டும்
சலமது உழட்டிக் கேழ்க்கும் சாலவே சுவாசம்காணும்
தலமதிந் துரும்பெடுத்து தாண்டியே யெழுந்திருக்கும்
பிலமது குத்துக்காட்டும் பிழையா தென்றியம் பிடீரே. (26)

நாக்கது யீரமுண்டாய் நயனப்பாரு வைகள்நன்றாய்
மூக்கது யீரம்வத்தி முகக்களை மாறாதாகில்
ஆக்கவே சுவாசமத்து அயறுமேதூக்கம் போலே
தாக்கிடுஞ் சுரமும்பெற்றால் தானிருந்தாலு ரோறாம். (27)

வாதமுடிகித் தனத்தேன் வருஞ்சரம் கொஞ்சமாகில்
போதவே தாகமட்டாய் போகநித்திரையு முண்டாய்
ஏதமாய்த் தீவனங்க ளேத்திடா சுரங்களானும்
மாதவமுடையோர் கேளீர் வந்ததோர் வியாதிமீளும். (28)

சுரக்குறிப்பறிவது

உடம்பெலா மீரமுண்டாம் வுத்திடும் சுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ் சொருகிமெத்த தாகமுங் கொஞ்சமாகும்
விஷங்கடித்தது போல் சத்தே மேலுடம் பத்திகாணும்
மடந்தைதகேள் சொன்னோமித்தை வருஞ்சீத சுரமென்றோதே. (29)

நாடிகள் மூன்றுமட்டில் நடந்துட னிருந்துதாகில்
பாடல்போலுடம்பு நொந்து பற்றிய சுரமுஞ்சத்தே
கூடயே யிருந்ததுதாலே குளுந்திடல் மறதிகண்டால்
காடவருரைத்த யிந்த கடியசூஸ்திரங்கள் தானே. (30)

பக்கவே யிசுவுகண்டு பத்திய யிரைச்ச லுண்டாம்
கக்கவாய் வழுந்திருக்கும் சற்றுமே சுரமுண்டாகும்
மிக்கவே குளிருண்டாகும் விரிமலர் மந்தமாகும்
அக்கவே சொன்னோ மித்தை அசீரணச் சுரமென்றோதே. (31)

காலுமே குடைச்சல்கண்டு கடுத்திடும் யிடுப்பும்பக்கம்
மேலுமே சுரமுங்கண்டு விழியது காந்தல் காணும்
ஆலுமே கினாக்கள்கண்டு அழுத்திடும் பிறட்டிக்காட்டும்
சேலுமா விழிநல்லாளே தொந்தமாஞ் சுரமென்றோதே. (32)

காயுமே சுரங்கஃமெத்த கால்கைகளு தறிக்காட்டும்
ஒய்விலா வயிர்ரைச்சல் வுத்திடும் பேதியுண்டாம்
வாயது பிரட்டல் கண்டுவழுவழுத் திருக்குமானால்
ஆயுமே வல்லோர் கேளீர் அதிசார சுரமென்றோதே. (33)

பக்கமே துடிக்குமார்பு பதைத்திடும் முகம்வெளுக்கும்
ஒக்கவே சுரமுங்காயும் ஒயுங்கை கால்கள்மெத்த
தக்கவே வலிகளுண்டாம் கண்வெளுத்திட்டே போகும்
அக்குலம் அஸ்தியான அதிசுரமென்று கூறே. (34)

நாவது வரளுஞ்சத்தே நறுக்கென தலைவலித்து
ஆவது சுரமுமுண்டா யடிக்கடி தண்ணீர் கேழ்க்கும்
போவது கண்கள் ரெண்டும் போதவே யனல்புடைக்கும்
நாவமாய் மலங்கள் கக்கும் உள்வெக்கை சுரமென்றோதே. (35)

உடம்பது உலருஞ்சத்தே வுறத்தநீர் புடைத்துக்காட்டும்
தடைபடா சுரமுங்காணும் தாடையும் வற்றிக்காட்டும்
நடந்திடில் கைகாலோயும் நாக்குமே யனலதாகும்
வடம்படு முலைநல்லாளே வருமுழுக் காச்சலென்றே. (36)

முலைமார்பி லுளைப்புண்டாகும் மோதிய சுரமுங்காணும்
அலையவே வாதத்துத்து அங்கங்கேவுளைப் புண்டாகும்
பலவிசை தண்ணீர்கேட்கும் படுக்கையுங் கொள்ளொட்டாது
சிலைவிழிமட நல்லாளே ருத்திராங்க சுரமென்றோதே. (37)

குளிரும் பின்காயுமெத்த குடிலமு மதிகமாகும்
தளிரது நாவுதானே தாகமாய் வரண்டுகாணும்
வெளிபவர் நசிந்துமேனி மேலெல்லாந் தினவுகாட்டும்
தளிர்குழல் மொழியினாளே தாநளிர்சுர மென்றோதே. (38)

உடம்பெலாம் வேர்த்துவேர்த்து வுத்ததோர் சுரங்கள்தாமே
அடைந்திடு மிரைப்பு காணு மடிக்கடி சுரம் விட்டோடும்
உடம்பது நீர்போல் காணும் ஊன்றி வாயறிவித் தோன்றும்
படந்திடும் சித்தத்தோடு பயித்தியச் சுரங்கள் தாமே. (39)

புறைவிட்டு எலும்பிற்றாக்கி பொட்ட முஞ்சுரமுந் தோன்றி
வரைபு கவீரல்வெந்து வருமது நாக்கில் தாக்கி
கரையுமே யீரல்தானும் கடிகியே நாக்கும் வேகும்
இடிமுலைமாதே யிந்த நாவொட்டிக் காச்சலாமே. (40)

உத்தியே குளுந்து மெத்த உழலையும் தாகமாகி
சித்தியே நடுக்கலுண்டாய் சொல்லுமேய னேகம்போது
பத்தவே வேண்டாமிந்த படருமிச் சுரத்துக்குத்தான்
வித்தண மடநல்லாளே மிகநடிச்சுர மென்றோதே. (41)

இராஜ கூட்டத்தின் விபரம்

ஓர்சரீரத்திலே வாதராஜன் பித்தராஜன் சிலேத்மராஜன் இம்மூவரும் அத்தசரீரத்திலே இராச்சிய பாரம் பண்ணுகையில் இவர்கள் தாங்களிடம் விட்டுயிடம் பேர்ந்தால் காணுங் குணங்களும் தங்களிடம் விட்டு போகாதிருந்தால் காணுங் குணங்களும் அறியும்படி வுணர்த்தியது

வாதராஜன் பித்தராசன் வருகின்ற சிலேத்துமரோஜன்
ஆதியாய் மூவர்தானும் அவரவர் வீட்டில் நின்று
போதவே யுறவதாகி பொருந்தியே யிருப்பாராகில்
சேதமுமில்லை ரோகஞ் சடமதில் நாடிடாதே. (42)

உபத்திரமொன்று மில்லை உடலிலை வியாதியில்லை
நவமதாய் வாதமிஞ்சில் நடிக்கிடும் வியாதியுண்டு
எவமதாய் பித்தமிஞ்சில் யேறிடும் பயித்தியங்கள்
அவமிகு சிலேத்துமந்தான் அதுமிஞ்சி விளையலாமே. (43)

காலங்கள் வரும்போதப்போ கடிகியே மூவர்தானும்
கோலங் கொண்டொன் றோடொன்று கொடும் பகையாகியப்போ
நீலம் பூண்டிருக்கும் ராசன் நேர்ப்படுங் கோபமாகி
வேலும் பாசங்கள் கொண்டு வெளிப்பட்டு யுத்தஞ்செய்வார். (44)

வாதராசன் முன்னெழும்பி வரும்பித்தராசன் தன்னை
ஆதரை தொண்ணூத்தாறு மந்திரிமார்களோடே
போதவே பிடித்த வீட்டை பொடிபட யிடிக்கவென்று
நாதமு முழங்க பித்த ராசனை வளைத்துக் கொண்டான். (45)

ஏணிகள் வைத்துப்பின்னும் யேறியே யெழுந்தபின்பு
ஆனையும் படையும்வீரா னன்வரை வெட்டிக்குத்தி
சேனைகள் மிரண்டபோது செயமதாய் வாதராசன்
பாணியே பித்தராசன் தன்னையுங் கட்டினானே. (46)

குத்திய சேனையெல்லாங் கோட்டையைப் பிடித்தபின்பு
மத்துமேவாதராசன் மகிழ்ச்சியோடி ருக்கும்போது
பற்றியே சிலேத்துமராசன் படையெடுத்தெழும்பி வந்து
உத்திடும் வாதராசன் தன்னையும் வளைத்துக் கொண்டான். (47)

வாதராசன் சேனையான மந்திரிமாரை யெல்லாம்
கோதர வெட்டிபின்பு கோட்டையைப் பிடித்திடித்து
ஏதமில் சிலேத்துமராசன் யெய்திடும் வாதந்தன்னை
போதவே வெட்டிப்போட்டு புகட்சியோடிருக்குங் காலை. (48)

அப்போது சேத்துமராசன் அரசது யாளும்போது
மெப்பான மேல்சுவாசம் வெய்யகண் சொருகிப் போகும்
தப்பாது அளவெடுத்து சரீரமுங்குளுந்து போகும்
ஒப்பாது நாட்டைவாங்கும் வுயிரது நீங்குந்தானே. (49)

பிரிதிவும் பாம்புபோதே பயர்ந்தது மெப்பாலேகும்
அறிதியாய் பித்தந்தானு மருகிய தேம்பிற்சென்று
சிறுமெயுவு தரவாய்விற் சிதறிடு ம..காசத்தில்
உறுதியாய் மிவ்வாறாலே உயிர்விட்டு வோடுந்தானே. (50)

அப்பொழு துடலைவிட்டு ஆத்துமம் பிரிந்துதென்று
செப்பிடு மனிதருக்கு சேரிடுங் காலனாலே
கொப்பன வறிந்துயதின் குணங்களை பறிந்துகொண்டு
தப்பிது வென்றுகூறி சடக்கெனவிட்டுப் போவே. (51)

தேரையர் நாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

புண்ணாக்கீசர் நாடிகூறுகின்றார்

போங்குறி அவத்தைதானும் புனலொடிய சந்துநாறும்
ஏங்குறி சிலேற்பனந்தான் எய்திய முடிச்சுவீழும்
ஓங்கது சுழிதானேது வந்திடும் பலபேச்சாக
தாங்கது துரியந்தானே தப்பிடு மயக்கந் தீர்ந்தே. (1)

தீதுறு அவத்தை அஞ்சில் தெளிவுறு முகடுபார்க்கில்
ஓதிய அவத்தையாறில் வுடலது திமிர்த்துக் காட்டும்
நீதிபோம் அவத்தையேழில் நினைவுற்றுப் பொசிப்பேனென்று
மாதியா இரைத்த எட்டில் முகடும் பஞ்சடையு மென்றே. (2)

கொண்டிடு மவத்தை கேளாய் கூர்விழி மூக்குகாது
உண்டொடி வுச்சிவுந்தி வுள்ளங் கால்கைகளெங்கும்
விண்டிட வெளுத்துக் காட்டி மிகுத்திடுஞ் சேர்ப்பமென்று
அண்டர் களறியச்சொன்னோம் அஞ்சாநாள் மரணமென்றே. (3)

தன்னுடை சைகைதானும் தனக்கது தோன்றுமாகில்
முன்னுரை அரிதல்கேட்கல் முயன்றுரை யதற்குலத்து
என்னதுன்ற றிதல்ஏங்கி யெளப்புடன் திகைப்புத்தோன்றல்
சொன்னம் போல்வரண்டு மொய்யும் தோன்றிடலேழ் நாட்சாவே. (4)

பிரண்டது மருண்டுமேலே பொருமி நீர்நடக்குமாகில்
இரண்டரை நாளதென்று இயம்பினர் மரணமென்று
சுருண்டமெய் குழலினாளே சுரத்தினு மெட்டதாகும்
திரண்டநாள் வந்ததென்று சிக்கெனத் தெரிந்து சொல்லே. (5)

அறிந்திடாப் பித்தம்நின்று வாதமும் சேத்துமமங்கே
பிறிந்திடா தோடுமாகில் பெய்வளைமாதே கேளாய்
இறிந்ததோர் ஆகமத்தின் நேர்படயெறந்தே யோடில்
மறிந்திடாக் கடிகைதொண்ணூர் வுலகினில் மரணமென்றே. (6)

வேறு

சேருமிமுரும் கண்டோங்கும் சோம்பும் கைகள்காலுடனே
ஊறிமுழன்றே நெஞ்சுலரும் வுடனே சேத்துமக் கோதண்டம்
நீருமிருக்கும் கண்சிவக்கும் நேரேயிருக்க ஓடாது
பாருங்கிரி கைக்குணங்கண்டால் பரமன்மீட்க மாட்டாரே. (7)

காலுங்கையும் புறம்வீங்கி கண்டஞ்சோர்ந்து நாவறண்டு
மேலுங்கனத் தேயிளப்பெய்தி மிகுந்தே தாகமுண்டாகி
தோலும் தசையும் படபடத்து துய்யநெஞ்சில் குளித்திடிகில்
மாலும் பிரமர் வந்தாலும் மரிக்கும் பிழைப் பதரிதாமே. (8)

புண்ணாக்கீசர்நாடி முற்றிற்று

உ

கடவுள் துணை

சூதமுனிவர் நாடி கூறுகின்றார்

வாதமது முன்னெழுந்து தாழ்ந்து சற்றே
மயிலதுபோல் நடைநடந்து மயங்குமாகில்
சேதமது வில்லையெண் பத்தாறா மாண்டில்
செப்பலா மரணமென்று தீர்க்கமாக
நாதமது குறைந்து விட்டிலைப் போற்கண்டால்
நாளெட்டில் மரணமென்றே நம்பலாகும்
போதமது யில்லையிது தப்பிடாது
பெரியவராஞ் சூதமுனிப் பேசுங்காலே. (1)

காலான பித்தமது துடியேகொண்டு
கனலெழுந்து வந்திடுகில் சீதமாச்சு
மாலாகிலும் பார்க்க மருந்துமில்லை
மரணமது மூன்றாந் திங்கள் வரிசையாகும்
காலான பித்தமது தொங்கிதொங்கி
நடைநடந்து பம்பரம்போல் நடக்குமாகில்
மேலான பதின்மூன்றாந் திங்கள் தன்னில்
வீத்திருந்த கூழியும் விரும்பிப்பாரே. (2)

அழைத்துடனே அனுப்புவிப்பான் பித்தராசன்
அதுகேழ்ப்பான் சீதமதுமப்பு போலே
களைத்துடனே வந்திருப்பான் கயிறுபோட்டு
கண்ணெலாம் முழியிரண்டு தாமும்வந்து
வளைத்துடனே அககினியு மந்துதண்ணீர்
வரளகப்பண்ணும் கரைந்து விடும்வகைதான்பாரு
இழைத்துடனே கூடுவிட்டு ஏகும்பாரு
யின்னமொரு குறிதனையே யியம்புவாரே. (3)

இயம்புகிறேன் பித்தமொடு வாதங்கூடில்
யியல்பான தொந்திப்பென்ற றியலாகும்
நயம்பெறவே சிலேற்பனமும் கூடித்தானால்
நாட்டலாமென்றே தான் நாட்டலாகும்
நயம்பெறவே பித்தமது விழுந்ததானால்
சொல்லரிது பேசாதே சுருக்குமெத்த
இயம்புகிறேன் தாம்விழுந்த ஆறாமாசம்
யினிதான சடலமது ஏகும்பாரே. (4)

ஆமடாகண் சிவந்து சுழித்து வாங்கி
அறிவுகெட்டு மதிமயங்கி ஓசைகுன்றில்
போமடா ஆறாம்நாள் சீவன்போகும்
போதமது நின்றுசற்றே பேதமாகில்
நாமடா பித்தமது வீழ்வதில்லை
நம்பரிது வம்புவரும் நாடாதேகேள்
சாமடா மூன்றாம்நாள் சீவன்போகும்
சக்கரமு மருதியென்றே சாத்தலாமே. (5)

சாத்துகிறேன் வாதபித்த சிலேற்பனமென்றே
சார்வான திசைநாடி பத்துண்டென்றும்
ஏத்துகிறேன் ஒருவிரலுக் கிரண்டுநாடி
வியல்பான அஞ்சுவிரல் பத்துநாடி
மாத்துகிறேன் அங்குட்ட விரலிற்றானே
வகுத்தறிஞர் பிராணனொடு அபானன்தானும்
போத்துகிறேன் தற்சனுவிரலுக்குத் தானே
புகழ்பெரிய உதானனொடு வியானன்தானே. (6)

ஆகுமது மத்யமாம் விரலிற்றானே
யடுத்துநின்ற நாகனொடு கூர்மன்தானும்
பேகுமது யனாபிகையெனும் விரலிற்றானே
புகழ்பெரிய சமதன்னொடு கிரிகரன்தான்
ஏகுமது கனுட்டிக விரலில்தானே
யியலானதே வனொடு தனஞ்செயன்தான்
ஒகுமது யிப்படியி யல்பதாக
யியலான தனஞ்செயனு மாகுமாமே. (7)

பத்தாகும் வாதபித்த சிலேற்பனமூன்றும்
பருவங்கள் தப்பியே பதறுமாகில்
வத்தாத சீதமது வந்துதோன்றில்
வரிசையொடு விக்கலுடன் குழிசைமேவும்
எத்தாக யிளைப்புடனே பேச்சுமில்லை
யிதமான வாதமது விழுந்துதானால்
அத்தமா யிருபத்தோர் நாழியில் சாவார்
ஆதியந்தம் பித்தமதைப் பிரித்துப்பாரே. (8)

கேளப்பா மூன்றுமிக யசைவுநின்று
கெடியான விரல்மூன்றில் துடிப்புகாணில்
நாளப்பா சாசனத்தில் சூடுகொள்ளும்
நலமான மூத்திரங்கடுத்துச் சிறுத்துப்போகும்
தாளப்பா பிராணவலி எலிவுகுத்தி
சரீரத்தில் வேர்வையெழும்பி வாய்வுமாகும்
சூளப்பா மூலமுனை வெளியில் காணும்
சுரங்காணும் தாக்கியொடு சோபங்காணே. (9)

உரைக்குறேன் சித்தத்தில் வாதங்கூடில்
உதரவலி கொண்டுமிகவுடம்பு வீங்கும்
நிரைக்குறேன் பித்தமது அசைவுகண்ட ால்
நெஞ்சுவலி பிறவலிப்பு நெற்றிக்குற்றும்
மரைக்குறேனீ ரேழில் மரணமாவார்
மண்டலத்தில் வெறியெழுப்பி வழியைப்பார்க்கும்
மறைக்குற தோர் மருந்துதனை சொல்லவொட்டி
தர்க்கரித்துக் கொள்ளுமடிய தினமேற் கேளே. (10)

சோபமில்லா யேப்பமது கவிழ்ந்து காணும்
சோசியங் களில்லை யதுதுணுக் கமைந்து
தாகமொடு விக்கல் வந்தால் நீரைக்கட்டி
சஞ்சலத்தை யுண்டாக்கும் மலமுங்கட்டும்
வாதமுடன் சீதமது கூடும்போது
வந்துவிடும் யிழுப்புடனே யிருபதாம்நாள்
பூதமது கூடுவிட்டு ஏறிப்பாயும்
பொய்யல்ல சூதமுனி புகன்றிட்டேனே. (11)

புகழ்ந்திட்டேன் சன்னியெல்லா மூன்றுக்குள்ளே
பூட்டினேன் சிலேற்பனத்தைப் பகுத்துப்பாரும்
இகழ்ந்திட்டேன் இனிதிரேகம் பார்க்கவேண்டாம்
இனிதான சடலமெல்லாம் குளிர்ச்சிகாணும்
மகிழ்ந்திட்டேன் சிலேற்பனத்தைப் பிரித்துப்பார்க்கில்
மகிழ்ந்தெழுந்த துடியதுபோல் பொங்கக்கண்டால்
தளந்திட்ட விசைபோச்சு யாவிபோகும்
தப்பாது எழுபதுநாள் தான்சொன்னோமே. (12)

சொன்னதினால் நாடியெல்லாங் காணார்காணார்
சூட்சமாய் நிலையறிந்து சொல்லவேணும்
எண்ணத்தினா லாகாது என்றுசொல்லி
யிருமாந்து நின்றாக்கால் காணார் காணார்
முன்னிதனால் வாதசிலை யொக்கவேணும்
மூன்றுதினங் கிழக்காக முளையக்காணும்
பின்னதினால் வேறொன்றும் பார்க்கவேண்டாம்
பிறந்துவரும் நாடியெல்லாம் பேசக்கேளே. (13)

கேளப்பா மூலத்தி லெழுந்தவாய்வு
கெடியான விரல்மூன்றில் துடிப்புகாண்கில்
நாளப்பா சூசனத்திற் சூடேகொள்ளும்
நலமுடனே வலமிருக்க அசனஞ்செல்லா
சூளப்பாகுடல் பொருமி வலியேகாணும்
தொடராத பித்தமது கடினமாகும்
தேளப்பா தேகமெல்லாம் புண்போல்நோகும்
சிக்கெனவே வலங்கழியுஞ் சீரேபாரே. (14)

பாரப்பா மூலமதில் எழுந்தவாய்வு
பாங்குடனே தீருமது பதினோராம் நாளில்
சீரப்பா வாரமதில் மருந்து செய்தால்
தீருமாம் வாதபித்தம திலேவாங்கும்
ஆரப்பா யிதையறிந்து செய்யாவிட்டால்
அண்டபிண்ட காடென்று மணலேமீறும்
காரப்பா கிறாணியைப்போற் குணமே கண்டு
கவரிவரும ன்பத்தோறாம் நாளில்தானே. (15)

தாமென்ற சயமிருமல் நாடிதன்னை
சாத்துகிறேன் பித்தத்தில் சீதங்கூடில்
கோனென்ற சிரசுதனில் நீரேகொள்ளும்
குத்துடன் யிருமல் கோழை காணும்
தேனென்ற யீளைவரும்-ரெத்தம் காணும்
தீராது மத்திபமாம் செப்பலாகும்
நாமென்ற வுடம்புதனில் தீராரோக
முரைக்குறே நின்னதென்று முந்திமுந்தி. (16)

முந்தினதோர் பாதமுடன் காலுதன்னில்
முகத்திலே வீக்கமது கண்டுதானால்
முந்தியதோர் கழிச்சலுடன் கிராணியாகும்
பேசரிது தீராத அசாத்தியமாகும்
சிந்தியதோர் வாந்தியுடன் வீக்கங்கண்டால்
தீராது தீராது திண்ணமாகும்
அந்தியதோர் சயமிருமல் சலக்கிராணி
ஆராலும் தீராது அசாத்தியந்தானே. (17)

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராசாங்கத்தில்
அறிந்திடவே யின்னதென்று யடவாய்க்கேளு
அசாத்தியந்தான் நீர்க்கோவை சத்திகுன்மம்
ஆனதொரு வலிகுன்மம் யோனிப்புற்று
அசாத்தியந்தான் குடல்நோவும் நாக்கிற்புத்தும்
அண்டத்தில் பவுத்திரமும் தொண்டைப்புற்றும்
அசாத்தியந்தான் முசல்கிருமி வளரல்விச்சோடு
ஆராலுந் தீராது அழிவுதானே. (18)

தானென்ற சலக்கழிச் சலமதம் தப்பு
தலைதனிலே யுதித்தெழுந்த பிளவைத்தானும்
கானென்ற சூதவலி காசிகண்டமாலை
கன்னத்தில் புத்துடனே குமறக்கண்டன்
தேனென்ற முகவாதம் சன்னிவாதம்
சேத்மசுர மாந்தை கவிசையோடு
ஊனென்ற வுயிர்நிலைக்கு மிவ்வளவும்
வுள்ளபடி சொன்னோம் வாதநிலைபாரே. (19)

வாதமது கீழ்நோக்கா திருந்தபித்தம்
    மையத்தில் சேராதே யனல்தாழாதே
பேதமது செய்யாமல் பிச்சிடாமல்
    பிலத்திருந்தால் பிராணனங்கே பிலத்திருக்கும்
நீதமது தப்பியே ஐயத்தோடே
    நிழல்வாதம் கீழ்னோக்கி நேரேஓடில்
தீதாகும் வியாதியெல்லாம் செனிப்பித்தோடும்
    சீருடைய வாதநிலை நாடித்தேரே. (20)

நாடியுட விதங்களெல்லாம் வாதவீட்டில்
    நாட்டலாம் மலையாதே நலமாயப்பா
தேடிவரும் நோய்களெல்லாம் ராசாவைத்தான்
    சேர்ந்து நின்றால் காணுமது செப்பவேண்டாம்
ஆடிவரும் பித்தமது அரசன்கீழே
    அமர்ந்திருப்பான் கலந்திடுவான் பித்தநல்ல
கோடிதா னவற்குகுற்றஞ் செய்தாலய்ய
    குணமோக சிலேற்பனத்தை யழைப்பான்பாரே. (21)

அழைத்துடனே அனுப்பி வைப்பான் பித்தராஜன்
    அதுகேழ்ப்பான் சீதமது மப்புபோலே
வளைத்துடனே வந்திருப்பான் கயறுபோட்டு
    கண்ணெல்லாம் முழியிரண்டு கரமும்நொந்து
வளைத்துடனே அக்கினியும் விந்துதண்ணீர்
    வளமாகக் கரைந்துவிடும் வகைதான்பாரு
இழைத்துடனே கூடுவிட்டு யேகும்பாரு
    யின்னமொரு குறிதனையே யியம்பு வேனே. (22)

இயம்புகிறேன் பித்தமொடு வாதங்கூடில்
    இயல்பான தொந்திப்பென்ற றியலாகும்
நயம்பெறவே சிலேற்பனமும் கூடினாற்போல்
    நாட்டலாம் நலமென்றே நாட்டலாகும்
குயம்பெறவே பித்தமது விழுந்து தானால்
    சொல்லரிது பேசாதே சுருக்குமெத்த
இயம்புகிறேன் கபம்விழுந்த ஆறாமாசம்
    யினிதான சடலமது ஏகும்பாரே. (23)

சடலமது யேகிவிடும் வகையைக்கேளு
　சாத்துகிறேன் வாதத்து நிலையைப்பாரு
உடலமது நடுநடுங்கி விரைந்து தானால்
　ஒன்பதா மாதமதில் சாவாரென்றே
கடலுமது கலங்கிவிடும் பித்தராசன்
　கதித்திருந்த வீடுவிட்டு காதில் சென்றால்
நடலமது குறைந்து விடுமறுபதா நாளில்
　நாடுவிட்டு காடுபுகும் நடையைப் பாரே. (24)

நடையிது தானிருந்தாக்கா லாறாநாளும்
　நாளதனி லறிவார்கள் நாதனாவார்
விடைதனிலே யேறிவரும் சிவனார் சொன்னார்
　வேதாந்த சூதமுனி வெளியில் போட்டார்
கடைதனிலே சடலமது நொந்து புண்ணாய்க்
　கறுத்தறிந்த நாவதுவும் வீழ்வதாகில்
யிடைதனிலே யேழாம் நாள் சாவாரென்றே
　இயல்பான சூதமுனியி யம்பினேனே. (25)

இயம்பினார் நாடியெல்லா மிதனிற்குள்ளே
　யிடையினொடு பின்கலையுஞ் சுழிமுனையுமாகும்
இயம்பினாரிது தானே வாதபித்தமைய
　மியல்பானக் காலரையும் ஒன்றுமாகும்
இயம்பினா ரிப்படியே நடக்குமாகில்
　யிடுக்கங்க ளொன்றுமில்லை யிருக்கலாகும்
இயம்பினார் சூட்டிய தோன்றிச்
　சீதம் யெழும்பினால் பிணிபலது பேசுந்தானே. (26)

தானென்ற நாடிநிலை யரியவேண்டும்
　சதாகாலஞ் சாஸ்திரத்தை னோக்கவேண்டும்
ஊனென்ற தத்துவங்கள் சரிகைக்கூறும்
　வுற்றுணர்ந்து பஞ்சபாதகங்கள் நீக்கி
தேனென்ற மனோன்மணியாள் பாதந்தன்னை
　தினந்தோறு மறியாமல் சேவித்தேற்றி
நானென்ற ஆணுவங்கள் மாய்கையாறு
　நல்லபரிகாரஞ் செய் நாடிமுற்றே. (27)

சூதமுனிநாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

வால்மீகர் பூதநாடி கூறுகின்றார்

ஐவிரலைந்து நாடி அதுசெய்யும் வகையைக்கேளீர்
மெய்விர லொன்றுவாதம் மொழிவிரலொன்று பித்தம்
நெய்நடுவிரலே சிலேத்மம் நேர்விரல் பூதநாடி
மைசிறு விரலே சொன்னோம் வகுத்தவால் மீகர்தானே. (1)

புகழ்ந்திடும் பூதநாடி பூனைபோல் நடக்குமாகில்
நகிழ்ந்திடும் பொற்செவ்வாய்போல் நடக்குமே சுருக்கதாக
உகழ்ந்து தான்கொடுத்ததுண்டு வுண்மையாய் மனதில்கொள்வீர்
மகிழ்ந்திடுங் கழிப்பில் லாட்டால் வாங்கிட மாட்டாதென்றே. (2)

வேந்தனம் பூதநாடி வெள்ளெலி போலேகுன்றில்
சாந்தகமாகப் பெண்போல் புதன்வெள்ளி தன்னில்தொட்டு
ஏந்தியாள் தனமுங்கெட்டு யிரச்சிபோல் திரேகவற்றும்
காந்தழல் கையுங்கண்ணுங் காந்திடும் நெருப்பதாமே. (3)

மூடிய பூதநாடி முனையதுபோலே தோன்றில்
தேடியே யுதிரன்மாடன் திங்களில் தொகுத்ததுண்டு
கூடியே புணற்சிகாணுங் கொடியமெய் நோவுங்காணும்
சூடியே திரேகம் வற்றும் துவாலையு விலாநோகுந்தானே. (4)

பின்னிய பூதநாடி பின்னிடத் தோடிவாங்கில்
உன்னிய பிறமறாச்சி வுச்சியன்ற தனில்தொட்டு
கன்னியும் மணமுங்காணா கசரோகம் போலேவற்றும்
தன்னையுற்றி யொட்டாது தலைசுத்து மயக்கந்தானே. (5)

மன்னிய பூதநாடி வண்டது போலே யூர்ந்தால்
தன்னிகரில் லாமாடன் சனியதில் மாலைநேரம்
உன்னியே பிடிப்பதுண்டு ஒருவர்கை யகப்படாது
பன்னிய பேச்சுந்தப்பும் பயமதுசாடுந் தானே. (6)

பலம்பெரும் பூதநாடி பாம்புபோல் நெளியுமாகில்
இலம்பெரு மருந்துதண்ணீர் யிருளதே தீண்டிச்செய்யும்
நலம்பெறும் துவாலைசாய்க்கும் நாளிலேதி ரேகம்வற்றும்
சிதம்பர சக்கரத்தால் தீருமேதிட்டந்தானே. (7)

பவுத்துள்ள பூதநாடி வலசங்குபோலே யூர்ந்தால்
சமத்துள்ள சுடலைமாடன் சனியதன் பிடித்ததுண்டு
அபத்தமே பேசுவிக்கு மாருக்கு மகப்படாது
உவத்துக்குள் புவனையென்ற தோன்றினால் தீருந்தானே. (8)

சடுதியில் பூதநாடி தடதட நடக்குமாகில்
பிடரியும் வலிக்கும் னெஞ்சும் பின்பரையடித்துக் கொள்ளும்
சுருதியைப் போலேதிரேகம் சுட்டிடு முதிரங்கக்கும்
சடுதியில் போமே வயிரவன் சக்கரஞ் சிவத்தினாலே. (9)

இருகிய பூதநாடி யிழுத்திழுத் தெதிரேவாங்கில்
குருகியே பிசாசுமெத்தக் கூடியேயேச் சிப்போலும்
இருகிய செவ்வாய் தன்னில் யேழரைப் பொழுதில்தீண்டில்
மருகிய உடலும்வத்தும் வாலை மந்திரத்தால் போமே. (10)

பொருந்திய பூதநாடி பிணத்தைபோல் கிடக்குமாகில்
வருந்தியே திரேகம்வற்றி வாய்வது மிகுத்துக்காட்டும்
திருந்தியே போகவென்றால் தீர்ந்திடும் வகையைக்கேளு
மருந்து மந்திரங் கழிப்பு மணியுடன் தீருந்தானே. (11)

கலங்கியே பூதநாடி கரைநண்டு போலே யூர்ந்தால்
இலங்கிய மத்துமின்ன மெந்தயப் பசாசுபோலாம்
நலங்கியே நாடிதொட்டால் நாளிலே வத்திக்கொல்லும்
யலங்கியே யனுமன் மந்திரம் சடாட்சரங் கட்டப்போமே. (12)

செப்பிடும் பூதநாடி தேரையைப் போலே தோன்றில்
வப்பிடுந் திரேகந்தன்னில் வலமுடன் மற்றதெல்லாம்
யப்புடன் தேங்காய்தன்னி லடைத்து வள்ளாவில் வைத்து
செப்புமே யீசனாணை செய்வினைக் குணமிதாமே. (13)

தருந்திடு பூதநாடி கரைநண்டுபோலே யூர்ந்தால்
அரிந்துமே பாவைபண்ணி யாணியு மரைந்துகட்டி
துடர்ந்த பாழ்ங்கிணறு வெந்த சுடலையில் புதைத்து வைத்து
தடைந்திடுங் குருவில் செய்த கபடுவஞ்சனையிதாமே. (14)

தோன்றிய பூதநாடி செக்குபோல் சுற்றுமாகில்
வீன்றிடவுருவே பண்ணி விறைந்து பொற்பதித்து சேர்த்து
மூன்றிய மாமிசத்தி முகந்திடும் வீட்டில் வைத்து
தூன்று மந்திரத்தால் செய்த சூனியமென்னலமே (15)

திரைந்திடும் பூதநாடி. நெருப்பது போலே சுட்டால்
கிரைந்திடும் பில்லியாகும் செய்குணம் பரிட்சைகேளீர்
குறைந்திடக் குரங்குநாயுங் கூட்டமும் பயமும்நாட்டம்
மறைந்திட மயக்கஞ்செய்யும் வால்மீகர் உரைத்தவாறே. (16)

வால்மீகர் பூதநாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

மச்சமுனி நாடிகூறுகின்றார்

அறிந்தே கொள் நாடிதானும் ஆண்பாலின் வலப்பக்கந்தான்
செறிந்தே மாதர்க் கிடக்கை சென்மித்த விட்டபின்னம்
குருந்தே வுந்தனிடக்கையாற் கூறுமூன்று விரல்வைத்து
தரிந்தேவாத மருள்பித்தம் சேட்பக்குணமும் பாரீரே. (1)

கைதனைப் பிடித்துநீயும் கடவுளை பார்த்துஎண்ணி
உய்யதோரல்ல வென்று வுத்தரிநாடி பார்க்க
பையவே தொடருதொட்டு பதைப்பது கண்டபோதே
மெய்தனிற் குணங்கள்கண்டு மேவியே விளம்பிடாயே. (2)

வாதக்குறிப்பு

அங்கையை முறித்துநெட்டி அடவுடன் மேலேவாங்கி
செங்கையாற் பிடித்துநாடி திறமுடனுரைக்கக் கேளும்
முங்கையில் வாதநாடி முடுகியே யோடுமாகில்
மங்கையே மலத்தைக்கட்டு மென்று நீசெப்பிடாயே. (3)

பித்தலட்சணம்

செப்பிய பித்தந்தானும் திகைத்து மேயோடுமாகில்
அப்பிய பித்தந்தானும் திகைத்துமே யோடுமாகில்
மெப்புடன் பிரண்டுமீறி விறகென நளிக்குமாகில்
ஒப்புடன் மரணமென்று வுரைத்தது வுண்மையாமே. (4)

சிலேற்பன லட்சணம்

சிலேற்பன வாதத்தோடு சிலும்பியே பிசருமாகில்
பிலற்பன பித்தந்தானும் பின்னியே குறையுமாகில்
விலற்பன ஐயத்தோடு மீறியே தொடருமாகில்
சலற்பனவ யித்தியோர்கள் சாடையாய்ச் சொல்லலாமே. (5)

மரணநாடி நிலைக்குறிப்பு லட்சணமறிதல்

பித்தமே வாதந்தானும் பிலத்துடன் சடலந்தன்னில்
மத்திபவை யந்தானும் வலப்புறம் வோடுமாகில்
ஒத்தகண் நீலமாகி வுடல்தனில் வேர்வையாகும்
சத்தியமாகச் சொன்னோம் சடுதியில் மரணந்தானே. (6)

எய்ய மச்சமுனி செப்பிய
துய்யமண்டல முரைந்து துலங்கிய
மெய்யுமானிடர்க் கோதிய மெய்ப்பொருள்
அய்யனாயுன் மச்சனுக் கருளினான். (7)

திருமுறை முனிவன்சொல்லு வாகடக்கோர்வை தன்னில்
உரும்பல வியாதிமீட்டு வுன்முகமலர் நீராலும்
வரும்பல நாடியாலும் வகைப்படிபாரு மென்று
தெருவுளம் பஞ்சபூதத் திக்கயஞ் செய்கையாதே. (8)

பித்தவாத சிலேற்பனக்குறிப்பு

ஊக்கமாம் பித்தநாடி வுகர்ந்துடன் தவளைபாம்பு
நீக்கிய சிலேற்பனந்தான் நீண்டது ஆமைபோல
தாக்கிய பித்தந்தானும் தண்மையாய்த் துடித்துநிற்கில்
போக்குறு மரணமென்று புகல்முனி செப்பினாரே. (9)

பித்த சிலேற்பனக் குறிப்பு

அன்னமே கேளாய்பித்த சிலேற்பன நாடிதானும்
வின்னமாம் வாதநாடி குறுகியே வொன்றாய்க் கூடில்
முன்னமாம் பித்தத்தோடு முடுகிய நிற்குமானால்
சொன்னசொல் தப்பாதையா சொருகியே மரணமாவான். (10)

பித்தத்தில் பித்தசிலேற்பனக் குறிப்பு

பித்தத்தில் பிறந்தபித்த சிலேற்பன மெதுவாயோடில்
சித்தத்தில் வாதந்தானும் சிதறியே யொடுங்குமாகில்
அத்தத்தில் சிலேற்பனந்தான் அடங்கியே கொதிக்குமாகில்
நித்தமோர் பகலுக்குள்ளே நேர்மையாய் மடிவர்தாமே. (11)

வாதத்தில் வாதசிலேற்பனக் குறிப்பு

வாதத்தில் பிறந்தவாத சிலேற்பனக் குறியைக்கேளும்
நீதுற்றுப் பித்தத்தானும் நெருங்கியே கொதிக்குமாகில்
தாதுற்று வாதந்தானும் தனிப்பட ஓடுமாகில்
ஆதுற்றும் பதரிமேனி அடைவது திண்ணந்தானே. (12)

துள்ளிய வாதம் ரண்டும் சிலேற்பன மொன்றாய்க்கூடில்
அள்ளிய வங்கண்ணாள் அரணை வால்துண்டை போலும்
கொள்ளிய பித்தந்தானுங் குருவிவால் துடிப்புபோலும்
முள்ளியிக் குணங்கள் கண்டால் முடிவது திண்ணந்தானே. (13)

துடியிடியிடித் தாற்போல தொடுத்திடும் சிலேற்பம் ரெண்டும்
கடுகிய ஐயம்ஒன்று கடிந்து மேகாணவேண்டி
படவரவல் குலாளே பாம்பென வாதமோடும்
அடவினிலறிந்து கொள்ளும் அருமுனியுரைத்த வாறே. (14)

பித்தசெய்கை

ஏலவார் குழலாய்பித்தம் செய்குறுயியம் பக்கேளாய்
கோலவேல் விழிகள்ரண்டு குளிர்ந்து மேநடுக்குமல்லால்
சீலநீர்க்கடுத்து நொந்து சிறுகென வீழுமின்னம்
ஞாலமே அறியச் சொன்னோம் நவின்றிடு முண்மைதானே. (15)

வாதசெய்கை

மானேகேள் வாதம்ரண்டும் வகுத்து சேற்பனங்கள் ரண்டும்
ஆனதோர் சரீரநோவாம் அங்கை கால்திமிர்த்துக் காட்டும்
மூனமா முதிரத்துள்ளே ஒத்தையு மிகுத்து விம்மும்
பானலங் கண்ணினாய் கேள்வாதத்தின் செய்கையாமே. (16)

செய்யதோர் பித்தம்ரெண்டும் சிலேட்டும மெழுந்ததானால்
அய்யதோர் பசியுமில்லை அடிக்கடி வுதரம்வீழும்
துய்யதோர் நயனம்நீரும் சுத்தமே மஞ்சள்போலாம்
பெய்கள் போலபத்தம் பேசி பித்தற்றுவதுண்மை தானே. (17)

மச்சமுனிநாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

புலிப்பாணிநாடி கூறுகின்றார்

வருநமக் குற்றநாடி வலக்கை மானிடருக்கெல்லாம்
அருவையர்க் கிடதுகையும் ஆய்ந்தவர் பாற்குங்காலை
பெருவிரல் வாதமாகும் பின்விரல் பித்தமாகும்
திருமணிவிரலில் நாடி சிலேத்தும மென்று செப்பே. (1)

அன்னமே கோழியோணான் மயிலென நடக்கும்வாதம்
பின்னையோ ரட்டையாமை பெருத்திடும் பித்தமாகும்
சொன்னவாய் மொழினல்லாளே சுத்திய பாம்புதேரை
அன்னமே ஐயமென்று அறிந்திடீர் வாதந்தானே. (2)

கையது நகருமெத்த கண்களை முழித்துப்பார்க்கும்
மெய்யது நடுக்கும் வீட்டை விட்டோட்டங் கொள்ளும்
மையமாய் நிலம்புரண்டும் அடிக்கடி யெழுந்திருக்கும்
யையவே புகல்வர்கேளிர் மரணமென்றறிந்து கொள்ளே. (3)

பலபலபேச்சு பேசும் பாய்ச்சீலைக் கிழித்துக்காட்டும்
சலமதுவுருட்டிக் கேட்கும் சாலவே சுவாசங்காணும்
தலமதிற்றுரும் பெடுத்து தாண்டியே யெழுந்திருக்கும்
பிலமேதான் மிகுந்துகாட்டும் பிழையா தென்றியம் பிடீரே. (4)

வாக்கது யீரமுண்டாய் நயனப்பார்வைகள் நன்றாய்
மூக்கது யீரம்வற்றி முகக்களை மாறாதாகில்
ஆக்கவே சுவாசமென்று அமருமே தூக்கம்போல
தாக்கிடுஞ் சுரமும்பெற்றால் தானிருந்தாலு மீளும். (5)

வாதமுமுடுகித் தேறி வருஞ்சுரங் கொஞ்சமாகில்
போதவே சாகமட்டாய் போகநித்திரையு முண்டாய்
நாதமாய்த் தீபனங்கள் வந்திடச் சுரங்கள் தானும்
மாதவமுடையோர் கேளிர் வந்ததோர் வியாதிமீளும். (6)

உடம்பெலா மீரமுண்டாய் ஒத்திடுஞ் சுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ் சொருகிமெத்த தாகமுங் கொஞ்சமாகும்
விடங்கடித்தது போற்சற்றே மேலுடம் பசதிகாணும்
மடந்தைகேள் சொன்னோமித்தை வருஞ்சுர மென்றேயோதே.(7)

காலுமே குடைச்சல்கண்டு கடுத்திடுமிடிப்பு பக்கம்
மேலுமே சுரமுங்கண்டு விழியது காந்தல்காணும்
ஆலுமே கனாக்கள்கண்டு அழுந்தியே பிரட்டிக்காட்டும்
சேலுமா விழிநல்லாளே தொந்தமாம் சுரமென்றோதே. (8)

காயுமே சுரங்கள் மெத்த கால்கைகளு தரிக்காட்டும்
ஓய்விலா வயிறெறிச்சல் உத்தூதோர் பேதியுண்டாம்
வாயது பினத்தல்கண்டு வழுவழுத்திருக்கு நாவு
ஆயுறு வல்லோர் கேளீர் அதிசார சுரமென்றோதே. (9)

பக்கமே துடிக்குமார்பு பதைத்திடு முகம்வெளுக்கும்
ஒக்கவே சுரமுங்காயும் ஓயுங்கை கால்கள்மெத்த
கக்கவே வலிகளுண்டாங் கண்வெளுத்திட்டே போகும்
அக்குல அஸ்தியான அதிசாரமென்றே யோதே. (10)

சொல்லிய நாடிதன்னைச் சுருக்குடன் பார்க்கும்போது
மெல்லிய பித்தந்தானும் மீறியே தொடர்ந்துநின்றால்
வல்லிய வாதந்தானும் வந்துமே யுரையுமாகில்
சொல்லவோர் ராவுக்குள்ளே செல்வது திண்ணந்தானே. (11)

சேத்தும நாடிதானும் திரிந்திய வாமைபோலே
நாட்டிய யீசல்போலே நயந்துமே செல்லுமாகில்
மீட்டவே வேண்டாமாறு நாளினில் மரணமாவான்
தீட்டவே பாணி சொன்னார் திறமுடனறிந்து சொல்லே. (12)

புலிப்பாணிநாடி முற்றிற்று

உ

கடவுள் துணை

சட்டமுனி நாடிகூறுகின்றார்

ஆதிசத்தி யடிபணிந் தன்புடன்
நீதியாக நெருங்கும் மானிடர்க்கு
வாதியான வைத்தியர் பிழைக்கவே
சோதியாக சுறுக்கமாய் கூறுவாம். (1)

வாதக்குறி அசாத்திய லட்சணங்கள்

சொல்லும் வாதக் குறிப்பு புகலுவேன்
வெல்லும் வாதம் விரவியே யோடிடில்
புல்லும் பித்தம் புகலத்துடித் திடில்
கொல்லுமே மன்கொடு போவதுண்மையே. (2)

பித்தக்குறிப்பு

உண்மையாக வுரைக்கிறேன் பித்தங்கேள்
கண்மையா முச்சிகடுகத் துடித்திடில்
வண்மையாங் கண்ணீர் வாகாய்ப் பெருகிடும்
தண்மையா மேனிதரை தனிற்கொல்லுமே. (3)

சேத்துமக்குறிப்பு

கொல்லு மீளைகுறிக்குஞ் சேத்தும்ங்கேள்
வெல்லு மாலை விளங்கத் துடித்திடில்
அல்லுமே பகலொன்றரை நாளினில்
கொல்லுங் கொல்லுங் குறுமுனி தப்பாதே. (4)

வாதபித்த சிலேத்துமக் குறிப்பு

தப்பாதை யாதரணியில் மாந்தர்க்கு
வெப்பாந் தொந்தம் யுரைக்குறேன் யுண்மையாய்
செப்பாஞ் சேத்துமம் சிறந்த வாதபித்தம்
அப்பா துடித்திடில் லரன்பதி சேர்வரே. (5)

வாதபித்தக் குறிப்பு

சேரும் வாதஞ் சிறந்ததோர் பித்தமும்
கூரும்நாவுங் குதிக்கும் மண்டுகம் போல்
வீருந்தாது விளங்கப் பதைத்திடில்
சேருமெம புரஞ்சேர்வது முண்மையே. (6)

பித்தவாதக் குறிப்பு

உண்மை வாதமுறைக் கும்பித்தமுடன்
உண்மை மாத்திரையொன்றுமே மீறிடில்
உண்மையா முடலொடுங்கி யடங்கிவிடும்
உண்மையாங் காலன் வுடல்கொண்டு போவதே. (7)

சேத்துமவாதக் குறிப்பு

போவான் காலன் புகல்வது நிச்சயம்
சாவான் சேத்துமம் சாற்றும் வாதமுறில்
நாவாற் கூறவும் நவிலவரிது காண்
பாவால்சித்தர் பகருமொழி மெய்யே. (8)

சேத்தும பித்தக்குறிப்பு

மெய்யாய் சேத்துமமே வப்பொருந்திடா
தைய்யா பித்த மரணைவால் துடிப்புபோல்
நொய்ய மாத்திரை நுவலப் பிரண்டிடில்
பையமால் பதம்பகருடல் செல்வதே. (9)

சாத்தியா சாத்தியம்

பித்தமயங் கிடில்பேராதே போய்விடு
யெக்கிய தாதுயெழும் பிடில்வாதம்
முத்திய மாத்திரை யொடுங்கி பெருகிடுஞ்
சத்தியாய் வைத்தியம் தப்பாது செய்திடே. (10)

செய்ய மாந்தர் சிறந்தோர் வைத்தியம்
நய்யநாடி நவின்றிட பார்த்துமே
பெய்ய மருந்து பிசகாதறிந்திடில்
உய்யுஞ் சீவன் னுலகழியாதே. (11)

சட்டமுனிநாடி முற்றிற்று

உ

கடவுள் துணை

போகர் நாடிகூறுகின்றார்

தத்துவ லட்சணம்

ஜெனனமா மானிடர்க்கு சிறப்புடன் நாடிசொல்வேன்
கனமது சிரசுதொண்டை கடியதோர் விலாவுமட்டும்
புனலொடு ரத்தமூளை பூட்டிய நரம்புகாது
மனமுடனெழு பத்தீராயிர நரம்பறிந்து சொல்வாம். (1)

சொல்லிய நரம்பினாலே தோன்றிய மானிடர்க்கு
துல்லிய வெலும்புமூளை துடிபெற வலித்துக்கட்டி
புல்லிய தசையும் ரத்தம் புகமுட னொன்றாய்க்கூடி
வல்லியதோலினாலே வகுத்ததோர் காயமாமே. (2)

வாதசாத்தியம்

காயமாம் மாந்தருக்கு கரிதியநாடி தன்னில்
தோயவே சாத்தியங்கள் தொகுப்புடன் சொல்லக்கேளீர்
மாயமாய் வாதத்தாலே மதிப்புடன் கழிச்சல்கண்டு
காயமு மழிவதில்லை களிப்புடன் கூறினாரே. (3)

கூறினார் முனிவர்தானும் குறுமுனி யருளினாலே
தேறினார் சித்தர்தாமும் தெளிவுற வறிந்துகற்றார்
மீறினார் ரிஷிகள்போகர் மேன்மையாந்த போதனர்கள்
தூறினாரனந்த நாடி தொகுத்ததோர் குறிப்பிதாமே. (4)

பித்தமாம் நாடிதானும் பிசகியேயோடக் கண்டால்
நித்தமும் சுரமும்தோன்றி நெரிங்கிய மலமும் வீழ்ந்தால்
உத்ததோர் காயந்தானு முண்மையாய்த் தேறுந்தேறும்
சத்தியமாகச் சொன்னோம் தரணியில் மாந்தருக்கே. (5)

போசனம் வெறுத்துவிக்கல் பொருமுதல் புடைத்துச்சேர்தல்
ஆசனங்குளிர்ந்து வூதல் அங்கங்கே புறத்தே வீங்கல்
கோசமு மேறவாங்கல் குளிந்திரங் குளிரவாங்கல்
நாசிவன் கருவியென்றே நவின்று தான்விட்டுப்போகேன். (6)

வட்டநர் அடைத்தல்போல விழியினீர் சிதரச்சிந்தில்
அட்டருவி குளிர்ந்து காணல் அங்குகால் புறத்தேவீங்கல்
உட்டனம் பிரவேசித்தல் வுறவுதலிற்றுச் சேர்தல்
நட்டமாஞ் சாவுதிண்ணம் நாடியே கைதொடாதே. (7)

கைதொடிப் புண்போலாதல் கறுத்துடல் வழவழத்தல்
நெய்தொடி லுதிரம்நீலம் விழிதனிற் சிகப்புபூளை
செய்யொழிக்க மலம்புந்தி சிறுமுகம் குறுவேர்சிந்தல். (8)

சிரமது கனகனத்து செவியடைத்திருமலாகி
சுரமது வெகுவதாக சோரைபோற் சிறுநீர்விழும்
சரமது சிதறிவீசி தாகமும் வெகுவதாக
விரவியே விழிதியங்கி முழியாது விடையமென்றே. (9)

மருந்திட விரும்பிடாதே மறுபிறப்பட்டு மேலும்
தருந்தரி நிகங்கள் வீங்கி காளடிக் கீழேகட்டி
பருந்தி நீர்பிறவேவாங்கி பார்வையு மிகுதியானால்
மருந்திட வென்றேநீயும் மரணமென்றறிந்து கொள்ளே. (10)

மரணமாம் போகர்சொன்ன வாக்கியம் பிசகதில்லை
தீரணமரு மாந்தர்க்காக சாற்றினோ மிந்தநூலை
கரணிகாரனவற்கு காட்டா மலிந்த நூலை
திரமுடன் அறிவதற்கு செப்பினோ மிந்தநூலே. (11)

போகர்நாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

வரரிஷி நாடி கூறுகின்றார்

மேவிய புறங்கையாலே மிக்கவே னாடிபாற்கில்
ஆவலாய் வாதநாடி ஆமைபோலிறங்கு மாகில்
பாவையே பெருமூச்செய்து பரலோக மடைவதென்று
காவியங் கண்ணினாய்கேள் மரணமா மென்று செப்பே. (1)

செப்பிய நாடிதானும் சிருசிருவென வகித்து
ஒப்பிய தொண்டைக்குள்ளே சயமடைத்திரையுங் கண்டாய்
தப்பிய கபந்தானங்கே தரியாமல் பிசகுமாகில்
கப்பிய மரணம்வந்து காலையில் மடிவர்தானே. (2)

மெய்யதோர் பித்தம்வந்து வாய்வது மிகுந்துகாட்ட
அய்யமே விட்டகன்று அடைந்திடு மிளப்புமாகும்
துய்யதோர் விழியின் மந்தம் சோரூ நீரிடமேசுத்தி
அய்யனா ருரைத்ததுண்மை அஞ்சாநாள் மரணமாவான். (3)

மீண்டுவாய் வழவழத்து மேனியும் வெளுக்குமாகில்
தாண்டிய பேச்சுதானும் சவண்டராராக மட்டும்
வீண்டிய மரணமாக விரண்டரை கடிகைமுன்னே
கூண்டனயிளப்புங் கூடகுறைந்திடு முயிரையெண்ணே. (4)

கன்னியே நாவுமெத்தக் கறுப்பதாய் நாக்குமூக்கும்
தன்னிட குணமுமாறி தவ்விய குணமுமிஞ்சில்
என்னவே குணமிதானால் யிதற்கு நீரினிமைபூண்டு
உன்னிய மருந்துசெய்தால் ஒழிந்தது மரணமென்றே. (5)

முதுகொடு வயிறுவீங்கி மூலமும் தாதுகெட்டு
செதுசெவிக் கண்ணும் வாயுஞ் சேரவிப்பதுவுங் குன்றி
முது.்தனவாறு மூன்று முதியவஞ்சினைட் [illegible]னாகில்
விதியவன் வசமேயென்று வி[illegible]டுநீ [illegible]ரிந்தி[illegible]யே. (6)

வற்றிய மலஜலங்கள் மற்றுள செவிகள்நாசி
உற்றதோர் கன்னம்நாக்கு உறுதியாய்ப் பலமுமற்று
இத்தனை குணமுங்கண்டு இருந்தன வியல்புமாறி
வித்தகர் முன்புசென்று விளம்பு வதறிவதாமே. (7)

தன்னுடை சைகைதானும் தனக்கது தோன்றுமாகில்
முன்னுரை பறிதல்கேட்கல் முவன்றுரைப் பதற்குவந்து
இன்னதென்ற றிதல்யேங்கி இளைப்புடன் திகைப்புதோன்றில்
சொன்னம்போல் வரண்டுமெய்யும் தோன்றிடவேழ் நாட்சாவே. (8)

அறிந்திடா பித்தம்நின்று வாதமுஞ் சேத்துமமங்கே
பிரிந்திடா தோடுமாகில் பெய்வளைமாதே கேளாய்
இரிந்த தோரா கமத்தின் நேர்படவொத்தே யோடில்
மரிந்திடா கடிகைதொண்ணூற் றளவினில் மரணமென்னே. (9)

வரரிஷிநாடி முற்றிற்று

உ

கடவுள் துணை

இராமதேவர் நாடிகூறுகின்றார்

பார்த்துமே வாதத்தின் செய்கைகேளு
பாங்காக மானிடர்க்கு சொல்லுகின்றேன்
ஆர்த்துமே அரணைவால் துடியைப்போலும்
அடிக்கடி நாழிகைதான் பிரளுமாகில்
வேர்த்துமே வுடலெங்கும் நொந்துகாணும்
விரவியே மேனியெங்கும் குளிர்ச்சிகாணும்
கோர்த்துமே மங்கை நல்லாள் வாதச்செய்கை
கூறுகிறேன் வாதத்தின் செய்கைதானே. (1)

காணவே புருஷர்க்கு வாதநாடி
கருங்குருவி மான்வாலின் துடிப்புபோலும்
ஏன அன்னத்தின் நடையைப்போலும்
எழிலான புறாவின்றன் நடக்கைபோலும்
ஆணவே பித்தத்தின் செய்கை கேளு
அழகான நடையைப்போ லிருக்கும்பாரு
யீனவே சேத்துமந்தான் தவளைபோல
எழிலான விட்டில் போல் குதிக்கும்பாரே. (2)

ஸ்திரிநாடி லட்சணம்

சொல்லுகிறேன் ஸ்திரிகட்கு யிடதுபக்கம்
சொகுசான மானிடர்க்கு சொல்வேன்பாரு
வெல்லுகிறேன் வாதமது பாம்புபோலாம்
விதமான பித்தமது அட்டைபோலாம்
செல்லுகின்ற அய்யமென்ற நாடிதானுஞ்
சிறிய கருங்குருமானின் ரெக்கைபோலும்
அல்லுவது வழங்குகின்ற நாடிமூன்றும்
அவனியிலே அறிகிறது அருமைபாரே. (3)

பஞ்சபூதநாடி லட்சணம்

சொல்லுவேன் ஐந்தாம்விரல் பூதநாடி
சுபமுடனாலாம் விரல்வாதமென்க
எல்லுவேன் மூவிரலாம் பித்தமாகும்
எழிலான யிருவிரலைய மாகும்
தொல்லுலகில் வழங்குகின்ற சிறுவிரல்தான்
சுத்தமுள்ள குருநாடி யென்றுசொல்வார்
மல்லுமொரு நாடிகள்தான் ஒன்றுக்கொன்று
வளர்கின்ற பின்னலின்றன் வண்மைபாரே. (4)

சொல்லியதோர் நாடியின்றன் வண்மைகேளு
சொற்பெரிய வாதத்தின் அணியைப்போல
வெல்லவே கீழ்மேலே பிரண்டுஒடில்
வீணாக மேனியது வருந்திவாடும்
கொல்லவே பித்தமது மேலேறி
கொடி பாகல்கொடியது போலூருமாகில்
மெல்ல வேவியர் வையது அதிகமாகி
மிரக்கவே சிறுநீர்தான் கட்டிப்போமே. (5)

சிலேத்துமத்தின் பித்தமது புலியைப்போல
சீரியே நிற்கின்ற குணத்தைக்கேளு
அற்பமாய் சன்னி பிரவேசமாகி
அடிக்கடிதான் தலைநோவும் மயக்கமுண்டாம்
கற்பெனவே பஞ்சபூதநாடி தானும்
கடுகவே மேல்வீங்கி கடுப்புகாணும்
தீர்க்கவே நாடியது திமிர்ந்துநின்றால்
தீராது அசாத்திய மென்றரையலாமே. (6)

மரணலட்சணம்

வேறு

மண்டலந் தன்னில் வாழும் மானிடரானவற்கு
விண்டலம் விசைநரம்பு குளுந்துமே வோடுமாகில்
குண்டலம் பற்கடித்து பொறியெலாந் தான்கலங்கி
துண்டென விருக்குமாகில் துணியவே மரணம்சொல்லும். (7)

சொல்லவே மூச்சயர்ந்து சுகமுடனடுக்க முண்டாம்
வெல்லவே மணியும்நட்டு வியர்வையு மதிகமானால்
எல்லவே சிலேத்துமந்தான் எழிலான தவளைபோலாய்
மெல்லவே நடக்குமாகில் மெய்யதாய் மரணமாவான். (8)

துடிப்புடன் சேத்துமந்தான் சுருக்கென ஓடுமாகில்
அடிப்புடன் திரேகம்வற்றி அழலைகண் திரேகமாகி
முடிப்புடன் தலைகனத்து முய்யவே மயக்கமாகும்
இடிப்புடன் மூன்றாநாளில் இன்பமாய் மரணஞ்சேர்வான். (9)

நில்லவே பித்தநாடி நிலைதப்பி ஓடுமானால்
மெல்லவே காசந்தானும் மிகவுடன் தொடர்ந்துகாணும்
வெல்லவே யீளையுண்டாய் யிரும்பலு மதிகமாகி
செல்லவே பயணமாவான் சிறப்புட னுரைத்தோம்பாரே. (10)

உரைத்தோமே வாதபித்தம் சிலேத்தும மூன்றுங்கூடி
கரைக்கதேள் கொடுக்கைபோல காணவே துடிக்குமாகில்
இரைக்கவே யிருமல் கண்டு யிருபதுநாளிற் கொல்லும்
முறைப்படி ராமதேவ ருரைத்தது வுண்மையாமே. (11)

இராமதேவர் நாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

இடைக்காடர்நாடி கூறுகிறார்

சீர்பொருந்துஞ் சாஸ்திரமும் மருந்துப்பையும்
தெய்வீகமானாப் போல் பலதுஞ்சொல்லி
யேர்பொருந்து மெழுத்தாணி அம்மிஓலையியல்
பானகருவி முதல் பைக்கரையுஞ் செப்பு
கூர்பொருந்து சாஸ்திரங்கள் சொன்னோரானால்
குருவாகும் அவருடனே யெதிர்க்க வேண்டாம்
தார்பொருந்து சாஸ்திரங்கள் சொல்லாவிட்டால்
சண்டாள மருந்துடனே பையைவாங்கே. (1)

பகையாதே அவருடனே யெதிர்க்கவேண்டாம்
பன்னிரண்டு பிழைநீக்கியிந்த நூலை
குறையாமலிருந்து நீமருந்து வாங்கி
கொள்ளவே அவருடையக் கீறும்போனால்
நிரையாக சீஷனாய் வந்தானானால்
நேர்மைமாய் விருதியந்து பாகஞ்சொல்லி
துரையாக பதிலுரைத்து வைப்புஞ் சொல்லி
சூட்சமாய் மனமறிந்து சொல்லச்சொல்லே. (2)

நாராசம் பிடித்தகைக்குப் பேர்தான் சொல்லு
நன்றாகயிடதுகையில் ஒலைசொல்லும்
ஓராமலுண்டிய தோருண்மை சொல்லும்
ஒட்டிமுடிந் தெட்டுமுத்து னுருவஞ்சொல்லும்
வாராமலிங் குதித்த வசனஞ்சொல்லிப்
பார்தங்கே செண்டடைத் தவடிவைச்சொல்லி
னேராக நீண்டெழுத்தின் நிலையைச் சொல்லி
நிட்சயமாய் அரியென்றும் பொருளுஞ் சொல்லே. (3)

நாராசம் பிடித்தகை யோஞானமூர்த்தி
நன்றாக யிடதுகையில் ஓலைசத்தி
ஓராமலுண்டின தோருண்மை ஞானம்ஒட்டி
முடித்தெட் டெழுத்தே யுருவியோனி
பாராமலங் குதித்தவசன வாய்வு
பாழங்கே செண்டடைத் தவடிவுலிங்கம்
நேராக நீண்டெழுத்தே அடியா தாரம்
நிச்சயமாய் அரியென்னும் பொருளும்நீரே. (4)

குளிர்ந்திருக்கு அம்மிக்கு பேர்தானென்ன
கூடாடுங் குழவியுடன் பேர்தானென்ன
தெளிந்தரைக்கும் விரலுக்கும் பேர்தானென்ன
தேகமிடு மருந்தினிட பேர்தானென்ன
நளிந்திருக்குஞ் செப்பு முதலடைப்பு தானும்
நான்முகத்தோன் வகுத்தபடி நன்றாய்ச் சொல்லும்
மொழிந்துரையும் பண்டிதரேயிந்த நூலை
மோசங்கள் வராதென்று மொழிந்திடீரே. (5)

குளிர்ந்திருக்கும் அம்மியது சத்தியாகும்
கூடாடுங் குழவியது லிங்கமாகும்
தெளிந்தரைக்கும் விரலஞ்சும் பஞ்சபூதம்
தேகமுறும் மருந்தெல்லாஞ் சிவமேயாகும்
நளிந்திருந்த செம்பு முதலடைப்பு தானும்
நாதருட சிகாரத்தில் பாடமாச்சு
மொழிந் துரையும் பண்டிதரே யிந்தனூலை
யுகந்துரைத்து அம்மிதனை வாங்கிடீரே. (6)

உரைக்கிறதோர் செந்தூரம் பேர்தானென்ன
உத்தரசக்கேந்தி முதல் தாரமேது
அரைக்கின்ற மண்ணுமுதல் சீலையேது
அதின்றுவெகு குப்பிமுதற்சால் கையேது
நிரைக்கின்ற அடுப்புமுதல் தீபமேது
நிகழாக மணலேது தாளியேது
வரைக்கடங்கா பண்டிதரே யிந்தநூலை
வகைபிரித்து யின்னதென்று வகுத்திடீரே. (7)

உரைக்கிறதோர் செந்தூரம் சிவமுமாச்சு
உத்த அரிகேந்திரம் மூலமாச்சு
அறைக்கின்ற மண்ணுமுதல் சிவசத்தியாகும்
அடைத்தகுப்பி சலாகை முதல்வேதமாச்சு
லரைக்கடங் காதாழியது ஆழியாச்சு
வகைசொல்லி பண்டிதரே மருந்தேவாங்கி
பரைக்கடங்கா செய்பாகம் கைபாகம்
பார்த்துபண்டிதரேயிந் நூலைப் பணிந்திடீரே. (8)

பொற்பணிவாய்ச் சமைந்தசெப்பு பேர்தானேது
பொரியான வெள்ளியுட செய்கை சொல்லும்
நற்பணியாய்ச் சமைந்த வகைசெப்பு மென்ன
நலம் பெரிய சாஸ்திரங்கள் நன்றாய்ச்சொல்லும்
தற்பணியாய் போகா்மல் தரித்துப்பார்த்து
தாரணியிலின்னதென் றுந்தயவாய்ச் சொல்லும்
சிற்பணியும் பண்டிதரேயிந்த நூலை
திறமாகவாய் திறந்துசெப்பு வீரே. (9)

பொற்பணியாய்ச் சமைந்தசெப்பு யிறைவனாகும்
பொறியாய் வெள்ளியென்றால் வேதனப்பா
தற்பணியாய் சமைந்த வகையீசனாகும்
தலம் பெரியசாஸ்திரங்கள் பரத்தின்வேதம்
நற்பணியாய்ப் போகாமலிந்த நூலை
நவமாக விருதுதனை வாங்கிக்கொள்வாய்
சிற்பணியும் பண்டிதரே சொல்லாவிட்டால்
திறமாக சீஷனாய் ஜவந்திடாயே. (10)

இடைக்காடர் நாடி முற்றிற்று

உ
கடவுள் துணை

கொங்கணர் நாடி கூறுகின்றார்

அஞ்சுரு வாகி யெடுத்த தொரு பஞ்ச லோகம், அடைப்பேது செப்பேது அறிந்து சொல்லும், கஞ்சமே தாம்பூர லோகஞ் சொல்லுங், களிப்பான பித்தளையின் திறாவுஞ் சொல்லும், வெஞ்சமரில் சாஸ்திரங்கள் யெடுத்துப் பேசி, வேதாந்தம் விரித்துச் சொல்லும், நஞ்சுகந்த பண்டிதரே யிந்தநூலை, நயந்து நீயுன்னுடைய செப்புவாங்கே. 1

அஞ்சுரு வாயெடுத்த தொரு பஞ்சலோகம், அடைந்திருந்த செப்புவுரு பேரைகேழ்க்க, கஞ்சமடா ஆகாசம் செப்பூ வன்னி, கருவான ரோகமடா வாய்வேயாகு, வெஞ்சமடா பித்தளை பிரிதிவியாகும், வேதாந்தந் திறாவென்றால் அப்பின்கூறு, நஞ்சுகந்த பண்டிதரே யிந்தநூலை, நாடறிய யின்னதென்று நவிலுவாயே. 2

கஞ்சமென்ற ஆகாசம் நிறத்தைச் சொல்லும், கடுஞ்செப்பு வன்னியுட நிறத்தைச் சொல்லும், வஞ்சமென்ற லோகந்தான் வாய்வேயாகும், வரும்பித்தளை பிரிதீவுக்கு நிறத்தைச்சொல்லும், மிஞ்சவே திறாவுக்கு அப்பின் கூறு, விதமான நிறத்தையெல்லாம் விழுங்கிப்பார்த்து, ஒஞ்சாமல் யெடுத்துறைக்கும் வயித்தியோரே, ஒவ்வொன்றாய் யின்னதென்று வுரைத்திடீரே. 3

கஞ்சமென்றால் யாகாசம் புகைபோல் மேனி, கடுஞ்செப்பு நிறமென்றால் சிவப்பேயாகும், வஞ்சமென்றால் லோகந்தான் உருப்பேயாகும், வரும்பித்தளை யென்றால் பொன்போல்மேனி, மிஞ்சவே திராவுக்கும் அப்பின் கூறு, விதமான படிகம்போல் நிறத்தைச்சொல்லும், ஒஞ்சாம லெடுத்துரைக்கும் பண்டிதரே, ஒவ்வொன்றா யின்னதென்று யுகந்துகேளே. 4

திடமான கஞ்சத்தின் வீட்டைசொல்லும், தேடரிய தாம்பிரத்தின் வீட்டைச் சொல்லும், உடலான பித்தளையின் வீட்டைச் சொல்லும், உத்தமமா லோகத்தின் வீட்டைச் சொல்லும், சடமான திராவுக்கும்

வீட்டைச் சொல்லும், தருவான அஞ்சினிடச் சக்கரத்தின் வீடு, திடம்பெரிய வயித்தியரே யிந்தநூலை, சூட்சமாய் பணிந்து நீ திறந்திடீரே. 5

திடமான ஆகாசம் விடுவட்டம், தேடரியதாம் பூரமுக்கோணந் தான், உடலான பித்தளையின் வீடு சதிர்க்கோணந்தான், உத்தமமா லோகத்தின் அறுகோணந்தான், சடமான திராவுக்கு பிறைபோலாகும், தருவான அஞ்சிநிட சக்கரத்தின்வீடு, திடம் பெரியவைத்தியரே யிந்த நூலை, சூட்சமாய் பணிந்து நீகேளுகேளே. 6

தேடரிய சக்கரத்தின் யெழுத்தை சொல்லுஞ், செகப்பான தாம்பிரத்தின் அட்சரத்தைச் சொல்லும், யேடறிய லோகத்தின் யெழுத்தைச் சொல்லும், யியல்பான பித்தளையின் யெழுத்தைச் சொல்லும், கோடரிய திராவுக்கு அட்சரங்கள் சொல்லும், குருவாகும் பண்டிதரே தொகுத்துப் பார்த்து, நாடரிய யிந்நூலின் யெழுத்தைச் சொல்லும், நன்றாக மருந்து செப்ப வாங்குவாயே. 7

தேடரிய சுஞ்சந்தாம் அகாரமாச்சு, தீயான தாம்பூரம் சிகாரமாச்சு, தோரறி யதிராவுக்கு மகாரமாச்சு, குருவாகு முறுவான பஞ்சபூதம், சீரறிய சிகாரமது நடுவேயாச்சு, சிறப்பான கருவரும் காணலாச்சு, நாடறிய யின்னூலை நன்றாய்ச் சொல்வேன், நாணமில்லா வயித்தியரே வணங்கிக் கேளே. 8

மறத்தினால் கடைந்த செப்பு வகைதான் சொல்லும், வளர்மூங்கில் விரலுக்கு வகைதானென்ன, திறத்தினால் மிளகுடையக் கொம்பைச் சொல்லும், திறமான மேதிகுல செம்பைச்சொல்லும், பரத்தினா லெழுந்த பகுயினத்தில் செம்பு, பாங்கான கரியினுட மூலஞ்சொல்லும், திறத்தினால் யெழுந்ததொரு கரியின் கொம்பை, திடம் பெரிய வயித்தியரே செப்பிடீரே. 9

மரத்தினால் கடைந்தசெப்பு காந்தமூசி, மாபெரிய மூங்கிலுட விகஷுமுமாகும், திரத்தினால் கடைந்த மிளாமலினோரம், திறமான மேதிகுலம் காலபீடம், சிரத்தினால் கரியென்றால் கொம்பின்செப்பு, சீர்பெருகுங்கயமு கனில் மூலமாகும், வரத்தினால் நாதாக்கள் அமைந்தபேராம், வண்மையுள்ள நாடியிது வளமைபாரே. 10

கொங்கணர் நாடி முற்றிற்று

பதினெண்சித்தர்கள் நாடி சாஸ்திரம் முற்றிற்று

எமது வெளியீடுகள் :

1. திருவள்ளுவர் ஞானவெட்டியான்
2. பதினென் சித்தர்கள் நாடிசாஸ்திரம்
3. பதினென் சித்தர்கள் வாதக்கோவை
4. புலிப்பாணி சிதம்பரம் 25 மந்திரவிஞ்சை
5. புலிப்பாணி வைத்தியம் 500 உரையுடன்
6. புலிப்பாணி ஜாலத்திரட்டு உரையுடன்
7. சட்டைமுனி ஞானம் – கொங்கணவர் வாலைக்கும்மி
8. ஔவைக்குறள் ஔவையார் அகவல் உரையுடன்
9. போகர் மலை வாகடம் ஒலைச் சுவடியிலிருந்து
10. திருமூலர் தீட்சா விதி முதலிய நூல்கள் ஒலைச் சுவடியிலிருந்து
11. சித்தர்கள் வரலாறு எஸ்.பி. இராமச்சந்திரன்
12. இராஜவைத்திய போதினி
13. போகர் நிகண்டு 1200 (கருத்துரையுடன்)
14. போகர் கருக்கிடை நிகண்டு 500 (கருத்துரையுடன்)
15. காகபுகண்டர் பெருநூல் காவியம் 1000
16. அகஸ்தியர் ஆயுள் வேதம் மூலமும் உரையும்
17. கோஷாயி அனுபோக வைத்திய பிரம்மரகசியம் 1–2–3–4 பாகங்கள் அடங்கிய முதல்பாகம்
18. கோஷாயி அனுபோக வைத்திய பிரம்மரகசியம் 5–6–7–8– பாகங்கள் அடங்கிய இரண்டாம் பாகம்

தாமரை
நூலகம்